# சோவியத் மக்களோடு...

SOVIET MAKKALOTU

By

Cuntaravativelu (No 7

நெ. து. சுந்தரவடிவேலு, எம்.ஏ., எல்.டி.
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

PUBLIC L
100
2 DEC 1973
MADRAS

1973 3.50

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை-17

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற்பதிப்பு, அக்டோபர், 1973

திருநாவுக்கரசு தயாரிப்பு

3179/73
20
203540
118.58 N71
3123

விலை ரூ. 3-50

மெட்ரோபாலிட்டன் பிரிண்டர்ஸ், சென்னை-2

2-DEC 1973
MADRAS

# பதிப்புரை

துணைவேந்தர் உயர்திரு சுந்தரவடிவேலு அவர்கள் சோவியத் ஒன்றியத்துக்குச் சென்று வந்து அங்கு, தாம் கண்டவற்றை அற்புதமான கட்டுரை வடிவில் வாரா வாரம் தினமணி கதிரில் எழுதி வந்தார்கள். அவை மிகப் பயனுள்ள கட்டுரைகள் என்பதை உணர்ந்து புத்தகமாக வெளியிட விரும்பினேன். அன்போடு அனுமதியளித்தார்கள். சோவியத் மக்களின் பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் சோவியத் மண்ணின் மணத்தையும் தமக்கே உரிய எழுத்தாற்றலால் நாம் கண்டு, கேட்டு அநுபவிக்கச் செய்துவிட்டார்கள் இந்நூலின் மூலம். இதற்காகத் தமிழ்மக்கள் திரு. சுந்தரவடிவேலு அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள்.

பிரயாண நூல்கள் தமிழில் மிகக் குறைவாகவே வெளிவந்துள்ளன. அதை ஈடு செய்யும் இணையற்ற நூலாக இந்நூல் தமிழில் மலர்ந்துள்ளது.

வாசகர்கள் போற்றிப் புகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை. இந்நூலை வானதி பதிப்பக வெளியீடாக வெளியிட அநுமதியளித்த துணைவேந்தர் சுந்தரவடிவேலு அவர்களுக்கு வணக்கத்தோடு கூடிய நன்றி உரித்தாகுக.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

PUBLIC LIBRARY
2-DEC 1973
MADRAS

# முன்னுரை...

உலகத்தின் முதல் சமதர்ம நாடு சோவியத் ஒன்றியம் ஆகும். முதல் சமதர்ம நாடு முதல்தரமான நாடாகவும் விளங்குகிறது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு அக்டோபர் திங்கள் யுகப் புரட்சியொன்று நிகழ்ந்தது. இரஷ்யாவில் நிகழ்ந்து உலகத்தை உலுக்கிய அப்புரட்சி, அரசியல் புரட்சி மட்டுமன்று; பொருளாதாரப் புரட்சியாகவும் சமுதாயப் புரட்சியாகவும் உருவெடுத்தது, அப்புரட்சி.

அன்றைய இரஷ்யாவில் வெடித்த அப்புரட்சி, ஜார் மன்னராட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அது மட்டுமா? முதலாளித்துவ முறையை எடுத்தெறிந்துவிட்டு, சமதர்ம முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. சமதர்ம ஆட்சி, சமுதாயத்திலுள்ள ஆண் பெண் அனைவரையும் முன்னறியாப் பெருநிலைக்கு வளரவைத்து விட்டது.

''பாட்டாளி ஆட்சியாவது; பாரில் நிலைப்பதாவது' என்று நினைத்து இரஷ்யாவில் உள்நாட்டுக் குழப்பங்களை வளர்த்த ஆதிக்கவாதிகள் எண்ணற்றவர்.

முதல் சமதர்ம பாட்டாளி ஆட்சியை முறியடிக்கா விட்டால், பல நாடுகளுக்கும் அம்முறை பரவிவிடும் என்றஞ்சி பதினான்கு அயல் அரசுகள் புதிய சோவியத் ஆட்சியைத் தாக்கின. அவர்கள் கண்டதும் தோல்வியே

ஒப்பிலாத இலட்சியத் தெளிவும் நிகரிலாத உறுதியும் ஈடிலாத உழைப்பும் காந்தமென இழுக்கும் எளிமையும் உண்மையும் செறிந்த தலைவராம் மாமேதை லெனின் அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி, சோவியத் ஒன்றியம், எல்லார்க்கும் கல்வி, எல்லார்க்கும் வேலை, எல்லார்க்கும் உணவும் உடையும் உறையுளும் என்னும் நன்னிலையை அடைந்துவிட்டது.

அங்கே ஆண்டான் அடிமை இல்லை; பெண்ணடிமை இல்லை. மொழியடிமை இல்லை,

"இன்பம் எல்லார்க்கும் என்றே சொல்லிப் பேரிகை எங்கும் முழங்கிடும்" சோவியத் சமுதாயம் சமதர்ம சமுதாயமாக வேரூன்றிவிட்டது; தழைத்து வலுப் பெற்றுவிட்டது. எந்த வல்லரசும் அலட்சியப்படுத்த முடியாத வளத்தையும் வலிவையும் பெற்றுவிட்டது. ஒப்பிலாத அச்சமுதாயம் உலகத்திற்கோர் புதுமை.

கல்வி ஒளியும், கலைப்பொலிவும், மனநிறைவுச் சுடரும் எங்கெங்கும் காட்சியளிக்கும் சோவியத் நாடு இந்தியாவோடு தோழமை பூண்ட நாடு; சக வாழ்வு வாழும் நாடு. பல்வகையாலும், நம் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அடுத்தடுத்து உதவி வரும் நாடு.

ஈராண்டுகளுக்கு முன்பு இந்தியாவும் சோவியத் ஒன்றியமும் இருபதாண்டு உடன்படிக்கை யொன்றை செய்து கொண்டன. இரு நாடுகளுக்கிடையில் அமைதி, நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் செய்து கொண்ட அவ்வுடன்படிக்கை, நமக்கும் நன்மை யானது; உலக அமைதிக்கும் துணையானது.

அவ்வுடன்படிக்கை, மாவீரர் லெனின் அவர்கள் கற்றுத் தந்த சகவாழ்வுக் கொள்கையின் வெற்றி என்பதை உணர்ந்து, சோவியத் மக்கள் பெரும் ஆர்வத்

தோடு ஒருமாத காலம் அந்நிகழ்ச்சியைக் கொண்டாடினர்கள். அக்கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளும் பொருட்டு, இந்திய தூதுக்குழுவில் ஒருவனுகச் செல்லும் பேறு எனக்குக் கிட்டிற்று. அதற்கு முன்னரும் இரு முறை அந்நாட்டிற்குச் சென்று வரும் வாய்ப்புகள் பெற்றேன்.

நான் அங்கே கண்டதும் கேட்டதும் உணர்ந்ததும் எனக்கு எழுச்சியூட்டின; ஆர்வமூட்டின. யான் பெற்ற இன்பத்தை என்னருந் தமிழ்மக்களோடு பகிர்ந்து கொள்வதன்றே முறை. அப்படிப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்க்காலாக அமைந்தது, 'தினமணி கதிர்'.

'தினமணி கதிர்' ஆசிரியரும் என் மெய்யன்பருமான திரு. சாவி அவர்கள் என்னைத் தூண்டி எழுத வைத்ததால், என் காட்சிகளும் கருத்துகளும் தமிழ்மக்களின் சொத்தாக முடிந்தது. எனவே திரு, சாவி அவர்களுக்கு நான் கடமைப்பட்டிருப்பதுபோலவே தமிழ் கூறும் நல்லுலகமும் கடமைப்பட்டிருக்கிறது.

'சோவியத் மக்களோடு' என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரைத் தொடர்களை அழகிய நூலாக வெளியிட முன்வந்த, வானதி பதிப்பக உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

—நெ. து. சுந்தரவடிவேலு

PUBLIC LIBRARY
2-DEC 1973
MADRAS



# 1

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டு, ஆகஸ்ட் ஒன்பதாம் நாள், குறிப்பிடத்தக்க நாள். இந்திய வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்க நாள். இப்படி எதிர்கால வரலாற்று ஆசிரியர்கள் மதிப்பிடுவார்கள். உலகில், அமைதியை நிலை நிறுத்துவதற்காக, எடுத்த முயற்சிகளில், முக்கியமான ஓர் நடவடிக்கை எடுக்கப்பட்ட நன்னாள், என்று வரலாற்றில் சிறப்பிடம் பெறப்போகும் நாள், அதுவாகும்.

அப் பொன்னாளில், இந்தியாவும் சோவியத் ஒன்றியமும் நல்லதோர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. அவ்வுடன்படிக்கை, எந்த அடிப்படையில் அமைந்துள்ளது? அமைதி, நட்புறவு, ஒத்துழைப்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் அமைந்துள்ளது.

அமைதி தேவை. அது வீட்டிற்கும் தேவை. நாட்டிற்கும் தேவை. அதுவே வளர்ச்சிக்குத் துணை; குடும்பங்களின் வளர்ச்சிக்குத் துணை, நாடுகளின் வளர்ச்சிக்குத் துணை; உலக மக்களின் வளர்ச்சிக்குத் துணை. எனவே, அமைதி நிலவ, அவாவ வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

யார் எடுக்க வேண்டும்? ஊர் கூடிச் செக்கு தள்ள முடியுமா? செக்கின் பக்கத்திலே உள்ள இருவர், தள்ள முயன்றால், மற்றவரும் துணைக்கு வரக்கூடும். இதை மனதில் கொண்டு, இந்தியாவும் சோவியத் நாடும், அமைதி காக்கும் உடன்படிக்கை செய்து கொண்டன. எவ்வளவு காலத்திற்கு இவ்வுடன்படிக்கை? இருபது ஆண்டு காலத் திற்கு இவ்வுடன்படிக்கை. பின்னர்? மேலும் இதை நீடித்துக் கொள்ளலாம். நீடித்துக் கொள்வதற்கான நட்பும் நம்பிக்கையும் தொடரட்டும்.

அமைதி காக்க ஒப்புக் கொண்டுள்ள. இரு நாடுகளுக் கிடையே நட்புறவும் ஒத்துழைப்பும் இன்றியமையாதன. இது வெளிப்படை. எனவே நட்புறவையும் ஒத்துழைப் பையும் மற்ற இரு அடிப்படைகளாகக் கொண்டு, உடன்படிக்கை செய்து கொண்டுள்ளோம்.

இவ்வுடன்படிக்கை தேவையானது; இந்தியாவிற்கு நன்மையானது; காலமறிந்து செய்துகொண்டது. இதை, பின்னர் வெடித்த நிகழ்ச்சிகள், மெய்ப்பித்துவிட்டன.

காலத்தினாற் செய்த இவ்வுதவி வரவேற்கத் தக்கது; போற்றத்தக்கது. இவ்வுடன்படிக்கை கையெழுத்தான விதம் மேலும் போற்றத்தக்கதாம்.

"ஆகஸ்டு எட்டாம் நாள் முதல் பதினோராம் நாள் வரை இந்தியாவும் சோவியத் நாடும், உடன்படிக்கை யொன்று செய்துகொள்வது பற்றி, தில்லியில் பேச்சு

வார்த்தைகள் நடத்தும்." இதுவே தொடக்கத்தில் உலகத்திற்கு வெளியான செய்தி. பதினோராம் நாள் தான் ஏதாவது முக்கியமான செய்தி வருமென்று, மக்கள் எதிர்பார்த்தார்கள்.

உலக வல்லரசுகளுக்கு, உளவாளிகள் பலர். அநேகமாக, எல்லா நாடுகளிலும் உளர். அவர்கள்கூட திகைக்கும் வண்ணம், மூன்று நாள் முன்னதாக, உடன்படிக்கையில் இரு நாடுகளும் கையெழுத்திட்டு, உலகறியச் செய்துவிட்டன. வல்லரசுகள், 'பொய் மான்களை' அனுப்பி, திசை திருப்ப முடியாதபடி, செய்துவிட்டார் நம் பாரதப் பிரதமர், பாரத ரத்னா, திருமதி இந்திரா காந்தி. பிரதமரின் தொலை நோக்கும், வினைத்திட்பமும்; எதை, யாராலே, எப்படி, எப்போது, செய்து முடிப்பது என்ற விவேகமும், இரகசியங் காப்பதிலே உள்ள பேராற்றலும் சேர்ந்து, இப்படிப்பட்ட, சிறந்த இருபதாண்டு உடன்படிக்கையை நமக்குக் கொடுத்தது.

இவ்வுடன்படிக்கை, நம் உரிமையைப் பறித்துக் கொண்டதா? இல்லை, பிற நாடுகளோடு உடன்படிக்கை செய்து கொள்ளக்கூடாது என்று கட்டுப்படுத்தியுள்ளதா? இல்லை. உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள இந்தியாவோ, சோவியத் நாடோ. பிற நாடுகளோடு, இத்தகைய நட்புறவு உடன்படிக்கைகள் செய்து கொள்வதற்கும் அனுமதிக்கிறது இவ்வொப்பந்தம்.

உரிமைகளைப் பறிக்காத இவ்வொப்பந்தம், ஒரு நாட்டுக்கு ஒரு நாடு பாதுகாப்பாக இருக்கவும் வழி செய்துள்ளது. இவ்விரு நாடுகளில் ஒன்றின்மீது, மூன்றாம் நாடு, படையெடுத்தால், அல்லது படையெடுக்கக்கூடிய சூழ்நிலை உருவானால், ஒப்பந்தக்காரராகிய மற்ற நாடு முன் வந்து, கலந்து பேசி, பாதுகாப்பு நிகழ்ச்சிகளுக்குத் துணை நிற்பது, உடன்படிக்கையின் விதிகளில் ஒன்று. இந்த

அடிப்படையில்தான், அண்மையில், இந்தியாவை, பாகிஸ்தான் தாக்கியபோது சோவியத் அரசு விரைந்து வந்து, நம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பலவகையிலும் பக்கபலமாக நின்றது. அந்த பக்கபலம், நமக்குப் பேருதவி யாக இருந்தது என்பது யாவரும் அறிந்ததே.

**உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு**

இக்குறளுக்கு நல்ல எடுத்துக் காட்டாக விளங்கியது சோவியத் அரசு.

நம்மோடு நீண்ட காலத்திற்கு உடன்படிக்கை செய்து கொண்ட சோவியத் மக்கள் யார்? முன்னறியாப் புது உறவா? தெரியாதவர்களோடு, 'ஆனது ஆகட்டு'மென்ற அசட்டுத் துணிச்சலில் கண்ணை மூடிக்கொண்டு ஒப்பந்தம் செய்துகொண்டோமா? இல்லை. இல்லை.

சோவியத் நாடு, ஏற்கனவே நமக்கு நேச நாடு. அந் நாட்டு மக்கள் புரட்சி செய்து ஜார் ஆட்சியைக் கவிழ்த்த போது அம்மாபெரும் நிகழ்ச்சியின் ஒலி இங்கேயும் எதிரொலித்தது.

நம் தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் பாடிய பாட்டு இதோ:

**குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு**
**மேன்மையுறக் குடிமை நீதி**
**கடியொன்றி லெழுந்ததுபார் குடியரசென்று**
**உலகறியக் கூறி விட்டார்**
**'அடிமைக்குத் தளையில்லை; யாருமிப்போது**
**அடிமையில்லை அறிக' என்றார்;**
**இடிபட்ட சுவர்போலக் கலிவிழுந்தான்,**
**கிருதயுகம் எழுக மாதோ!**

அதே போல், நம் விடுதலைப் போராட்டத்தில், அந் நாட்டு அறிஞர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள்.

அப் பழங்கதையை விட்டு விட்டு, விடுதலை பெற்ற இந்தியாவின் வரலாற்றிற்கு வருவோம்.

சமதர்ம சோவியத் ஒன்றியம், உலக அரங்கில், இந்தியாவின் பக்கமே, நின்றிருக்கிறது. ஒவ்வொரு முறையும் இந்தியாவின் சார்பில் குரல் எழுப்பியிருக்கிறது. ஐக்கிய நாடுகளின் அவையில், காஷ்மீர் சிக்கல் கிளப்பப்பட்ட போதும், சீனத் தாக்குதல் நடந்த போதும், ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, பாகிஸ்தான் படையெடுத்த போதும் இந்தியாவிற்குத் துணையாக நின்றது சோவியத் நாடு. தேவைப்பட்ட போதெல்லாம், நமக்கு உதவியாக, தனது ரத்து உரிமையை, பந்தோபஸ்து சபையில் பயன்படுத்தியது சோவியத் நாடு. உலக அரங்குகளில் துணைவனாக நின்று, உதவியதோடு நின்றுவிடவில்லை. இந்தியா வளர, தொழில் வளம் பெற, வலிமை பெற, தொடர்ந்து, உதவி வந்துள்ளது. சோவியத் நிபுணர்கள், பல தொழிற் கூடங்களை இந்தியாவில் அமைத்துத் தந்துள்ளார்கள். சோவியத் நிதியும் அவற்றிற்குப் பயன்பட்டுள்ளது. பிலாய், பொகாரோ உருக்காலைகள் அந்த உதவியின் விளைவுகள். ராஞ்சியிலுள்ள, கன மின் கருவிகள் தொழிற்சாலை, சோவியத் உதவியால் உருவானது.

பறங்கி மலைக்கு அப்பால், நந்தம் பாக்கத்தில் இயங்கும், அறுவை மருத்துவக் கருவிகள் தொழிற் சாலையும் சோவியத் உதவிக்குச் சாட்சி. நெய்வேலி மட்டுமென்ன? சோவியத் உதவியை நினைவுபடுத்திக் கொண்டே ஒளிவிடுகிறது. பெரும் ஆலைகளை நிறுவிவிட்டு, அவற்றை இயக்க, சோவியத் நிபுணர்களின் தயவிலேயே, காலமெல்லாம் கிடந்து உழலச் செய்து விட்டார்களா? இல்லை. நம்மவர்களுக்கு நுட்பத் தொழிற் பயிற்சியைக் கொடுத்தனர். இங்கும் வந்து, தொழிற்சாலைகளிலிருந்து கொண்டு கற்றுக் கொடுத்தனர். அவர்கள் நாட்டிற்கும்

அழைத்துக் கொண்டு போய், பயிற்றுவித்தார்கள். அது போல, நாட்டிலேயே, உயர்ரக, தொழிற்பயிற்சிக்கும் நிலையான உதவி செய்துள்ளார்கள். பம்பாயில், ஐ.ஐ.டி. நிறுவுவதற்கு உதவியது சோவியத் நாடாகும்.

இவை காட்டுவன என்ன? சோவியத் நாடு நமக்குப் புதிய உறவல்ல; ஏற்கனவே அறிமுகமான நாடு; நட்பான நாடு. வெறும் உணர்வால் மட்டுமல்ல, அந் நாட்டின் நட்பு நமக்குக் கிடைத்தது. உலக அரங்கு களில், வலிமை மிக்க, தெளிவுடைய சொற்களால் நம்மிடமுள்ள நட்பைக் காட்டி வந்தது, சோவியத் நாடு. மேலும் நம் நாட்டில், பெருந்தொழில் பெருக, அப்போதைக்கப்போது உதவிய செயல்களின் மூலமும் இந்தியாவின்பால் உள்ள நட்பை உலகறியச் செய்து வந்தது. தொடர்ந்து, இடைவிடாது, நேசக்கரந் கொடுத்து வரும் நட்பு நாடோடுதான் நாம் உடன் படிக்கை செய்து கொண்டோம்.

இந்தோ சோவியத் உடன்படிக்கையின் சிறப்பையும் உயிராற்றலையும், பின் விளைவுகளையும் நம்மை விட அதிக மாகவும் விரைவாகவும் புரிந்து கொண்டார்கள் சோவியத் மக்கள். வியப்பும் திகைப்பும் தீர்ந்து, அவ்வுடன் படிக்கை பற்றி நாட்டு மக்களுக்கு நாம் எடுத்துரைப் பதற்கு முன்பே, அவர்கள் அதை, சோவியத் நாடு முழு வதும் விளக்கிச் சொல்லத் தொடங்கி விட்டார்கள். இரு அரசுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்படிக்கை அரசு களோடு நிற்கலாமா? ஆகாது. அரசுகளை ஆக்கும் உரிமை பெற்ற, அந்தந்த நாட்டுப் பொதுமக்களும் வாக் காளர்களும், உடன்படிக்கையில் ஈடுபட்டுவிட வேண்டும். உடன்படிக்கையின் உயிர்நாடியான நல்லுணர்ச்சியில், நட்புணர்ச்சியில் இரண்டறக் கலந்துவிட வேண்டும்.

தலைவர்களுக்கிடையே நட்பு ஏற்படுவது எளிது. இரு நாடுகளிலுமுள்ள கோடி கோடி மக்களிடையே

நட்பை வளர்ப்பது, எப்படி, என்று மலைத்து நின்று விட வில்லை, சோவியத் அறிஞர்கள். இதை, காலத்தின் கருணைக்கு விட்டு விடுவோமென்றும் சோம்பவில்லை அவர்கள்.

இரு தரப்பிலும் கோடானு கோடி மக்களானால் என்ன? ஒவ்வொருவரும் மனம் உடையவரே. ஒவ்வொரு மனமும் மாறும் இயல்புடையதே. நட்பின் வழியில் ஓடும் இயல்புடையதே. கோடி கோடி உள்ளங்களையும் மாற்றி, நட்பின் வழியில், ஒத்துழைப்பின் வழியில், பெருநடை போடச் செய்து, அமைதியை உறுதிப்படுத்த லாம், என்பதில் அசையாத நம்பிக்கை உடையவர்கள் சோவியத் அறிஞர்கள். முயன்றால் முடியுமென்பதை உணர்ந்த சோவியத் மக்கள், இரு நாட்டு மக்களிடை யேயும் பரவலான நட்புறவை வளர்க்க முடிவு செய்தனர். அதற்கான வழிவகைகளை ஆராய்ந்தார்கள். வானொலிப் பேச்சுக்கள், நாளிதழ்கள், சஞ்சிகைகள், ஆகியவற்றில் வெளிவரும் விளக்கக் கட்டுரைகள், கலை நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டப் பேச்சுகள், ஆகியவை நட்புறவை வளர்க்கத் துணை செய்யும். இவை, குறிப்பிட்ட ஒரு பருவத்தில் பெய்தால், வெகு பலன் விளையும். நாள் தோறும் வீட்டைத் துப்புரவு செய்கிறோம்; உண்மை. 'பொங்கல்' என்று வந்து விட்டால், செய்யும் துப்புரவோ, முழுமையானது. அப்போதைக்கப்போது, இந்திய சோவியத் நட்பைப் பற்றி விளக்குவதோடு, ஓர் குறிப் பிட்ட காலத்திற்கு, இதைப் பற்றியே எல்லா நடவடிக் கைகளும் நடந்தால், பலன் அதிகம் ஏற்படும்.

எனவே, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத் தோராம் ஆண்டு நவம்பர் எட்டாம் நாள் தொடங்கி ஒரு மாத காலம், 'சோவியத் இந்திய நட்புறவுத் திங்கள்' கொண்டாட முடிவு செய்தார்கள், சோவியத் மக்கள். இதை நாடு முழுவதும் கொண்டாடத் திட்டமிட்டார்கள். சோவியத் நாட்டில் நடக்கும் அந் நிகழ்ச்சிகளில் கலந்து

கொள்ள, உயர்மட்ட, நல்லுறவுத் தூதுக்குழு வொன்றை அனுப்பி வைக்கும்படி, இந்தியாவைக் கேட்டுக் கொண்டார்கள். அதே சமயத்தில் அறுவர் அடங்கிய உயர்மட்ட சோவியத் நல்லுறவுத் தூதுக்குழுவொன்றை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார்கள்.

சோவியத் மக்களின் வேண்டுகோளின்படி, இந்தியாவின் சார்பில், நால்வர் கொண்ட நல்லுறவுக் குழுவொன்று, சோவியத் நாட்டிற்குச் சென்றது. அத் தூதுக் குழுவின் தலைவர், இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இந்திய காங்கிரசின் பொதுச் செயலர்களில் ஒருவருமான திரு. ஹென்றி ஆஸ்டின் ஆவர். நாடாளுமன்றத்தின் மேலவை உறுப்பினரான திரு. ரஷீத்உடீன் அகமத்கான் மற்றொரு உறுப்பினர். பீகார் மாநிலத்தின் பொதுப் பணித்துறையின் முன்னாள் அமைச்சர் திரு. ராம் லக்கான்சிங் யாதவ், மற்றொரு உறுப்பினர். நானும் அத்தூதுக்குழுவில் ஒருவன்.

குழுவின் தலைவர் திரு. ஆஸ்டின் அவ்வமயம் ஐரோப்பாவில் சுற்றுப் பயணஞ் செய்து கொண்டிருந்தார். எனவே, எங்களை மாஸ்கோவில் சந்தித்து, எங்களுக்கு தலைமை தாங்க ஒப்புக் கொண்டார். நாங்கள் மூவரும் நவம்பர் மூன்றும் நாள் பிற்பகல், டில்லியிலிருந்து, ஆப்கானிய வானவூர்தியின் மூலம், காபூல் சென்றடைந்தோம். அங்கு அன்றிரவு தங்கிவிட்டு அடுத்த நாள், அங்கிருந்து, டாஷ்கண்டிற்குச் சென்றோம். காலை பத்து மணிக்குப் புறப்பட வேண்டிய விமானம் மாலை மூன்று மணிக்குப் புறப்பட்டது. ஏன்? காபூலுக்கும் டாஷ்கண்டிற்கும் இடைவெளியில் இருந்த வானிலைக் கோளாறு. கால தாமதமானாலும், பத்திரமாக, டாஷ்கண்ட் போய்ச் சேர்ந்தோம். 'டாஷ்கண்ட்' - ஆம் அது எத்தனை எத்தனை எண்ணங்களையோ எழுப்புகின்றது.



# 2

'டாஷ்கண்ட்'. இது எழுப்பிய எண்ணங்களை எழுதுவதற்கு முன், ஆப்கனிஸ்த்தானத்தைப் பற்றி, சிலவற்றை எழுதட்டுமா?

நல்ல மாதுளைக் கனிகளையும், பாதாம், பிஸ்தா பருப்புகளையும், நாம், ஆப்கனிஸ்தானத்திலிருந்து இறக்குமதி செய்கிறோம். இப்பொருள்கள் நாட்டிற்கு செலாவணியைத் தேடித் தருகின்றன. ஆப்கனிஸ்தானம் மலைநாடு. இந்தியாவைப் போன்ற பழைய நாடு.

ஒரு காலத்தில் பௌத்த மதம் அங்கே பரவியிருந்தது தெரியுமா? இன்று இஸ்லாமிய நாடாகிய ஆப்கனிஸ்தானம் என்றுமே இஸ்லாமிய நாடல்ல.

அந்நாடு மன்னராட்சி நாடு. அதன் முதல் அரசர் பெயர்'யாமா',அவர் பௌத்தர் என்று கேள்விப்பட்டோம்.

அந்நாட்டில், நெடுங்காலத்திற்கு முன்பு, பௌத்தப் பள்ளிகள் இருந்தன. இன்றும் பெரிய புத்தர் சிலையும் பிற சின்னங்களும் உள்ளனவாம். நம் பாரதக் கதையில் திருதராஷ்டிரன் மனைவி பெயர் காந்தாரி. அவள் காந்தாரத்தில் பிறந்தவர் என்று கருதப்படுகிறது. இன்றும் காந்தாரா என்று ஓர் ஊர் ஆப்கன் நாட்டில் உள்ளது.

இன்றைய காந்தாரமும் அதை உடைய ஆப்கனும் நம்மோடு எப்படிப்பட்ட உறவு? நமக்கு நட்பு நாடு. ஆப்கனிஸ்தானம் இஸ்லாமிய நாடாயிருந்தும் பாகிஸ்தான் பக்கம் சாயவில்லை. அண்மையில், ஐக்கிய நாடுகளின் அவையில், இந்திய பாகிஸ்தான் போர் பற்றி எழுந்த விவகாரத்தில் இந்தியாவிற்கு எதிராக நடந்து கொள்ள வில்லை. இதை நினைத்தால் மகிழ்ச்சி. அப்போதைக்கப் போது நம்முடைய ஆதரவைப் பெற்ற, எகிப்து நடந்து கொண்ட விதமோ வியப்பானது.

ஆப்கனிஸ்தானின் தலைநகரம் எது? அது காபூல். காபூலைச் சுற்றி குன்றுகள். அதைச் சுற்றி பசும் வயல்கள், வீடுதோறும் திராட்சைப் பந்தர்களைக் கண்டோம். திராட்சைத் தோட்டங்களும் நிறைய உண்டு.

காபூல் புது நகரமா? இல்லை. பழைய நகரம். வரலாற்றுக் காலம் முதல் இருந்து வரும் நகரம். இப்போது, புதுப் பொலிவு பெற்று வருகிறது. நவீன நகரமாகி வருகிறது. விமான நிலையத்திலிருந்து, ஊருக்குள் போகும் போது, ஏதோ மேனாட்டு நகரம் ஒன்றிற்குப் போவது போன்ற உணர்ச்சியே ஏற்படுகிறது. அகன்ற நல்ல சிமெண்ட் சாலைகள், நவீன ஓட்டல்கள், மின்சார சாதனங்கள், தியேட்டர்கள் ஆகியவை பெருகி வருகின்றன.

டாக்சிகளும் சொந்தக் 'கார்' களும் ஏராளம். குதிரை வண்டிகளுக்கும் குறைவில்லை. பஸ்களும் ஓடு கின்றன. டாக்சி ஓட்டிகள் நம்பிக்கையானவர்களா என்று சோதிக்க வாய்ப்பில்லை.

ஓட்டல்காரர்கள் நல்லவர்கள். 'காபூல் ஓட்டல்' நல்ல ஓட்டல் என்று கேள்விப்பட்டோம். தூதுக் குழுவினர் மூவரும், விமான நிலையப் பேருந்தில் அங்கு போய்ச் சேர்ந்தோம். இரவு மட்டும் தங்க இடம் கேட்டோம். மூன்று தனி அறைகள் காலியாக இருப்ப தாகக் கூறிப் பதியட்டுமா என்று கேட்டார், ஓட்டல் நிர்வாகி. நல்ல வேளை; எங்களில் ஒருவர், 'என்ன வாடகை' என்று கேட்டார். அவர் கூறிய வாடகை எவ்வளவு தெரியுமா? ரூபாய்க் கணக்கில் நூற்று இருபது ரூபாய். மூன்று அறைகளுக்கு அல்ல. ஒரு அறைக்கு. ஆம்! வாடகை மட்டும் அவ்வளவு. சாப்பாட்டிற்கு வேறே: திகைத்துப் போனோம். கொண்டு வந்த, அந்நியச் செலாவணியில் பாதி, ஓரிரவு தங்கலுக்கு சரியாய் போய் விடுமே என்று சிந்தித்தோம்.

'இதில் பாதி வாடகையில் அறை இல்லையா?' என்று கேட்டோம். அதற்கும் மலிவாக, நல்ல ஓட்டலிலேயே ஏற்பாடு செய்து கொடுக்க முடியும் என்றார். அந்த உதவியைச் செய்யும்படி வேண்டினோம். செய்து கொடுத்தார். இரண்டொரு ஓட்டலோடு தானே தொலைபேசியில் பேசினார். அதற்கு எங்களிடம் கட்டணம் வசூலிக்கவில்லை. 'யாமா' ஓட்டலில் மூவருக்கும் இடம் இருப்பதாக அறிந்து, அதை எங்களுக்கு அமர்த்திக் கொடுத்தார். நன்றி கூறிவிட்டு, 'யாமா' ஓட்டலுக்குச் சென்றோம். அன்றிரவு அங்கு தங்கினோம்.

அந்த ஓட்டல் புதியது. வசதியானது. மேனாட்டு ஓட்டல் பாணியில் அமைந்தது. தனித் தனி குழாயில்

தண்ணீரும் வெந்நீரும் எப்போதும் வரும். படுக்கைகள் துப்புரவானவை; கம்பளிகளும் அப்படியே; துவால்களும் தூய்மையானவை.

ஓட்டல் நிர்வாகி, உருதுவில் எங்களை வரவேற்றார். மொழி புரியாவிட்டாலும், அது காதில் விழாதது அல்ல. ஏற்கனவே கேட்ட மொழியை, விளங்காமல் கேட்பதுவும் அச் சூழ்நிலையில் ஆறுதலாக இருந்தது. எங்கள் தூதுக் குழு உறுப்பினர் திரு. ரஷீத்உடீன்கான், உருதுவிலேயே பதில் அளித்தார், எனவே உபசாரத்தில் அதிக அன்பு கலந்தது.

சாப்பாட்டிற்கு, ஏதாவது, தனியாகச் செய்து கொடுக்க வேண்டுமா என்று விசாரித்தார்கள். மூவரில் இருவர் - நானும் யாதவும் - தூய மரக்கறி உணவுக் காரர்கள், எங்களுக்கு தனிச் சாப்பாடு கொடுக்கும்படி வேண்டினோம். அதற்கும் ஏற்பாடு செய்தார்கள்.

இரவு சாப்பாட்டிற்கு, பழச்சாறு, வட இந்திய ரொட்டி வகையைச் சேர்ந்த, 'நான்' பச்சைக் காய்கறிகள் கலவை, வெந்த காரட்டுகள், வேகவைத்த 'பீன்ஸ்' அதோடு அரை தட்டு வேர்க்கடலைப் பருப்பு, வேகவைத்ததைக் கொடுத்தார்கள், நல்ல பச்சைத் திராட்சையும் கிடைத்தது.

காய்கறி சூப் கேட்டோம். செய்து கொடுத்தார்கள். அருமையான சூப் பெரிய கிண்ணம் நிறைய இருந்தது. விருந்துண்ட நிறைவோடு உறங்கினோம்.

அடுத்த நாள் காலை, ஏழு மணிக்குள் குளித்து உடுத்திக்கொண்டு பெட்டிகளை ஒழுங்குபடுத்தி விட்டு புறப்படுவதற்கு ஆயத்தமானோம். சாளரத்தின் வழியே தெருவில் போவோர் வருவோரை வேடிக்கை பார்த்தேன்.

காபூலில் அப்போதுதான், குளிர்காலம் தொடங்கிற்று. காலையில் குளிர் காற்றும் சீறிற்று. எல்லோரும் பெரிய கம்பளியைப் போர்த்துக் கொண்டு பெரிய தலைப்பாகையும் நீண்ட காலணிகளையும் அணிந்து கொண்டு, காலை ஏழு மணிக்கெல்லாம் வேலைக்குச் செல்வதைக் கண்டேன். ஆப்கானியர்கள், பெரிய பாரங்களை முதுகின் மேல் சுமந்து கொண்டு, நடப்பதிலும் மலையேறுவதிலும் கைதேர்ந்தவர்கள். அதிகாலையில் இந்தக் காட்சியைப் பார்த்தபடி நின்றேன்.

ஏதோ ஒலி கேட்டது. ஓசை வந்தப் பக்கம் திரும்பினேன். ஓராள், கழுதையொன்றின் மேல், காய்கனிகளை ஏற்றி வருவது தெரிந்தது. வீடுவீடாக அவற்றை விற்றுக் கொண்டு வந்தார். ஓட்டலுக்கு எதிர் வீட்டில் வந்ததும் அவர், பழைய ஒலியை எழுப்பினார். வீட்டிலிருந்து பதில் வந்தது. விட்டிலிருந்து யாரும் வெளியே வந்து பதில் சொல்லவில்லை. எனவே ஆப்கானியப் பெண்களின் உடையைக் கவனிக்க வாய்ப்பில்லை. ஆப்கானிய விமான சர்வீஸில் பணிபுரியும் ஆப்கன் பெண்கள், மேனாட்டுப் பாணியில் உடுத்தியிருந்ததைக் கண்டோம்.

'வேண்டாம்' என்ற பதிலாக இருக்க வேண்டும்! அவர் அங்கே நிற்காமல் கழுதையை ஓட்டிக் கொண்டு போய் விட்டார். கழுதையின் முதுகில் மேலிருந்து, இருபக்கங்களிலும் கோணிப்பைகள் தொங்கின. ஒரு பக்கத்துப் பையில் தளதளவென்ற தக்காளிப் பழங்கள், மறுபக்கத்துப் பையில், பெரிய உருளைக் கிழங்குகள்.

முதல் காய்கறி வியாபாரி சென்ற சில நிமிடங்களுக்குப் பிறகு மற்றொரு வணிகர், காய்கறிகளைக் கூவிக் கொண்டே வந்தார். அவர் ஓட்டி வந்த கழுதை, ஒரு பக்கத்துப் பையில் முட்டைகோசையும் மற்றொரு பையில் 'காலிபிளவர்'களையும் சுமந்து கொண்டு வந்தது.

அதிகாலையில் வேலைக்குப் போவதாகக் கூறினேனல்லவா? கூலி வேலைக்காரர்கள் மட்டுமா அப்படி இல்லை. அலுவலகங்களும் கூட, காலை எட்டரை அல்லது ஒன்பது மணிக்குள் திறந்து இயங்குகின்றன.

காபூலில் தங்கியது, சிலமணி நேரமே ஆயினும் இந்தியத் தூதரகத்துக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டிற்று காலை ஒன்பது மணிக்கு நாங்கள் சென்றோம். அலுவலகத்தில் வேலை நடந்து கொண்டிருந்தது. எங்களுக்கு எவ்வளவு பூரிப்பு தெரியுமா? நாமும் காலையில் அலுவலகங்களைத் திறந்தால் என்ன? படிப்பிற்கு ஏற்ற நேரமாகிய காலைப் பொழுதில் கல்விக் கூடங்களைத் திறந்தால் என்ன? இவ்வெண்ணங்கள் எழுந்தன.

ஆப்கனிஸ்தானத்தோடு, வாணிக ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக இந்தியத் தூதுக்குழுவொன்றை, நம் அரசு, அப்போது, காபூலுக்கு அனுப்பியிருந்தது. அவ்வொப்பந்தத்தின் விளைவாக, மாதுளையும், பாதாமும், பிஸ்தாவும், உலர்ந்த திராட்சையும் தாராளமாக நமக்குக் கிடைத்தால் நன்றாக இருக்குமல்லவா? பழமும் பருப்பும் எல்லோருக்கும் எட்டுவது நல்லதல்லவா?

காபூலில், நாங்கள் பெருமைப்படுவதற்கான ஒன்றைக் கண்டோம். அது, உங்களுக்கும் பெருமை கொடுக்கக் கூடியதே! இதோ சொல்லி விடுகிறேன்.

இந்தியா, ஆப்கனிஸ்தானத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்கிறது. ஆமாம் அந்நாட்டின் நலத்திற்கு உதவுகிறது இந்தியா. இந்தியா, 'வாங்கிக் கொள்ளும் நாடு; கொடுக்கும் நாடல்ல' என்று நினைத்திருந்தால் தவறு. நாமும் சில நாடுகளுக்கு உதவி செய்கிறோம். ஆப்கனிஸ்தானத்திற்கு என்ன உதவி செய்கிறோம்?

மருத்துவ நிலையமொன்றைக் கட்டிக் கொடுத்து உதவும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். கான்ட்ராக்டர்

களாகவா? இல்லை. நன்கொடையாளர்களாகவா? ஆம். இந்தியாவின் செலவிலேயே ஒரு மருத்துவ நிலையத்தைக் கட்டும் வேலை நடந்து கொண்டிருந்தது. வேலை நடக்கும் இடத்திற்குச் சென்றோம். ஆப்கானியர்பால் நாம் கொண்டுள்ள நல்லெண்ணத்தின், நட்பின், அடையாள மாகப் பணிபுரியப் போகும் அம் மருத்துவமனைக் கட்ட டத்தைக் கண்டு பெருமை கொண்டோம். அது பெரிதா? சிறியதா? பெரியது. நூறு படுக்கைகள் கொண்டது. அது சிறுவர்களுக்கான மருத்துவ விடுதி.

ஆப்கானிய அரசின் அனுமதிபெற்று, ஆப்கானியக் குழந்தைகளுக்காக அம் மருத்துவமனையைக் கட்டிக் கொண்டிருக்கிறது, இந்தியா. மேற்பார்வையாளர்கள் யார்? இந்தியப் பொறியர்களும் மருத்துவர்களும் இணைந்து மேற்பார்வை செய்கிறார்கள். மருத்துவமனை, இரண் டொரு மாதங்களில் முடியும் நிலையில் இருந்தது. மொத்தத்தில் வேலை சுறுசுறுப்பாகவே நடப்பதாகக் கேள்விப்பட்டோம்.

அதிகாலையிலேயே, பொறியர், வேலை நடக்கும் இடத்திற்கு வந்துவிடும்போது, வேலை தேங்காமலே நடப்பது வியப்பா? வாடைக் காற்று சீறி அடிக்க, காலை ஒன்பதரை மணிக்கு, நாங்கள் அங்குச் சென்றபோது, மேற்பார்வையாளர்கள் அலுவல்களில் ஆழ்ந்து ஈடுபட்டி ருந்ததைக் கண்டோம். 'காலை வேலை' விரைவான வேலை என்ற இரகசியம் நமக்குத் தெரிந்ததே! வெய்யில் ஏறு வதற்கு முன் அன்றாட வேலைகளைத் தொடங்கிவிடக் கற்றுக் கொள்வோமாக.

மருத்துவ நிலையத்தைக் கட்டி முடித்ததும், ஆப்கானிய அரசிடம் ஒப்படைத்து விடுவோம். அந்த அரசே அதை நடத்தும், ஆனால், தொடக்கத்தில் இரண்டு மூன்று ஆண்டு

களுக்கு, நம் மருத்துவர்கள், அங்குப் பணியாற்ற ஆப்கானிய மருத்துவர்களுக்குக் கைகொடுப்பார்களாம். அதைச் சொன்ன இந்திய டாக்டர், ஓர் பஞ்சாபி. அந்த சர்தார் கண்களிலே வீசிய பெருமித ஒளி, இன்றும் நினைவிற்கு வருகிறது.

வாங்கும் கைகள் வழங்கும் கைகளாகவும் இருப பதை, இந்திய அரசு காபூலில் அமைத்துக் கொடுக்கும் சிறுவர் மருத்துவமனை நினைவுபடுத்திக் கொண்டே நற்பணி புரிவதாக! இரு நாடுகளுக்கிடையில் நட்பும் நல்லெண்ண மும் தொடர்வதாக; உறுதிப்படுவதாக!

இத்தகைய கருத்துகளோடு விமான நிலையத்திற்கு விரைந்தோம். சில நிமிட உரையாடல் உண்மையின் ஒரு சிகரத்தைக் காட்டிற்று. நான் பேசாமல், கவனமாகக் கேட்டேன். சாரம் இதோ! 'யூனிசெப்', 'யூனெஸ்கோ' ஆகியவை, மானிடத்தின் குறைபாடுகளை உணரச் செய்வதிலே, அவற்றை ஒழிக்க ஊக்குவிப்பதிலே, அப் பணியில் ஒத்துழைக்கக் கூடிய நாடுகளைத் தொடர்பு படுத்துவதிலே; கிடைக்கும் உதவிகளை வாய்க்கால் படுத்து வதிலே, நல்ல பணிபுரிந்துள்ளன. ஆயினும் அவற்றின் பணிகளுக்கும் புகழுக்கும் இந்தியாவும் பங்காளி என்பதை மறந்துவிடக் கூடாது. உலக அவைகள், நமக்கு அப்பாற் பட்ட, நம்முடைய தொடர்பில்லாத, கொடை நிலையங்கள் என்று எண்ணிவிடக் கூடாது. அவற்றைப் போற்றலாம். தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடத் தேவையில்லை.

உலகிலுள்ள பல நாடுகளில், இன்றும் எழுத்தறி யாமை கல்லாமை, அறியாமை ஆகியவைபரவலான நோய். இந்நோய்கள் பரவியுள்ளதையும், அவை மானுட வளர்ச்சி யைத் தடுப்பதையும் உலக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வர, அவர்களை, இந்நோய் நீக்கும் வழிகள் பற்றி

சிந்திக்கச்செய்ய, முன்னர், உலக அமைப்பு ஒன்று இல்லை. ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட 'யூனெஸ்கோ' அந் நற்பணியைச் செய்து வருகிறது. உலகில் எல்லோரையும் எழுத்தறிவுடையவர்களாக்கும் பணியில் அதற்குப் போதிய ஆதரவு கிடைக்காவிட்டாலும், இப்படிப்பட்ட சிக்கல்கள் இருப்பதை விளம்பரப்படுத்துவதில் யூனெஸ்கோ வெற்றி பெற்றுள்ளது.

புராதன நாகரீகச் சின்னங்களைக் காப்பதிலும் விஞ்ஞான வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும், இன வேற்றுமைக் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுவதிலும் யூனெஸ்கோ ஓரளவு வெற்றி பெற்றுள்ளது.

'யூனிசெப்' என்பது, உலகக் குழந்தைகள் அனைவருடைய நல்வாழ்வைக் கவனித்துக் கொள்ள, ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். அது தோன்றுவதற்கு முன்பு, கோடிக்கணக்கான குழந்தைகள் உண்ண உணவின்றி பரிதவிப்பதையும் கிடைக்கும் உணவு சத்தின்றி இருப்பதையும் அதனால் இளைப்பு, களைப்பு, வளர்ச்சியின்மை, நோய் நொடிகளுக்கு ஆளாகுதல் ஆகியவை பற்றியும் மானுடத்தின் கவனம் பெருமளவு ஈர்க்கப்படவில்லை.

'யூனிசெப்' 'யூனெஸ்கோ' ஆகிய உலக அவைகள் இந்தியாவில் சில திட்டங்களுக்கு, அப்போதைக்கப்போது உதவி புரிகின்றன.

"ஆமாம், அந்த கருத்தரங்கிற்கு எட்டாயிரம் டாலர் தந்ததே யூனெஸ்கோ! பச்சைக் குழந்தைகளுக்குப் பால் வார்க்க, யூனிசெப் கொடுத்ததே இலட்ச ரூபாய்! அந்தக் கோயில் திருப்பணிக்கு பதினையாயிரம் டாலர்" என்று மகிழ்கிறோம். சிறுபிள்ளைகள், எதிர்பாராத, மிட்டாய்ப் பரிசுகளுக்கு மகிழ்ந்து கூத்தாடுவதுபோல நாமும், போற்றிப் புகழ்ந்து, 'யூனிசெப்' 'யூனெஸ்கோ' போன்ற

வற்றை கலியுக கர்ணனாகக் கருதுவது தவறு. இந்தியாவும் சேர்ந்து அமைக்கப்பட்டவையே அச் சபைகள். அவை அளிக்கும் உதவியைப் பெற நமக்கு உரிமையுண்டு. நமக்குக் கொடுப்பது 'பிச்சையல்ல'.

இந்திய அரசின் ஆண்டுச் சந்தாவையும் பெற்று வாழ்பவை அவை. ஆண்டிற்கு ஆண்டு நாம் யூனிசெப்பிற்குக் கொடுக்கும் நிதி, சிறுதொகையல்ல. நம் நிலைக்கு ஆண்டு சந்தா அறுபத்தைந்து இலட்சம் குறைவா? நாம் பல்லாண்டுகளாகச் செலுத்திய சந்தாக்களைக் கூட்டிப் பாருங்கள். அவற்றை நல்லவண்ணம் முதலீடு செய்திருந்தால் நாடு தானே வளர்ந்திருக்கும். ஆயினும், நாமும் உலக சமுதாயத்தோடு ஒன்றி இருக்க வேண்டும்; இயங்க வேண்டுமென்பதற்காக இத்தகைய அவைகளில் உறுப்பினராக இருப்பதோடு, தாராளமாக, அநேகமாக பாக்கியில்லாமல், சந்தா செலுத்தி விட்டே, சிறுசிறு உதவிகளைப் பெறுகிறோம். அவ்வுதவித் திட்டங்களை நடத்தும் அதிகாரிகள் பெரும்பாலார் மேனாட்டார். அந்த அதிகாரிகளைக் கூட தெய்வ 'வள்ளல்'களாகக் கருதும் நிலை கீழ் மட்டங்களில் உருவாகிவிடுகிறது. அத்தகைய மனப்போக்கே, ஆதிக்க வல்லரசுகள், வளரும் நாடுகளை, சொன்னபடி கேட்கும் சிற்றரசுகளாகப் பாவிக்கும் அகந்தைக்கு உயர்த்திவிடுகிறது. உலகத் தொண்டு நிதிகளுக்கும் நம்மாலானதைக் கொடுத்து விட்டே, உரிய பங்கைப் பெற்றுக் கொள்கிறோம் என்பதை, நாட்டு மக்கள் உணர்தல் நல்லது.



# 3

காபூல் விமான நிலையத்திற்குக் குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேர வேண்டுமென்ற துடிப்பில், காபூல் குழந்தைகள் மருத்துவ நிலையத்தைக்கூட, ஆர அமர, சுற்றிப் பார்க்காமல், தலை தெறிக்க ஓடி வந்தோம். நாங்கள் காரை விட்டு இறங்கியதும் இறங்காததுமாக, ஒருவர் எங்களிடம் வந்து, விரைவாக உள்ளே வரும்படி வேண்டினார். அப்படியே விரைந்து சென்றோம். பயணச் சீட்டுத் தணிக்கை, சுங்கத் தணிக்கை ஆகியவை நொடியில் நிகழ்ந்தன; மரியாதையாகவும் நிகழ்ந்தன.

"இன்று, விமானம் புறப்படும் நேரத்தை, ஒரு மணி முன்னதாக்கி விட்டோம். உங்களுக்குத் தகவல் கொடுக்க முடியவில்லை; நீங்கள் தங்கியிருந்த ஓட்டலின் பெயர் தெரியாத காரணத்தால். எல்லாப் பயணிகளும் ஏற்

கனவே வந்து சேர்ந்து விட்டார்கள். உங்களுக்காகவே காத்திருக்கிறோம்,'' என்று சொல்லிக் கொண்டே, எங்களை புறப்படும் வாயிலுக்கு இட்டுக் கொண்டு சென்றார் ஓர் அதிகாரி. அங்கே பயணிகள் வரிசை நின்றது. நாங்களும் வரிசையில் நின்றோம். ஐந்து நிமிடங்கள் காத்திருந்தோம்.

''பருவநிலை பற்றிய கடைசி செய்தி இப்போது கிடைத்தது. வழியில் வானிலை சரியாக இல்லை. அது சரியாவதற்கு இரண்டொரு மணிகள் செல்லும். அது வரை, பயணிகள் காத்திருக்க நேரிடுவதைப் பற்றி வருந்துகிறோம்'' என்ற அறிவிப்பு, ஒலிபெருக்கி வாயிலாக வந்தது. ஒற்றைக் காலில் தவமிருந்தாலும் பயனில்லை என்பதை உணர்ந்து, இருக்கைகளில் அமர்ந்தோம்.

இரண்டு மணி தாமதம், — மூன்றாகி, நான்காகி— கடைசியில் ஐந்து மணி தவக்கமாகி விட்டது.

'நினைத்ததும் நடக்க வேண்டும்' என்று பதறுகிற எனக்கு பொறுமையைக் கற்றுக் கொடுக்க இத்தகைய நெருக்கடிகள் பலமுறை உதவின: அன்றும் உதவியது. கோளாறான வானிலை மேல் கோபித்துப் பயன் என்ன? பாரதியார் இடித்துக் காட்டியபடி, 'கோபத்தால் நாடி யெல்லாம் அதிர்ச்சியாகும்' என்பதை உணர்ந்து, அடங்கி இருந்தேன். ஆனது ஆகட்டுமென்று அமைதி கொண்டேன். ஐந்து மணி நேர தாமதத்திற்குப் பின், காபூலை விட்டு, டாஷ்கண்டிற்குப் புறப்பட்டோம். 'ஏரோப்ளோட்'—சோவியத் விமான சர்வீஸ்—வானவூர்தியில் பறந்து சென்றோம்.

அவ் விமானம் ஆப்கன் மலைகளின்மேல் பறந்து சென்றது. கீழே, எங்கும் மலைக் காட்சி. நெடு நேரம் இப்படியே. பிறகு சமவெளி தென்பட்டது. ஆப்கன் நாட்டின் மலைகளையும் உஸ்பெக் குடியரசின் மலைகளையும்

கடந்து விட்டோம், என்பதை உணர்ந்தேன். பத்தாண்டு களுக்கு முன்பு போனது நினைவில் வந்தது. உஸ்பெக் குடியரசின் தலைநகராகிய டாஷ்கண்டை நெருங்கியது தெரிந்தது.

டாஷ்கண்ட், இந்திய வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்டதல்லவா? நல்ல இடத்தையும் பெற்று விட்டது. ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தைந்தில், பாகிஸ் தானத்திற்கும் இந்தியாவிற்கும் போர் மூண்டது. இரு நாடுகளுக்கு மிடையில் சமாதானத்தை ஏற்படுத்த, சோவியத் அரசு முன் வந்தது. அன்றைய சோவியத் பிரதமர் கோஸிஜின் அரும்பாடுபட்டு, அன்றைய பாகிஸ்தான் அதிபர் அயூப்கானையும் இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியையும், டாஷ்கண்ட் நகரில், சந்தித்துப் பேச வைத்து, இரு நாடுகளுக்கும் அமைதி ஒப்பந்தம் ஏற்படச் செய்தார். இதன் மூலம் டாஷ்கண்ட் இந்திய வரலாற்றில் பதிந்து விட்டதை எண்ணி உவந்தேன், வான ஊர்தியில் பறந்து கொண்டே...

மின்னல் வேகத்தில் எண்ணம் ஓடிற்று. லால்பகதூர் சாஸ்திரி-ஆம்.

நம் பிரதமர் சாஸ்திரி அமைதி உடன்படிக்கை செய்து கொண்ட அதே டாஷ்கண்டில், வெற்றியைக் கொண்டாடுவதற்கும் வாய்ப்பில்லாமல், இயற்கை யெய்திய சோக நிகழ்ச்சி மின்னிற்று. சோகம் என்னை உலுக்கிற்று. சில நிமிட உலுக்கல். வருந்திப் பயன் என்ன என்று கேட்டது என் மனமே.

''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர்.'' பழைய காலப் பண்டிதர் எனக்குக் கற்றுக் கொடுத்த இப் பழம் பாடல், ஆறுதல் ஊசி போட்டது. வெற்றிக் களிப்பும் அதிர்ச்சி மயக்கமும்

ஒன்றோடொன்று போட்டியிட்டு, தலைதெறிக்க ஓட்ட பந்தயம் நடத்துவதல்லவா, மனித வாழ்க்கை? 'இடும்பை இயல்பென்பான் துன்பம் உறுதல் இவன்' என்னும் குறளை ஏன் மறந்து விட்டாய் என்று இடித்தது, உள் மனம். ஆறுதல் பெறும் முயற்சியில் லால்பகதூர் சாஸ் திரியின் அருமை பெருமைகளைச் சிந்திக்க முயன்றேன்.

சாஸ்திரி, உருவத்தால் சிறியவர். வாழ்க்கையால் பெரியவர். எத்தனை உயர்ந்த அதிபர்களுக்கும் அஞ்சாத பிரதமர்; இனிமையான சொல்லினர்; ஆனாலும் உறுதி யான செயல்படைத்திருந்த பிரதமர். கூச்சம் நிறைந்த, அடக்கமான, ஆனால் யாருக்கும் அஞ்சாத, பிரதமர், நம் லால்பகதூர் சாஸ்திரி. அவர் யார்? சீமான் வீட்டுச் செல்லமா? இல்லை. ஏழை வீட்டு மகன். மேனாட்டுப் படிப்பாளியா? இல்லை. இந் நாட்டில் சாத்திரம் கற்றவர். நாட்டுப் படிப்புப் படித்து நாடாளும் நிலைக்கு உயர்ந்தவர்.

இந்தியாவின் விடுதலை இயக்கத்தில் அவர் பங்கு பெரிது. அண்ணல் காந்தி அடிகளின் தலைமையில் அவரது வழியைப் பின்பற்றி சாஸ்திரி ஒன்பது முறை சிறை சென்றதை எண்ணிய போது, நன்றிப் பெருக்கால், என் கண்கள் கலங்கின. சில இலட்சம் தியாகிகள், தங்கள் தங்கள், சொந்த நலன்களை மறந்து நாட்டின் விடுதலைக்காக, பல தியாகங்களையும், மனமுவந்து, செய்ததால் அல்லவா என்னைப் போன்ற கோடானு கோடி இந்தியர்களும் சுதந்திரக் குடியரசின் பெருமை மிக்க குடிமக்களாக வெளிச்சம் போட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைத்த போது, காந்தி முதல் குமரன் வரை என் வணக்கத்திற்கு உரியவர்களா னார்கள்.

சாதாரண குடும்பத்தில் பிறந்த சாஸ்திரி - இந்தியாவின் பிரதமரானது அவருக்கு மட்டுமல்ல, சிறப்பு; இந்தியாவிற்கும் சிறப்பு; சுதந்திரத்தின் இன்றியமையாமைக்கு சின்னம். மெய்யான, உரிமை பெற்ற, மக்களாட்சி தான், குடிமக்கள் ஒவ்வொருவரிடமும் மறைந்து கிடக்கும் ஆற்றலை மலரச் செய்து மணக்கச் செய்து, பயன்படச் செய்யும். மாறாக. சுதந்திரமில்லாத நாட்டிலே, 'ஆவியங்குண்டோ, ஆக்கமுண்டோ, காவியமுண்டோ, கலைகள் உண்டோ' என்று கவி பாரதி, கண்ணீர் விட்டதில், எத்தனை உண்மையிருக்கிறது, என்று தெளிந்தது, என் சிந்தனை. அரசியல் சுதந்திரத்தின் பெருமையை உணர்ந்தேன். அறியாமையிலிருந்து விடுதலை பெற்று, சமுதாய நீதி பெற விரைய வேண்டாவா என்று கேட்டது உள்ளம். ஆமாம் என்றது அதுவே. இக்காலத்தில், விரைந்து பொருளாதார மறு வாழ்வை ஏற்படுத்தா விட்டால், அரசியல் சுதந்திரம் ஆட்டங் கண்டு விடுமென்று அச்சுறுத்திற்று நெஞ்சு.

'அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்' என்ற குறட்பாவின் பகுதி தடம் காட்டிற்று. ஆமாம்; வறுமை - அதன் விளைவான பட்டினி - அதனிற் பொங்கியெழும் வெறுப்பு - வெகுளி - வன்முறை ஆகியவற்றின் கொடுமைக்கு அஞ்சுவது, அறிவாளிகளின் தொழில். அவற்றை முளையிலே கிள்ளி எறிய வழிவகை சொல்வது, சொல்வதோடு நில்லாமல், ஆக்க முயற்சிகளின் மூலம் வறுமையைத் துடைக்கத் துணை நிற்பது - தோள் கொடுப்பது, கற்றவர் கடமை என்று ஒப்புக் கொண்டது என் உள்ளம்.

"ஒப்புதல் வேரூன்ற வேண்டும்; சிந்தனை தாவக் கூடாது" என்பது போல், அறிவிப்பு ஒன்று கருத்தோட்டத்தைத் தடுத்து நிறுத்திற்று.

டாஷ்கண்ட் விமான நிலையத்தில் இறங்கப் போகி றோம். அவரவர் இருக்கையில் அமர்ந்து, கச்சையைக் கட்டிக் கொள்ளுங்கள். 'புகை பிடிக்காதீர்கள்' என்ற குறிப்பைப் பின்பற்றுங்கள். வானவூர்தி, நிற்கும் வரை எழுந்திருக்காதீர்கள்." பணிப் பெண் அப்படி அறிவித் ததும், புதிய, நல்ல, சமுதாயத்தை விரைந்து உருவாக்கு வதில், அறிவாளிகளின் பங்கைப் பற்றிய சிந்தனையைத் தேக்கி விட்டு, கட்டளைப்படி கச்சைகளைக் கட்டிக் கொண்டு, காத்துக் கொண்டிருந்தேன். என்றைக்குமே புகை பிடிக்காதவன். ஆகவே சிகரெட்டை அணைக்கும் தேவை ஏற்படவில்லை.

விமானம் கீழே இறங்கி, ஓடு பாதையில் ஊர்ந்து, கடைசியாக நின்றது. பயணிகள், இறங்குவதற்கு அறிவிப்புக் கிடைத்தது. வரிசையாக இறங்கி விமான நிலையத்திற்குச் சென்றோம்.

டாஷ்கண்டில், சிறு தூறல், குளிர் காற்று சீறிற்று வெளியில் நடக்க வேண்டிய தூரம் அதிகம் இல்லை. ஆகவே, துன்பப்படாமல் விமான நிலையத்திற்குள் புகுந் தோம்.

முதலில் உடல்நலச் சான்றுகளைச் சோதிக்கும் கூடத் திற்குச் சென்றோம். நீண்ட வரிசையில் நின்றோம். இரு பெண்கள், சான்றுகளைச் சோதிக்கும் பணியில் ஈடு பட்டனர். பதினைந்து இருபது நிமிடங்கள் நின்ற பிறகு எங்கள் சான்றுகளின் சோதனை முடிந்தது.

அடுத்தது சுங்கச் சோதனை. அது, பிற நாடுகளில் இருப்பது போல் கண்டிப்பாக இருக்குமென்று கேள்வி, விற்கும் பொருள் எதையும் நாங்கள் கொண்டு போக வில்லை. தடுக்கப்பட்ட பொருளும் மூவரிடமும் இல்லை. கொண்டு போன அந்நியச் செலாவணியும் இந்திய

அரசால் அனுமதிக்கப்பட்ட தொகையே. அத்தொகையையும் ஒவ்வொருவர் 'பாஸ்போர்ட்'லும் குறிக்கப்பட்டிருந்தது. மடியில் கனமில்லை; வழியில் பயமில்லை என்ற தெம்பில், சுங்க நமூனக்களைப் பூர்த்திசெய்து, கையெழுத்திட்டு, பெட்டிகளைக் காட்டுவதற்காக வரிசையில் நின்றோம்.

வெளி நாட்டுப் பயணத்தைப் பொருத்த மட்டில் எங்கள் மூவரில், நானே அனுபவசாலி. அதுவும் சோவியத் நாட்டிற்கு, ஏற்கனவே இருமுறை சென்று வந்தவன். எனவே, எங்கள் தணிக்கை முறை வந்த போது, அனுபவத் துணிச்சலால், மற்ற இரு தோழர்களுக்கு முந்தி நான் சென்று, 'டெலிகேஷன்' அதாவது தூதுக் குழு என்று அறிவித்தேன்.

'டெலிகேஷன்' என்று திருப்பிச் சொன்னார் சுங்க அதிகாரி. சொல்லி விட்டு வேறொரு மேசையண்டை எங்களை அழைத்துச் சென்றார். அங்கிருந்த அதிகாரியிடம் 'டெலிகேஷன்' என்று அறிமுகப்படுத்தி, எங்களை ஒப்படைத்து விட்டுச் சென்றார்.

அங்கே சென்று நின்றதும், 'இந்திய தூதுக் குழு' என்று நான் ஆங்கிலத்தில் சொன்னேன். அதிகாரி, தம்மிடமிருந்த பட்டியலைப் பார்த்தார். எங்கள் மூவர் பெயரையும் ஒவ்வொன்ருகப் படித்தார். பெயரைப் படிக்கப் படிக்க, அது யார் என்று அடையாளம் காட்டிக் கொண்டோம். கையிலிருந்த சுங்க நமூனவைக் கொடுத்தேன். தூதுக்குழுவிடம் சுங்க உறுதிமொழி பெறுவது இந்நாட்டின் வழக்கமல்ல. இது தேவையில்லை" என்று ஆங்கிலத்தில் கூறியபடியே, என் உறுதிமொழிச் சீட்டைக் கிழித்து, கூடையில் போட்டார். மற்ற இருவரது சீட்டுகளுக்கும் அதே கதி.

எங்கள் பெட்டிகளை அடையாளம் காட்டச் சொன்னார். அவற்றின் மேல் சட்டென்று சுங்கக் குறியிட்டு விட்டு, நீங்கள் போகலாம் என்ருர் அதிகாரி.

டாஷ்கண்டில் எங்கள் ஏற்பாடுகளைக் கவனித்துக் கொள்ள வேண்டியவரின் முகவரியை அதிகாரியிடம் காட்டினேன். அதைக் கண்டதும், அங்கிருந்த ஒரு அம்மையாரை அழைத்து, அவரிடம் எங்களை ஒப்படைத்து உரியவரிடம் சேர்த்து விடும்படிக் கூறினார்.

விமான நிலையத்தின் மேன்மாடியில் பயணிகள் தங்கும் கூடம் உள்ளது. அங்கே அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்தார். எங்கள் எதிரிலேயே, யாருக்கோ டெலிபோன் செய்தார். பல முறையும் கூப்பிட்டும் அந்த தொலைபேசி எண் கிடைக்கவில்லை. யாருடனே பேசிக் கொண்டிருந்தது. அம்மையார் சளைக்கவில்லை. முகத்தில் எரிச்சல் குறியும் இல்லை. அவரது பொறுமையை வியந்து கொண்டே நாங்கள் உட்கார்ந்திருந்தோம்.

திடீரென எங்கள் அருகில் ஆங்கிலம் கேட்டது. திரும்பிப் பார்த்தோம்.

''காலதாமதத்திற்கு மன்னிக்கவும். ஐந்து மணி தாமதமாக விமானம் வந்து சேரும் என்று சொன்னார்கள். அதை அப்படியே நம்பி விட்டு, அலுவல்களில் மூழ்கி விட்டோம். விமானமோ சிறிது முந்தி வந்து விட்டது. அச் செய்தி எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதைக் கேட்டதும் ஓடோடி வருகிறோம். நீங்கள் காத்திருக்க நேர்ந்ததைப் பற்றி வருந்துகிறோம்.

''இதோ, வெளிநாடுகளோடு பண்பாட்டு உறவு கொள்ளும் சோவியத் கழகத்தின், டாஷ்கண்ட் கிளையின் துணைத் தலைவர்'' என்று அறிமுகப்படுத்தினார், முதலில் எங்களிடம் பேசியவர். அறிமுகப்படுத்தியவர் ஆங்கில மொழி பெயர்ப்பாளர்.

''கால தாமதத்தால் எங்களுக்கு இடையூறு ஏதும் ஏற்படவில்லை, ஆகவே வருந்தத் தேவையில்லை'' என்று சமாதானப்படுத்திக் கொண்டே ஒவ்வொருவராக, டாஷ்கண்ட வாசிகள் இருவரோடும் கை குலுக்கினோம். அதைக்கண்ட அம்மையார் தொலைபேசியை விட்டுவிட்டு எங்களிடம் வந்தார்.



# 4

தொலைபேசியோடு போராடிக் கொண்டிருந்த டாஷ்கண்ட் பெண்மணி, எங்கள் நண்பர்களிடம் கை குலுக்கி விட்டு, எங்களை அவர்களிடம் ஒப்படைத்தார்.

'உங்களை நன்றாகப் பார்த்துக் கொள்வார்கள்' என்று கூறி விட்டு விடை பெற்றுக் கொண்டார்.

டாஷ்கண்ட் தோழர்கள் எங்களை அழைத்துக் கொண்டு வெளியே சென்றார்கள். அங்கிருந்த, கார் ஒன்றில் ஏறி, ஐவரும் - நாங்கள் மூவர்; அவர்கள் இருவர் டாஷ்கண்ட் நகருக்குச் சென்றோம்.

சோவியத் நாட்டில், 'வெளி நாடுகளோடு பண்பாட்டு-நட்புறவுக் கழகம்' என்ற பெயரில் ஒரு நிறுவனம் உள்ளது. அதற்கு ஆயிரக் கணக்கான கிளைகள் உள்ளன. பல ஊர்களிலும் கிளைகள் உள்ளன. இலட்சக் கணக்

கானவர்கள் உறுப்பினர்கள். டாஷ்கண்ட் கிளையில் முழு நேர ஊழியராக இருப்பவர் எங்களை அழைத்துச் செல்ல வந்த ஆங்கில மொழி பெயர்ப்பாளர். அவரோடு வந்த, மற்றவர், பேராசிரியர் ஆவார். டாஷ்கண்ட் உயர்மட்ட கல்வி நிலையத்தில், கீழ்த் திசைக் கல்விப் பிரிவில், கலைப் பேராசிரியர். அவர், மேற்கூறிய 'நட்புறவுக் கழக'த்தின் டாஷ்கண்ட் கிளையின் துணைத் தலைவர். அப் பேராசிரியர் நன்றாக பெர்சிய மொழியும் உருது மொழியும் பேசினார். இவ்விரண்டு மொழிகளும் எனக்குத் தெரியாது. எங்கள் குழுவைச் சேர்ந்த திரு. கானுக்குத் தெரியும்.

டாஷ்கண்ட் நகரம் உஸ்பெக்கிஸ்தான் குடியாசின் தலைநகரம். உஸ்பெக்கிஸ்தான், சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த பதினைந்து குடியரசுகளில் ஒன்று. இது, ஜார் அரசரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்து, பின்னர் சோவியத் ஆட்சிக்கு வந்தது. ஆனால் இது தொன்று தொட்டு, ஜார் அரசருடையது அல்ல.

உஸ்பெக் வரலாற்றை சிறிது கவனிப்போம்.

உஸ்பெக்கிஸ்தான் பழம்பெரும் பூமி. இது மத்திய ஆசியாவைச் சேர்ந்தது. தொன்மை வாய்ந்த நாகரீகங்களும் பழமையான பண்பாடுகளும் பிறந்த பகுதி இது என்கிறார்கள், வல்லுனர்கள். தொல்பொருள் ஆராய்ச்சியாளர் இலட்சம் ஆண்டுகளுக்கு முந்திய மனிதர்களின் பாசறையை சமார்கண்டிற்கு அருகில் கண்டுபிடித்ததாகத் தகவல். சமார்கண்ட் உஸ்பெக்கிஸ்தானின் பெருநகரங்களில் ஒன்று.

கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, நூறு பேர் வாழக் கூடிய பெரிய வீடுகளை, இப் பகுதி மக்கள் கட்டி வாழ்ந்ததாகத் தெரிகிறது. மண் பாண்டக் கலையையும் அவர்கள் கையாண்டார்கள். கி. மு.

ஆயிரம் ஆண்டுகளின் போது, அப் பகுதி வாழ் மக்கள் பாசனக் கால்வாய்களை அமைத்திருந்ததற்கு அடையாளங்கள் உள்ளனவாம். அவர்களது நாகரீக முதிர்ச்சியைக் காட்டுவன இவை.

வரலாற்றுக் காலத்திற்கு வருவோம். அக்காலத்தில், இந்நிலப் பரப்பு, சில, சிறு சிறு மன்னர்களின் ஆளுகையில் இருந்தது. அவர்களுக்குள் போட்டி, பொறாமை, போராட்டம் நிறைந்திருந்தன. அரசோடு அரசு மோதிக் கொள்ளல், அடிக்கடி நிகழ்ந்தது. 'சிரமறுத்தல் வேந்தருக்குப் பொழுது போக்காம்; மக்களுக்கோ, உயிரின் வாதை.' இப் பகுதியிலுள்ள பொதுமக்கள், அடிக்கடி வீசிய, போர்ப் புயல்களில் சிக்கி நலிந்தார்கள்.

கி. மு. ஆறும் நூற்றாண்டில் பெர்சியன் பேரரசை அமைத்த, மாவீரன் சைரஸ் இப் பகுதியைப் பிடித்துக் கொண்டான். பின்னர் இது கைமாறிற்று. கி. பி. ஆறும் நூற்றாண்டில், இப் பகுதி துருக்கியர் ஆளுகைக்கு உட்பட்டது. அவர்களிடமும் நிலைக்கவில்லை. எழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் அரேபியர் ஆட்சியில் இருந்தது. பத்து முதல் பன்னிரெண்டு நூற்றாண்டுகளுக்கிடையில் மீண்டும் துருக்கியர் ஆட்சி. அப்போது, இந்த மத்திய ஆசியாவிற்கு துருக்கிஸ்தான் என்ற பெயர் வந்தது. அதே பெயர் ஜார் ஆட்சி முடியும் வரை நிலைத்து நின்றது.

இடைக் காலத்தில் செங்கிஸ்கானின் படையெடுப்பில் சிக்கிச் சீரழிந்தது. பின்னர் தைமூரின் ஆளுகைக்குள் வந்தது. தைமூரின் பேரரசு அழிந்ததும், மீண்டும் சிற்றரசுகள் இப் பகுதியை ஆண்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவர்கள் ஜார் ஆட்சிக்குக் கப்பம் கட்டி வாழும் நிலை வந்தது.

ரஷ்யாவில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பதினேழாம் ஆண்டு புரட்சி வெடித்தது. அப் புரட்சியின்

விளைவாக சோவியத் ஆட்சி ஏற்பட்டது. அப் புரட்சி துருக்கிஸ்தானத்திலும் வெடித்தது. அது சிற்றரசர்களை நீக்கி விட்டு சோவியத் ஆட்சியை இப் பகுதிக்குள் கொண்டு வந்தது. தொடக்கத்தில் துருக்கிஸ்தான் என்ற பெயரில் இங்கு குடியரசு ஏற்பட்டது. இந் நூற்றுண்டின் இருபத்து நான்காம் ஆண்டே, இக் குடியரசு, 'உஸ்பெக்கிஸ்தான்' என்ற பெயரைப் பெற்றது. அது முதல் சோவியத் குடியரசாக, சோவியத் ஒன்றியத்தில் வளர்ந்து வருகிறது.

உஸ்பெக் குடியரசின் மக்கள் எண்ணிக்கை எவ்வளவு? ஒரு கோடியே இருபது இலட்சம். சோவியத் ஆட்சியில் மக்கள் கட்டுப்பாடு இல்லை. மாருக அவர்கள் எண்ணிக்கை பெருகுகிறது. இக் குடியரசில் வாழும் அனைவரும் உஸ்பெக் 'இனமா'? இல்லை. உஸ்பெக் 'இனத்தவர்' மூவரில் இருவர்; மற்றவர் சிறுபான்மை இனத்தவர். ஏறத்தாழ நூறு சிறுபான்மை இனங்கள் இக் குடியரசில் வாழ்கின்றன. சிறுபான்மையோர் தங்கள் தங்கள் மொழி வளர்ச்சிக்கும் ஆதரவு பெற்று ஒற்றுமையாக வாழ்கிருர்கள்.

முற்காலத்தில் உஸ்பெக்கிஸ்தான் மக்களின் நிலை என்ன? ஒரு சிலர் மட்டுமே பணக்காரர்கள். அவர்கள் வீடுகள் அழகாக இருக்கும். அவ் வீடுகளின் உள்ளே இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருக்கும். சுவர்களை ஓவியங்கள் அழகு படுத்தும். அக்காலத்தில் பொது மக்கள் நிலை என்ன? அவர்களது உடைமை மண் வீடு; அதுவும் ஒரே அறையுள்ளது. அதிலேயே சமையல்; அங்கேயே படுக்கை; ஒரு பாதியில் திரைக்குப் பின்னல் பெண்கள்; மற்றொரு பாதியில் ஆண்கள்; இப்படிக் குடியிருந்தார்கள்.

மண் வீடு ஒவ்வொன்றையும் சுற்றியும் இடைவெளி விட்டு மண் சுவர் நாலா பக்கமும் இருக்கும். அதற்குள் இருந்த திறந்த வெளியில் திராட்சைப் பந்தர், காய்கறிப் பாத்திகள் அமைப்பார்கள். இப்படி, வறுமை வாழ்வு வாழ்ந்தார்கள் துருக்கிஸ்தான மக்கள்.

அக்கால ஆண்களும் பெண்களும் தொள தொள வென்றிருக்கும் கால் சட்டை அணிவார்கள். ஆண்களுடைய மேல் சட்டை, முழங்காலுக்கு மேலே நின்று விடும். பெண்களுடைய மேல் சட்டையோ கணுக் காலையும் மறைக்குமளவு தொங்கும். இதற்கு மேல் நீண்ட மேல் அங்கியும் அணிவார்கள். மேலங்கி நல்ல வண்ணங்கள் உடையதாக இருக்கும். ஆண்களும் பெண்களும் பூவேலை நிறைந்த குல்லாய் அணிவார்கள். ஆண்கள் குல்லாயைச் சுற்றி தலைப்பாகையும் அணிவது உண்டு. மற்காலப் பெண்கள் முகமூடி அணிவார்கள். முகமூடியால் முகத்தை மறைத்துக் கொள்ளாமல் வெளியே தலை நீட்ட மாட்டார்கள்.

'தில்லித் துருக்கர் செய்த வழக்கமடி பெண்கள் திரை யிட்டு முகமலர் மறைத்து விடல்' இது பாரதியாரின் பாட்டு. 'தில்லித் துருக்கர்' மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்தவர்கள். அங்கிருந்த பழக்கத்தை இங்கே கொண்டு வந்து விட்டார்கள். மன்னர் எவ்வழி, மக்கள் அவ்வழி. எனவே பொதுமக்களிலும் சில பிரிவினர், பெண்கள் முகமூடி அணியும் பிறநாட்டுப் பழக்கத்தை இந் நாட்டுப் பழக்கமாக்கி விட்டனர். இதனால் பெண்கள் படும் பாடு கொஞ்சமா?

பெண்; ஆம்; ஆணைப் போன்ற உயிர். ஆணைப் போன்றே அறிவுள்ள உயிர். ஆணைப் போன்றே உணர்ச்சி யுள்ள உயிர். ஆணைப் போன்றே ஆற்றல் உள்ள உயிர்.

ஆணிலும் கருணையுள்ள உயிர். ஆணிலும் தியாக மிக்க உயிர்.

ஆண்களோடு சரிநிகர் சமானமாக வாழ வேண்டிய வர்கள் பெண்கள். ஆண்களுக்கு அடிமைகளாக இருக்கப் பிறந்தவர்கள் அல்லர் பெண்கள். ஆண்களைப் போலவே கற்றுத் தேர்ந்து, வாழ வேண்டியவர்கள் பெண்கள். 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'. இது பாரதியின் கனவு. முறையான கனவு. பலிக்க ( ண்டிய கனவு. மானு டத்தின் பல்வேறு பணிகளிலும் பங்கு கொண்டு விளங்க வேண்டியவர்கள் பெண்கள். அடிமையாக அல்லாது, வாழ்க்கைத் துணையாக இருந்து முழுமை பெற வேண்டி யவர் பெண்மணி.

சூரப்பிள்ளைகளின் தாய்களாக விளங்க வேண்டிய பெண் குலத்தின் நிலையென்ன? அறிவுச் சுடர்களை அளிக்க வேண்டிய தாய்க் குலமே உன் நிலையென்ன? நெஞ்சு பொறுக்குதில்லையே உங்கள் தாழ் நிலையை எண்ணி விட்டால்.

"பெண்டாட்டிதனை அடிமைப் படுத்த வேண்டி, பெண் குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?" ஆகாது ஆகாது இக் கொடுமை. "கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி காட்சி கெடுத்திடலாமோ?" கூடாது; கூடாது. ஆனாலும், உலகின் பல பகுதிகளில் மானுடம் இக் கொடுமையைப் புரிந்து வருகிறது. அங்குள்ள பெண் களின் நிலை என்ன?

அலங்காரப் பொம்மைகள் பெண்கள். நல்ல நகை தாங்கிகள் பெண்கள். மலிவான வீட்டு வேலையாட்கள் பெண்கள்; நல்ல சமையல் ஆட்கள், பெண்கள்; இனப் பெருக்கச் சாதனங்கள், பெண்கள். இப்படி, சமுதாயத்தின்

ஒரு பகுதியினரை, முகமூடிக்குள், மறைத்தோ மறைக காமலோ இருட்டில் வாழச் செய்து, உலகம் அறியாமல் அல்லல் பட வைத்ததன் பலன் என்ன? இயற்கை அறிவு வளர்வதற்கு வழியின்றி, உள்ளிருக்கும் ஆற்றல் பயன்பட வாய்ப்பின்றி, பிள்ளை பெற்று வளர்ப்பதோடு முடிந்தது கோடி கோடி பெண்களின் வாழ்க்கை. புரட்சிக்கு முன்பு உஸ்பெக்கிஸ்தானத்தில், பெண்களின் பிழைப்பும் இப்படியே.

'நல்ல விலை கொண்டு நாயை விற்பார்; அந்த நாயிடம் யோசனை கேட்பதுண்டோ? கொல்லத் துணி வின்றி நம்மையும் அந்நிலை கூட்டி வைத்தார்; பழி கூட்டி வைத்தார்.' இப்படி இரங்குகிறார் தேசிய கவி பாரதியார். இது நம் நிலைக்கு எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு பொருத்தமாயிருந்தது, துருக்கிஸ்தானத்திலும்.

இரஷ்யாவில் எழுந்த அக்டோபர் புரட்சி ஜார் மன்னரின் கொடுங்கோல் ஆட்சியைத் தூக்கி எறிந்ததோடு நிற்கவில்லை. ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினருக்கு இழைத்து வந்த கொடுமைகளையும் அது சாய்த்து விட்டது. ஆணினம் பெண்ணினத்தை அடிமைப்படுத்தி அடக்கி, ஒடுக்கி வைத்திருந்த அவலம் அதனால் அழிந்து விட்டது. இன்று உஸ்பெக்கிஸ்தானத்திலும் சரி; பிற சோவியத் குடியரசுகளிலும் சரி; எங்கும் ஆண்களும் பெண்களும் ஓர் நிறை. எல்லார்க்கும் சம வாய்ப்பு. கற்றுத் தேற சம வாய்ப்பு, தொழில் புரிய சம வாய்ப்பு; அலுவல் பார்க்க சம வாய்ப்பு; ஆளச் சம வாய்ப்பு. சட்டங்கள் செய்யச் சம வாய்ப்பு. சம வாய்ப்பு ஏட்டிலா நாட்டிலா? ஏட்டிலும் நாட்டிலும் சம வாய்ப்பு.

'எங்கெங்கு காணினும் பெண்களடா!' என்று முழங்க வேண்டும் போல் தோன்றும் சோவியத் மண்ணில் அத்தனை பணிகளில் அலுவல்களில் தொழில்களில்

சோவியத் பெண்கள் ஈடுபட்டுள்ளார்கள், வெற்றி பெற்று விளங்குகிறார்கள்.

சோவியத் நாட்டில் ஆசிரியத் தொழில் பெண்கள் கையில். அவர்கள் விட்ட மிச்சமே, ஆண் ஆசிரியர்களுக்கு. மருத்துவத் துறையின் நிலையென்ன? அங்கும் ஆண்களை மிஞ்சிவிடுகிறார்கள், பெண்கள். இசையும் கூத்தும் எப்படி? இவை கூட பெண்களின் தனி உடைமை. விஞ்ஞானத் துறையிலும் பெண்களுக்குக் குறைவில்லை. அலுவலகங்களில் மட்டுமா அவர்கள் மொய்த்துக் கொள்ளுகிறார்கள்? தொழிற்கூடங்களில் வேலை செய்யும் பெண்களும் எண்ணற்றவர்கள்.

அறிவு சார்ந்த அலுவல்களில் ஆண்களுக்குச் சமமாக-ஏன் அவர்களுக்கும் மேலாக, சோவியத் பெண்கள் விளங்குவதோடு, முரட்டு உடலுழைப்புத் தொழில்களுக்கும் அந்நாட்டுப் பெண்கள் சளைப்பதில்லை. வாடகைக் கார் ஓட்டும் பெண்களை, பத்தாண்டுகளுக்கு முன்பு, நான் சோவியத் நாடு சென்ற போது, காண நேர்ந்தது. நெடுஞ்சாலையின் பழைய தார்ப்பாளங்களைத் தோண்டியெடுத்துவிட்டு, புதிய பாதைகளை அமைக்கும் கடினமான வேலைகளைப் பெண்கள் செய்யச் சுணங்குவதில்லை. அத்தகைய உடலுழைப்பைத் தாங்கும் வலிமை உண்டு சோவியத் பெண்களுக்கு.


சோவியத் மகளிரின் இலட்சியம், அசைந்தாடும் மலர்க் கொடிகளாக இருப்பதல்ல; காட்சிப் பொருள்களாக விளங்குவதல்ல. பயனுள்ள குடிமக்களாக வாழ்வதே அவர்களுடைய இலட்சியம். அதற்கேற்ற உடல் வலிமையையும் மூளை வளர்ச்சியையும் பண்பட்ட உள்ளத்தையும் பெறுவதிலே நாட்டமுடையவர்கள் சோவியத் பெண்கள்.

சோவியத் நாட்டு ஆண்கள் பெரும்பாலோர் வாட்டஞ்சாட்டமாக வளர்ந்தவர்கள். அவர்களில் நோஞ்சான்களே யாரும் இலர். ஆண்களைப் போன்றே பெண்களும் நன்றாக வளர்ந்தவர்கள்; வலிமையுடைய வர்கள், அச்சமற்றவர்கள். அவையே அவர்களுக்குத் தற்காப்பு.

அலுவலகங்களில் அவர்கள்; தொழில்களில் அவர்கள்; அரசியலில் அவர்களுக்கு என்ன பங்கு? நல்ல பங்கே.

உஸ்பெக்கிஸ்தான் குடியரசின் தலைவர் யார் தெரியுமா? ஒரு அம்மையார். அவர் பெயர் என்னவோ? யத்கார் நாஸ்ரெடினேவா என்பது அவர் பெயர். அவர் கதை சுவையானது. அவர் காலாகாலத்தில் பள்ளிக்குச் சென்றாரா? இல்லை. எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டது எப்போது? பதினோராவது வயதில். அதுவரை பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பு இல்லை. ஆயினும் கருத்தாகக் கற்றார், ஆர்வத்தோடு படித்தார்; நன்றாகத் தேறினார். தொழில் புரியும் வயது வந்ததும், தொழில் புரிந்து கொண்டே, பகுதி நேரம் படித்து உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்தார். பின்னர் பொறியியல் கல்லூரியில் படித்து வெற்றி பெற்றார். அக் குடியரசின் பெரிய பாசன வாய்க்கால் திட்டத்தின் பொறுப்பையேற்று பணி புரிந்தார். பின்னர், கட்டடப் பொருள்கள் தொழிலுக்கு அமைச்சரானார். எல்லா நிலைகளிலும் நல்ல பணிபுரிந்தார். எனவே துணைப் பிரதமரானார். பின்னர் உஸ்பெக்கிஸ்தான் குடியரசின் தலைவரானார்.

வெளியே, முகமூடியின்றி, வந்த பெண்ணைத் தீயிலிட்டுப் பொசுக்கிய அந்நாள் உஸ்பெக்கிஸ்தானத்தின் இந்நாள் குடியரசுத் தலைவராக, ஒரு அம்மையார் வந்தது, சென்ற காலக் கொடுமைக்குச் சரியான பழிவாங்கல் அன்றோ!



# 5

பழக்கம் கொடியது. பழக்கம் எளிதாக ஏற்பட்டு விடும். அதை விடுவதற்கோ அரும்பாடுபட வேண்டும். நான்கு நாட்களில் வளர்ந்து விட்ட பழக்கம், பதினான்கு நாட்கள் நோன்பிருந்தாலும் போவது அரிது. தனி மனிதனுக்கு மட்டுமா இக் குறை? சமுதாயத்திலும் இக் குறை உண்டு.

பழக்கக் கொடுமைக்கு ஆளான இலட்சக் கணக்கானவர்கள் கொண்டது தானே சமுதாயம்? சமுதாயப் பழக்கங்களில் ஒன்று, தேவையற்ற தீங்காக மாறின பிறகும், அதைக் கைவிட்டு விட, சமுதாயம், எளிதாக ஒப்புக் கொள்வதில்லை. மாற்ற வேண்டிய நேரம் வந்தும், பழைய பழக்கத்தையே உடும்புப் பிடியாகப் பற்றிக் கொண்டு தவிக்கிறது, மக்கள் இனம். பல நூற்றாண்டுகளாக வேரூன்றி விட்ட பழக்கமாயிருப்பின்

அது எவ்வளவு கொடியதானலும், அதைக் காப்பதற்காகப் போரிடுவது, சமுதாய இயல்பு ஓட்டங்களில் ஒன்று.

மத்திய ஆசியாவில், முகமூடி அணியும் பழக்கம் பல நூற்றுண்டுகளாக உயிரோடிருந்து வந்தது. முகமூடிக்கு உஸ்பெக் பெயர் 'பராஞ்சர்'. முந்திய காட்டுக் காலத்தில் திடீர் தாக்குதல் காலத்தில், பெண்களைப் பொருள்களாகக் கருதி, களவாடிக் கொண்டு, ஓடி விடும் அநாகரிக காலத்தில், சிறிய பாதுகாப்பாக, முகமூடி ஏற்பட்டதோ என்னவோ? அதனுல், பாதுகாப்பை விட கொடுமையே அதிகமான போது, பலர், நெஞ்சு குமுறினர். அவர்களில் ஓர் உஸ்பெக் பெண்மணி, துணிந்து, புரட்சி செய்தாராம். முகமூடியை எடுத்தெறிந்து விட்டு, வெளியே வந்தாராம்.

ஆண்கள் ஆத்திரமடைந்தார்கள். அடுக்குமா இது என்று ஆர்ப்பரித்தார்கள். நல்லதொரு பாடங் கற்பிக்க வேண்டுமென்று முழங்கினர்கள். சாவுத்தண்டனையே ஏற்ற தண்டனை என்று முடிவு செய்தார்கள். பழக்கத்தின் கோரப் பிடியிலிருந்து விடுபட முடியாத அப்பாவிகள் அப் பெண்ணைத் தீயிலிட்டுக் கொன்றுர்களாம். அது அந்தக் காலம்.

சோவியத் ஆட்சிக்கால நிலை வேறு. சோவியத் காலம், பெண்களுக்கு விடுதலையும் உரிமையும் வழங்கும் காலம். உஸ்பெக் மக்கள், சோவியத் ஆட்சியை, தங்கள் நிலப் பரப்பில், நிலை நிறுத்துவதற்காகப் போராடிக் கொண்டிருந்த போதே - தொடக்க நிலையிலேயே - முக்ரம் என்னும் பெயருடைய அம்மையார், தன் முகமூடியைக் கழற்றி, எறிந்து விட்டு, ஒளிபடைத்த புதிய சமுதாயத்தை உருவாக்கும் வழியைக் காட்டினர். புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த அந்த அம்மையாரை, பழமைக்

கொடுமை ஒன்றும் செய்ய இயலவில்லை. கால மாற்றம் கருத்து மாற்றத்தையும் கொண்டு வந்து விட்டது.

இன்று, உஸ்பெக் மக்கள் - ஆண்களாயினும் பெண்களாயினும் - அணியும் உடை மேனாட்டுப் பாணியிலானது. பழைய உடை, எப்போதோ ஒரு வேளை, தனி நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே. இக் காலத்தில் முகமூடியே அணிவது இல்லை.

"வேலு! கீழே இறங்கலாமா?" என்ற கேள்வி என் காதில் விழுந்தது. அதே நொடியில், மொழி பெயர்ப்பாளர், கீழே இறங்கி, காரின் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டிருந்தார்.

டாஷ்கண்டைப் பற்றி எண்ணத் தொடங்கி உஸ்பெக்கிஸ்தானின் நீண்ட வரலாற்றில், பழக்க வழக்கங்களில் சிந்தனையைப் பறி கொடுத்திருந்த நான், தன்னுணர்வு பெற்று, காரை விட்டு வெளியே வந்தேன்.

என் கண் முன்னே, பெரிய கட்டடம் தென்பட்டது. கணப் பொழுதில் அடையாளம் தெரிந்தது. 'இது டாஷ்கண்ட் ஓட்டலா?' என்று வினவினேன். ஆம் என்ற பதில் கிடைத்தது. பத்தாண்டுகளுக்கு முன், நானும் மற்றுமிரு இந்தியக் கல்வியாளர்களும், இதே ஓட்டலில் ஐந்து நாள் தங்கியிருந்தோம். அதை நினைவுபடுத்திக் கொண்டே, அனைவரும் ஓட்டலுக்குள் நுழைந்தோம்.

அங்கே, 'பணியக'த்திற்குச் சென்றோம். ஆங்கிலத்தில் அதை 'செர்விஸ் ப்யூரோ' என்பார்கள்.

ஓட்டலில் தங்கப் போகும் விருந்தாளிகள், இப் பணியகத்திலே முதலில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் அறை ஒதுக்கும் வேலையும் அதனுடையது.

தூதுக் குழுவினர் மூவரும் அங்கு பதிவு செய்து கொண்டோம். எங்கள் பாஸ்போர்ட்டுகளைப் பார்த்து விட்டு, பத்திரமாக வைத்துக் கொண்டார்கள். எங்கள் அறைகளின் சாவிகளைப் பெற்றுக் கொண்டோம். தானுயர்த்தி (Lift) மூலம் எங்கள் அறைக்குச் சென்றோம்.

"கை கால்களைக் கழுவிக் கொண்டு, ஆயத்தமானதும், இரவு உணவருந்தச் செல்லலாம்" என்று கூறிவிட்டு, உள்ளூர்த் தோழர்கள் விலகிக் கொண்டார்கள்.

அறையின் அமைப்பும், ஒழுங்கும் பழைய மாதிரியே இருந்தன. இடைப்பட்ட பத்தாண்டுகளில் மாறுதலைக் காணவில்லை. இடைக்காலத்தில் ஏற்பட்ட சில அதிர்ச்சியால் ஓட்டலில் எத்தகைய மாறுதலும் நேராதது எனக்கு வியப்பாக இருந்தது.

கடன்களை முடித்துக் கொண்டு, இராச்சாப்பாட்டிற்கு, மூவருமாகச் சென்றோம். எங்களுக்காகக் காத்திருந்த உள்ளூர்த் தோழர்கள் எங்களை அழைத்துச் சென்றார்கள். ஓட்டலில் தரை மட்டத்தில், ஓர் கோடியிலிருந்த, உணவுக் கூடத்திற்குச் சென்று ஓர் மேசையைச் சுற்றி அமர்ந்தோம்.

பரிமாறுவோர், வந்து, எங்களுக்கு வேண்டியவற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டு போவதற்கு முன், தோழர்களோடு உரையாடினோம். உணவு உண்டு கொண்டே பேசினோம். பல தகவல்கள் கிடைத்தன. உணவருந்தும் வேளை வயிற்றுப் பசியாற்றும் வேளை மட்டுமல்ல; உரையாடி, அறிவுப் பசியாற்றிக் கொள்ளும் வேளையும் அதுவாகும். இதுவே மேனாட்டார் நடைமுறை.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தாறும் ஆண்டு ஏப்ரல் இருபத்தி ஆறும் நாள் ஏற்பட்ட டாஷ் கண்ட் நில அதிர்ச்சியைப் பற்றி முதலில் கேட்டேன். அது, டாஷ்கண்ட் ஓட்டலைப் பாதிக்காததைப் பற்றி மகிழ்ச்சி தெரிவித்தேன்.

நில அதிர்ச்சி கடுமையாக இருந்ததாம். ஆயினும் அந்த ஓட்டல் போன்ற பெருங் கட்டடங்களில் சொற்ப சேதமே. எண்ணற்ற சாதாரணக் கட்டடங்களும் வீடுகளும் வீழ்ந்து விட்டனவாம். பாதிக்கப்பட்டோர் இலட்சக்கணக்கில் என்று கூறிய போது வருந்தினேம். எழுபத்தையாயிரம் குடும்பங்கள் ஒரே நாளில் வீடிழந்து தெருவில் நின்றன. பன்னிரண்டு இலட்சம் மக்களுடைய அந் நகரத்தில் மூன்று நான்கு இலட்சம் பேர்களுக்கு, திடீரென, இருக்க இடமில்லை யென்னும் நிலை எவ்வளவு வேதனையான நிலை.

கூடாரங்கள் அடித்து, இலட்சக் கணக்கானவர் களுக்கு உறையுள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்று எடுத்துரைத்தார் தோழர். இயற்கை ஒரு முறை சீறிய தோடு நின்றதா? இல்லை. அவ்வாண்டில் எழுநூறு முறை, நிலம் அதிர்ந்தது. ஆயினும் அஞ்சித் தவிக்க வில்லை. டாஷ்கண்ட் மக்கள். எதையும் தாங்கும் இதயங் கொண்டு தங்கள் தங்கள் பணிகளில் என்றும் போல் ஈடுபட்டிருந்தார்கள், என்று பெருமிதத்தோடு கூறினர்.

"எல்லோர்க்குமாக எல்லோரும்" — இதுவே புதிய சமுதாயத்தின் கொள்கை. டாஷ்கண்ட் மக்களின் இழப் பையும் இன்னல்களையும் கேட்டவுடனே, சோவியத் நாடு முழுவதும் அவர்களுக்கு உதவிபுரிய முன் வந்தது.

ஏற்பட்ட சேதத்தையும் தேவைப்படும் உதவி யையும் கணக்கிட்டு அறிவித்தார்கள். சேதத்தைச் சரி

செய்து, தேவைகளை நிறைவேற்றி வைக்கும் பொறுப்புகளை, குடியரசுகள் பகிர்ந்து கொண்டன. கட்டடப் பொருள்களை, வண்டி வண்டியாக அனுப்பி வைத்தன பல குடியரசுகளும். கட்டட வல்லுனர்களை அனுப்பி உதவிய குடியரசுகள் உண்டு.

பொருள்கள் வந்து குவிந்தன, டாஷ்கண்டில். ஆற்றல் மிக்கோர் வந்து குவிந்தனர் டாஷ்கண்டில். ஆயிரம் ஆயிரம் ஒளிகொள் விழியில் இறக்கை கட்டி பறந்து பறந்து, பணி புரிந்தனர். செவ்வி அருமையும் பாராது, கருமமே கண்ணுயிருந்து தொண்டு செய்தனர் எல்லோரும். சோதனைக்குட் பட்டவர்கள், சாதனையாளராக வெளி வந்தனர். சில மாதங்களிலேயே, கூடாரங்களில் இருந்தவர்கள், மாடி வீடுகளில் குடியேறி விட்டனர். கூடித் தொழில் புரிந்தால், கோடித் தொல்லைகளையும் ஓட ஓட விரட்டி விடலாம் என்பதை அன்று சோவியத் மக்கள் செய்து காட்டி விட்டார்கள்.

டாஷ்கண்டைச் சீரமைக்க வந்தவர்கள், ஒவ்வொரு பகுதியாகப் பங்கு போட்டுக் கொண்டு, அங்குள்ள கட்டட வேலைகளை மேற் கொண்டார்கள். எங்கெந்த வட்டத்தை, எங்கெந்த ஊரார் கட்டி முடித்தார்களோ அந்தந்த வட்டத்திற்கு அந்தந்த ஊரின் பெயரை, டாஷ் கண்ட் மக்கள் சூட்டிக் கொண்டார்கள். மாஸ்கோ வாசிகள் உதவி, கட்டிக் கொடுத்த வட்டத்திற்கு 'மாஸ்கோ' என்ற பெயர் இருக்கும். டாஷ்கண்டின் வேறொரு வட்டத்தில் 'ஜார்ஜியா' என்ற பெயரைக் காணக்கூடும். அதன் பொருள் என்ன? அந்த வட்டம் ஜார்ஜிய உதவியால் அமைக்கப்பட்டது என்று பொருள்.

முதியவர்கள் உதவியதைப் போலவே, இளைஞர்களும் முன் வந்து உழைத்து உதவினார்கள். 'கம்ஸோமால்' என்றழைக்கப்படும் 'இளம் கம்யூனிஸ்டுகள்', சாதாரண

காலங்களில் கூட, விடுமுறை நாட்களில், சாலையமைத்தல், பூங்கா அமைத்தல், ஏரி குளம் வெட்டுதல், பொதுக் கட்டடங்களைக் கட்டுதல் ஆகிய, பொதுத் தொண்டு களில் ஈடுபடுகிறார்கள். விடுமுறை நாட்களில் மட்டுமே, அப்படி ஈடுபடுவதால், அவர்கள் கல்விக்குச் சிதைவு ஏற்படுவதில்லை. தங்கள் தங்கள் பகுதியைத் தங்கள் கூட்டு முயற்சியால் வளப்படுத்தியதால் ஏற்படும் பொறுப்புணர்ச்சியும் தன்னம்பிக்கையும் சமாளிக்கும் திறமையும் இளைஞர்களிடம் வளர்வதற்கு, இத்தகைய பொதுப் பணிகள் உதவியாகின்றன.

முதன் முறை டாஷ்கண்டிற்குச் சென்றிருந்த போது, நான் இளைஞர்கள் அமைத்த ஏரியையும் பூங்காவையும் கண்டு மகிழ்ந்தேன். இது இளைஞர்களுடைய சமுதாயத் தொண்டு; தொழில் அல்ல. ஆகவே கைமாறு பெறுவ தில்லை. டாஷ்கண்டில் ஏரி அமைத்தது போல், ஜார்ஜி யாவின் தலை நகரான 'பிலிஸி' நகரத்தில், பரந்த மலைப் பூங்காவொன்றை அவ்வூர் இளைஞர்கள் அமைத்திருந்ததை நான் நேரில் கண்டேன். இருபதாயிரம் இளைஞர்கள் சேர்ந்து அதை அமைத்தார்களாம். எவ்வளவு காலம் பிடித்தது என்று கேட்டதில், இருபது வாரங்கள் விடுமுறை நாட்களில் உழைத்து அதை முடித்தார்கள் என்று தெரிந்து கொண்டேன். அவ்வேலைக்கு வேண்டிய கருவிகளை உள்ளூர் ஆட்சி அனுப்பியது. வல்லுனர்களை யும் வழிகாட்டிகளையும் உள்ளாட்சியே உதவியது. உழைப்போ இளைஞர்களுடையது. வேலை நாட்களில், தங்கள் தங்கள் உணவை, வீட்டிலிருந்தே கொண்டு வருவார்களாம் இளைஞர்கள். இதைக் கேட்ட போது, நம் நல்ல சிற்றூர்களில், ஆற்றுக்கால் செப்பனிட, சொந்த சாப்பாட்டோடு, செல்லும் பழக்கம் நினைவிற்கு வந்தது.

மாஸ்கோ நகரிலுள்ள, 'இளங் கம்யூனிஸ்ட் மாளிகை'யை அமைப்பதிலும் இளைஞர்கள் ஈடுபட்டு

உழைத்தார்கள். தங்கள் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்காக, சோவியத் இளைஞர்கள் ஆற்றும் ஆக்கப் பணிகள் எண்ணற்றன; போற்றற்குரியன. பின்பற்றத் தக்கன.

சோவியத் நாட்டிலுள்ள உணவுக் கூடங்கள் மேனாட்டு முறையில் நடக்கின்றன. ஆயினும் ஒவ்வொரு பகுதியில் அப் பகுதிக்குரிய தனி உணவு வகைகள் கிடைக்கும்.

உஸ்பெக் குடியரசில் அரிசி உண்பார்கள், 'பிலாவ்' அவர்களுக்கு விருப்பமானது. நாம் 'புலவு' என்பதை அவர்கள் 'பிலாவ்' என்று அழைக்கிறார்கள். இதிலும் ஐந்தாறு வகையுண்டு. முற்காலத்தில் 'பிலாவ்' சமைப்பது மட்டும் ஆண்கள் வேலையாம். உஸ்பெக் சாப்பாட்டில் மசாலா நிறையவாம். அதை நான் சாப்பிட்டுப் பார்க்கவில்லை.

நான் பிடிவாதமான மரக்கறி உணவுக்காரன். எனவே, வெளி நாடுகளுக்குச் செல்லும் போது, உணவு பற்றி மிக விழிப்பாக இருப்பேன். இதையும் அதையும் தின்று பார்த்து சோதிப்பதில்லை. எளிதாகச் செறிக்கக் கூடிய மரக்கறி சூப், வெந்த காய்கறிக் கலவை, பச்சைக் காய்கறிகள் - இதற்குப் பெயர் 'சாலட்' - தயிர், பாலாடை, பழ வகைகள் ஆகியவற்றை உண்பேன். இது என் உடல் நலத்திற்கும் ஏற்றது. மற்றவர்க்கும் அப்படியே இருக்கும். சோவியத் நகரங்களில் மரக்கறி உணவு, கிடைக்காத ஒன்றல்ல; போதாத வொன்றும் அல்ல. போதிய வகை மரக்கறி உணவு கிடைக்கும். ஆனால் கேட்டு சில வேளை 'சைவ உணவு' என்பதை விவரமாக விளக்கியே பெற வேண்டும். சோவியத் நாட்டில் கூட, பயணிகள், மரக்கறி உணவு மட்டுமே உண்டு சுற்றி

203545 08.98 N11

வரலாம். தனியாகப் போகாமல், தூதுக் குழுவில் போவோருக்கு மொழி பெயர்ப்பாளர் உடன் இருப்பார். அவர் உதவியால் வேண்டியதைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

அப்படியே, நானும் திரு. யாதவும் மரக்கறி உணவைக் கேட்டுப் பெற்றுக் கொண்டோம். உணவிற்கு முன்பு சிறிது, 'தண்ணி' போடுவது மேனாட்டு முறை. "அது முழுக்க சைவமாயிற்றே! கொஞ்சம் குடித்தால் என்ன" என்று சோவியத் நண்பர்கள் வேண்டினார்கள். அப் புதிய பழக்கத்தை இம் முறையும் கற்றுக் கொள்ளாமலே திரும்பி விட்டேன்.

பழ வகைகள் தாராளமாகக் கிடைக்கும், டாஷ் கண்ட் உணவுக் கூடங்களில். பல சோவியத் நகரங் களிலும் இப்படியே.

அங்கு கிடைக்கும் நல்ல திராட்சை வகைகள் பல. 'அங்குர்' என்பது திராட்சைக்கு உஸ்பெக் பெயர். அறுநூறு வகை அங்குர்களைப் பயிரிடுகிறார்களாம். மாதுளைப் பழங்களுக்கும் பேர் போனது உஸ்பெக்கிஸ் தான். ஆப்பிளுக்கும் குறைவில்லை. இதில் இருநூற்று நாற்பது வகை கனிகின்றன. பொறுமையாக இருக் கிறதா? நம் வேளாண்மை வல்லுனர்களும், தம்மை மறந்து, நாட்டை நினைந்து ஒரு மனதாக முயன்றால் நாமும் வெற்றி பெறுவோம். முலாம் பழம் மலை மலை யாக உற்பத்தியாகிறது. 'தர்பூஸ்' பழ விளைச்சலும் ஏராளம். நாம் எதை 'தர்பூஸ்' பழமென்று அழைக்கி றோமோ அதையே அவர்களும் அழைக்கிறார்கள். தர்பூஸும் திராட்சையும் வெளியேயிருந்து நம் நாட்டுக்கு வந்து வேரூன்றி விட்டன. இந்தியாவிலேயே பிறந்த வையல்ல இவை.

"கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரும் நாடு" என்று நம் தேசிய கவி, சுப்பிரமணிய பாரதியார் நம் நாட்டைப் பற்றிப் பூரிக்கிறார். இது, இருப்பதை விட, இருக்கக் கூடிய வாய்ப்பினைச் சுட்டிக் காட்டுவதாகவே அமைந்துள்ளது.

இன்று நம் நாடு இருக்கும் நிலையில், அன்று உஸ்பெக்கிஸ்தானம் இருந்தது. நிலமென்னும் நல்லாள் இருந்தாள். நீர்வளம் விரைந்து ஓடி மறைந்தது. நிறையுழைப்புத் தோள்கள் இருந்தன. வழிப்படுத்தி, நல்ல வேலை செய்ய வைக்கும் வாய்ப்பு இல்லை. மக்கள் வறுமையில் உழன்றனர்.

இன்றைய நிலை அப்படியல்ல. காட்டாறுகளையும் மலையருவிகளையும், மடக்கித் தேக்கி, நெடும் வாய்க்கால்களை வெட்டி, வேண்டிய பண்ணைகளுக்கு, வேண்டிய போது, வேண்டிய அளவு நீர் கிடைக்க வழி செய்து விட்டனர். வேளாண்மை விஞ்ஞானிகள் சோதனைப் பண்ணைகளிலே, முயன்று முயன்று புதிய வகை விரிய விதைகளைக் கண்டுபிடித்துக் கொடுத்து உதவுகிறார்கள்.

மக்களோ, கட்டைக் கலப்பையைக் கைவிட்டு விட்டு, டிராக்டர்களால் உழுது பயிரிடுகிறார்கள். பருத்திப் பயிரையே நம்பியிருந்த நிலைமாறி, பல்வகைப் பயிரையும் விளைவித்து செழித்து வாழ்கிறார்கள். பழைய பயிர்களிலும், விளைச்சலும் ஆதாயமும் அதிகமாகும் புது வகைகள் பல, கண்டு பிடிக்கப்படுகின்றன. பட்டுப் புழு வளர்த்தல், பழத் தோட்டம் பயிரிடல், பால் பண்ணைகள் ஆகியவை பெருமளவு விரிவாகியுள்ளன.

பண்ணைகள் இரு வகைப்படும். அரசுப் பண்ணைகள் ஒரு வகை. உஸ்பெக்கிஸ்தானத்தில் முந்நூறு அரசுப் பண்ணைகள் உள்ளன. அவற்றின் மொத்தப் பரப்பு,

3,750,000 ஏக்கர்கள். நாற்பதாயிரம் டிராக்டர்கள் இவற்றில் பயன்படுகின்றன. எட்டாயிரம் லாரிகள் ஓடுகின்றன. இப் பண்ணைகளில் கால்நடை வளர்ப்பும் பால் பண்ணைகளும் உண்டு.

மற்றொரு வகை பண்ணை கூட்டுப் பண்ணை. இவை கூட்டுறவு முறையில் நடக்கின்றன. 950 கூட்டுப் பண்ணைகள் உஸ்பெக்கிஸ்தானத்தில் இருப்பதாகத் தெரிந்து கொண்டோம். கூட்டுப் பண்ணையின் சராசரி பரப்பு 5000 ஏக்கர்கள்.

டிராக்டர்கள் எங்கிருந்து வருகின்றன என்று கேட்டோம். உஸ்பெக் குடியரசில் பெரிய டிராக்டர் தொழிற்சாலை இருப்பதை நினைவுபடுத்தினார்கள். நவீன வேளாண்மைக்கு வேண்டிய கருவிகள் செய்யும் தொழிற்சாலைக்குப் பேர்போனது இக் குடியரசு.

சோவியத் நாட்டின் பெரிய பஞ்சாலைகள் பல உஸ்பெக்கில் இருப்பதையும் தெரிந்து கொண்டோம். மின்சாரம் உண்டா? அதற்கென்ன குறை. புதிதாக அமைக்கப்பட்ட தேக்கங்களில் மின்சார உற்பத்திக்கும் போதிய வசதி செய்துள்ளார்கள். ஆண்டுக்கு ஆண்டு மின்சார உற்பத்தியும் வளருகிறது.



# 6

மின்சாரத்தின் நல்ல பயன்களை இன்று எல்லா நாடுகளும் உணர்ந்துள்ளன. எனவே ஆண்டுக்கு ஆண்டு மின்சார உற்பத்தியைப் பெருக்க முயல்கின்றன. அதே போக்கில் சோவியத் நாடும் போவதில் புதுமையென்ன? இவ்வையத்தை எழுப்பினேம். கிடைத்த பதில் விளக்கங் காட்டிற்று.

அறிவொளியும் மின்னெளியும் சிற்றூர் தோறும் பரவினல்தான் வளம் பெருகும். இவ்விரு அடிப்படை திட்டங்களுக்கும் முதலிடம் தர வேண்டும். இது மாவீரர் லெனின் அவர்களது கொள்கையாம். எனவே கல்வி பரப்புவதிலும் ஊர் தோறும் மின்னுற்றலைக் கொண்டு செல்வதிலும், சோவியத் ஆட்சி தனிக் கவனஞ் செலுத்திற்று; செலுத்துகிறது என்று தெரிந்து கொண்டோம்.

ஜார் ஆட்சிக் காலம் வரை, துருக்கிஸ்தான் என்ற பெயரில் வந்த இப்பகுதி வாழ் மக்களில், நூற்றுக்கு இரண்டு பேர் கூட எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இலர். 1·8 பேரே எழுதப் படிக்கக் கற்றிருந்தார்கள். கல்வி காணுத துருக்கிஸ்தான், அறியாமையிலும் அல்லல்களிலும், ஆழ்ந்து கிடந்தது, வியப்பல்ல. எழுத்தறியாமையின் ஆழத்திலே கிடந்த இப்பகுதி, சோவியத் ஆட்சிக் காலத்தில் கல்வியிலே வளரத் தொடங்கிற்று. எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது தெரியுமா? ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதாம் ஆண்டே எல்லோரும் எழுத்தறிவு பெற்றவர்கள் என்ற நிலையை அடைந்து விட்டார்கள். எப்படி முடிந்தது? பத்தாண்டுகளுக்கு மேல் அரும்பாடு பட்டு அந்நிலைக்கு வந்தார்கள்.

உஸ்பெக்கிஸ்தானில் 1925 ஆம் ஆண்டில் 12,000 மாணவர்களே. 1930 இல் அவ்வெண்ணிக்கை 3,50,000 ஆக உயர்ந்தது. இன்றே? 25,00,000 சிறுவர் சிறுமியர் படிக்கின்றார்கள். அவர்களுக்காக, 6800 பள்ளிக் கூடங்கள் உள்ளன.

உயர் கல்வி வாய்ப்புகள் உண்டா? உண்டு. நிறைய உண்டு. 105 தனி உயர்நிலைப் பள்ளிகள், 33 கல்லூரிகள், இரண்டு பல்கலைக் கழகங்கள் உயர் கல்வி கொடுக்கின்றன. 2,80,000 மாணவ மாணவியர் இவற்றில் கற்கிருர்கள். ஆராய்ச்சிக் கூடங்களுக்கும் குறைவில்லை. 120 இலட்சம் மக்கள் உள்ள இக்குடியரசில் மட்டும் 130 ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. இவற்றில் பணிபுரிவோர் எண்ணிக்கையைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? சரி. சொல்லி விடுகிறேன். 18,000 பேர் ஆராய்ச்சி நிலையங்களில் உழைப்பவர்கள்.

இவ்வளவு கல்வி முன்னேற்றத்தைக் கண்ட உஸ்பெக் மக்கள் நிறைவு கொள்வது நியாயம்; பெருமை கொள்ள உரிமையுண்டு.

பிரெஞ்சுக் குடிமகனோ, இத்தாலியக் குடிமகனோ சராசரிப் பயன்படுத்தும் மின்சாரத்தைவிட அதிக மின்சாரத்தை உஸ்பெக் குடிமகன் பயன்படுத்துவதாகத் தெரிந்து கொண்டோம்.

மின்சார வெளிச்சத்தில், டாஷ்கண்டைச் சுற்றிப் பார்க்க விரும்பினோம். டாஷ்கண்ட் தோழர்கள், எங்கள் மூவரையும் காரில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்கள்.

ஓராண்டில் இருநூற்று ஐம்பது நாட்கள் மப்பு மந்தாரமின்றி வெளிச்சம் போடும் அப் பகுதியில், அன்று மட்டும் ஏனோ நாள் முழுவதும் தூறல். எங்கள்மேல் ஏன் கோபமென்று தெரியவில்லை.

தூறலையும் பொருட்படுத்ாது ஊர் சுற்றி வந்தோம். மின் விளக்குகள் சாலை தோறும் ஒளி வீசின. பல புதிய மாடிக் கட்டடங்களைக் கண்டோம். சென்ற நில அதிர்ச்சிக்குப் பிறகு கட்டப்பட்ட புதிய மாடிகளே அவை என்று தோழர்கள் அறிவித்தார்கள். அவற்றிலே பல மாடிக் குடியிருப்புகள் என்று தெரிந்து கொண்டோம்.

தனித் தனி குடும்பத்திற்கு ஒவ்வொரு குடியிருப்பு ஒதுக்குவார்களா? பல குடும்பங்களும் சேர்ந்து ஒரே பெரிய கூடத்தில் வாழ வேண்டுமா? என்று தெரிந்து கொள்ள விரும்பினோம்.

ஒவ்வொரு மாடிக் கட்டடமும் பல குடியிருப்புகளைக் கொண்டது. ஒவ்வொரு மாடியிலும் பல குடியிருப்புகள் தனித் தனியே உள்ளன. ஒவ்வொரு குடியிருபபுக்கும் அதோடு சேர்ந்தாற்போல் தனியாக குளியல் அறை, சமையல் அறை, உண்டு. உரையாடும் அறை, படுக்கை அறை உண்டு. சிலவற்றில் ஒரே படுக்கையறை இருக்கும். இன்னும் சிலவற்றில் இரண்டு படுக்கையறைகள் இருக்கும். மூன்று படுக்கையறைகள் கொண்ட குடி-

யிருப்புகளும் உள்ளன. நான்கு படுக்கையறைதான் வரம்பு. குடியிருப்பு கோருவோரின் குடும்பத்தில் எத்தனை நபர்கள் என்று கணக்கெடுப்பார்கள். எண்ணிக்கையின் பேரில், ஓரறை குடியிருப்போ, பல அறை குடியிருப்போ ஒதுக்கிக் கொடுப்பார்களாம்.

ஒவ்வொரு குடியிருப்பிலும், தனிக் குழாய்களில் தண்ணீரும் வெந்நீரும் எந்நேரமும் வரும். மின் வசதி உண்டு. சமையலுக்கு 'ஆவி'யுண்டு. வாடகை எப்படியோ என்று விசாரித்தோம். சம்பளத்தில் மூன்று முதல் ஐந்து சதவிகிதம் என்று தெரிந்து கொண்டோம்.

சோவியத் நாட்டில் கட்டடங்களை விரைவாகக் கட்டி முடிப்பதாகக் கேள்விப் பட்டோம். அது எப்படி முடிகிறது?

நூற்றுக்கணக்கான - ஏன் ஆயிரக்கணக்கான - குடியிருப்பு அறைகளும் ஒரே அகலமும் நீளமும் கொண்டவை. உயரமும் அதே அளவானவை. ஒரே அளவில் எல்லா வீடுகளும் இருப்பது வசதி. கட்டடச் சுவர்களுக்கு வேண்டிய சிமெண்ட் திம்மைகளை பதினாயிரக் கணக்கில் ஒரே அளவில் அச்சில் வார்த்து தொழிற்சாலைகளில் செய்து விடுகிறார்கள். சாளரங்களையும் வாயில்களையும் கதவுகளையும் ஆயிரக்கணக்கில் ஒரே அளவில் தொழிற்கூடங்களில் செய்து விடுகிறார்கள். இதனால் காலச் சிக்கனம் ஏற்படுகிறது.

ஆங்காங்கே தொழிற்சாலைகளில் செய்த பொருள்களை கட்டட மனைக்குக் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். அங்கே அடுக்கவேண்டியதை அடுக்குவதும், உரிய இடத்தில், பொருத்த வேண்டியதைப் பொருத்துவதும் நடைபெறுகிறது. எனவே மாடிகள் மளமளவென்று எழுகின்றன. வீண் காலதாமதமில்லாமல் கட்டட வேலை முடிந்து விடுகிறது.

ஒரு நெடுஞ்சாலை வழியாக நாங்கள் விரைந்து போய்க் கொண்டிருந்தபோது பெரியதொரு மாடிக் கட்டடத்தைச் சுட்டிக் காட்டினார்கள். 'அதோ தெரிகிறதே, அக் கட்டடத்தில், இந்தியாவும் பாகிஸ்தானும் டாஷ்கண்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது' என்று கூறினார்கள்.

டாஷ்கண்ட் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு உதவிய சோவியத் நாட்டிற்கு இந்தியா நன்றியுள்ளதாக இருக்கிறது என்று சொன்னோம். தோழர்கள் மகிழ்ந்தார்கள்.

நம் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி தங்கியிருந்த இடம் எதுவென்று கேட்டோம். பதினைந்து கிலோ மீட்டருக்கு அப்பால் இருப்பதாக பதில் வந்தது. இவ்வளவு தூரம் வந்து, அதைப் பார்க்காமல் போகலாமா வென்று நெஞ்சம் துடித்தது. எங்கள் ஆசையை, தூதுக் குழு உறுப்பினர், பீகாரின் முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர், திரு யாதவ், டாஷ்கண்ட் வாசிகளிடம் கூறினார்.

டாஷ்கண்ட் தோழர், மணியைப் பார்த்தார். இரவு எட்டரை மணி என்பதை கைக்கெடிகாரங்கள் காட்டின.

''ஏமாந்து விட்டோமே. உணவு அருந்துவதற்கு முன்னரே அங்கு போய் வந்திருக்கலாம். இப்போது அக் கட்டடம் திறந்து இருக்காது. அவ்வளவு தூரம் சென்றும் பயனில்லை.

''மாஸ்கோவில் சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, பின்னர் இங்கு திரும்பி வருவீர்கள். அப்போதைய நிகழ்ச்சி நிரலில், சாஸ்திரி தங்கியிருந்த இடத்தைப் பார்ப்பதையும் சேர்த்து விடுகிறோம்.

''சாமர்கண்ட் நல்ல அழகிய ஊர். தைமூரின் தலைநகரம். அவர் கட்டிய அழகிய தொன்மையான கட்டடங்கள் அங்கே உள்ளன. அவற்றையும் நீங்கள்

பார்க்கவேண்டும். இப்பகுதியின் கட்டடக் கலைக்கு அவை எடுத்துக் காட்டுக்கள். அங்கே செல்வதையும் சுற்றுலாவில் சேர்த்து விடட்டுமா?" என்று கேட்டார் மொழிபெயர்ப்பாளரும் வழிகாட்டியுமான தோழர்.

"சாமர்கண்டிற்கும் இந்தியாவிற்கும் வரலாற்றுத் தொடர்புண்டு. அங்கிருந்து வந்த, பாபர், இந்தியாவில் மொகலாயப் பேரரசை அமைத்தார். எங்கள் பேரரசரின் பூர்வீக பூமியைக் காண விருப்பமே. முடிந்தால் அங்கும் போய் வரலாம்" என்று பதில் அளித்தோம்.

"பாபர் காலத்தில் சாமர்கண்ட் உஸ்பெக்கிஸ் தானத்தைச் சேர்ந்ததல்ல. அப்போது அது தனி அரசு. ஆகவே இந்தியாவின்மேல் படையெடுத்தவர்கள் எங்கள் முன்னோர் என்று கருதிவிடவேண்டாம். சோவியத் உஸ்பெக் மக்களுக்கு படையெடுப்பு அவா கிடையாது" என்று தெளிவுபடுத்தினர், அந் நாட்டுப் பேராசிரியர். இதுவே தெளிவான கண்ணோட்டம். வரலாற்றுப் பாடம் வம்பை வளர்க்கும் பாடமாகாதிருக்க, இத்தகைய கண்ணோட்டம் தேவை என்பதை உணர்ந்தோம்.

விரைந்து ஓடிக்கொண்டிருந்த கார், சட்டென்று நின்றது.

"மழை தூறிக் கொண்டிருக்கிறது. அதை பொருட்படுத்தாமல் கீழே இறங்கி வரமுடியுமா? இதோ தெரிவது இக் குடியரசின் இலக்கியப் பொருட்காட்சி. இதைப் பற்றி நாங்கள் அதிகம் பெருமைப்படுகிறோம். உள்ளே சென்று பார்ப்பதற்கு அகாலமாகிவிட்டது. ஆயினும் சில நிமிடங்கள் வெளியே இருந்து பார்க்கலாமே!" என்று யோசனை கூறினர்கள் உள்ளூர்க்காரர்கள்.

தூறலுக்குத் துணிந்து இறங்கினோம்,

கம்பீரமான அக் கட்டடத்திற்கு முன் அழகிய பூங்கா. நல்ல புல் தரை. உள்ளே செல்லும் பாதை நூறு மீட்டர் தூரம் இருக்கும். வழியின் இரு மருங்கிலும் சிலைகள், சிரித்து வரவேற்றன. சிலைகளை - ஒவ்வொன்றாகப் பார்த்து மகிழ்ந்தோம். யாருடைய சிலைகள் அவை? ஆண்ட அரசர்களுடையனவா? இல்லை. புரட்சித்தலைவர்களுடையனவா? இல்லை. அரசியல் செல்வாக்கு பெற்றவர்களுடையதா? இல்லை. அப்படியாயின் யாருடைய சிலைகள் அவை? உஸ்பெக் குடியரசின் புகழ்பெற்ற கவிஞர், கலைஞர், எழுத்தாளர், ஓவியர் ஆகியோரது சிலைகள் அவை. பல காலங்களிலும் வாழ்ந்த, சிறந்த, இலக்கிய ஆசிரியர்களுடைய சிலைகளே, எல்லோரையும் 'இலக்கிய பொருட்காட்சி'க்கு அழைக்கின்றன.

பொருட்காட்சியில், இக் குடியரசில் வாழ்ந்த, இலக்கியப் பிரம்மாக்களின் வாழ்க்கைப் படங்களும், நூல்களும், கையேட்டுப் பிரதிகளும், அவர்கள் பயன்படுத்திய பொருள்களும் வைக்கப்பட்டிருக்குமாம். இத்தகைய இலக்கியப் பொருட்காட்சிகள் சோவியத் ஒன்றியத்தின் ஒவ்வோர் பெரு நகரத்திலும் உண்டு. சோவியத் ஆட்சிக் கால அறிஞர்கள் மட்டுமல்ல அவைகளில் இடம் பெற்றுள்ளவர்கள். முந்திய காலத்தவர்களும் உண்டு.

நினைவுச் சின்னங்களைக் காப்பதில் சோவியத் மக்களுக்கு இணை அவர்களே. முந்தியவர்களின் சாதனைத் தடங்களை அடியோடு அழித்து மறைத்துவிடும், மனப்போக்கு அங்கே காணோம். முன்னே சாதித்தவர்களைவிட அதிகம் சாதிப்பதற்கு அத்தகைய அடையாளங்கள் தூண்டுகோல்களாக அமைகின்றன. மாறாக, முன்னே வாழ்ந்த இலக்கியக் கர்த்தாக்களின் நிழல்கூடத் தெரியாதபடி செய்துவிடும் சமுதாயங்களில், பின்னே வருபவர்கள் ஒப்பிட்டுப் பார்த்து, மேலும் சிறப்பாகச் செய்ய எதுவும்

இல்லாமற் போய்விடுகிறது. போட்டிக்கு - உள்ளது சிறப்பதற்குத் தூண்டுகோல் இல்லாமையினுல், அச் சமுதாயங்களில், உலகத்தின் உள்ளத்தைக் கவரும் இலக்கியங்கள் உருவாகும் வாய்ப்புக்கள் அற்றுப் போகின்றன.

இலக்கியப் பொருட்காட்சியின்முன் உள்ள பூங்காவில்' நான் சில நிமிடங்கள் சுற்றி வந்தபோது காலம் இரவு ஒன்பது மணியை நெருங்கிற்று. எங்களைத் தவிர யாரும் அங்கே - தூறலைப் பொருட்படுத்தாது - இருப்பார்களென்று எதிர்பார்க்கவில்லை. ஆனுல் கண்டதென்ன? ஓர் இளம் ஆணும் பெண்ணும், ஏதோ உரையாடிக் கொண்டு, உலாவிக் கொண்டிருந்தனர். நம் படக்காட்சி காதலர்களாகத் தோற்றமளிக்கவில்லை.

"கருத்தாளர்களையும் எழுத்தாளர்களையும் கண்டோம். இக்கால இளைஞர்களையும் சிறுவர்களையும் காணலாமே, எங்களோடு வாருங்கள். விளையாட்டரங்கம் வெகு தூரத்தில் இல்லை" என்று சொல்லிக் கொண்டே, எங்களை பூங்காவிலிருந்து வெளியே அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

கார் ஏறி, ஸ்டேடியத்திற்குச் சென்ருேம். ஏழெட்டு நிமிடங்களில் அங்கு போய்ச் சேர்ந்தோம். உள்ளே சென்ருேம். கண்டோம். என்ன கண்டோம்? விளையாட்டைக் கண்டோம். என்ன விளையாட்டு? கால்பந்து விளையாட்டு. ஆடிக் கொண்டிருந்தவர்கள் யார்? சிறுவர்கள்; வாலிபர்கள் அல்லர். டாஷ்கண்ட் உயர் நிலைப் பள்ளி மாணவர்களின் குழுக்கள் இரண்டு, போட்டியிட்டு, கால் பந்தாட்டம் ஆடிக் கொண்டிருந்தன. ஆம்; சிறு தூறலைப் பாராது காட்டமாக ஆடிக் கொண்டிருந்தார்கள், பதினன்கு பதினைந்து வயது தம்பிகள். இருட்டிலா ஆடினுர்கள்? இல்லை, விளையாட்டு அரங்கம்

முழுவதும் ஒரே வெளிச்சம். பல கோணங்களில் இருந்தும், மின்விளக்கொளி மழையெனப் பெய்தது. அவ்விளக்கொளியில், புல் தரையில் ஆட்டம் நடந்தது. பார்வையாளர்கள் உண்டோ? உண்டு. சில ஆயிரம் பேர்கள் அந்த நேரத்திலும் அப் பருவ நிலையிலும், இருக்கைப் படிகளில் அமர்ந்து ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போதைக்கப்போது, கைகொட்டி, ஊக்கப் படுத்தினார்கள்.

விளையாட்டுப் போட்டியைப் பார்த்தபடியே பேச்சுக் கொடுத்தோம். இதோ அதன் சுருக்கம் :

"இவ் விளையாட்டு அரங்கம் எவ்வளவு காலமாக இருக்கிறது?"

"இது புதியது; சில ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டது."

"இதில் எத்தனை பேர் உட்காரலாம்?"

"எழுபத்தையாயிரம் பேர்களுக்கு இடமுண்டு."

"பள்ளிக்கூடத்துப் பையன்கள் கூட, இவ்வளவு ஆர்வமாக, இரவென்றும் பாராமல், ஆடிப் பழகுகிறார்களே! அதற்காக எவ்வளவு தாராளமாக மின்விளக்கு வசதி செய்து கொடுக்கிறது, உங்கள் ஆட்சி! சிறுவர்களை ஊக்க, இத்தனை ஆயிரம் பெரியவர்கள் வந்திருப்பது, போற்றத் தக்கதல்லவா? உங்கள் விளையாட்டு வீரர்களுக்கு நல்ல ஒளிமயமான எதிர்காலம் இருக்கும். இது உறுதி" இப்படிப் போற்றி வாழ்த்தினோம்.

"நன்றி, வாழ்த்துக்களுக்கு. உஸ்பெக்கிஸ்தான விளையாட்டு வீரர்கள், எப்போதுமே சிறந்து விளங்குகிறார்கள்.

"தொன்று தொட்டு எங்கள் இளைஞர்கள், துணிச்சலான விளையாட்டுக்காரர்கள். பழைய விளையாட்டுகளில்

ஒன்று, 'கன்னியைப் பிடிக்கும்' போட்டி. குதிரைச் சவாரியில் தேர்ந்த, பெண் ஒருத்தியைப் பிடிக்க, பல ஆண்கள் போட்டியிடுவார்கள். அப் பெண்ணுக்கு குதிரைகளில் வேகமாக ஓடக் கூடியதைக் கொடுப் பார்கள். போட்டியிடும் ஆண்களும் சிறந்த குதிரை களில் ஏறிக் கொண்டு, அவளைப் பிடிக்க மின்னல் வேகத்தில் பாய்வார்கள். பெண் முன்னே பறப்பாள். அவளை மற்றவர்கள் துரத்திப் பிடிக்க வேண்டும். குறிப் பிட்ட இடத்தை அவள் சேர்வதற்குள், அவளைப் பிடித் தால், அவருக்குக் கிடைக்கும் பரிசு என்ன தெரியுமா? ஒரே ஒரு முத்தம். இதற்காகத் தலை தெறிக்க ஓடுவார்கள். குறித்த இடத்தைச் சேர்ந்ததும், திருப்பி ஓடி வருவாள். வரும்போது, கடைசியாக வரும் ஆளை, அவள் சாட்டை யால் ஓரடி அடிக்க உரிமை உண்டாம். ஐயோ பாவம்! இது பழைய காலப் போட்டிப் பந்தயம்.

''மல்யுத்தம் பேர்போனது. இக்கால விளையாட்டுப் போட்டிகளும் அடிக்கடி நடக்கும். எங்கள் குடியரசில் ஐந்திற்கு ஒருவர் விளையாட்டுகளில் ஈடுபட்டுள்ளார். இது எப்போதும் இருந்து வரும் இயல்பு. இக்காலத்தில் விளையாட்டுகளுக்கு வேண்டிய வசதிகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன.

''உஸ்பெக் குடியரசில், ஐம்பது விளையாட்டு அரங்குகள் உள்ளன. நீச்சல் குளங்கள் அறுபத்தாறு; விளையாட்டுத் திடல்கள் அறுநூறு. உள்ளிருந்து விளை யாடும் அரங்குகள் எண்ணூறு.'' இதைப் பெருமை யோடு சொன்னார்கள்.

''தொன்று தொட்டு, உடற் பயிற்சிகளிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் தனியார்வமுடைய நீங்கள், டாஷ்கண்ட் விளையாட்டரங்கத்தைக் கட்ட ஏன் இத்தனை காலம் கடத்தினீர்கள்.''

"எல்லோர்க்கும் வாழ்க்கைக்கான அடிப்படை தேவைகளுக்கு முதலில் ஏற்பாடு செய்வதில் முனைந்திருந்தோம். அப்புறமே இவ்வளவு பெரிய அரங்கத்தைக் கட்டுவதில் கவனஞ் செலுத்தினோம்" என்றார்கள்.

எது முன்னே செய்ய வேண்டியது, எது அடுத்துச் செய்ய வேண்டியது என்று முடிவு செய்வதற்கும் தெளிவான அறிவு தேவை.

விளையாட்டுப் போட்டியை பத்து நிமிடங்கள் கவனித்தோம். பிறகு அங்கிருந்து புறப்பட்டோம். டாஷ்கண்ட் ஓட்டலுக்கு எதிரில் பெரிய நாடக அரங்கம். அது மூன்று மாடிக் கட்டடம். அங்கே சென்றோம். நாடகம் நடந்து கொண்டிருந்தது. அரங்கத்தை நிர்வகிப்பவர்களில் ஒருவர் எங்களை உள்ளே அழைத்துக் கொண்டு போனார். அவ்வேளை, இடைவேளை மணி ஒலித்தது. விளக்கொளியில் அவ்வரங்கின் அழகையும் அமைப்பையும் பார்த்து விட்டு வெளியே வந்தோம்.

நில அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டதாகவே தெரியவில்லை. அவ்வளவு திறமையாக, பழைய அமைப்பின் படியே சீர் செய்திருந்தார்கள். இச் சீரமைப்பிற்கும் அண்டைக் குடியரசுகள் உதவின.

நான் களைத்துப் போய் இருந்ததால், நாடகம் பார்க்கத் தங்காமல், தனியே ஓட்டலுக்குத் திரும்பி விட்டேன், 'நாடகமே உலகம்' என்பதை எண்ணிக் கொண்டே உறங்கி விட்டேன்.



# 7

ஓரிரவு மட்டும் டாஷ்கண்டில் தங்கினோம். மறுநாள் காலை மாஸ்கோவிற்குச் செல்லத் திட்டமிட்டிருந்தோம்.

"விமானம் காலை ஏழு மணிக்குப் புறப்படும். ஆறு மணிக்கு விமான நிலையத்தில் இருக்க வேண்டும். ஐந்தே முக்கால் மணிக்கே ஓட்டலை விட்டுப் புறப்பட வேண்டும். ஆயத்தமாக இருப்பீர்களா?" என்று வினவினார் மொழி பெயர்ப்பாளர்.

எங்களுக்குள் கலந்தாலோசித்தோம். காலை ஆறு மணிக்குப் புறப்படலாம் என்று முடிவு செய்தோம். அந்த பதிலை ஏற்றுக் கொண்டார், தோழர்.

காலை ஐந்தே முக்கால் மணிக்கே வந்து விட்டார் டாஷ்கண்ட் நண்பர். எங்கள் அறைக் கதவுகளைத் தட்டி எங்களை விழிக்கச் செய்தார்.

நாங்கள், விரைந்து ஆயத்தமானோம். எவ்வளவு விரைந்தும், புறப்பட ஆறேகால் மணியாகி விட்டது. எங்கள் நெஞ்சம் குறுகுறுத்தது. மன்னிப்புக் கோர முயன்றோம். அதற்கு விடவில்லை அவர்.

"ஓட்டலில் இவ்வளவு அதிகாலையில் சிற்றுண்டி கிடைக்காது. எனவே விமான நிலைய சிற்றுண்டி சாலையில் உண்ண வேண்டும். அதற்குப் போதிய காலம் விடுவதற்காகவே இவ்வளவு சீக்கிரம் புறப்படக் கோரினேன். இங்கு சிறிது தாமதமாகி விட்டதால், அங்கு விரைந்து உண்ண வேண்டும். அதைத் தவிர வேறு இடையூறு இல்லை' ' என்று எங்களை அமைதிப் படுத்தினார் அவர்.

ஓட்டல் பணியகத்தில் நாங்கள் பாஸ்போர்ட்டுகளைக் கொடுத்திருந்தோம். அவற்றை, அவர் வாங்கி வைத்திருந்தார். ஒவ்வொன்றையும் உரியவர்களிடம் கொடுத்தார்.

அதிகாலையானதால், போக்குவரத்து நெரிசல் இல்லை. 'கார்' சிட்டெனப் பறந்தது. விரைவில் விமான நிலையத்தைச் சேர்ந்தோம். எங்கள் பெட்டிகளையும் பயணச் சீட்டுகளையும் 'இன்டூரிஸ்ட்' அலுவலரிடம் ஒப்படைத்தார்.

'இன்டூரிஸ்ட்' நிறுவனம் சோவியத் நாட்டின் 'சுற்றுலா அமைப்பு.' பயணிகளின் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்யும் அமைப்பு அது. அந்த அமைப்பு, பல ஊர்களில் ஓட்டல்களை நடத்துகிறது. விமானம், இரயில் ஆகியவற்றில் பயணஞ் செய்யச் சீட்டுகள் வாங்கித் தருவது, தங்குமிடம் ஏற்பாடு செய்வது, நாடகம், கூத்து, இசைக் கச்சேரிகளுக்கு நுழைவுச் சீட்டு பெற்றுத் தருதல், பார்க்கத் தகுந்த சிறப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுதல், ஆகிய பல பணிகளையும் மேற்கொள்ளும் 'இன்டூரிஸ்ட்'.

எங்களை மாஸ்கோவிற்கு அனுப்ப ஏற்பாடு செய்யும் படி இன்டூரிஸ்ட்டிடம் கூறிவிட்டு, சிற்றுண்டிச் சாலைக்கு அழைத்துச் சென்றார். நல்ல சிற்றுண்டி கிடைத்தது. விரைந்து உண்ண நேர்ந்தது. பரபரப்போடு உண்டு முடித்து விட்டு, பயணிகள் தங்கும் கூடத்திற்கு வந்தோம். மாஸ்கோ விமானம் புறப்பட பதினைந்து நிமிடங்கள் இருந்தன. நிம்மதியாக அமர்ந்திருந்தோம். மணி ஏழு ஆயிற்று. புறப்படும் தகவல் இல்லை. எங்கள் வழிகாட்டி விசாரிக்கச் சென்றார். சில விநாடிகளில் அறிவிப்பு வந்தது. என்ன அறிவிப்பு?

"மாஸ்கோவில் பெரும் பனி பெய்கிறது. வழியிலும் வானநிலை சரியாக இல்லை. எனவே விமானம் புறப்பட நேரமாகும். அடுத்த அறிவிப்பை எதிர்பாருங்கள்" என்று சொன்னபோது, எங்களுக்குப் 'பொக்'கென்று போயிற்று.

"பொறுமையைக் கற்றுக் கொள்ள இந்நெருக்கடி உதவட்டும்" என்று எங்களைத் தேற்றிக் கொண்டு காத்திருந்தோம். கடைசியில், புறப்படும் அறிவிப்பு வந்தது. கூடத்தை விட்டு வெளியே வந்தோம். விமானம் நெடுந் தூரத்தில் இருந்தது. பேருந்து வண்டியில் ஏறி அங்கே சென்றோம். வரிசையில் நின்று மெல்ல ஏறினோம். உரிய இடத்தைத் தேடி அமர்ந்தோம். விமானம் டாஷ்கண்டை விட்டு மாஸ்கோவிற்குப் புறப்பட்டபோது, மூன்று மணி காலதாமதமாகியிருந்ததை உணர்ந்தோம். பயணிகளிடம் ஆயுதங்கள் உள்ளனவா என்று பார்க்கும் காவல்துறையினரின் சோதனையைக் காணவில்லை.

"கால தாமதமாகிப் புறப்படுகிறது; டாஷ்கண்டில் நேர்ந்ததைப்போல, மாஸ்கோவிலும் நம்மை அழைத்துக் கொண்டு போக வேண்டியவர்கள் நாம் சேரும்போது

விமான நிலையத்தில் இல்லாமல் போனால்?" என்று இழுத்தேன்.

"அந்நிலையில் என்ன செய்வதென்று டாஷ்கண்டில் கற்றுக் 'கொண்டோமே! இனி கவலையேன்? எல்லாம் சரியாக இருக்கும்" என்று தெம்பூட்டினார்கள் நண்பர்கள்.

"நாம் மாஸ்கோ போய்ச் சேரும் போதாவது பெரும் பனி பெய்யாமல் இருக்க வேண்டுமே" இது என் விருப்பம். இதைக் கேட்ட நண்பர்கள், 'அதுவும் நம் கையில் இல்லை. ஆகவே அதைப் பற்றியும் கவலைப்படுவதில் பயன் என்ன? நல்லபடியே இருக்குமென்ற நம்பிக்கையோடு பயணஞ் செய்வோம்" என்றார்கள்.

விமானம் முப்பத்தோராயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. வேகம் ஐந்நூற்று ஐம்பது மைல்கள் என்றார்கள். கிலோ மீட்டரில் அறிவிக்கவில்லை.

அதற்குமேல் சிந்தனை பருவநிலை பற்றி உழலவில்லை. ஆயினும் சிந்தையை அடக்கி சும்மா இருக்க முடியவில்லை. சோவியத் ஒன்றியத்தைப் பற்றியும் இரஷ்யக் குடியரசு பற்றியும் சிந்தனை திரும்பிற்று.

"மாஸ்கோவிற்குச் செல்ல எத்தனை மணி நேரம் பிடிக்கும்."

"விமானப் பயணம் ஐந்து மணி நேரம் ஆகும்."

"மாஸ்கோ சோவியத் ஒன்றியத்தின் தலைநகர மல்லவா?"

"ஆம். சோவியத் ஒன்றியத்தின் தலைநகரமாயிருப்பதோடு, இரஷ்யக் குடியரசின் தலைநகரமாகவும் இருக்கிறது."

"சாதாரணப் பேச்சு வழக்கில் இரஷ்யா என்பது தானே சோவியத் ஒன்றியம்?"

"பேச்சு வழக்கில் தெளிவு இல்லை. இரஷ்யா என்பது சோவியத் ஒன்றியத்திலுள்ள பதினைந்து குடியரசுகளில் ஒன்று. முந்தியது ஓர் பகுதி. ஒன்றியம் முழு நாடு. சோவியத் ஒன்றியம் என்பது இரஷ்யா வையும் வேறு பதினான்கு குடியரசுகளையும் கொண்ட பெரு நாடு."

"பதினைந்து குடியரசுகளின் பெயர்கள் என்ன?"

"அர்மினியா, அஜர்பைஜான், பைலோரஷ்யா, எஸ்தோனியா, ஜியார்ஜியா, கஜக்ஸ்தான், கிர்கிஜியா, லிதுவேனியா, மால்டேவியா, இரஷ்யா, டஜிகிஸ்தான், துருக்மேனியா, உக்ரைன், உஸ்பெக்கிஸ்தான் ஆகியவை, சோவியத் நாட்டில் அடங்கிய குடியரசுகளின் பெயர்கள்."

இப் பதினைந்து குடியரசுகளும் ஒரே அளவானதா? இல்லை. எது பெரியது?

இரஷ்யா பெரியது. நிலப் பரப்பிலும் பெரியது. சோவியத் நாட்டின் பரப்பில், முக்கால் பங்கு இரஷ்யா வைச் சேர்ந்தது. சோவியத் நாட்டு மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் இரஷ்யக் குடியரசில் வாழ்கிறார்கள்

இரஷ்யக் குடியரசு மட்டுமே இந்தியாவைப்போல் ஐந்து பங்கு நிலமுடையது; அமெரிக்காவைப்போல் இரண்டு பங்கு பெரியது. சோவியத் நாட்டை இந்தியா வோடு ஒப்பிட்டால், அது ஏழு பங்கு பெரியது. அமெரிக் காவைப்போல மூன்று பங்கு பெரியதாம்.

பதினைந்து குடியரசுகளும் பரப்பிலோ, மக்கள் எண்ணிக்கையிலோ, ஒரே நிலையில் இல்லை. அவை பெரிதும் சிறிதுமாக உள்ளன.

அப்படியானால் பெரிய குடியரசின் ஆதிக்கம் வளர்ந்து விடாதா? அக் குடியரசு, அதாவது இரஷ்யா நினைக்கிற

மாதிரி, மற்றவை ஆட வேண்டிய நிலை உருவாகாதா? இக் கேள்விகள் எழலாம். எங்களுக்கு இவ்வையங்கள் தோன்றின.

சோவியத் நாட்டின் அரசியல் அமைப்பைக் கவனித்தால் அது, தெளிவு படுத்தும்.

சோவியத் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடியரசிற்கும் தனித் தனி சட்டமன்றம் உண்டு. எல்லாக் குடியரசுகளும் அடங்கிய சோவியத் நாடு முழுமைக்குமான சட்டமன்றம் உண்டு. இந்த நாடாளுமன்றம் இரு அங்கங்களால் ஆகியது. ஒரு அங்கத்திற்குப் பெயர், ஒன்றியங்களின் சோவியத்—அதாவது ஒன்றியங்களின் அவை, என்பதாகும். மற்றொரு உறுப்பு தேசிய இனங்களின் அவை என்பதாகும். இரண்டும் சேர்ந்ததே, சோவியத் நாட்டின் தலைமை அவை—சுப்ரீம் சோவியத் ஆகும். ஒன்றியங்களின் அவையில், எழுநூற்று அறுபத்தேழு உறுப்பினர்கள் உள்ளார்கள். தேசிய இனங்களின் அவை எழுநூற்று ஐம்பது உறுப்பினர்களைக் கொண்டது.

ஒன்றிய அவைக்கான தொகுதிகள், மூன்று இலட்சம் வாக்காளர்களுக்கு ஒரு தொகுதி என்னும் அடிப்படையில் பிரிக்கப்படுகிறது. ஆகவே ஒன்றிய அவைக்கு பெரிய குடியரசுகள் நிறைய உறுப்பினர்களை அனுப்பும். சிறிய குடியரசுகள் சிலரையே அனுப்பும்.

இதற்கு மாற்று, தேசிய இனங்களின் அவையில் வைத்திருக்கிறார்கள். வாக்காளரின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, இந்த அவைக்கு உறுப்பினர் எண்ணிக்கை முடிவு செய்யவில்லை. அங்கே எல்லா குடியரசுகளுக்கும் ஒரே வலிமை. பெரிய குடியரசாகிய இரஷ்யக் குடியரசுக்கு முப்பத்திரண்டு இடங்கள். சிறிய குடியரசாகிய எஸ்தோனியாவுக்கும் அதே முப்பத்திரண்டு

இடங்கள். இது, குடியரசுகளுக்கிடையே சமத்துவம் நிலவத் துணைபுரிகிறது.

சோவியத் ஒன்றியத்தின் நாடாளு மன்றம், சாதாரணமாக ஆண்டுக்கு இரு முறை கூடும். நாடாளு மன்றத்தின் இரு அவைகளும் ஒன்ருகக் கூடியே அமைச்சரவையை ஏற்கும். இதுவும் தேசிய இனங்களுக்குப் பாதுகாப்பு.

இது போக, நாடாளுமன்றம் கூடாத இடைவேளையில் நாட்டு நடவடிக்கைகளைக் கவனிக்கவும், அமைச்சரவையை மேற்பார்க்கவும் 'பிரிசீடியம்' 'தலைமைக் குழு' என்ற குழு உண்டு. அக் குழுவில் முப்பத்தேழு உறுப்பினர்கள் இருப்பார்கள். ஒருவர் தலைவர் ; ஒருவர் செயலர் ; பதினைந்து குடியரசுகளின் 'பிரிசீடிய'த் தலைவர்கள் இதில் உறுப்பினர்கள். மேலும் இருபது நாடாளு மன்ற உறுப்பினர்கள் அதில் இருப்பார்கள். இதுவும் செல்வாக்கைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

மேலும் சோவியத் ஒன்றிய அமைச்சரவையில், ஒவ்வொரு குடியரசின் தலைமை அமைச்சரும் உறுப்பினராவார். இவர்கள் தவிர வேறு அமைச்சர்களும் இருப்பார்கள். எனினும் ஒவ்வொரு குடியரசின் தலைமை அமைச்சரும், நாடு முழுவதற்குமான அமைச்சரவையில் இருப்பதன் மூலம், தனியொரு குடியரசின் செல்வாக்கு அதிகரித்து விடாதபடி கட்டுப்படுத்தப் படுகிறது.

சோவியத் நாட்டின் பரப்பு எவ்வளவோ?

இரண்டு கோடி, இருபத்தி நான்கு இலட்சம் சதுர கிலோ மீட்டர் இந் நாட்டின் பரப்பு. சோவியத் நாட்டின் கீழ் கோடியிலிருந்து மேற்குக் கோடிக்கு பத்தாயிரம் கிலோ மீட்டர்கள் என்று சென்ற முறை தெரிந்து கொண்டேன். வடக்கு தெற்காக அதன் தூரம் ஐயாயிரம் கிலோ மீட்டர்களாம். உலகில் மிகப் பெரிய நாடு இதுவே.

இது, ஆசியா, ஐரோப்பா ஆகிய இரு கண்டங்களில் பரவியுள்ளது.

சோவியத் நாட்டு மக்கள் தொகை தெரிய வேண்டுமா?

இப்போதைய மக்கள் எண்ணிக்கை இருபத்து ஐந்து கோடிக்கு மேல். அதாவது, இதில், சீனுவிற்கும், இந்தியா விற்கும் அடுத்த மூன்ருவது இடம் சோவியத் ஒன்றியத் திற்கு. சோவியத் ஆட்சி மலர்ந்தபோது, பதிறு கோடி மக்களே இருந்தார்கள். ஆண்டுக்கு ஆண்டு மக்கள் எண்ணிக்கை கூடுகிறது.

அத்தனை குடிமக்களும் ஒரே இனமா? இல்லை. இரஷ்யக் குடியரசில் மட்டும் கிட்டத்தட்ட நூறு இன மக்கள் வாழ்கிருர்கள். பிற குடியரசுகளில் இத்தனை இனங்கள் இல்லை. ஆயினும் ஒரே இனம் இல்லை. பல இனங்கள் உண்டு. பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் ஒற்றுமையாக வாழ்கிருர்களா? ஆம், என்றே அறிந்து கொண்டோம்.

அந்தந்தக் குடியரசின் நிர்வாகம் அக் குடியரசு மொழியில் நடக்கும். சோவியத் ஒன்றிய நிர்வாகம், பெரும்பாலானவர்களின் மொழியாகிய இரஷ்ய மொழி யில் நடக்கிறது.

சோவியத் ஆட்சியின் தொடக்கத்தில் சில தேசிய இனங்களின் மொழிகளுக்கு எழுத்தில்லை. அவற்றிற்கு எழுத்தையும் அமைத்துக் கொடுத்து, அவர்களோடு ஒருமைப்பாடு சம்பாதித்துக் கொண்டது சோவியத் ஆட்சி.

ஒவ்வொரு குடியரசின் குடிமகனும் சோவியத் ஒன்றியக் குடிமகனுகவும் கருதப்படுவார். பதினெட்டு வயது நிறைந்த எல்லா மக்களும் உள்ளூர் ஆட்சித்

தேர்தலில் வாக்களிக்கலாம். இருபத்தோரு வயது முடிந்தால், குடியரசின் சட்டசபை தேர்தலில் வாக்களிக்கலாம். இருபத்து மூன்று வயது நிரம்பியவர்கள், சோவியத் ஒன்றியத்தின் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கலாம், இதில் ஆண் பெண் என்றோ, இன வேற்றுமை அடிப்படையிலோ, சமய வேற்றுமையைக் காட்டியோ உரிமை மறுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு குடியரசுக்கும் ஓர் சட்டசபை உண்டு. அத்தனைக் குடியரசுகளும் சேர்ந்த சோவியத் நாட்டிற்கு நாடாளு மன்றம் உண்டு. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் எத்தனை ஆண்டுகளுக்கு ஓர் முறை? நான்கு ஆண்டுகளுக்கு ஓர் முறை தேர்தல் நடக்கும்.

சோவியத் நாட்டில் ஒரே ஒரு கட்சியே அனுமதிக்கப் படுகிறது. அதுவே பொது உடமைக் கட்சி. அக் கட்சியில் கண்டவர்கள், உறுப்பினராகிவிட முடியாதாம். பல்லாண்டு கட்சி உறுப்பினராகப் பணிபுரிந்தவர்கள் அறிமுகப்படுத்தியவர்களை மட்டுமே, பல கண்டிப்பான கண்ணோட்டங்களுக்குப் பிறகு சேர்த்துக் கொள்வார்களாம். கட்சியில் சேராதவர்களும் தேர்தலில் போட்டியிடலாம். அப்படிப்பட்டவர்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்புகள் உண்டா? உண்டு.

சோவியத் நாட்டின் நாடாளு மன்றத்தில் ஆயிரத்து ஐநூற்றுப் பதினேழு உறுப்பினர்கள். அவர்களில் முன்னூற்று எழுபத்தாறு பேர்கள், கட்சியில் சேராத, தனி நபர் சிறப்பால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அந்த நாட்டிலாவது கட்சி முத்திரையில்லாதவர்களுக்கும் கிராக்கி. குடியரசுகளிலும் தனி நபர்கள், தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

பெண்களின் தேர்தல் வாய்ப்பு எப்படியோ? அவர்களும் தேர்தல்களில் போட்டியிட்டு, தேர்ந்தெடுக்கப்

படுகிறார்கள். பெண்களையும் தேர்ந்தெடுத்தோம் என்று சொல்லிக் கொள்ளும் பொருட்டு, ஒப்புக்குச் சிலரைத் தேர்ந்தெடுக்கிறார்களா? இல்லை. மெய்யாகவே ஆண்களோடு சம வாய்ப்பு உண்டா? மெய்யாகவே வாய்ப்புக் கொடுக்கிறார்கள். நாடாளு மன்றத்தில் நானூற்று இருபத்தைந்து பெண்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மாஸ்கோ நகராட்சிக்கு 853 உறுப்பினர்கள் உண்டு. அவர்களில் 377 பேர் பெண்கள்.

நகராட்சி உறுப்பினர் பதவியோ சட்டமன்ற உறுப்பினர் பதவியோ தொழில் அல்ல. அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், முன்னே செய்து வந்த அலுவலை அல்லது தொழிலை விட்டு விட்டு, உறுப்பினர் பதவியையே தொழிலாக மாற்றிக் கொள்ள முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்டவர் கூட்டங்களுக்குச் செல்வதை வேலையாகக் கருதப்படும். அவை முடிந்ததும் உறுப்பினர் தத்தம் வேலைக்கோ அலுவலுக்கோ திரும்பி விடவேண்டும். அதாவது, ஏதாவதொரு தொழிலில் இருந்து சம்பாதித்து சாப்பிட்டுக் கொண்டு, மாநகராட்சி மன்ற, சட்ட மன்ற, நாடாளுமன்றப் பணிகளில் ஈடுபடவேண்டும். உழைப்பாளர்கள் ஆட்சியில், நாடாளுமன்றத்தவரும் உழைப்பாளியாக நீடிக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரை, நான்காண்டு காலம் முடியு முன்பே வாக்காளர்கள் திருப்பி அழைத்துக் கொள்ள சோவியத் அரசியல் சட்டம், இடம் வைத்திருக்கிறதாம். வாக்காளர்களில் பாதிப் பேர் அப்படி முடிவு சொன்னால், உறுப்பினர் பதவியை விட்டுவிட வேண்டும். அத்தகைய முடிவுக்கு முன்னர், தொகுதி முழுவதும் கருத்தரங்கம் நடக்கும். அப்படிப்பட்ட நிலை, சிற்சில வேளை உருவாகியுள்ளதாம்.

சமய உரிமையும் வழிபாட்டு உரிமையும் சோவியத் நாட்டில் உண்டா? உண்டு. சமய நம்பிக்கை தனி நபருடைய மனச் சாட்சியைப் பொறுத்தது.

ஜார் கிறிஸ்தவ அரசர். அவரது ஆட்சி கிறிஸ்தவ ஆட்சி. அக்டோபர் புரட்சிக்குப் பின் ஏற்பட்டுள்ள இன்றைய சோவியத் ஆட்சி, சமயத்திற்கும் ஆட்சிக்கும் தொடர்பில்லாமல் செய்து விட்டது. அதாவது, ஆட்சியால் ஆதரிக்கப்படும் சமயம் என்று ஒன்று இல்லை. சமயச் சார்பற்ற சோவியத் ஆட்சியில் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், பௌத்தர்கள் உள்ளார்கள். அந்தந்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் அவர்கள் முறைப்படி வழிபாடு செய்ய உரிமை பெற்றிருக்கிறார்கள். வழிபாட்டு உரிமையைப் பறிக்கவில்லை. கிறிஸ்தவர்களுக்குள்ளே இரண்டு மூன்று பிரிவுகள் உண்டாம். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தலைவரும் கூட்டமைப்பும் உண்டு. இஸ்லாமியருக்கும், வெவ்வேறு பக்கங்களில், வெவ்வேறு அமைப்புகளும், அவற்றின் தலைவர்களும் உண்டாம்.

சமயவாதிகளுக்கு உரிமை இருப்பது போலவே, சமய நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் முழு உரிமையுண்டு. சமய நம்பிக்கையுடையவராக இருக்கவேண்டுமென்று யாரையும் கட்டாயப்படுத்த முடியாது.

அதை நேரில் காண, நேரம் வந்துவிட்டது, என்று சொல்லாமல் சொல்லுவது போல், "மாஸ்கோ விமான நிலையத்தில் இறங்கப் போகிறோம். கச்சையைக் கட்டிக் கொள்ளுங்கள், புகை பிடிக்காதீர்கள்' என்று அறிவிப்பு கேட்டது.

மாஸ்கோவிற்கு வந்து விட்டோம். சிறிது நேரத்தில் அம் மண்ணில் கால் எடுத்து வைக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்தோம். கைகள் கச்சையைக் கட்டின.



# 8

பறப்பதற்கு மட்டுமே வானவெளி; வாழ்வதற்கு நிலப்பரப்பு. இதை நினைவுபடுத்துவது போல், வானப் பறப்பி கீழே இறங்கிற்று. டாஷ்கண்டிலிருந்து எங்களை ஏற்றி வந்த விமானம் முப்பதாயிரம் அடி உயரத்திலிருந்து தரை மட்டத்திற்கு, பொத்தென்று குதித்துவிடவில்லை. முன் கூட்டியே, ஒவ்வொரு நிலையாகக் கீழ் மட்டத்திற்கு இறங்கி, கடைசியாக, மாஸ்கோ விமான நிலைய ஓடு பாதையில் ஓடி, நின்றது. பயணிகளை இறக்கும் படிவண்டி விமானத்தோடு பொருத்தப்பட்டது. ஒவ்வொருவராக இறங்கினோம். வெளி உலக நிலையென்ன?

வானத்தில் இருந்து, பஞ்சு மழை பெய்தாற் போல், மஞ்சு வீழ்ந்து கொண்டிருந்தது. நிலமென்னும் நல்லாள் வெண்ணிற ஆடை அணிந்திருந்தாள். எங்கும் பனி

உறைந்து கிடந்தது. மரங்கள் இலைகளை இழந்து விட்டு மொட்டைகளாக இருந்தன. சில சென்டிமீட்டர் உறை பனியின் மேல் நடந்து செல்ல வேண்டிய நிலை. உறை பனியின் மேல் நடந்து சென்றார்கள், பயணிகள். தூதுக் குழுவைச் சேர்ந்த நாங்கள், சில மீட்டர்கள் தூரமே அப்படி நடக்க நேர்ந்தது.

எங்கள் விமானம் நிற்குமிடத்திற்கு அருகில், இரு பெரிய கார்கள் நிற்பதைக் கண்டேன். நான், கடைசி கீழ்ப் படியில் கால் வைத்ததும், ஓர் அம்மையார், விரைந்து வந்தார். கை குலுக்க, கையை நீட்டியபடியே.

'இந்திய தூதுக் குழுவா?' என்று கேட்டார்.

''ஆம்; நான், வேலு'', என்று பதில் கூறிவிட்டு கை குலுக்கினேன்.

'என் பெயர் திருமதி லுபோ முத்ரோவா', என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். இவர் மாஸ்கோ இந்திய சோவியத் நட்புறவுக் கழகத்தின் உயிர்நாடி ஆவார். என்னுடன் வந்த இரு நண்பர்களையும் தனித் தனியே அறிமுகப் படுத்தினேன். ஒவ்வொருவரோடும் கை குலுக்கினார். பின்னர், தன் அருகிலிருந்த மொழி பெயர்ப் பாளரையும், நண்பரையும் எங்களுக்கு அறிமுகப் படுத்தினார். மொழி பெயர்ப்பாளர் பெயர் வ்லாடிமீர். நண்பர் பெயர் அலெக்ஸாண்டர், அறிமுகம் முடிந்ததும்,

''பனி பெய்து கொண்டே இருக்கிறது. தலையில் குல்லாய் அணிந்திருக்கிறீர்கள். ஆயினும் வெளியில் நிற்காதீர்கள். உடம்புக்கு நல்லதல்ல'' என்று கூறிக் கொண்டே அருகிலிருந்த கார் ஒன்றில் எங்களை ஏற்றி விட்டார். தானும் ஏறி அமர்ந்து கொண்டார். மொழி பெயர்ப்பாளர், அதே காரில் ஏறிக் கொண்டார்.

''நாம் காத்திருக்கத் தேவையில்லை. உங்கள் பெட்டிகளை எடுத்துக் கொண்டு, அடுத்த கார் வரும்

விரைவில் வந்து சேரும். அதற்கு திரு. அலெக்ஸாண்டரை விட்டு விட்டுப் போவோம். உங்கள் பெட்டிச் சீட்டுகளைக் கொடுங்கள்" என்றார், அம்மையார். மூட்டை சீட்டுகளைப் பெற்று, மொழி பெயர்ப்பாளர் ஒருவரிடம் கொடுத்து, உரிய ஆணையைக் கூறி விட்டு, காரை ஊருக்குள் போகச் சொன்னார்.

எங்கள் கார், பறந்து சென்றது. மூடிக் கிடந்த, கண்ணாடிகளின் மூலம் இரு மருங்கிலும் பார்த்தோம். வழி நெடுகிலும் பனி பெய்து கொண்டிருந்தது. சாலையோரம் முழுவதும் உறை பனி மூடிக் கிடந்தது. எங்கும் வெண்மை, தூயவர் உள்ளம் போல். அது, உள்ளங் கவரும் காட்சி. நெடுஞ்சாலை நிலையென்ன?

அப் பனி மழையிலும், கார்களும் வாடகைக் கார்களும் பேருந்து வண்டிகளும் பார வண்டிகளும் சங்கிலித் தொடர் போல ஓடிக் கொண்டிருந்தன. அவற்றின் அழுத்தத்தால், சாலையில் வீழ்ந்த பனி, கரைந்து நீராக ஓடின.

எங்கள் பயணத்தைப் பற்றிய விசாரிப்பு சில மணித் துளிகளில் முடிந்தது. அப்புறம் பேச்சு, மாஸ்கோவையும் இரஷ்யாவைப் பற்றியும் திரும்பிற்று.

'நாங்கள் வந்து இறங்கிய மாஸ்கோ விமான நிலையம், வெளிநாட்டுப் பயணத்திற்கான விமான நிலையமாகத் தோன்றவில்லையே. சென்ற இரு முறை பார்த்ததற்கு வேறாக இருக்கிறதே' என்றேன்.

"ஆம்; வேறு! இது அனைத்து நாட்டுப் பயண விமான நிலையம் அல்ல. சோவியத் நாட்டுக்குள் பயணஞ் செய்வோருக்காக, மாஸ்கோவில் மூன்று விமான நிலையங்கள் உள்ளன. அதில் ஒன்று இது" என்றார் திருமதி முத்ரோவா.

"நாள்தோறும் ஏராளமான பயணிகள் மாஸ்கோ விற்கு, வந்து போவதை இது காட்டுகிறது" இது என் நண்பரின் மதிப்பீடு.

"ஆம். நாள்தோறும் பத்து இலட்சம் மக்கள் விமானம், இரயில், கப்பல், நெடுஞ்சாலை ஆகிய வழிகளில் மாஸ்கோவிற்கு வந்து போவதாக, புள்ளிவிவரிகள் கூறு கிறார்கள்.'

இப் பதிலைக் கேட்டதும்,

"இத்தனை இலட்சம் பேருக்குத் தங்குமிடம் ஏற்பாடு செய்வது பெரும்பாடாக இருக்குமே" என்றார் மற்றொரு இந்தியர்.

"பயணிகளுக்கு வசதி செய்ய, பெரும் முயற்சி தேவை. இரஷ்யக் குடிமக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப் பதற்கு சோவியத் ஆட்சி பெரு முயற்சி எடுக்கிறது. விருந்தாளிகளின் பெருக்கத்தைச் சமாளிப்பதற்காக, புதுப் புது ஓட்டல்களைக் கட்டுவதிலும் அக்கறை கொண் டுள்ளது எங்கள் அரசு" என்றார்.

"வீடுகள் என்றீர்களே! இதோ வலப்புறம் பாருங்கள். பல மாடிக் கட்டடங்கள். ஒன்றா? இரண்டா? பலவற்றைக் காண்பீர்கள். அனைத்தும் அண்மையில் கட்டி முடிக்கப்பட்டவை. இப் பகுதி வாழ் மக்களுக்கு வேண்டிய கடைகள் இவ் வளைவுக்குள்ளேயே. சிற்றுண்டிச் சாலைகளுக்கும் வெளியே போக வேண்டாம். நிழற்படக் காட்சிகளையும் இங்கேயே காணலாம். பள்ளி, பூங்கா, கலையரங்கம் ஆகியவை, புதிய குடியிருப்புப் பகுதிகளில் உண்டு. இப்படித் தன்னிறைவு பெற்ற குடியிருப்புப் பகுதிகள் பல, ஒவ்வோர் ஆண்டும் மாஸ் கோவில் உருவாகின்றன. முன்பிருந்த, சிறு மர வீடு களுக்குப் பதில், மாடி வீடுகள் கட்டப்பட்டிருப்பதை

நீங்கள் மாஸ்கோ மாநகரத்திலும் காணலாம். பிற நகரங்களிலும் காணலாம். சிற்றூர்களிலும் காணலாம். சிற்றூர் வீடுகளில் கூட இக்கால வசதிகளாகிய கதகதப்பு, ஓடுநீர், மின்னாற்றல், ஆவி அடுப்பு, ஆகியவை இருக்கும்'' என்று சுட்டிக் காட்டினார் திருமதி முத்ரோவா.

நல்ல உறையுள் நல்ல உடல் நலத்திற்கு அடிப்படை. நல்ல உடல் நலம் நல்ல உழைப்புக்குத் துணை. நல்ல உழைப்பு உற்பத்திப் பெருக்கத்திற்கு வேர். உற்பத்திப் பெருக்கம் வளமான வாழ்விற்கு முதற் படி. எனவே சோவியத் ஆட்சி, நல்ல குடியிருப்புகளைக் கட்டிக் கொடுப்பதில், முன்னறியாப் பெரு முயற்சி எடுத்துள்ளது என்பது உலகறிந்த செய்தி. எத்தனை பேருக்கு புது வீடுகள் கொடுத்துள்ளார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினோம். பதில் கிடைத்தது.

சோவியத் ஆட்சி ஏற்பட்ட பிறகு, ஏறத்தாழ எட்டு கோடி பேர்களை புது மனைகளில் குடியேற்றியுள்ளதாம். சென்ற இரண்டாவது உலகப் போரில் இரஷ்யாவில் ஏற்பட்ட சேதத்தால் இரண்டரை கோடி சோவியத் மக்கள் வீடுகளை இழந்தார்கள். அந்த நாசம் ஏற்படாதிருந்தால் நிலைமை மேலும் முன்னேறியிருக்கும். அடுத்த சில ஆண்டுகளில் ஐந்து கே[illegible] மக்களுக்கு புது வீடுகள் கிடைக்குமாம்.

இந் நூற்றாண்டின் தொடக்கத்தில், மாஸ்கோ நகரில் இருந்த வீடுகளில் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்று விழுக்காடு மாடி இல்லா வீடுகள், அவற்றில் பல சாதாரண மர வீடுகள். சாதாரண மக்கள் அவற்றில் அடைந்து கிடந்தார்கள். பனிக் காலத்தில் அக்கால மக்கள் பட்ட பாடு சொல்லுந்தரமன்று. இன்றைய நிலை

வேறு. பல மாடிக் கட்டடங்கள், மையக் கதகதப்பு ஏற்பாடுகள் கொண்டன.

மாஸ்கோ நகர குடிமக்களில் அலுவல் பார்ப்பவர்கள் ஏராளமா? தொழிலாளிகள் அதிகமா? மாஸ்கோ நகரத்தில் வாழ்வோர், எழுபது இலட்சம் மக்கள். அவர்களில் பெரும்பாலோர் தொழிலாளிகள். காரணம்?

மாஸ்கோ, சோவியத் நாட்டின் இரஷ்யக் குடியரசின் தலை நகரம் மட்டுமல்ல. அது பெரிய, தொழில் நகரம் ஆகும். பெரிய, பொறியியல் தொழிற்சாலைகள் நூற்று இருபது, அந் நகரில் உள்ளன. கார் உற்பத்தி, விமான உற்பத்தி, கப்பல் கட்டுதல், உர உற்பத்தி, இரயில் சரக்குப் பெட்டிகள் செய்தல் ஆகியவை செய்யும் தொழிற்சாலைகள், நெசவாலைகள், உடைத் தொழிற் கூடங்கள், உணவுப் பண்ட உற்பத்தி நிலையங்கள் பலப் பல.

மாஸ்கோ மாநகரை 'ஐங் கடலூர்' என்று சொல்லலாம். அது கடல் ஓரத்தில் இல்லை. ஆயினும், 'மாஸ்கோ கால்வாய்' மூலம், ஐந்து கடல்களோடு மாஸ்கோ உறவு கொண்டுள்ளது. அக் கால்வாயில் கப்பல்கள் செல்கின்றன. அக் கப்பல்கள், மாஸ்கோவை வெண்மைக் கடல், கருங்கடல், பால்டிக் கடல், காஸ்பியன் கடல், அஸோவ் கடல் ஆகிய ஐந்து கடல்களோடு இணைக்கின்றன.

வெளிநாட்டுப் பயணத்திற்காக ஓர் விமான நிலையமும் உள்நாட்டும் பயணத்திற்காக ஓர் விமான நிலையமும் இருப்பதுபோல், இரயில் பயணத்திற்கும் பல பாதைகள் உள்ளன. பதினொரு பெரிய இரயில் பாதைகள் மாஸ்கோவிலிருந்து புறப்படுகின்றன. அவை முற்காலத்தில் புகை வண்டிப் பாதைகள். இப்போது அவை, மின்சாரப் பாதைகளாகவும், டீசல் பாதைகளாகவும் மாறியுள்ளன

மாஸ்கோவிலிருந்து பல நகரங்களுக்கு நெடுஞ் சாலைகள் உள்ளன. இரஷ்யக் குடியரசில் மட்டும் மொத்தம் ஒரு இலட்சம் மைல் நீளத்திற்கு 'தார்' அல்லது சிமெண்டால் ஆகிய சாலைகள் உள்ளனவாம். மற்ற குடியரசுகளில் நல்ல நெடுஞ்சாலைகளுக்குக் குறைவில்லை.

மாஸ்கோ நகரத்திற்குள் போக்குவரத்து சாதனங்கள் எப்படி? நகர போக்குவரத்து சாதனங்கள் பலவகை.

பாதாள இரயில்வே, சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாம். மாஸ்கோ பாதாள இரயில்வே மின்சாரத் தால் இயங்குவது. அது அழகிற்கும் தூய்மைக்கும் விரைவிற்கும் உலகப் புகழ் பெற்றது. அதில் பல நிலையங்கள் உள்ளன. பாதாள இரயில் நிலையங்கள் தோற்றத்தில் ஒன்றைப்போல் மற்றொன்று இராது. ஒவ்வொன்றும் தனித்தனி பொலிவோடு விளங்கும் வகையில் திட்டமிட்டு அமைத்திருக்கிறார்கள்.

பயணக் கட்டணம் எப்படி?

பயணக் கட்டணம் தூரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படவில்லை. ஓர் நிலையத்தில் இரயில் ஏறி அடுத்த நிலையத்தில் இறங்கினாலும் சரி; இங்கு ஏறி, பத்தாவது நிலையத்தில் இறங்கினாலும் சரி; ஒரு கோடி யிலிருந்து அடுத்த கோடிக்குச் சென்று இறங்கினாலும் சரி; கட்டணம் ஒன்றே. கட்டணம் பெருந் தொகையா? இல்லை. ஐந்து கோபெக்ஸ் மட்டுமே கட்டணம். கோபெக்ஸ் என்பது எவ்வளவு? ஒரு ரூபுளுக்கு நூறு கோபெக்ஸ். ரூபுளுக்கு ஏழரை ரூபாய் என்பதை நினைத்துக்கொண்டு. கோபெக்ஸை காசாகக் கணக்குப் போடத் தொடங்குவது தவறு. அவர்கள் நாணயத்தில் ஐந்து காசுக்கு, மாஸ்கோவின் ஓர் கோடியிலிருந்து மற்றோர் கோடிக்கு, பாதாள இரயில் பயணம் செய்யலாம். அதுமட்டுமா? அதே, ஒரே கட்டணத்தில்,

புறப்பட்ட இடத்திற்கு திரும்பி வந்துவிடலாம். கதையல்ல; உண்மை. படியுங்கள்.

பாதாள இரயில்கள், அடுத்தடுத்து, இரண்டு மூன்று நிமிடங்களுக்கு, ஓர் முறை ஓடுகின்றன. பாதாள இரயிலில் ஓரிடத்தில் ஏறியவர், ஒவ்வொரு நிலையமாக இறங்கி வேடிக்கைப் பார்த்து விட்டு, அடுத்த இரயில் ஏறி, அடுத்த நிலையத்தில் இறங்கி வேடிக்கைப் பார்க்கலாம். நேரமிருந்தால், இப்படியே எல்லா நிலையத்தையும் பார்த்த பிறகு, கோடி நிலையத்தைவிட்டு வெளியே செல்லாமல், எதிர்பக்கம் செல்லும் இரயிலில் ஏறி உட்கார்ந்து ஒரே கட்டணத்தில் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி வந்துவிடலாம்.

பாதாள இரயில் தவிர, பேருந்து வண்டிகள் நிறைய. அவற்றிலும் எங்கிருந்து எங்கே சென்றாலும் ஒரே கட்டணமே. அது ஐந்து கோபெக்ஸ். ஆனால் வழியில் இறங்கிவிட்டு, வேறொரு வண்டியேறும்போது, மறுபடியும் காசு கொடுத்து புதுப் பயணச் சீட்டு வாங்க வேண்டும். மின்சாரப் பேருந்து வண்டிகளும் நிறைய ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் பயணஞ் செய்வதற்கும் 'ஒரே கட்டண' முறையே. இதற்கும் ஐந்து கோபெக்ஸ். அடுத்தடுத்து பேருந்து வண்டிகளும் மின்சாரப் பேருந்துகளும் பாதாள இரயில்களும் ஓடினாலும் சில வேளைகளில் நெரிசல் அதிகம். காத்துக் கிடப்போர் வரிசை நீளம். இவை போக, வாடகைக் கார்களும் எண்ணற்றன இப்படியும் அப்படியும் பறந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் கட்டணமோ பயணஞ் செய்யும் தூரத்தைப் பொறுத்தது. நான், முன்பு இரு முறை சோவியத் நாட்டிற்குச் சென்றபோது, வாடகைக் காரில் போகும் வாய்ப்புகள் ஏற்பட்டன. அப்போது,

நம் நாட்டோடு ஒப்பிட்டபோது, வாடகைக் கார் கட்டணம் அதிகமாகத் தோன்றவில்லை.

சோவியத் நாடு பொது உடைமை நாடாயிற்றே. அங்குள்ள மக்கள் சொந்தக் கார் வைத்திருக்கிறார்களா? வைத்திருக்கிறார்கள். குடிமகனோ, மகளோ தனக்கென்று கார் வைத்துக் கொள்ள இடம் கொடுக்கிறது. அந்நாட்டுச் சட்டம். வைத்துக் கொள்ள முடிகிறதா? ஆம். முடிகிறது.

சோவியத் நாட்டைப் பற்றி பலர், பலவிதமாக நினைக்கிறார்கள். சோவியத் மக்கள், எத்தகைய சொத்தும் வைத்துக் கொள்ளக்கூடாது; வைத்துக்கொள்ள முடியாதென்று, நம்மில் பலர் நினைக்கிறார்கள். அது உண்மையல்ல.

சோவியத் நாட்டவரின் சம்பளம் அவருக்குச் சொந்தம். அதில் அவர் மிச்சம் பிடிக்கலாம். அதைக் கொண்டு, அவர் தனக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்ளலாம். 'கார்' அனுமதிக்கப்பட்ட தனியுடைமை. வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிக் கருவி, நூல்கள், வீட்டுப் புழக்கத்துக்கான தட்டுமுட்டுகள், பாத்திரங்கள், மேசை நாற்காலிகள், கடிகாரங்கள், பேனாக்கள் ஆகியவை அனுமதிக்கப்பட்ட தனியுடைமைப் பட்டியலில் சேரும். நகைக் கடைகளில் ஏறத்தாழ ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நகையும் விற்பதைக் காணலாம். அந்நகைகளும் தனிச் சொத்து.

பணத்தை மிச்சப்படுத்தியவர், அதை வட்டிக்குக் கொடுத்து, சம்பாதிக்கக்கூடாது. அப்படிச் செய்வது குற்றம். அதேபோல் கார் வைத்திருப்பவர், ஓய்ந்த நேரங்

களில் அதை வாடகைக்குவிட்டு சம்பாதிக்கக்கூடாது அப்படிச் செய்வதும் குற்றம்.

தனக்குப் பின்னால், அச் சொத்துகள் என்னவாகும்? தன் மக்களுக்குச் சேருமா? நாட்டுக்குச் சேருமா?

சொத்துக்குரியவர், தன் தனி நபர் சொத்துக்களை, மக்களுக்கே கொடுக்க வேண்டுமென்பதில்லை, அவர் விருப்பப்படி, யாருக்கு வேண்டுமானாலும் உயில் எழுதி வைத்து விடலாம். அவ்வுயிலில் கண்டவர்களுக்கே, அச் சொத்து பிரித்துக் கொடுக்கப்படும். உயில் மூலம் நன்மை பெறுபவர், சோவியத் குடிமகனாகவோ மகளாகவோ இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அதாவது சோவியத் குடிமகன், இந்தியக் குடிமகனுக்கு, தன் சொத்தை உயில் எழுதி வைக்கலாம். அது செல்லுபடியாகும். அது நிறைவேற்றப்படும்.

தனி நபர், யாருக்கும் கொடுக்க விரும்பாததை, அரசுக்கு உயில் எழுதிக் கொடுத்து விடலாம். சிறந்த ஓவியர்கள், சிற்பிகள் ஆகியோர் தங்கள் உருப்படிகளை உயில் மூலம் அரசின் பொருட்காட்சி சாலைகளுக்கு வழங்கி விடுதல் மீண்டும் மீண்டும் நிகழும் நிகழ்ச்சியாகும்.

உயிலே எழுதி வைக்காதவருடைய சொந்த சொத்துகள், அவரது பையன்களுக்கும் பெண்களுக்கும் சமமாக உரியனவாகும். பையன், பெண்கள் மறைந்து, பேரன், பேத்திகள் இருந்தால். அவர்களுக்குச் சேரும். இப்படிப் பட்ட உறவினர்கள் இல்லாதபோது, அவரோடு நெடுநாள் வாழ்ந்தவருக்குச் சேரும்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தொன்றில் மாஸ்கோவில் எண்ணற்ற தனியார் கார்களைக் கண்டேன்.

ஏதோ சில இடங்களில் எப்போதோ சில வேளை மட்டுமே, கார் நிறுத்த இடமில்லாது தவிப்பவர்களைக் கண்டேன்.

ஆறு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் மாஸ்கோ சென்றபோது, இத்தகைய தவிப்பு சற்று மிகுந்திருப்பதைக் கண்டேன். காரணம்? தனியார் வைத்துள்ள கார்களின் எண்ணிக்கை வளர்ந்து விட்டது. இம் முறை பார்த்தபோது கார்களின் எண்ணிக்கை மேலும் பெருகியுள்ளது தெரிந்தது. பல வேளை பல இடங்களில் கார்களை நிறுத்த இடம் தேட வேண்டியதாயிற்று. அதாவது கார் வாங்கிக் கொள்ளும் நிதி நிலையில் உள்ள சோவியத் மக்கள், அதிகமாகியுள்ளார்கள் என்பதே பொருள்.

சோவியத் நாட்டில் கார் இறக்குமதி அருமை. அந்நாட்டிலேயே நான்கைந்து வகை கார்களும், பார வண்டிகளும், பேருந்து வண்டிகளும் உற்பத்திச் செய்கிறார்கள். அவை, 'லொட லொட' என்று ஆடுபவையல்ல; அழுத்தமானவை; உறுதியானவை; நன்றாக வேலை செய்பவை; விரைந்தோடும் ஆற்றல் உடையவை.

தனி நபர் கார்கள் மட்டுமா நம்பகமானவை? பார வண்டிகளும் பேருந்து வண்டிகளும் அப்படிப்பட்டவையே. வழியில் நின்று கிடக்கும் பாரவண்டியோ பேருந்தோ என் கண்ணில் தென்படவில்லையே. அவை சிறிய உருவினவல்லவே. கார் விஷயத்தில், இந்தியர்களை விட, சோவியத் மக்கள் நற்பேறு பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை.

மாஸ்கோ பற்றியும் சோவியத் மக்களைப் பற்றியும் இப்படிப்பட்ட பல செய்திகளைத் தெரிந்து கொண்டோம் மாஸ்கோவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கையில்.

வழியில் பல முறை ஆங்காங்கே எங்கள் கார் இரண்டொரு மணித் துளிகள் நின்றது. பேச்சை நிறுத்தி, சாலையைப் பார்ப்போம். சிகப்பு விளக்கு தென்படும். 'வழித்தடை வேறொன்றுமில்லையே' என்று கூறி விட்டு மீண்டும் பேசுவோம். எங்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை.

கடைசியாக, கார், ஓர் பெரிய கட்டடத்தண்டை நின்றது. மொழி பெயர்ப்பாளர், சட்டென்று இறங்கி, எங்கள் பக்கத்துக் கதவைத் திறந்தார். நாங்கள் ஒவ்வொருவரும் வரிசையாக இறங்கினோம். அப்போது பஞ்சு மழை பெய்து கொண்டிருந்தது. அதில் நனையாதபடி எங்கள் மூவரையும், சட்டென்று கட்டடத்திற்குள் அனுப்பினார்கள் சோவியத் நண்பர்கள்.



# 9

நாங்கள் நுழைந்த அக் கட்டடம், ஓர் பெரிய ஓட்டல். அதன் பெயர், ஓட்டல் சோவியத்ஸ்காயா. அது பல்லாண்டுகளாக இருக்கிற ஓட்டல்; புகழ் பெற்ற ஓட்டல். 'பெரியவர்'களையே அங்கே தங்க வைப்பார்களாம். பின்னர், அங்கு வந்து, என்னைக் கண்ட மாஸ்கோ வாழ் இந்திய நண்பர்கள் மூலம் இதைத் தெரிந்து கொண்டேன். எங்கள் தூதுக் குழுவிற்கு பெரு மதிப்புக் கொடுத்தார்கள் என்பது அதனால் விளங்கிற்று.

பணியகத்தில், பாஸ்போர்ட்டுகளைச் சேர்த்து விட்டோம். அறைகளின் சாவிகளைப் பெற்றுக் கொண்டோம். மூவருக்கும் தனித் தனி அறை. மூன்றாம் மாடியில் இருவருக்கு அறைகள் ஒதுக்கினார்கள். மற்றவருக்கு நான்காம் மாடியில் அறை. எல்லோரும் முதலில் மூன்றாம்

மாடிக்குச் சென்றோம். தானுயர்த்தியின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்ததும், ஓர் அம்மையார், எங்களை வரவேற்க வருவது போல் முன்னே வந்தார்.

மொழிபெயர்ப்பாளர் வ்லாடிமீர் எங்களை அவருக்கு அறிமுகப்படுத்தினார். அவர் எங்களிடம் வேலை வாங்க வந்தார். அந்த அம்மாள் யார்? மாஸ்கோ வானொலியின் பிரதிநிதி. அவருடைய பெயரைக் குறித்து வைக்க மறந்து விட்டேன்.

''வந்ததும் வராததுமாக உங்களைத் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். உங்கள் மூவரையும் பேட்டி கண்டு, உங்கள் கருத்துக்களைப் பதிவு செய்து கொண்டு போக வந்துள்ளேன். இன்று மாலை ஒலிபரப்பிலேயே, உங்கள் கருத்துரைகளைச் சேர்த்துவிட வேண்டுமென்னும் ஆர்வத்தால் இப்படித் தொந்தரவு செய்கிறேன். சோவியத் பயணம் முடிந்த பிறகும் கருத்துரைகளைக் கேட்போம். இப்போது உங்கள் கருத்துக்களைப் பதியலாமா?'' என்றார் அந்த அம்மாள்.

''ஆகட்டும். எல்லோரும், சந்தடியில்லாத ஓர் அறைக்குப் போவோம். அங்கே, மூவர் பேச்சுகளையும் பதிந்து கொள்ளுங்கள்'' என்று கூறினோம்.

எனக்கு ஒதுக்கப்பட்ட அறை, அருகில் இருந்தது. அங்கு சென்றோம்.

வானொலி அம்மாள், பதிவுப் பொறியை (டேப் ரிகார்டரை) மேசையின் மேல் வைத்தார். பதியும் நிலைக்கு அதைக் கொண்டு வந்தார். எங்கள் சோவியத் வருகை பற்றி சுருக்கமாக, ஐந்து நிமிடங்களுக்கு மேற்படாமல், பேசும்படி வேண்டினார்.

நான். முன்னர் இருமுறை அந்நாட்டுக்குச் சென்றவன். ஆகவே நான் முதலில் பேச வேண்டு

மென்பது தூதுக் குழுவின் முடிவு. முடிவை ஏற்றுக் கொண்டேன்.

"நான் சோவியத் நாட்டிற்குப் புதியவன் அல்லன். முன்னர் இருமுறை இங்கு வந்து, சோவியத் நாட்டைப் பற்றியும் கல்வி முறை பற்றியும் எவ்வளவோ தெரிந்து கொண்டு போயிருக்கிறேன்.

"சோவியத் மக்கள் நட்புக்கும் விருந்தோம்பலுக்கும் சிறந்தவர்கள் என்பதை இருமுறை நேரில் உணரும் வாய்ப்பைப் பெற்றவன். எனவே, மீண்டும் நண்பர்களிடையே வந்து, சில நாட்கள் தங்கிப் போக வாய்ப்பு கிடைத்ததைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.

"உலகத்தில், முதன் முதலாக, சமதர்ம, பாட்டாளிகளின் ஆட்சியை அமைத்த இந் நாடு, கல்விக்குச் சொர்க்க பூமி. இந்நாட்டில் எல்லா வயதினருக்கும் எல்லா தொழிலாளிகளுக்கும் வகை வகையான கல்வி வாய்ப்புகள் உள்ளன. இந்நாட்டுப் பாட்டாளிகளுக்கு, கல்வியின் பால் ஏற்பட்டிருக்கும் தீராத் தாகத்தையும் அவர்கள் வாய்ப்புகளை நல்லவண்ணம் பயன்படுத்திக் கொள்வதையும் கண்டு புளகாங்கிதம் அடைந்துள்ளேன். மாணவர்கள் மாணவர்களாகவே இருந்து, படித்து, படித்து மேலும் படித்து, சமதர்ம ஆட்சிக்குத் தொண்டாற்ற ஆயத்தஞ் செய்து கொள்வதே, இளைஞர்கள் ஆற்றும் நாட்டுத் தொண்டு, புரட்சித் தொண்டு என்று நெறிப்படுத்தியவர் உங்கள் சோவியத் நாட்டின் தந்தை மாமேதை லெனின் அவர்களே. கல்வியாளன் என்ற முறையில், இதற்காக நான், லெனின் அவர்களிடம் தனியாகப் பெருமதிப்பு கொண்டுள்ளேன்.

"சோவியத் ஆட்சி, பிறவகையான பொருளாதார சமூக அமைப்புள்ள நாடுகளோடும் மக்களோடும்

சகவாழ்வு வாழ்ந்து, அவர்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென்று வழிகாட்டியவர், மாவீரர் லெனின் ஆவார். சகவாழ்வு வழியைப் பின்பற்றி, இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு உதவி வரும் சோவியத் நாட்டோடு, எங்கள் நாடு அண்மையில் இருபதாண்டு கால உடன் படிக்கை செய்து கொண்டதை பெரிதும் வரவேற்கிறோம். இவ்வுடன்படிக்கை, நமக்கிடையே நட்பை வளர்ப்பதாக; கூட்டுறவைப் பெருக்குவதாக; அமைதிக்குத் துணை நிற்பதாக. வளர்க இந்தோ சோவியத் நட்பு. வாழ்க மானுடம்."

இக் கருத்துப்பட ஆங்கிலத்தில் உரையாற்றினேன். என் உரையைப் பதிவு செய்துகொண்டார். அடுத்து மற்ற இருவருடைய உரைகளைப் பதிந்து கொண்டார். அவர்களும் உடன்படிக்கையை ஆதரித்தும் விரும்பியும் உரையாற்றினார்கள். பின்னர் மூன்று பேச்சுகளையும் போட்டுக் காட்டினார். எங்கள் குரலை நாங்களே கேட்டோம். நன்றாகப் பதிவாகியுள்ளதாக உணர்ந்தோம். அவரும் அப்படியே கருதினார். அந்த அம்மாள் நன்றாக ஆங்கிலம் பேசினார்.

எங்களுக்கு நன்றி கூறிவிட்டு, பதிவுப் பொறிப் பெட்டியை மூடி எடுத்துக் கொண்டு, எங்களிடம் விடை பெற்றுச் சென்றார். அன்று மாலை என் பேச்சு ஒலிபரப் பப்பட்டதாக இந்திய நண்பர்கள் சொல்லக் கேட்டேன்.

எங்கள் வானொலியுரைகள் பதிவாகி முடியும் வேளை, எங்கள் பெட்டிகளும் வந்து சேர்ந்தன. அவ்வளவு சுறுசுறுப்பாக வேலை நடந்தது. உரிய அறைகளில் பெட்டிகளைக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

அந் நேரம், பிற்பகல் இரண்டரை மணி. விமானத் திலேயே உணவருந்தி விட்டு வந்ததால், பகல் உணவு தேவையில்லை என்று கூறிவிட்டோம்.

எங்கள் அறைகளுக்கே, காப்பியும், கேக்கும் அனுப்பப்பட்டன. அச் சிற்றுண்டிக்குப் பிறகு, சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளும்படியும், மாலை ஆறு மணிக்கு வந்து. இராச்சாப்பாட்டிற்கு அழைத்துச் செல்வதாகவும் கூறி விட்டு, சோவியத் நண்பர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள். போகும் போது அஞ்சல் உறைகளையும் தலைகளையும் கொடுத்து விட்டுச் சென்றூர்கள்.

பயண அலுப்புத் தீர ஒரு மணி நேரம் உறங்கினேன். பின்னர் எழுந்து, வெந்நீரில் தலை முழுகினேன்.

மேசையின் மேல் இருந்த மாஸ்கோ செய்தி என்ற வார இதழைப் படித்து பொழுதைப் போக்கினேன்.

அந்நாட்டில் பெரிய ஓட்டல்களில் ஒவ்வொரு அறையிலும் வானொலிப் பெட்டி உண்டு. தொலைக் காட்சிக் கருவி உண்டு. எதையாவது ஒன்றை இயக்கி விட்டு, பொழுது போக்குவது உண்டு.

அறை தோறும் தொலைபேசியும் உண்டு.

மாலை ஆறு மணிக்கு என் அறையிலிருந்த தொலைபேசி, மணியடித்தது. பேச்சுவாங்கியை எடுத்து காதில் வைத்தேன்.

''திரு. வேலு, இராச்சாப்பாட்டிற்கு மணியாயிற்று. காலதாமதம் செய்யாமல், உணவருந்தி விட்டால், ஏழு மணி, சர்க்கஸுக்கு அழைத்துப் போகிறேன். அதற்கான சீட்டுகளை வாங்கி வைத்திருக்கிறேன். போகலாமா? இரண்டாவது மாடியிலுள்ள உணவுச் சாலைக்கு நீங்களே வந்துவிடுகிறீர்களா? நானே, உங்கள் அறைக்கு வந்து அழைத்துப் போகவா?'' என்று வ்லாடீமீர் கேட்டார்.

நானே வந்துவிடுவதாகக் கூறினேன். அப்படியே அறையைப் பூட்டிக் கொண்டு குறிப்பிட்ட உணவுக்

கூடத்திற்குச் சென்றேன். அது சிறியதுமல்ல; பெரியதும் அல்ல; அடக்கமானது.

அங்கே, வ்லாடிமீரும், அலெக்ஸாண்டரும் மற்ற இந்திய நண்பர்கள் இருவரும் ஓர் மேசையைச் சுற்றி அமர்ந்திருந்தனர். அம் மேசையின்மேல், இந்தியாவின் கொடி வைக்கப்பட்டிருந்தது. வேறு மேசைகளைக் கவனித்தேன். வெவ்வேறு நாட்டுக் கொடிகள், நாலைந்து மேசைகளில் இருந்தன.

தூதுக் குழுக்கள் சாப்பிட வரும்போது, அவர்களுக்காக ஒதுக்கி வைக்கும் மேசையின் மேல் தூதுக் குழுவினரது நாட்டின் கொடியை வைப்பது அங்குள்ள வழக்கம்.

அப்போது, ஐந்தாறு நாடுகளின் தூதுக் குழுக்கள் அவ்வோட்டலில் தங்கியிருப்பதை ஊகித்துக் கொண்டோம்.

ஆறு மணிக்கு, இரவு சாட்பாடு என்பது நமக்கு வியப்பாக இருக்கும். மேனுடுகளில் இது சாதாரணம். அவ்வளவு சீக்கிரம் உண்டு விட்டு, நாடகம், நடனம், சர்க்கஸ் ஆகியவை பார்க்கப் போவது மேனுட்டு மக்களின் பழக்கம். கேளிக்கைகளைப் பார்த்துவிட்டு, வீட்டிற்கோ, ஓட்டலுக்கோ, திரும்பிய பிறகு, இலேசாகச் சிறிது சாப்பிட்டு விட்டு, உறங்கப் போவார்கள்.

அவர்கள் வழக்கப்படி, நாங்களும் ஆறு மணிக்கே சாப்பிட்டோம். பிறகு சர்க்கஸ் பார்க்கச் சென்றோம். அங்கு, கார்கள் நிற்குமிடத்திற்கும் சர்க்கஸ் நுழைவாயிலுக்கும் சற்று தூரம். அந்த தூரத்தை நடந்தே கடக்க வேண்டும். அன்றிரவு பனி பெய்து கொண்டே இருந்தது. தரையில் உறை பனி. அது எளிதாக சருக்கும். உறை பனியின் மேல் நடப்பதற்குப் பழக்கம் வேண்டும்.

எங்களுக்கு பழக்கம் இல்லே. ஆயினும் மூவரும், மெல்ல அடி எடுத்து வைத்து, சருக்கி விழாமல் சர்க்கஸ் பண்ணிக் கொண்டு சர்க்கஸிற்குள் போய்ச் சேர்ந்தோம்.

சர்க்கஸ் என்றதும் கூடாரம் நம் நினைவிற்கு வரும். கூடாரத்திற்குள் உட்காருவோம். குளிரைத் தாங்கிக் கொண்டு வேடிக்கைப் பார்ப்போம். மேலே விண்மீன்கள் எங்களைக் கண்டு நகைக்குமென்று எதிர்ப் பார்த்தேன். கண்டதோ வேறு. நிலேயான பெரிய மாடிக் கட்டடத்தில் சர்க்கஸ் நடந்தது. வெளியே எலும்பையும் ஊடுருவும் குளிர். உள்ளே குளிரே தெரியவில்லே. அக் கட்டடம் சர்க்கஸுக்கு ஏற்றுற்போல், பனி வாடை நுழையாதபடி கட்டப்பட்டதாம். தரையும் சுவரும் பளபளப்பாக அழகாக இருந்தன. உட்காரும் இருக்கைகள், மெத்தென இருந்தன.

இருக்கைகள், வட்டவடிவில் வரிசைக்குமேல் வரிசை யாக அமைக்கப்பட்டுள்ளன. எங்கிருந்து பார்த்தாலும் சர்க்கஸ் விளேயாட்டுகளே நன்ருகக் காணலாம். உயர இருக்கைகளில் இருப்போர், பைனுகுலர்களின் உதவியால் சர்க்கஸ் வேடிக்கைகளேத் தெளிவாகப் பார்த்து மகிழ் கிருர்கள்.

வ்லாடிமீர் எங்களுக்கான நுழைவுச் சீட்டுகளே முன்னரே வாங்கி வைத்திருந்தார். எனவே, சீட்டு வரிசையில் காத்திராமல் மளமளவென்று நுழைந்தோம். உரிய இடத்தைக் கண்டுபிடித்துக் காட்டினுர் வ்லாடிமீர். அவ்விடங்களில் அமர்ந்து காட்சிகளேக் கண்டு மகிழ்ந் தோம்.

யானே, குதிரை, புலி, கரடி, சிலவேளே சிங்கமும் நம் சர்க்கஸ்களில் காணலாம். மாஸ்கோ சர்க்கஸிலும் அவற்றை எதிர்ப்பார்த்தேன். குதிரைகள், விளேயாட்டு

களில் பங்கு கொண்டன. புலியோ கரடியோ வரவில்லை. சிங்கமோ, யானையோ, தலை நீட்டவில்லை. சில மிருகங்கள் விளையாடின. மக்களை மகிழ்வித்தன.

சர்க்கஸ் வித்தைக்காரர்கள், மிக கெட்டிக்காரர்கள். மயிர்கூச்செரியும் விளையாட்டுகளைச்செய்து காட்டினார்கள். ஒவ்வொரு விளையாட்டும் முடிந்ததும் வித்தைக்காரர்கள் ஓடி விடுவார்கள். ரசிகப் பெருமக்கள், கை தட்டி ஒலி எழுப்புவார்கள். அப்போது, வித்தைக்காரர்கள், அரங்கத்திற்கு திரும்பி வர வேண்டும்; வந்து, மக்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்து விட்டு, ஓடிப் போவார்கள். சில வித்தைகளைப் பார்த்தபோது, இருமுறை மூன்று முறைகூட, கைதட்டிப் பாராட்டினோம். அத்தனை முறையும், வித்தைக்காரர்கள் எங்கள் முன் தோன்றி, எங்கள் பாராட்டை, ஏற்றுக் கொண்டார்கள்.

நம் நாட்டில், யாரோ ஒரு முதலாளி, துணிந்து, முதல் போட்டு, ஆண்களையும் பெண்களையும், சிறு வயதிலேயே தேடிப் பிடித்து, சர்க்கஸில் சேர்த்து, பயிற்சி கொடுத்து, தன் காலட்சேபத்தை, நடத்துகிறார். ஒவ்வொரு நகரில் கூடாரம் அடிக்கும்போதும் அங்குள்ள நகராட்சித்தலைவர், ஆணையர், பெரிய புள்ளிகள் ஆகியவர்களுக்கு, இலவச நுழைவுச் சீட்டு, சில வேளை குடும்பம் முழுவதற்குமே இலவச நுழைவுச் சீட்டு—கொடுத்து சரி கட்டிக் கொண்டால்தான், பிழைப்பு நடக்கும். சோவியத் நாட்டில் அப்படியல்ல. சர்க்கஸ் முதலாளி, மக்களே; அவர்கள் சார்பில், சோவியத் அரசே, சர்க்கஸ்களை நடத்துகிறது. எனவே சர்க்கஸ்களை நடத்துவோர், யாரையும் சரிகட்டிக் கொள்ளத் தேவையில்லை. அதற்கான சிந்தனை தேவையில்லை. அவர் அவருக்குரிய வேலையை அவரவர் சீராகவும் சிறப்பாகவும் செய்வதிலேயே, சிந்தை முழுவதும் வேலை

செய்கிறது. 'ஓசி' சீட்டு சங்கதியும் கிடையாது. ஓசி சீட்டு கொடாததால் வரும் கசப்பும் கிடையாது.

அந் நாட்டில் சர்க்கஸ் பள்ளிக் கூடங்களும் உள்ளன. அங்கே சரியான பயிற்சி கொடுக்கிறார்கள். சர்க்கஸில் சேர்ந்த பிறகும் கடுமையான பயிற்சி உண்டு.

பயிற்சியின் பலன்களை உற்று நோக்கி ஆய்ந்து, முறைகளை மாற்றி, மேலும் பலன் பெறுவதற்கு வழி வகைகள் செய்துள்ளார்கள். சர்க்கஸ் துறையில் பட்டு மல்ல; எல்லா துறைகளிலும் பயிற்சிக்கும், பயிற்சியைப் பற்றிய பலன் ஆய்வுக்கும் முறையான ஏற்பாடுகள் உள்ளன. ஆகவே, எல்லாத் துறைகளிலும், அவர்கள் தர உயர்வு பெற முடிகிறது.

சர்க்கஸ் வேடிக்கைகளை நடத்தி மகிழ்வித்தவர்களில் ஆண்களும் இருந்தார்கள்; பெண்களும் இருந்தார்கள். எல்லோரும் திறமையாக ஆடினார்கள். சப்பென்றிருந்த நிகழ்ச்சி ஒன்றுகூட இல்லை. கோமாளிகள், இருவர் வழக்கம்போல், இடையிடையே வந்து, ஆடினார்கள். பார்ப்பதற்குக் கோமாளிகளாக, கோமாளி உடையில் வந்தாலும், அவர்களும் பல வித்தைகளில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் என்பதைக் காட்டாமல் போகவில்லை.

சர்க்கஸ் ஆட்டத்தின், ஒவ்வோர் நிகழ்ச்சியின்போது, ஒவ்வோர் வகை வெளிச்சம் போட்டார்கள். சில வேளை ஒரே ஒளிமயமாக இருக்கும். சில வேளை, மங்கிய நிலவிலே காண்பது போன்ற, ஒளிநிலையை உருவாக்குவார்கள். இப்படியே வண்ணங்களும் நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி மாறுபடுவதுண்டு. வேண்டியபோது, வேண்டிய ஒளி நிலைகளையும் வண்ணங்களையும் போடுவதற்கு ஏற்றாற்போல் ஒளி அமைப்பு

ஏராளம். அவற்றை இயக்குவதில் சிறிதும் தாமதம் கிடையாது. காற்றிலும் விரைவாக இயக்கினார்கள்.

இடைவேளையின்போது, அநேகமாக எல்லோரும் வெளித் தாழ்வாரங்களுக்கு வந்து விட்டோம். தாழ்வாரங் களில், காப்பி, தேனீர் விற்றன. குளிர்பானங்கள் கிடைத்தன. ஐஸ்கிரீம் விற்பனையே அதிகம். சிகரெட் விற்பனையும் உண்டு. தாழ்வாரங்களில் புகை பிடிக்கலாம். ஆனால் உள்ளே புகை பிடிக்கக் கூடாது. இது சட்டம் மட்டுமல்ல; நடை முறையும்.

சோவியத் நாட்டில் நவம்பர் மாதத்தில் மட்டுமல்லாது, அதிலும் கடுமையான குளிர் காலத்திலும், பெரியவர் களும் தாராளமாக ஐஸ்கிரீம் சாப்பிடுகிறார்கள். இதிலே தனி விருப்பம் அவர்களுக்கு. ஐஸ்கிரீம் வெறும் தின்பண்ட மல்ல; சத்துள்ள உணவு. எங்கே? இங்கேயல்ல; அங்கே.

இடைவேளையில் நாங்களும் தாழ்வாரத்திற்கு வந்தோம்.

என்ன வேண்டுமென்று கேட்டார் வ்லாடிமீர்.

ஒன்றும் வேண்டாமென்றோம். 'காப்பி அல்லது தேனீர் குடிக்கலாமே' என்றார். வெட்கப்பட்டுக்கொண்டு மறுத்துவிட்டோம்.

விரைந்து சென்றார்; நான்கு 'ஐஸ்கிரீம்'களோடு திரும்பி வந்தார், வ்லாடிமீர். ஆளுக்கொன்று கொடுத் தார். மறுக்க முடியவில்லை. வாங்கிக் கொண்டேன். வாயில் வைத்தேன். பல்லைக் கூசிற்று. சில வினாடிகள் பொறுத்தேன். மீண்டும் உண்ணப் பார்த்தேன், ஊசி போட்டு குத்துவதுபோல் இருந்தது. உண்ணாமல் போட்டுவிட்டால் வ்லாடிமீர் மனம் நோகுமோ என்ற அச்சம் உலுக்கிற்று. தவியாகத் தவித்து, கடலையளவே ஒவ்வொரு முறையும் உண்டு, தீர்த்துவிட்டேன். நான்

இந்த அருஞ்செயலைச் செய்து முடிக்கவும், சர்க்கஸ் மணியடிக்கவும் சரியாக இருந்தது. விரைந்து உள்ளே சென்று அமர்ந்தோம்.

பின் பாதியில் நடந்த சிறந்த ஆட்டமொன்றை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

சரிவான பலகையொன்று அரங்கத்தின் தரையிலே வைக்கப்பட்டிருந்தது. அது தாவும் பலகை. அதன் அருகே, இருவர் நின்றுகொண்டிருந்தனர்.

அரும்பு மீசை இளைஞன் ஒருவன், ஓடிவந்து. தாவும் பலகையின்மேல் சில அடிகள் ஓடி, ஏறிக் குதித்து, அருகிலிருந்த இருவர் தோள்களின்மேல் நின்றான்.

அதற்குமேல், கம்பிகளில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த, மரப் பலகையின்மேல், வேறொருவர் நின்றுகொண்டிருந்தார்.

இளைஞன், தோழர்களின் தோள் மேலிருந்து எகிறினான். உயரத் தாவி மேலே தொங்கிக் கொண்டிருப்பவர்களின் தோள்களில் கால்களைச் சரியாக ஊன்றி நின்றான். மரப்பலகையைத் தாங்கும் கம்பியை, சிலர் கெட்டியாக இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தனர்.

இளைஞர், பலகைமேல் இருப்பவரின் தோளின்மேல் நின்றதும், கம்பிக் கயிற்றில் இணைத்துள்ள இரும்பு வளையமொன்றை, அவனிடம் வீசி எறிந்தனர். அவன் அதை எட்டிப் பிடித்து, இடுப்புக் கச்சையில் செருகிக் கொண்டான்.

இதற்கு மேலே நாற்காலியொன்று கம்பியில் தொங்கிக் கொண்டிருந்தது.

விசில் அடிக்கப்பட்டது. பலகைக்காரர், எட்டிப் பிடிப்பவர்போல் குதித்து உயர்ந்தார். அவர் தோளின்

மேல் இருந்த இளைஞர், தானும் முயன்று, குதித்து உயர்ந்தான். உயரத் தொங்கிக் கொண்டிருந்த நாற்காலியில் உட்கார முயன்றான். குறி தவறிவிட்டது. தொங்கும் இளைஞன் காலரிகளின் பக்கம் எறியப்பட்டான். அவையோர் கலங்கினர்.

அந்த உயரத்தில் இருந்து வீழ்ந்தால், எலும்புத் துண்டுகளையே எண்ணிக் கொள்ளவேண்டும். அவன் அவையோர்மேல், வந்து வீழ்ந்தாலும் பலருக்குத் தீங்கு.

ஒரு இமைப் பொழுதே கலக்கம். இளைஞனின் இடுப்பிலிருந்த வளையக் கம்பியைப் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் சட்டென்று, அவனை உச்சிக்கு இழுத்தார்கள். அதே நொடியில் விழிப்பாக இழுப்பைத் தளர்த்தினார்கள். அவன் பொத்தென்று தரைக்கு வந்தான். அவன் முகத்தில், சிரிப்பு இல்லை. கலக்கம் இல்லை; கவலை இல்லை, வெட்கமும் இல்லை. வைராக்கியம் ஒளிவிட்டது. மீண்டும் தவறிய வித்தையைச் செய்து காட்ட அனுமதி கேட்டான். சர்க்கஸ் நிர்வாகி ஒப்புக் கொண்டார்.

பலகைத் தாவல் வெற்றியாயிற்று. முதல் தோள் தாவலும் வெற்றி. வளையம் வந்தது. வளையத்தைக் கையில் வைத்துக்கொண்டு, அதை மாட்டிக் கொள்ளாமல், குதித்து உயரத் தன்னை விட்டுவிடும்படி கெஞ்சினான் இளைஞன். அவையோர் முன்பே கெஞ்சினான்.

இளைஞர் உயிருக்கு ஆபத்தானால் என்ன செய்வது என்று அஞ்சினார் போலும். நிர்வாகியும் திரும்பிக் கெஞ்சினார். மாட்டிக் கொள்ளும்படி கெஞ்சினார். இளைஞர் கெஞ்ச, நிர்வாகி கெஞ்ச இரண்டு நிமிடங்கள் ஓடிவிட்டன. கடைசியில் இளைஞர் விருப்பம் நிறைவேறிற்று. அவன் தோளின்மேலிருந்து, உயரக் குதித்தான்.

...PUBLIC LIBRAR...

நாற்காலியில் பொருத்தமாக உட்கார்ந்தான். அதற்கே அன்று, அதிக கைதட்டல். நாற்காலி, கம்பியால் கீழே இறக்கப்பட்டது. அவனும் அதோடு இறங்கினான். வெற்றிப் பெருமிதம் ஒளிவிட்டது. கையொலியும் பல முறை பாராட்டிற்று.

சருக்கிவிட்டபோது கவலையோ கலக்கமோ கொள்வதில் பயனில்லை. வெட்கமோ வேதனையோ படுவது துணை செய்யாது. உறுதியைப் பெற்று, துணிந்து விரைந்து செயல்படுவதே வெற்றிக்கு வழி. இச் சிந்தனைகள் என்னை ஆட்கொண்டன.

சிந்தனை உலகில் மூழ்கியிருந்த என்னை, 'வேலு புறப்படலாம்' என்று திரு. யாதவ் அழைக்கவும் யதார்த்த உலகிற்கு வந்தேன்.



# 10

முதல் இரவு; எங்கள் முதல் இரவு; மாஸ்கோவில் சர்க்கஸ்காரர்கள்போல் உறைபனிமேல் நடந்து சென்று, பார்ப்பதில் தொடங்கிற்று.

சர்க்கஸ் முடிந்ததும், தெருவிற்கு வந்தோம். வானிலையில் மாற்றமில்லை. மஞ்சு பெய்து கொண்டிருந்தது. குளிர்காற்று சீறிற்று. தரையில் உறைபனி. மீண்டும் தத்தளித்து, அதன்மேல் நடந்து சென்றோம். தலைக்குக் குல்லாயும் உடம்பிற்குப் பேரங்கியும் அணிந்திருந்ததால், விறைத்துப் போகாமல் தப்பினோம். எங்கள் காரை அடைந்தோம். காரோட்டி, பணிவோடு, கதவைத் திறந்தார். சட்டென்று உள்ளே நுழைந்து கொண்டோம்.

"இப்போது, ஓட்டலுக்குத் திரும்பலாமா? வேறு எங்காவது போகவேண்டுமா?" என்று கேட்டார், தோழர் வ்லாடிமீர்.

''எங்கே போகலாம்? அதை உள்ளூர்க்காரர்களாகிய நீங்களே சொல்லவேண்டும்'' என்றோம்.

''வேறு காட்சிகளுக்குப் போக நேரமாகிவிட்டது, இசைக் கச்சேரியும் சரி; நாடகமும் சரி; நடனமும் சரி; இப்போது முடியும் தறுவாயில் இருக்கும். ஆகவே, ஆடல் பாடல்களுக்கு அகாலமாகிவிட்டது. உங்களுக்கு அலுப் பாக இல்லையென்றால், நேரே ஓட்டலுக்குப் போவதற்குப் பதில், ஓரளவு மாஸ்கோவைச் சுற்றிக் காட்டிய பிறகு, ஓட்டலுக்குக் கொண்டு போய் விடட்டுமா?''

இப்படி வ்லாடிமீர் கேட்கவும் எங்களுக்கு பூரிப்பு. இரவில் மாஸ்கோவைக் காண விரும்பினோம். இசைந்தார் வ்லாடிமீர்.

மாஸ்கோ நகர நெடுஞ்சாலைகளின் மேல் பறந்து சென்றது, கார். தெருவெல்லாம் மின்னொளி. போதிய வெளிச்சம் இல்லாத தெருவே காணோம்.

அப்போது, இரவு பத்து மணிக்கு மேல், பனியோ கொட்டுகிறது. ஆயினும் மக்கள் நடமாட்டத்தைக் கண்டோம். மக்கள் அனைவரும், ஒழுங்காக, நடை பாதையின் மேல் சென்று கொண்டிருந்தார்கள். நடை பாதைகளில் நடக்க முடியாதபடி, தடைகளைக் கடைகளைக் கண்டு பழகியவன் நான்; நீங்களுமே. சோவியத் நாட்டின் நடைபாதைகள், கடைகள் வைத்துக் கொள்ள அல்ல; மக்கள் நடப்பதற்கே; விரைந்து நடப்பதற்கே; இடை யூறின்றி, அவரவர் பாட்டில் நடப்பதற்கே.

சாலையின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற் குப்போவோர், எப்படிக் கடந்து செல்கிறார்கள் என்பதை வழி நெடுகிலும் உற்றுப் பார்த்துக் கொண்டே சென்றேன். கண்டது என்ன? முன்னிரு முறை கண்டதே.

நெடுஞ்சாலையைக் கடப்பதற்கென்று, ஆங்காங்கே கோடிட்டுக் காட்டியுள்ளார்கள்.

சென்னையிலும் சில இடங்களில் அப்படி உண்டு. நம் ஊரில் அவ்விடங்களில் காவல் துறையினர் ஒருவர் இருந்து முறைப்படுத்தி அனுப்ப வேண்டும். இல்லாத போது, மக்கள், சட்டென்று, குறுக்கே பாய்ந்து விடுவார்கள்.

இப்படிப்பட்ட சிக்கல்களை மாஸ்கோவிலோ, பிற சோவியத் நகரங்களிலோ காணவில்லை. கண்ட இடத்தில் சாலையின் குறுக்கே, கடப்பதில் நமக்கிருக்கும் உரிமை அவர்களுக்கில்லை. கோடிட்ட இடங்களில் மட்டுமே சாலையைக் கடக்கப் பழகிக் கொண்டுள்ளார்கள் சோவியத் மக்கள். அவ்விடங்களில் அநேகமாக, 'நில்' 'செல்' என்று ஆணையிடும் மின் விளக்குகள் இருக்கும். அவ்விளக்குகள் 'செல்' என்று ஒளிவிடும் போதே, சாலையைக் கடப்பார்கள்.

இரவு நேரத்திலும், மயக்கத்தாலோ, பனிக்கு அஞ்சி ஓடுவதாலோ, கடக்கக் கூடாத இடத்தில் கடந்து ஓடுவோரைக் காணும் நற்பேறு எனக்குக் கிட்டவில்லை.

சாலையின் இருமருங்கிலும் போவோர், வருவோரை வேடிக்கைப் பார்த்துக் கொண்டே, இரு திக்கிலும் ஓடும் வாகனங்களைக் கவனித்தேன். பெருஞ் சாலைகளில் ஒவ்வொரு பக்கமும், மூன்று வண்டிகள் ஓடலாம். பல தெருக்கள் பக்கத்திற்கு இரு வண்டிகள் ஓடத் தகுதியுள்ளவை. பக்கத்திற்கு ஓர் வண்டி மட்டுமே ஓடக் கூடிய குறுகிய தெருக்கள் இல்லாமல் இல்லை. மாஸ்கோ பழைய நகரமாயிற்றே!

பெருஞ்சாலைகளில் ஒவ்வோர் பக்கமும் மூன்று வண்டிகள் ஓடுவதற்கு, கோடிட்ட பாதைகள் உள்ளன. ஒரு தடத்திலிருந்து, மற்றோர் தடத்திற்கு, சட்டென்று,

மாறி, முட்டிக் கொண்ட வண்டிகள், மூன்று பயணங்களின் போதும் என் கண்ணில் படவில்லை. "யார் அப்பன் வீட்டுச் சொத்து, சாலைத் தடம்" என்று நடுத் தெருவில் நின்று வழக்காடும் வல்லவர்களையும் அந்நாட்டில் நான் காண முடியாமற் போயிற்று.

தடம் மாறும்போது, முன் கூட்டியே போதிய அளவு மின் விளக்கைச் சிமிட்டிக் காட்டிய பிறகே, மாற்றி ஓட்டுவார்கள் வண்டியை. போக்குவரத்து அடையாள ஆணையை மீறிப் பறந்து சென்று, யார் மேலாவது மோதியதையும் பார்க்கவில்லை நாங்கள்.

நடப்போரும் ஓட்டுவோரும் எவ்வளவு ஒழுங்காக, நடந்து கொள்கிறார்கள்! சாலை விதிகளை செயல்படுத்துவதில் தாட்சண்யம் காட்டாமல், கண்டிப்பாக இருப்பதால் இவ்வளவு ஒழுங்கு வந்துள்ளது. பொதுமக்கள் நமக்கு வாக்களித்து நம்மைப் பெரியவர்களாக்குவோர் ஆயிற்றே என்று தாட்சணியப்பட்டால் ஒழுங்கு வளராது. தாட்சணியம் உயிர்களுக்கு ஆபத்து. சோவியத் மக்கள் மற்றவர்களுக்கு இடையூறின்றி நடந்து கொள்கிறார்கள்; இதுவன்றோ நாகரீகம். இப்படி வியந்து கொண்டிருக்கையில், எங்கள் மோட்டார் கார், ஓர் மேட்டின் மேல் ஏறுவதை உணர்ந்தோம்.

"அதோ; எதிரில் தெரிகிறதே, பெரிய கட்டடம்! அதுவே மாஸ்கோ பல்கலைக் கழகம். இப்போது நாம் ஏறும் இக் குன்றிற்குப் பெயர், லெனின் குன்று. ஏழு குன்றுகளின் மேல் அமைக்கப்பட்டது மாஸ்கோ நகரம், அந்த ஏழு குன்றுகளில் ஒன்றே, லெனின் குன்று. வ்லாடிமீரின் விளக்கம் முடிவதற்குள் குறுக்கிட்டேன்.

"இப் பல்கலைக் கழகத்திற்கு, லெனின் பெயரை வைத்திருக்கிறார்களா?" என்று கேட்டேன்.

"இல்லை. இக் குன்றிற்கு மட்டுமே லெனின் பெயரை இட்டிருக்கிறார்கள். மாஸ்கோ பல்கலைக் கழகத்திற்கு, மைக்கேல் லொமனசோவ் என்பவர் பெயரை வைத்திருக்கிறார்கள்." இது பதில்.

"அப்படியொரு பெரிய அரசியல் புள்ளியைப் பற்றி நான் கேள்விப் பட்டதில்லையே." என் உரை.

"அவர் அரசியல் புள்ளியல்ல; அறிவியல் மேதை. பதினெட்டாம் நூற்றாண்டில், உலகப் புகழ் பெற்று விளங்கிய அறிவியல் மேதை. அவரே மாஸ்கோ பல்கலைக் கழகத்தை அமைத்துக் கொடுத்தவர்" என்றார் வ்லாடிமீர்.

மாஸ்கோ பல்கலைக் கழகத்தை நிறுவிய மைக்கேல் லொமனசோவ் அறிஞர் மட்டுமா? இல்லை. சாதனையாளருமாவார். அவருடைய பிறப்பும் வளர்ப்பும் வாழ்க்கையும் சுவையானவை.

லொமனசோவ், மன்னர் மரபினரல்லர்! நிலப் பிரபுக்கள் குலத்திலும் பிறக்கவில்லை. செல்வர் வீட்டிலாவது பிறந்தாரா? இல்லை. மாநகரத்திலாவது பிறந்தாரா? அதுவும் இல்லை. பின் எங்கே பிறந்தார்? யார் வீட்டில் பிறந்தார்?

ஆர்க் ஏஞ்சல் என்ற நகரத்திற்கு அருகிலுள்ள டெனிசூகா என்ற பட்டிக்காட்டில் பிறந்தார். அங்கேயும் ஏழை வீட்டில் பிறந்தார். இதோடு நின்றதா அவர் செய்த பிழை. இல்லை. போயும் போயும் ஒரு மீனவர் குடும்பத்தில் பிறந்தார். அக்கால இரஷ்யாவில் மீனவர்கள் ஒதுக்கப்பட்டவர்கள்; கல்விக் கூடங்களிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள்; அக்கால இரஷ்யக் கல்வியைப் பொருத்த மட்டில், அங்கு ஒருவகையான 'சாதி' வேற்றுமை நடைமுறையில் இருந்தது. அரச குடும்பங்கள், அதிகாரிகளின் குடும்பங்கள், பிரபுக்கள்

குடும்பங்கள், நிலச்சுவான்தார்களின் குடும்பங்கள் ஆகிய வையே, கல்வி பெற உரிமை பெற்றவை.

ஏழை மீனவச் சிறுவனாகிய மைக்கேல், படிக்கக் கூடாத இனம். எனவே மைக்கேல் பத்து வயது வரை குலத் தொழிலையே கற்று வந்தான். வீட்டிலிருந்தபடியே, ஆயினும் எப்படியோ, எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டான். வயதாகியும் படிப்பில் ஆர்வம் சிறிதும் குறையவில்லை. ஆர்க் ஏஞ்சல் பள்ளியில் சேர முயன்றான். குலம் குறுக்கே நின்றது. தன்னை யாரென்று அடையாளம் கண்டு கொள்ள முடியாத பெரு நகருக்குச் சென்று படிக்க முடிவு செய்தான். தொலைவிலுள்ள மாஸ்கோ நகருக்கு நடந்தே சென்றான் ஏழை லொமனசோவ். தான் சிறு நிலச்சுவான்தாரரின் மகன் என்று நம்ப வைத்தான். நம் நாட்டில், சாதிச் சீட்டை பொய்யாகப் பெற்று, சம்பளச் சலுகை பெறுகிறார்கள், அல்லவா? அதைப் போல், படிக்க உரிமையுடைய சாதியாக நடித்து, ஏமாற்றி, மாஸ்கோ கல்விக்கூடமொன்றில் சேர்ந்து கொண்டான் மைக்கேல். பள்ளியில் இடம் பெற்றுவிட்டதில் அவனுக்கு மகிழ்ச்சி; சாப்பாட்டிற்கோ திண்டாட்டம். நாளைக்கு ஐந்து காசைக் கொண்டு வாழ்ந்தாக வேண்டும். எப்படியோ சமாளித்தான்! கல்வியே கண்ணாயின மைக்கேல், மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, ஆர்வத்தோடு படித்தான். ஐந்தாண்டு காலம் துன்பப் பட்டு படித்து, சிறந்த மாணவனாகத் தேறினான்.

ஏழை என்பதற்காக மைக்கேலை கேலி செய்தார்கள், வகுப்பு மாணவர்கள். இப்படிச் செய்தது எப்போதோ ஓர் முறையல்ல. நாள்தோறும் கேலிக் கணைகள். ஏளனச் சொற்களைக் காற்றிலே விட்டு விட்டான் மைக்கேல். அப்போதைக்கப்போது, மாணவர்களோடு மானக் கணக்குத் தீர்த்துக் கொள்ளும் பாழ் முயற்சியில் இறங்க

வில்லை மைக்கேல். அவர்கள் மேல் சினந்து, தன் சிந்தனையைச் சிதற அடிக்கவில்லை. ஒருமனப்பட்டு கற்றதால், சிறந்த மாணவனாகத் தேறினான் மைக்கேல். மேல் படிப்பிற்கு இடமும் பணவுதவியும் கிடைத்தன. முந்திய ஆர்வத்தோடு கற்றார். மளமளவென்று தேறினார். பல துறைகளிலும் தேறினார். அறிவியல் துறை மேதையானார். புகழ் பரவிற்று. பக்கத்து நாடுகளுக்கெல்லாம் பரவிற்று லொமனசோவின் புகழ்.

பெரும் புகழ், அவரைக் கெடுக்கவில்லை. விண் முட்டப் புகழ் பெற்றபோதும், மண்ணில் வாழும் மக்களை மறக்கவில்லை. ஏழை மக்கள் அறியாமைப் படுகுழியில் வீழ்ந்து கிடப்பதைப் பற்றி எண்ணினார், அதற்கு மாற்று காண விழைந்தார். முயற்சியில் முனைந்தார். அறிஞர்களைக் கலந்தார்; திட்டமிட்டார். அறிஞர்களின் துணையைப் பெற்றதோடு, அரசியல் ஆதரவையும் தேடினார். அதுவும் கிடைத்தது. அப்போதைய ஆட்சி பல்கலைக்கழகம் நிறுவுவதை ஆதரித்தது. மைக்கேல் லொமனசோவின் கனவு நனவாயிற்று. மாஸ்கோ பல்கலைக்கழகம் தோன்றிற்று.

ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்தைந்தாம் ஆண்டில், அறிவியல் மேதை, மைக்கேல் லொமனசோவினால் ஏற்படுத்தப்பட்டது மாஸ்கோ பல்கலைக்கழகம். அது தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது. இன்று, உலகப் புகழ் பெற்ற, பெரிய பல்கலைக்கழகமாக விளங்குகிறது. அது முதலில் அமைக்கப்பட்டது, இப்போதுள்ள இடத்தில் அல்ல. தொடங்கியது மாஸ்கோ நகரின் நடுவில். அங்கே இடநெருக்கடி ஏற்பட்டதால், லெனின் குன்றின் மேல் இப்போதுள்ள மாஸ்கோ பல்கலைக் கழகம் கட்டப்பட்டது.

அக் கட்டடத்தின் உச்சியை அண்ணாந்து பார்த்தால், நம் கழுத்து சுளுக்கிக் கொள்ளலாம். அவ்வளவு உயரம் அது. சும்மாவா; முப்பத்திரண்டு மாடிக் கட்டடமாயிற்றே அது; ஆம், கட்டடத்தின் நடுப்பகுதி முப்பத்திரண்டு மாடிகளாக உயர்ந்துள்ளது. தோள்கள் இரண்டும், பதினெட்டு மாடிகளாக நிற்கின்றன. வானளாவ உயர்ந்துள்ளதைப் போல், மாஸ்கோ பல்கலைக்கழகம் விரிந்து பரந்து உள்ளது. அது எவ்வளவு இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது தெரியுமா?

மாஸ்கோ பல்கலைக் கழகத்தின் புதிய கட்டடம் - லெனின் குன்றின் மேல் உள்ள கட்டடம் நூற்று அறுபது ஹெக்டார் பரப்புள்ளது. ஹெக்டார் என்பது 2-471 ஏக்கர் கொண்டதாகும். அதாவது பல்கலைக்கழக பரப்பளவு ஏறத்தாழ நானூறு ஏக்கர்கள் ஆகும். நகரத்தின் நடுவே உள்ள கட்டடங்களும் பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படுகிறது.

பரந்து உயர்ந்துள்ள பல்கலைக்கழகத்தில் எத்தனை அறைகள் உள்ளன?

முந்திய முறை நாள் முழுவதும், பகல் நேரத்தில், மாஸ்கோ பல்கலைக் கழகத்தைச் சுற்றிப் பார்த்த போது, மேற்படி கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

பதிலும் கேள்வியாக இருந்தது.

''ஒருவர், இக் கட்டடத்தில், ஒவ்வொரு அறையிலும் ஒரு நாள் தங்குவதென்று வைத்துக் கொண்டால் அத்தனை அறைகளிலும் தங்கிப் போக அறுபது ஆண்டு பிடிக்கும். இதைக் கொண்டு கணக்கிடுங்கள், உள்ள அறைகளை.'' இப் பதிலைக் கேட்டதும் மனக் கணக்கில் ஈடுபட்டேன்.

இருபத்தோராயிரத்து தொள்ளாயிரத்துப் பதினைந்து அறைகள் இருக்குமென்றேன். ஆம். அறைகள் அத்தனை! அவற்றில் ஆறாயிரம் அறைகள் மாணவர்களின் உறையுளாகும். மாணவர்கள் தங்கியிருக்க இத்தனை அறைகள் என்றால், அவர்கள் எண்ணிக்கை ஏராளமாக இருக்குமென்று எதிர்ப் பார்க்கிறீர்களா? அதுவும் சரி. மொத்தம் முப்பத்திரெண்டாயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். இவர்கள் அந்நாட்டின் அறுபது தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களாம்.

இத்தனை பேர்களுக்கான நூல் நிலையம் எத்தனை பெரியதாக இருக்குமோ? மிகப் பெரியது, அந்நூல் நிலையம். அந் நூலகத்திலுள்ள, நூல்கள், சஞ்சிகைகளின் கட்டுகள், செய்தி இதழ்களின் கட்டுகள் ஆகிய அனைத்தையும் எண்ணினால், அறுபத்தைந்து இலட்சமாகும். அடேயப்பா; எத்தனை நூல்களின் சேகரிப்பு!

இத்தனை நூல்கள் பெருமைக்காகவா? பயனுக்காகவா? பெருமைக்கல்ல; பயனுக்காகவே, பெரிய பெரிய நூல் நிலையங்களை வைத்திருக்கிறார்கள், சோவியத் நாட்டில்.

சென்ற முறை மாஸ்கோ பல்கலைக்கழக நூலகத்திற்குள் நுழைந்து பார்த்தேன். காலியாக இருந்த இடங்கள் சிலவே. திங்கள் தோறும் வெளி வரும் அறிவியல், பொருளியல், அரசியல் சஞ்சிகைகளுக்கு நல்ல கிராக்கி. அந்நாட்டு மாணவர்கள் பாடநூல்களோடு முடங்கி விடாமல், முந்திய மாதம் வெளியான அறிவியல் உண்மைகளைக் கூடத் தெரிந்து கொள்வதால், அம் மாணவர்கள் தரமானவர்களாகவும் முன்னோடிகளாகவும் விளங்குகிறார்கள். அதற்குத் துணை நிற்பது, கல்விக்கூட நூலகங்களும் பெரும் சஞ்சிகைகளுமே. மாஸ்கோ பல்கலைக் கழகத்தில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வி சார்ந்த

இதழ்கள் வரவழைக்கப்படுகின்றன. இதைக் கேட்டு மயக்கம் போட்டு வீழ்ந்து விடாதீர்கள்.

முப்பத்திரெண்டாயிரம் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க நாலாயிரம் பேர்கள் உள்ளார்கள். இவர்களில் ஐந்நூறு ஆசிரியர்கள் பேரறிஞர் - அதாவது 'டாக்டர்' பட்டம் பெற்றவர்கள். சோவியத் ஒன்றிய அறிவியல் கழகத்தின் உறுப்பினர்களாக இருக்கும் நிலைக்கு உயர்ந்துள்ள எழுபத்தொன்பது மேதைகள் மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் வேலை செய்கிறார்கள்.

சோவியத் நாட்டு ஆசிரியர்கள், பாட திட்டத்தில் உள்ளவற்றை மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதோடு, தங்கள் பணி முடிந்து விட்டதாகக் கருதுவதில்லை. புதுப் புது நூல்களையும் இதழ்களையும் படித்து விட்டு வந்து, அவற்றிலுள்ள தகவல்களையும், உரிய நேரத்தில், உரிய அளவு, கலந்து கொடுப்பார்கள். அதோடு நிற்பார்களா? இல்லை. தனியாகவோ, குழுவாகவோ, பற்பல பொருள் பற்றி ஆய்வுகள் நடத்துவார்கள். ஒன்று முடிந்ததும் மற்றொரு ஆய்வினை மேற்கொள்வார்கள். சோவியத் ஆசிரியத் தேனீக்கள் இவற்றையெல்லாம் நூல்களாக எழுதி வெளியிட்டு உதவுவார்கள். ஆய்வும் நூல்கள் எழுதுவதும் அவர்களது தொழிலின் முறையான பகுதியாகவே கருதப்படும்.



# 11

ஏழை மீனவச் சிறுவன் மைக்கேல் லொமனசோவ் படித்து, உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியாகவும், சாதிக்கத் தெரிந்த பொதுத் தொண்டராகவும், உருவானதின் பெரும் பயன், மாஸ்கோ பல்கலைக்கழகம் என்று கேட்டபோது, பாரதியாரின் பாட்டொன்று நினைவிற்கு வந்தது, அப் பாட்டின் பொருள் ஆழம் விளங்கிற்று.

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதினாயிரம் நாட்டல்;
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

ஆம். ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல், பல நூற்றுண்டுகளுக்கு, உலக நன்மையாகவே சுரந்து கொண்டிருப்பதை மாஸ்கோ பல்கலைக்கழகத்தைக் கண்டபோது உணர்ந்தோம்.

அப் பல்கலைக்கழகத்தை, காரிலேயே சுற்றி வந்தோம். பல கோணங்களில் நின்று ஒளிமயமான மின்விளக்குகளின் துணையால் அதன் எடுப்பான தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்தோம். பதினேரு மணியாகிவிட்டதால் உள்ளே நுழையவில்லை. ஓட்டலுக்குத் திரும்புவது நல்லது என்றேன். அப்படியே திரும்பினேம். வழியிலே, எங்கள் சிந்தனை, சோவியத் நாட்டின் மாணவர்களுடைய போக்கின்மேல் சென்றது.

சோவியத் நாட்டு மாணவர்களுக்கு இலட்சியம் உண்டா? உண்டு. அது என்ன? 'படிப்போம், படிப்போம்! மேலும் மேலும் படிப்போம்' இதுவே அவர்களுடைய இலட்சியம்.

இது பல தலைமுறைகளாக வாழையடி வாழையாக வந்ததா? இக் குறிக்கோளை எப்போது பெற்ருர்கள்?

இது பல தலைமுறைகளாக வந்த இலட்சியமல்ல. படிக்கக்கூடாத இனங்கள் இருந்த காலத்தில் இத்தகைய இலட்சியம் வேரூன்றுமா? எல்லோர்க்கும் கல்வி என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டதின் விளைவு இக் குறிக்கோள். இரு தலைமுறைகளாக, இடைவிடாது, பற்றி வரும் குறிக்கோள் இது.

இக் குறிக்கோளை, மாணவச் சமுதாயத்திற்குச் சுட்டிக்காட்டிய நல்லவர் யாரோ? என்ன பேரோ?

இக் குறிக்கோளைத் தந்த நல்லவர், வல்லவரும் ஆவார். அவர் பெயர் லெனின். சோவியத் ஒன்றியத்தின் தந்தை, புரட்சித் தலைவர், புதிய உலகத்தின் சிற்பி,

மாமேதை லெனின் அவர்களே, 'படியுங்கள், படியுங்கள்! மேலும் மேலும் படியுங்கள்!' என்ற புரட்சி மந்திரத்தை. வளர்ச்சி மந்திரத்தை சோவியத் மக்களுக்கும் அதன்மூலம் உலக மக்களுக்கும் சொல்லிக் கொடுத்தவர்.

கொடுங்கோல் மன்னராட்சிக் கவிழ்ந்து, மக்களாட்சி ஏற்பட்ட பிறகு, அவ்வாட்சியில் அமைதியைப் பெற, செய்த 'சூழ்ச்சி'யா இது? இல்லை. வெறும் அமைதிக்காக ஆட்சியை எளிதாக நடத்திக்கொண்டு செல்வதற்குத் துணையாகக் கண்டுபிடித்த, திசை திருப்பியல்ல, மாமேதை லெனின் அவர்களுடைய கல்வி மந்திரம்.

எதிர்காலத்தை எண்ணி, தன்னுடைய ஆட்சியின் எதிர்காலத்தை மட்டும் கருதாது, நாட்டின் எதிர் காலத்தைக் கருத்தில் கொண்டு, கல்வி மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தார், மாவீரர் லெனின். சொல்லிக் கொடுத்தபோது இருந்த சூழ்நிலை என்ன தெரியுமா?

புரட்சி வெற்றி பெற்று, சமதர்ம ஆட்சி ஏற்பட்டும், நெடுங்காலமாக வறுமை — வாட்டம், அறியாமை, கல்லாமை, இயலாமை, நோய் நொடி இவைகள் அடியோடு அழியாத நிலை அப்போது. காரணம் என்ன? சமதர்ம ஆட்சியை வேரூன்றவிடக் கூடாதென்று பிற்போக்கு சக்திகள் உள்நாட்டில் குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருந்தன. வெளியே உள்ள பதினன்கு வல்லரசுகள், சோவியத் ஆட்சியை எதிர்த்துப் போரிட்டன. உட்பகை வெளிப்பகை இரண்டையும் ஒரே நேரத்தில் சமாளிக்க வேண்டிய நெருக்கடி. பொதுமக்கள் அனைவருக்கும் உணவு கிடைக்கும்படிச் செய்யவேண்டிய பெரும் பொறுப்பு.

அவ்வமயம் இளைஞர்கள் லெனினைக் கண்டார்கள். சமதர்ம சோவியத் ஆட்சிக்கு உதவுவதில் தாங்களும்

பங்குபெற விரும்புவதாகக் கூறினார்கள். இளைஞர்களுக் கேற்ற புரட்சித் திட்டத்தைக் கொடுக்குமாறு வேண்டினார்கள்.

அவ்விளைஞர்கள் யார்? மாணவ மணிகள். பாட்டாளிகள் அல்ல. இதைத் தெரிந்துகொண்ட தலைவர் லெனின், முன் கூட்டியே சிந்தித்து, முடிவு செய்து வைத்துள்ள தமது திட்டத்தை அவர்களுக்கு வெளி யிட்டார்.

'படியுங்கள்! படியுங்கள்! மேலும், மேலும் படியுங்கள்'. இத் திட்டத்தைக் கேட்ட இளைஞர்கள் திகைத்தார்கள், கல்வித் திட்டம்போல் தோன்றும் இது எப்படி பாட்டாளியின் புரட்சித் திட்டமாகுமென்று அவர்கள் திகைத்ததில் வியப்பில்லை.

**'வெள்ளத்தின் பெருக்கைப்போல் கவிப் பெருக்கும், கலைப் பெருக்கும் மேவு மாயின், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருட ரெலாம் விழி பெற்றுப் பதவி கொள்வார்'** இது பாரதியார் கவிதை; லெனின் கொள்கை.

ஆர்வம் மட்டுமே கொண்டு, அனுபவமில்லாத இளைஞர்களுக்கு இது சட்டென்று புரியாததால், அவ் விளைஞர்கள் திகைத்தார்கள். இரத்தம் தெறிக்க ஆணை யிடுவார் என்று எதிர்பார்த்த இளைஞர்களின் ஏமாற்றம் மாமேதை லெனினுக்குப் புரிந்தது.

படிப்பதும் மேலும் மேலும் படிப்பதும், பெரிய தேசியப் புரட்சியின் இணைந்த, இன்றியமையாத பகுதி என்பதை விளக்கினார் லெனின்.

புதிய சமதர்மத் தொழிலாளி ஆட்சியை நடத்திச் செல்ல மூத்த தலைமுறையினரே இருக்க முடியுமா? புரட்சியில் பங்கு கொள்ளும் மூத்தவர்கள் பலர், உயிர் தப்பிப் பிழைத்தாலும், அவர்களே, நெடுங்காலம் வழி

நடத்திச் செல்ல முடியுமா? இளைஞர்கள் காலத்திற்கு முன்னே முதியவர்கள் காலம் முடிந்துவிடும்.

பாட்டாளி சோவியத் ஆட்சியை, காத்து, நல்லபடி நடத்தி, மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு கொடுக்க வேண்டும். சோவியத் ஆட்சியை அமைப்பது கடினம். அதைக் காத்துப் பயன்படுத்துவது அதைவிடக் கடினமாக இருக்கக்கூடும்.

உருவாகியுள்ள சோவியத் ஆட்சியைச் செம்மை யாகவும், நன்மையாகவும் நடத்திச் செல்ல, துறைதோறும், துறைதோறும், பயிற்சி மிக்க, புதிய தலைமுறையினர் தேவை. சமதர்மக் கொள்கைப் பிடிப்புள்ள, அதே நேரத்தில், கல்வியிலும், தொழிற் பயிற்சியிலும் முற்றிய வர்கள் ஏராளமாகத் தேவை. மன்னராட்சிக்குத் தேவைப் படுவோரைவிட அதிகமானவர்கள் மக்களாட்சியின்போது தேவை.

மக்களாட்சி மலர்ந்ததும், ஆயிரக்கணக்கான பொறி யியல் வல்லுனர்களும், பல்லாயிரக்கணக்கான மருத்துவ மேதைகளும் இலட்சக்கணக்கான ஆசிரியர்களும் வேண்டும். அத்தனை மேதைகள் எங்கிருந்து குதிப்பார்கள்? இப்போது முதல், ஆயத்தஞ் செய்தாலே, நல்ல பயிற்சி பெற்ற, மக்களுணர்ச்சியுள்ள நிபுணர்களைப் பெற முடியும். எனவே, சமதர்ம உணர்ச்சியுள்ள இளைஞர்கள் ஆர்வத்தோடு, மளமளவென்று கல்வி பெற்று, புதிய சமதர்ம ஆட்சிக்குத் தொண்டாற்ற ஆயத்தமாகிக் கொள்வதே, அவர்கள் ஆற்றவேண்டிய புரட்சிப் பணி.

இவ்விளக்கத்தைக் கேட்ட இரஷ்ய இளைஞர்கள், முன்னவர்களைவிட அதிக ஆழமாகவும் ஆர்வமாகவும் கல்வி கற்பது, இணையில்லாத நாட்டுத் தொண்டு; புரட்சித் தொண்டு; சமதர்மத் தொண்டு என்பதை உணர்ந் தார்கள்.

சமதர்ம உணர்ச்சியுடையவர்கள், மற்றவர்களைவிட சிறந்த வல்லுனர்கள் ஆவது, சமதர்மத்துக்கு நெடுநாளைக்கு உதவும் என்று தெளிந்து அவ்வண்ணம், கல்வியில் ஆழ்ந்து ஈடுபட்டார்கள்; ஈடுபடுகிறார்கள்; ஈடுபடுவார்கள்.

லெனின் கற்றுக் கொடுத்த கல்வித் திருமந்திரத்தைப் பற்றி சிறிது சிந்திப்போம்.

திடீர் விருந்து வந்துவிட்டது. சமையல் அரிசி பூட்டியிருக்கிறது. சாவியோ அம்மாவிடம் சிக்கிக் கொண்டது. அம்மாவோ தொலைவிலுள்ள கோயிலுக்குச் சென்று இருக்கிறார்கள். சுறுசுறுப்புக்குப் பேர்போன சமையற்காரர், எதிரில் தென்படும், விதை நெல்லை எடுத்து விரைந்து குத்தி சமைத்துவிட்டால் நாளை விதைப்பதற்கு எங்கே போவது?

விதை நெல். கடனாகக் கிடைப்பதைவிட, சமையல் அரிசி அக்கம்பக்கத்தில் எளிதாகக் கிடைக்குமே! விதை நெல்லை வீணாக்காமல் அரிசியைக் கடன் வாங்கிக் கொண்டிருந்தால் நன்மையாக இருக்கும்.

இளைஞர்கள், சமுதாயத்தின் விதை நெற்கள். அம் மணிகளைக் கண்ட கண்ட தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது. அப்படிப் பயன்படுத்துவது, சமுதாயத்தின் எதிர்காலத்தைப் பாழாக்குவதாகும். மாணவ மணிகளை - நம்மைவிட நன்றாக விளைந்து பயன்பட வேண்டிய மணிகளை - இன்றைக்கிருப்பதைவிட சிறந்த நல்ல சமுதாயத்தை உருவாக்கும் ஆற்றல்களையும் நல்லுணர்ச்சிகளையும் தம்முள் அடக்கி வைத்துள்ள மணிகளை - காத்து வரவேண்டியது, நாட்டின் நலத்தில் அக்கறை உடையோர் கடமை. சமுதாயத் தொண்டர்களின் பொறுப்பு. முற்போக்குக் கருத்துடைய இளைஞர்கள் பொறுக்கு மணிகள்.

வீரிய விதைகள். அவர்களை தனிக் கவலையோடு காப்பது, முற்போக்குவாதிகளின் தனிப் பொறுப்பு.

மற்றோர் கோணத்தில் இருந்து பார்ப்போம்.

போர் முரசு கொட்டிவிட்டது. இரு நாடுகளுக் கிடையில் கடும்போர் நடக்கிறது. தெளிவுள்ள தலைமை என்ன செய்யும்? எடைபோடும். தன் வலிமையையும் மாற்றான் வலிமையையும் எடை போடும். துணை வலிமை யையும் எடை போடும். அப்புறம்?

எத்தனை காலம் நீடிக்கும் இப் போர் என்று மதிப்பிடும். 'பட்' 'பட்'டென்று சுட்டவுடனே முடிந்து விடுமா? ஆண்டுக்கணக்காக நீளுமா?

இதை மதிப்பிடும் தலைமை மூண்ட போர் நீளும் என்று மதிப்பிட்டால், களத்தில் மறவர்களை நிறுத்தும் ஒன்றை மட்டுமா செய்யும்? மேலும் பலவற்றைச் செய்யும்.

களத்தில் நின்று போராடும் ஆற்றல் படைத்த, இரண்டாம் போர் அணியை, காட்டிலே, கூச்சலின்றி, ஆயத்தஞ் செய்ய வேண்டும். களத்தில் இருப்போர்க்கும், களத்திற்கு வரப்போவோர்க்கும் வேண்டிய கருவிகளும் குண்டுகளும், உணவும் பிறவும், தங்கு தடையின்றி தொடர்ந்து கிடைக்கப் போதிய ஏற்பாடு செய்யும். அத்தகைய ஆயத்தப் பிரிவுகளுக்கு ஏற்பாடு செய்யாமல் யாரும் போரில் இறங்குவதில்லை. வறுமைக்கு எதிரான போருக்கும் இது பொருந்தும்.

கொன்று, வென்று வர மட்டுமா முன்னேற்பாடு? உற்பத்தி செய்யவும் முன்னேற்பாடு தேவை. அதிக உற்பத்திக்கும் ஏற்பாடு தேவை. அது மட்டுமா?

போர் முனைக்குச் செல்லாத பொதுமக்களை, தேவைகளைக் குறைத்துக் கொள்ளும் தியாகத்திற்கு ஆயத்தஞ் செய்யும். இப்படி பல்வேறு முயற்சிகளும் இணைவது, போரின் வெற்றிக்குத் தேவை.

நாம் திட்டமிடுகிற, எதிர்ப்பார்க்கிற, புதிய உலகத்திற்கும் திறன் மிக்க, இணைந்த, பல்வேறு முயற்சிகள் தேவை.


சமதர்ம ஆட்சியில் எல்லார்க்கும் எல்லா நியாயமான தேவைகளும் நிறைவேற வேண்டும். எல்லோருக்கும் பள்ளியிறுதி வரை படிக்க, இன்னும் பல இலட்சம் ஆசிரியர்கள் தேவை. எல்லாச் சிற்றூர்களுக்கும் நல்ல சாலை வேண்டும். இதற்கு இன்றிலும் அதிகமான பொறியியலார் தேவை. எல்லாக் கோடிகளுக்கும் உடனுக்குடன் மருத்துவ வசதி எட்ட வேண்டும். இலவசமாகவும் எட்ட வேண்டும். இதற்கும், மேலும் பல இலட்சம் மருத்துவ மேதைகள் தேவை. பையைப் பார்க்காமல் கையைப் பார்க்கும் மருத்துவர்கள் தேவை.

புதிய சமுதாயத்திற்குத் தொண்டாற்றப் போகும் பல்துறை வல்லுனர்கள், சிறந்த திறமையுடையவர்களாக மட்டும் இருத்தல் போதாது. மேசை நாற்காலியைப் போன்று, பிழையேதும் அறியாத நாணயத்தோடு இருத்தல் மட்டும் போதாது. மக்களோடு மக்களாக நடந்து, பிறிதினைத் தன்னைப் போல் நோக்கி நடக்கும் நல்லுணர்ச்சியுடையவர்களாக இருக்க வேண்டும்.

அத்தகைய சமதர்மத் தொண்டர்களை ஏராளமாகப் பெறுவது அரிது. சமதர்ம உணர்ச்சி உள்ள - விரல் விட்டு எண்ணி விடக்கூடிய இளைஞர்களையும் - நன்றாக ஆயத்தஞ் செய்வதற்குப் பதில், அவர்களை, மாணவப் பருவத்தி

லேயே, மூத்தோர் தலை கொடுக்க வேண்டிய நடவடிக் கைகளில் தள்ளி விடுவது, ஒரு நாள் வரப் போகும் சமதர்ம ஆட்சிக்கு ஆள் பஞ்சத்தை - சமதர்மக் கருத் துடைய ஆள் பஞ்சத்தை உண்டாக்கி விடும்.

இதை நாம் உணர்ந்தால், எதிர்காலத்தைப் பாழாக் காமல் காப்போம்; இளைஞர்கள், தங்கள் நல்லுணர்ச்சி களுக்கு ஏற்ப, சாந்தியால் தழைக்கும் சமத்துவ உலகத்தை உருவாக்கத் துணை நிற்போம்; வழி விடு வோம்.



# 12

மாஸ்கோ பல்கலைக் கழகத்தைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்புகையில், சிந்தனை சிறகடித்து, லெனின் காட்டிய கல்வி நெறியை நினைவுபடுத்திக் கொண்டு மகிழ்ந்தேன்.

அன்றாட வாழ்க்கைத் தொல்லைகளிலிருந்து, தப்பிப் பிழைக்க, பெரியவர்கள் கூறிய நல்லுரையை நினைத்து அசை போடுவது நல்லது என்பதையும் உணர்ந்தேன்.

மகிழ்ச்சியைக் கலைத்தார் வ்லாடிமீர் ; நல்லெண்ணத்தால் குறுக்கிட்டார்.

"வேலு! அதோ தெரிகிறது, லெனின் விளையாட்டரங்கம். பகல் நேரத்தில் சுற்றிப் பார்க்க வேண்டிய இடம்" என்றார்.

"உண்மை. முதன் முறை மாஸ்கோவிற்கு வந்தபோது பகல் நேரத்தில் பார்த்துப் பூரித்தேன்."

''லெனின் விளையாட்டரங்கம், 'ஸ்டேடியம்', உலக ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்காக ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தாறும் ஆண்டு கட்டப்பட்டது. ஒரு இலட்சம் மக்கள் உட்கார இடவசதி உடையது. பல விளையாட்டுப் போட்டிகளுக்கும் ஏற்பாடுடையது.

''அதற்கு முன்பிருந்த 'டைனமோ' விளையாட்டரங்கத்தையும் முன்பு பார்த்திருக்கிறேன். இருபதாயிரம் மக்களே உட்காரக் கூடிய அந்த அரங்கு முற்காலத்தேவைகளுக்கு சரி. இன்றைய தேவைகளுக்கு லெனின் அரங்கமே சரி'', என்று என் பட்டறிவைக் காட்டினேன்.

''இப்போது இரண்டுமே தேவைப்படுகிறது. வேறு நாம் போகும் வழியில் பெரிய நீச்சல் குளம் இருக்கிறதே. அதைப் பார்த்திருக்கிறீர்களா?'' என்று வ்லாடிமீர் கேட்டார்.

''ஓ! முன்பு பகலில் பார்த்திருக்கிறேன்'' என்றேன்.

''எத்தனை பேர் ஒரே நேரத்தில் அந்தக் குளத்தில் நீந்தலாம் என்று முன்னர் விசாரித்து வைத்திருக்கிறீர்களா?''

''ஆம். கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறேன். நீந்துவோர் நிறையப் பேர் இருந்த போதே, அங்கு சென்று பார்த்திருக்கிறேன். ஆயிரத்து ஐந்நூறு பேர் ஒரே போது நீந்தலாம். அவ்வளவு பெரியது, அந்த நீச்சல் குளம். அதோடு, குளிர்காலத்திலும் பயன்படும்படி அது அமைக்கப்பட்டிருக்கிறது. குளிர் காலத்தில் தண்ணீருக்குப் பதில் இளம் வெந்நீர் இருக்கும் நீச்சல் குளத்தில். அது எப்போதும் இளம் வெந்நீராகவே இருக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்படித்தானே?''

என்னுடைய பதில் நூற்றுக்கு நூறு சரி என்று கேள்விப்பட்டு உவந்தேன். நல்ல வேளை! படிக்கும் போது,

நினைவாற்றலை வளர்த்துக் கொண்டது, நமக்கு நன்மையாயிற்று. யாரோ சொல்வதைக் கேட்டு, நினைவுக்குச் சுமையெதற்கு என்று ஏமாறவில்லையே என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன்.

சில நிமிடங்களில் காரும் எங்கள் ஓட்டலண்டை நின்றது. மணியைப் பார்த்தோம். இரவு பதினொன்றே முக்கால்.

பெய்யும் பனியில், கீழே இறங்கி, உள்ளே ஓடினோம். வ்லாடிமீரும் உள்ளே வந்தார்.

"இரவு வெகு நேரமாகி விட்டது. நாளை நிறைய வேலை இருக்கிறது. இனியும் தாமதம் செய்யாமல், உறங்கப் போங்கள். காலை எட்டரை மணிக்கு சிற்றுண்டி சாலையில் சந்திப்போம்'' என்று, கூறி முன் கூடத்தில் இருந்தபடியே, எங்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

படுப்பதற்குள் மணி பன்னிரண்டைத் தாண்டி விட்டது. 'அடுத்த நாள் பிறந்ததைக் கண்டு விட்டோம்', என்ற கிண்டல் கருத்தோடு உறங்கி விட்டேன். முதலில் அயர்ந்து உறங்கினேன்.

திடீரென, உறக்கம் கலைந்தது. விளக்கைப் போட்டுப் பார்த்தேன். கண்கள் கோவைப் பழமாக இருந்தன. நெருப்பையிட்டது போல் எரிந்தன. உடம்பும் கொதித்தது. காய்ச்சல் வந்து விட்டது தெரிந்தது. கைக் கடிகாரத்தை எடுத்துப் பார்த்தேன். மணி, இரண்டரை, அந் நேரத்தில், யாரையும் தொல்லைப்படுத்த விரும்ப வில்லை. கைப் பையில் இருந்த ஆஸ்ப்ரோ ஒன்றை எடுத்து விழுங்கி விட்டு, விளக்கை அணைத்து விட்டு உறங்க முயன்றேன். சிறிது வெற்றி. குப்பென்று வியர்த்தது. மீண்டும் விழித்துக் கொண்டேன். வியர்

வையைத் துவாலால் துடைத்துக் கொண்டேன். மறுபடி உறக்கம். அரை மணிக்குப் பின் விழிப்பு. இப்படி இரவு கழிந்தது. பொழுது புலர்ந்தது.

சிற்றுண்டி நேரம் வந்தது. வ்லாடிமீர், எங்களுக்கு, எச்சரிக்கை செய்ய தொலைபேசியில் பேசினர். அப்போது என் நிலையைக் கூறினேன். என் அறைக்கே வந்தார். உடம்பைத் தொட்டுப் பார்த்தார். காய்ச்சலே என்றார். மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னார். அப்படியே செய்தார்.

மருத்துவர் வந்து என்னைச் சோதித்துப் பார்ப்பதற்கு முன் இந்தியத் தூதுக் குழுவைச் சேர்ந்த மூவரும் என் அறைக்கு வந்து என்னைக் கண்டு கேட்டனர்.

தூதுக் குழுவிற்கு அன்று இரு நிகழ்ச்சிகள். ஒன்று, சோவியத் பொருளாதார வளர்ச்சிக் கண்காட்சியினைப் பார்வையிடுதல். முற்பகலில் அது. மாலையில் 'க்ரெம்ளினில்' காங்கிரஸ் மாளிகையில், விருந்து. அக்டோபர் புரட்சி நாளைக் கொண்டாட, முன்னாள் மாலையே விருந்தளிப்பது வழக்கம். அதற்கு சோவியத் நாட்டின் பெரியவர்களும் வெளிநாட்டுத் தூதுக் குழுவைச் சேர்ந்த பலரும் வருவார்கள். அதில் கலந்து கொள்ளும் பெருவாய்ப்பினை நான் மிகவும் எதிர்ப் பார்த்திருந்தேன்.

"வெளியே பனி; உனக்கோ காய்ச்சல். இன்று முழுவதும் மருந்து சாப்பிட்டு விட்டு, முழு ஓய்வு எடுத்துக் கொண்டால், நாளை காலை அக்டோபர் புரட்சி நாள் அணி வகுப்பைப் பார்க்க இயலும். இல்லாவிட்டால்........"

இந்திய நண்பர்கள் உரை முடிவதற்குள் நான் தலையிட்டு,

"நாளைய அணிவகுப்பை இழக்க நான் விரும்பவில்லை அதற்கு ஆயத்தமாவதற்காக, இன்று ஓய்வு எடுத்துக்

கொள்கிறேன். நீங்கள், குறிப்பிட்டபடி நிகழ்ச்சிகளுக்குச் சென்று வாருங்கள்'' என்று விடை கொடுத்தேன்.

என்னோடு யாராவது, துணைக்கு இருப்பது நல்லது என்று கருதப்பட்டது.

எங்கள் தூதுக் குழுவை அழைத்துக் கொண்டு, இரு சோவியத் நண்பர்கள் செல்வதாக இருந்தது. காய்ச்சல் காரனுக்குக் காவல் இருக்க வ்லாடிமீர் முன் வந்தார். அவரை என்னோடு விட்டு விட்டுச் சென்றார்கள்.

என் அறையிலேயே உட்கார்ந்து இருந்தால் நான் உறங்காமல் பேச முயற்சிப்பேன் என்று எண்ணினார் வ்லாடிமீர். எனக்கு முழு ஓய்வு கொடுக்க வேண்டு மென்பதற்காக, வெளி தாழ்வாரத்திற்குச் சென்று அமர்ந்து விட்டார். உள்ளேயே இருக்கலாமென்று, எவ்வளவு வற்புறுத்தியும் பலிக்கவில்லை.

வெளியே உட்கார்ந்திருந்த வ்லாடிமிர், அரை மணிக்கு ஓர் முறை, மெல்ல, அமைதியாக உள்ளே வந்து பார்ப் பார். பலமுறை நான் உறங்குவதைக் கண்டு நிறைவோடு திரும்பியதாக, பின்னர், அவர் மூலம் கேள்விப்பட்டேன்.

சோவியத் நாட்டின் நகரங்களில் 'பாலிகிளினிக்'குகள் நிறைய உண்டு. எண்ணிக்கை, நகரத்தின் பரப்பைப் பொருத்தது.

ஒவ்வொரு பாலிகிளினிக்கும் எந்தெந்த வட்டாரத் திற்குப் பணிபுரியும் என்று வரையறுக்கப் பட்டிருக்கிறது. நோய்வாய்ப்பட்டவர் இருக்கும் வட்டாரத்திற்கு உரிய பாலிகிளினிக்கிற்கு, தொலைபேசியில் தகவல் கொடுத்தால் போதும். பாலிகிளினிக்கிலிருந்து, மருத்துவர் உதவியாள ரோடு, நோயாளியைத் தேடிவருவார். அப்படி வருவதற் காக ஒவ்வொரு பாலிகிளினிக்கிலும் வாகனங்கள்

உள்ளன ; கணக்கில் அல்ல ; ஓட்டத்தில் உள்ளன அந்த மோட்டார்கள்.

சோவியத் குடிமக்களுக்கு மட்டும், அல்ல, இத்தகைய ஏற்பாடு. வெளி நாட்டிலிருந்து வந்து நோய்வாய்ப் படுவோர்க்கும் அதே வசதி. வெளிநாட்டுப் பயணிக்கு, நோய் வந்து விட்டால், அவர் தங்கியிருக்கும் ஓட்டல் நிர்வாகியே, பாலிகிளினிக்கிற்குத் தகவல் கொடுத்து மருத்துவரை வரவழைத்து விடுவார்.

எனக்கு மருத்துவரை அழைக்க, நான் தங்கியிருந்த ஓட்டல் நிர்வாகியே ஏற்பாடு செய்தார்.

மருத்துவரும் உதவியாளரும் வந்து சேர்ந்தனர். இருவரும் பெண்மணிகள். இருவரையும், வ்லாடிமீர், என் அறைக்கு அழைத்து வந்தார்.

மருத்துவர், நாடியைப் பார்த்தார். இரத்த அழுத்தத்தைப் பார்த்தார். நெஞ்சில் கபம் உண்டா என்று பார்த்தார். உடலின் வெப்பத்தை சூடு காட்டியால் கணக்கிட்டார். நாக்கின் அடியில் சூடுகாட்டியை வைத்துப் பார்ப்பது நம் வழக்கம். சோவியத் மருத்துவர்கள், அதை ஏற்றுக் கொள்ளுவதில்லை. அக்குளில் சூடுகாட்டியை வைத்தே வெப்ப நிலையை அளக்கிறார்கள். அன்று என் வெப்பம் எவ்வளவு? நூற்று மூன்று டிகிரி.

என்னை நன்றாகச் சோதித்த பிறகு, தன் பெட்டியிலிருந்து, மூன்று வகையான மருந்துகளை எடுத்துக் கொடுத்தார். அவற்றைப் பயன்படுத்தும் முறையையும் இடைவெளியையும் வ்லாடிமீரிடம் கூறினார். பத்திய உணவையும் குறிப்பிட்டுச் சொன்னார்.

வ்லாடிமீர், தாதி வேலை செய்தார். மாத்திரைகளை உரிய வேளைகளில் தவறாமல் கொடுத்தார். பத்திய உணவைக் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

'காய்ச்சல் வந்து விட்டதே; இவ்வளவு தூரம் வந்து படுத்துக் கொண்டிருக்க நேர்ந்து விட்டதே' என்று நான் சஞ்சலப்பட்டதை விட, வ்லாடிமீர் பட்ட சஞ்சலம் அதிகம். அதை என்னால் எழுத இயலாது. அவரைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. அழாத குறையாக, அவர் என்னை அணுகுவதும் அகலுவதுமாக இருந்தார். பகல் முழுவதும் இப்படியே கழிந்தது.

அன்றுமாலை, என்னைக்காண தமிழ்நாட்டு நண்பர்கள் இருவர் வந்து சேர்ந்தார்கள். பகலில் அவர்கள் என்னோடு தொடர்பு கொண்ட போது, நான் காய்ச்சலில் படுத்திருப்பதைத் தெரிந்து கொண்ட, திரு. கிருஷ்ணய்யா, தம் வீட்டிலிருந்து அரிசிக் கஞ்சியோடு வந்து சேர்ந்தார். 'சூடு குப்பி'யிலிருந்து, தானே ஊற்றிக் கொடுத்த போது சென்னையிலிருப்பது போன்ற உணர்வு பெற்றேன். அது, சற்று ஆறுதலாக இருந்தது.

கிருஷ்ணய்யா யார் என்று சொல்லவில்லையே. அவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, சென்னை 'சோவியத் நாடு' தமிழ்ப் பதிப்பில் தொண்டாற்றி வந்தார். தற்போது, மாஸ்கோவில், 'முன்னேற்ற வெளியீட்ட'த்தில் தமிழ்த் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார். இவ் வெளியீட்டகம், சோவியத் நூல்களை, பிறநாட்டு மொழிகளில் பெயர்த்து வெளியிடும். அதில் பங்கு பெற்றிருப்பவர் திரு. கிருஷ்ணய்யா.

என்னுடைய மற்றொரு மாஸ்கோ நண்பராகிய திரு. மணிவர்மா, ஓவல்டினையும் பழங்களையும் எடுத்துக் கொண்டு வந்தார். என்னுடன் சில மணிநேரம் இருந்தார். ஓவல்டினையும் பழத்தையும் ஊட்டிவிட்டே வீடு சென்றார்.

திரு. மணிவர்மா, கன்யாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். மாஸ்கோ வானொலியில், தமிழ் ஒலி பரப்பைக்

கவனித்துக் கொள்கிருர் ஏறத்தாழ பதினைந்து ஆண்டு களாக மாஸ்கோவில் பணிபுரிகிருர்.

இரு இந்திய நண்பர்களும், வ்லாடிமீருக்குச் சற்று விடுதலை கொடுத்தார்கள்.

அன்று மாலை காய்ச்சல் இருந்த நிலையில், அடுத்த நாள், கொட்டும் பனியில் இருந்து கொண்டு, செஞ் சதுக்க அணிவகுப்பைப் பார்க்க முயல்வது நல்ல தல்ல வென்று, மூவரும் கூறினார்கள். அவர்கள் சொல்லை மீறி வெளியே செல்ல முயன்ருல், நோய் அதிகமாகி விட்டால், என்ன செய்வது என்ற கவலை எனக்கு. எனவே, ஏமாற்றத்தை வெளிக்குக் காட்டாமல், அணிவகுப்பைப் பார்க்க செஞ்சதுக்கத்திற்குச் செல்லாமல் இருக்க உடன்பட்டேன்.

"அங்கே போகாவிட்டால் என்ன? இங்கே படுக் கையில் படுத்தபடியே அணிவகுப்புக் காட்சிகள் அனைத்தையும் காணலாம். எதிரேயுள்ள, தொலைக் காட்சியை மட்டும், மறக்காமல் நேரத்தில் இயக்கி விடுங்கள்" என்று ஆறுதல் கூறினர், வ்லாடிமீர்.

தொலைக்காட்சிப் பெட்டியை உரிய நிலைக்குக் கொண்டு வந்து வைத்து விட்டு, 'நாளை காலை இப் பொத்தானை மட்டும் அழுத்தி விடுங்கள். இங்கிருந்த படியே ஒன்று விடாமல் பார்த்து மகிழலாம்' என்று மீண்டும் கூறி விட்டுச் சென்ருர் சோவியத் நண்பர்.

இந்திய நண்பர்களும் சிறிது நேரம் இருந்து விட்டு, விடை பெற்றுக் கொண்டார்கள். நான் நன்ருகத் தூங்கினேன். ஆயினும் காய்ச்சல் தணிந்ததாகத் தெரிய வில்லை.

பொழுது விடிந்தது. பத்தியச் சிற்றுண்டி உண்டேன். தொலைக்காட்சிப் பொறியை இயக்கினேன்.

'அதோ; செஞ்சதுக்கம். அதன் பின்னல், ஒளிவிடும் கிரெம்ளின்'. செஞ்சதுக்கத்தில் அக்டோபர் புரட்சியின் ஐம்பத்து நான்காம் ஆண்டு விழா கொண்டாடப் படுகிறது. சோவியத் நாட்டின் தலைவர், பிரதமர், மற்ற அமைச்சர்கள், பிற தலைவர்கள், பற்பல நாட்டுக் குழுக்கள் குழுமியுள்ளனர். பெய்யும் பனியையும் பொருட் படுத்தாது தலையில் காதுகளையும் மூடும் பெருங் குல்லாய்களையும் உடலில் நீண்ட கம்பளிக் கோட்டு களையும் அணிந்து கொண்டு, பெருமிதத்தோடு அணி வகுப்பைக் கவனிக்கிறார்கள்.

அணிவகுப்போ நீண்டது. அதோ படை வீரர்களின் பெருநடை; போர்க் கருவிகளின் அணியைக் கண்டு வியப்பு; பெருத்த கை தட்டல். எத்தனை புத்தம் புதிய போர்க் கருவிகள் செல்கின்றன? கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளும் அணியில் சென்றன.

பின்னர், பொதுமக்களின் அணி. அதோ, மாஸ்கோ வாசிகள், தொழில் வீரர்கள், தங்கள் தங்கள் உச்ச சாதனைகளை அறிவிக்கும் அட்டைகளைத் தாங்கிக் கொண்டு, பெருநடை போடுவதைக் கண்டு, கூட்டத் தினர் பாராட்டுகின்றனர்.

இளைஞர் அணிகளைப் பாருங்கள். மாஸ்கோவில் படிக்கும் வெளிநாட்டு இளைஞர்களும், சோவியத் நாட்டு வாலிபர்களும் பெண்களும் சேர்ந்து. செஞ்சதுக்கத்தில் பெருநடை போடுகிறதைப் பார்க்கிறோம்.

அதோ மேலே, மிகப் பெரிய பலூன். அதன் மேல் ஏதோ எழுதியிருக்கிறார்கள். என்ன அது?

"ஆதிக்கவர்க்கங்களுக்கு எதிரான அணியின் ஒற்று மைக்காக" என்று சொல்லுகிறது, உயரத்தில் பறக்கும் பலூன்.

சோவியத் ஆட்சியை மலரச் செய்த அக்டோபர் புரட்சியின் நினைவை, இவ்வகையில் ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுகிறார்கள். மாஸ்கோவில் கொண்டாடுவதைப் போலவே, ஒவ்வொரு குடியரசின் தலைநகரிலும் பிற ஊர்களிலும் ஆர்வத்தோடு கொண்டாடுகிறார்கள்.

நான், ஓட்டல் அறையில் படுத்தபடி பார்த்த அந்த அணிவகுப்பு இரண்டரை மணி நேரம் நடந்தது. இடையில், வேடிக்கைப் பார்ப்போர் வெளியேறுவது கடினம். நான் அங்கே சென்று மாட்டிக் கொள்ளாதது அறிவுடைமை என்பதை உணர்ந்து, என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

பாலிகிளினிக்கிலிருந்து மருத்துவர் வந்து சேர்ந்தார். என்னைச் சோதித்தார். காய்ச்சல் சிறிதளவும் குறைய வில்லை. முதல் நாள் இருந்தபடியே இருக்கிறது என்று கண்டுபிடித்துச் சொன்னார்.

'ப்ளூ'. காய்ச்சலாக இருக்கலாமென்று சந்தேகப் படுவதாகக் கூறினார். 'அப்படியானால் படுத்த படுக்கையாக இருந்து விட்டு, ஒன்றும் பார்க்காமலேயே இந்தியாவிற்குத் திரும்ப நேரிடுமோ' வென்று கவலைப் பட்டேன்.



# 13

எனக்கு வந்த 'ப்ளூ' காய்ச்சல் விரைவில் தொத்தி விடுமாம். எனவே, அந் நோய் கண்டவர்களை, மருத்துவ மனையில் சேர்த்துவிடுவதன் மூலம், மற்றவர்களுக்கு அது பரவாதபடி தடுப்பார்களாம்.

என்னையும் மருத்துவமனையில் சேர்த்துவிட விரும்பினார் மருத்துவர். மருத்துவமனையென்றால், எனக்கு எப்படியோ இருக்கும். எனக்கு வேண்டியவர்கள் பலர் மருத்துவமனையில் கண்டபின், வீடு திரும்பாமல், காண முடியாமற் போய்விட்டார்கள். ஆகவே மருத்துவமனை யென்றாலே, கசப்பு. ஆயினும் என் செய்ய? மாஸ்கோ விற்கு வந்து நோய்வாய்ப்பட்டு விட்டேனே! வேறு வழி யின்றி மருத்துவமனையில் சேர ஒப்புக் கொண்டேன்.

இந்த 'ப்ளூ' காய்ச்சல்காரர்களை, தொத்து நோய் மருத்துவமனையில் சேர்ப்பது, அங்குள்ள வழக்கம். 'தொத்து நோய்' மருத்துவமனையில் என்னைச் சேர்த்

தார்கள். அந்த மனையின் 'ஆம்புலன்ஸ்' வந்து, என்னை அழைத்துக்கொண்டு போயிற்று. என்னுடன் வ்லாடீமீர், மணிவர்மா, கிருஷ்ணய்யா ஆகிய மூவரும் வந்தனர்.

நான் மருத்துவமனையில் சேரும்போது, மாலை ஐந்தரை மணி. அங்குள்ள மருத்துவர், உடனே என்னைச் சோதித்தார். ஊசிபோட்டார். மூன்று மாத்திரைகளைக் கொடுத்து விழுங்கச் செய்தார்.

என்னை நன்றாகக் கவனித்துக் கொள்வதாகக் கூறி விட்டு, உடன் வந்த நண்பர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டார்.

'தூதுக்குழு'வில் செல்வோர், மதிப்பிற்குரிய விருந்தினர்கள். ஆகவே, எனக்குத் தனி அறை ஒதுக்கப்பட்டது. அதில் தங்கினேன். இரவுச் சாப்பாடு வந்தது. உண்டு விட்டு உறங்கினேன்.

இரவு ஒன்பது மணிக்கு, மீண்டும் ஊசி போடப் பட்டது. மூன்று மாத்திரைகள் தரப்பட்டன. மறுபடியும் இரவு பன்னிரெண்டு மணிக்கு, என்னை எழுப்பி மூன்று மாத்திரைகளை விழுங்கச் செய்தார்கள். விழுங்கிவிட்டு நன்றாக உறங்கினேன்.

காலையில், மருத்துவர் என்னைச் சோதித்தார். வெப்பம் சாதாரண நிலையில் இருந்தது. மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

சோவியத் நாட்டில், மருத்துவமனையில் சேர்த்தால், நோயாளிகளை நன்றாகச் சோதித்துப் பார்த்த பிறகே, வெளியே அனுப்புவார்களாம். எனக்கும் பல சோதனைகள்.

முன்னாள் ஏற்பாடு செய்திருந்தபடி, கழிவு, நீர், குருதி ஆகிய மூன்றையும் சோதனை செய்தார்கள். அடுத்த நாள், மார்பை 'எக்ஸ்ரே' செய்தார்கள்.

இடையில் மாத்திரைகள் இரண்டாயின.

சோதனைகளின் முடிவு, ஒவ்வொன்றும் சரியாக இருந்தன. குறையேதும் இல்லையென்று தெரிந்தது. அப்புறம் நவம்பர் பத்தாம் நாள் மாலை, மருத்துவ மனையை விட்டுச் செல்ல அனுமதி கிடைத்தது. வ்லாடிமீருக்கு அத் தகவல் சொல்லப்பட்டது. அவர், காரோடு வந்தார், என்னை ஓட்டலுக்கு அழைத்துச் சென்றார். மருத்துவமனைக்குச் செல்லும்போதும் மருத்துவ மனையிலிருந்து வெளியேறும்போதும், ஓயாமல் பனி பெய்து கொண்டிருந்தது.

இயற்கை, கடுஞ் சோதனைக்குள்ளாக்கினாலும், சோவியத் மக்கள் அன்போடு இருந்தார்கள். மருத்துவ மனையில் விழிப்போடும், ஆர்வத்தோடும் கவனித்துக் கொண்டார்கள்.

மருத்துவமனையில் சேர்ந்ததும், நோயாளியின் உடைகளை, கழற்றி வாங்கிக்கொண்டு, மாற்று உடை களையும் 'சிலிப்பர்'களையும் கொடுக்கிறார்கள். திரும்பும் போது, சொந்த உடையைக் கொடுத்து விடுகிறார்கள்.

பன்னிரண்டு மணி நேரத்தில் காய்ச்சலைக் குணப் படுத்திவிட்டு, மூன்று நாள் பொறுத்திருந்து பார்த்து விட்டு, என்னை வெளியே அனுப்பினார்களே! அதற்கு ஏதாவது செலவு உண்டா? இல்லை. மருத்துவமனையில் இருந்ததற்கோ, மருத்துவர் கவனிப்பிற்கோ, மருந்துச் செலவுக்கோ யாரிடமும் கட்டணம் வாங்குவதில்லை. எல்லாம் இலவசம். பெரிய மனிதர்களுக்கு மட்டுமா? இல்லை. எல்லோருக்கும் இலவசம். உள்நாட்டுக்காரர் களுக்கும் இலவசம். வெளிநாட்டிலிருந்து வந்து போவோருக்கும் இலவசம்.

மருத்துவ வசதி, போதிய அளவு இருக்கிறது. நகரங் களில் இருப்பதைப் போலவே, நாட்டுப்புறங்களிலும்

மருத்துவ வசதி உண்டு. தொலைவில் இருப்போர்க்கு விரைந்து செல்லும் ஆம்புலன்ஸ் நிறைய உண்டு. அது மட்டுமா? மருத்துவர்கள் 'ஹெலிகாப்டர்' மூலம் பறந்து சென்று நோயாளியைக் குணப்படுத்தவும் தேவைப் பட்டால் ஹெலிகாப்டர் மூலம் பெரிய மருத்துவமனைக்குக் கொண்டு வரவும் விரிவான ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

கல்விக்கூடங்களிலும், மருத்துவ சோதனைக்கும் மருத்துவ உதவிக்கும் வசதியுண்டு. நோய் வந்தபிறகு குணப்படுத்துவதைவிட சிறந்தது, நோய் வராதபடி தடுப்பது. எனவே, குழந்தைகளையும் சிறுவர் சிறுமி களையும் வாலிபர்களையும் அப்போதைக்கப்போது சோதனை செய்வதன்மூலம் நோயைத் தொடக்கத்திலேயே கண்டு பிடித்து, எளிதாகக் குணப்படுத்துகிறார்கள்.

இராணுவ மருத்துவமனைகள் தவிர, பொதுமக்களுக் கான மருத்துவமனைகள் இருபத்தெட்டாயிரம். அவற்றி லுள்ள மொத்த படுக்கைகள், இருபத்து மூன்று இலட்சம். மொத்த மருத்துவர்கள் எவ்வளவு பேர்? ஐந்து இலட்சத்து எண்பதாயிரம் பேர்கள். மேலும், ஆண்டு தோறும், இருபத்தாறுயிரம் மருத்துவப் பட்டதாரிகள் வெளி வருகிறார்கள். மருத்துவர்களில் முக்கால்வாசிப் பேர்கள் பெண்கள். மக்கள் உயிர் அவர்கள் கையில் பத்திரமாக இருக்கிறதா? ஆம். எப்படித் தெரிகிறது?

சோவியத் நாட்டில், ஆண்களின் சராசரி வயது அறுபத்தாறு, பெண்களின் சராசரி வயது எழுபத்து நான்கு. இவை உயர்ந்துகொண்டே இருக்கிறதாம். வளரட்டும்; வாழட்டும். நமக்கு நல்ல நண்பர்களா யிற்றே.

இந்தியத் தூதுக்குழு, சோவியத் நாட்டிற்குச் சென்றது, அவர்களது கொண்டாட்டத்தில் கலந்து கொள்

வதற்கே. நான் நோய்வாய்ப்பட்டதால், மற்ற மூவரும் மாஸ்கோ நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, இந்தோ சோவியத் உடன்படிக்கையை ஆதரித்துப் பேசினர்கள்.

சோவியத் கனரக அமைப்புகளின் அமைச்சகத்தைச் சேர்ந்தவர்கள் சோவியத்-இந்திய நட்புறவுத் திங்களைக் கொண்டாடினர்கள். அதில் சோவியத்தைச் சேர்ந்த பெரியவர்கள் பேசினர்கள். நம் இந்தியர்களும் பேசினர்கள். அந் நாட்டில், அரசு அலுவலகங்களில், பிற நாட்டு நட்புறவுக் கழகங்கள் பணிபுரிகின்றன. இக் கொண்டாட்டம் ஆர்வத்தோடும் சிறப்போடும் இருந்ததாம். நண்பர்கள் இதைப் பற்றி எனக்குத் தெரிவித்த போது, நல்ல வாய்ப்பை இழந்துவிட்டோமே என்று ஏங்கினேன்.

மாஸ்கோவில் மற்ருேர் நிகழ்ச்சி, உடை தயாரிப் போர், கொண்டாடிய சோவியத் இந்திய நட்புறவு மாத மாகும். இக் கூட்டமும் உவகையோடும் சிறப்பாகவும் நடந்ததாக நண்பர்கள் மூலம் அறிந்தேன். மீண்டும் ஏக்கம். இரு சார்பிலும் உள்ள உவகையோடு ஆதரவுப் பேச்சுகள் இருந்தன.

என்னை விட்டுவிட்டு, இந்திய நண்பர்கள், 'பொருளாதார முன்னேற்றக் கண்காட்சி'க்கு சென்றிருந்தார்கள். அது பெரிய கண்காட்சி. நாள் முழுவதும் பார்த்தாலும், அத்தனைக் காட்சிகளையும் காண முடியாது.

சோவியத் நாடும், அதில் அடங்கியுள்ள பதினைந்து குடியரசுகளும், வேளாண்மை, தொழில், கல்வி, கலை, ஆய்வு, மருத்துவ வசதி, உறையுள், ஆகிய பல்வேறு துறைகளிலும், பெற்று வந்துள்ள முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் விளக்கும் வகையில் அக் கண்காட்சி அமைந்துள்ளது.

அதில் கூத்து, கேளிக்கை, சூதாட்டம் எதுவும் கிடையாது. அறிவு கொடுக்கும் கண்காட்சியாக மட்டும் உள்ளது. அதைப் பற்றி, நண்பர்கள் சொன்ன போது எனக்குக் குறையோ ஏக்கமோ தோன்றவில்லை. ஏன்? நான், ஏற்கனவே ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து ஏழில் அக் கண்காட்சியைக் கண்டுள்ளேன். அதன் பெருமையை உணர்ந்துள்ளேன். அவர்கள் ஒவ்வோர் ஐந்தாண்டு திட்டத்தின் போதும் எட்டிப் பிடித்துள்ள புதிய குறியீடுகளை அறிந்து வியந்ததோடு நானும் ஊக்கம் பெற்றிருக்கிறேன்.

மாஸ்கோவில் அடுத்த நிகழ்ச்சி, சோவியத் - இந்திய நட்புறவுக் கழகத்தால் கூட்டப்பட்ட, பொதுக் கூட்டம். மேற்படி நட்புறவுக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் இக் கூட்டம் நடந்தது. மண்டபம் நிறையத் தோழர்கள் கூடினார்கள். சோவியத் நாட்டின் பெரியபுள்ளிகள் இரண்டு மூன்று பேர், நாம் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கையை ஆதரித்தும், இரு மக்களுக்கிடையிலும் நட்பும் நல்லுணர்ச்சியும் மேலும் பரவி வளர வேண்டியும் அருமையான உரைகள் நிகழ்த்தினர்.

இந்தியர்கள் சார்பில், மாஸ்கோவில் நம் தூதுவராக உள்ள திரு செல்வங்கர், தூதுக் குழுவின் தலைவர் திரு ஹென்றி ஆஸ்டின் ஆகிய இருவரும் உரையாற்றினர். இவர்கள் உரைகளும் நல்ல ஆர்வமுடையனவாக அமைந்தன.

அவையோர் வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள் அல்லர். கொள்கைப் பிடிப்பால் அக் கூட்டத்திற்கு வந்தவர்கள். அவர்கள் அடிக்கடி நீண்ட கையொலியின் மூலமும் ஆர்வமான வாழ்த்தொலியின் மூலமும் இந்திய சோவியத் நட்புறவு வளர வேண்டுமென்னும் தங்கள் அவாவை வெளிப்படுத்தினார்கள்.

இக் கூட்டத்திற்கு நானும் சென்றிருந்தேன். மேடை மீதமர்ந்து, அவையோர் முகபாவங்களைக் கண்டு ரசித்து, நானும் ஆர்வம் கொண்டேன்.

கூட்டத்திற்குப் பின் எங்களுக்கு தேனீர் விருந்து அளித்தார்கள். விருந்து நன்றாக இருந்தது; உள்ளன்பு கலந்ததாகவும் இருந்தது. இவற்றையெல்லாம் திறம்பட ஏற்பாடு செய்த, லுபோ முத்ரோவை எல்லோரும் பாராட்டிப் போற்றி விட்டு, விடுதிக்கு திரும்பினோம்.

எங்கள் மாஸ்கோ நிகழ்ச்சியின் முற்பகுதி முடிவடைந்தது. அடுத்த நாள் நாங்கள் நால்வரும் இரு குழுக்களாகப் பிரிந்து, இரு வேறு பக்கம் போவதென்று முடிவு செய்யப்பட்டது.

திரு. ஹென்றி ஆஸ்டினும், திரு. யாதவும் ஓர் குழு. அவர்கள் இருவரும் டாஷ்கண்டிற்குச் சென்றார்கள். இரண்டு நாட்கள், டாஷ்கண்ட் நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்த, நட்புறவுக் கூட்டங்களில் கலந்து கொண்டு. அங்கிருந்து நேரே, லெனின் கிராடுக்குப் பறந்து சென்றார்கள்.

திரு. ரஷீத்துடன் அகமத்கானும் நானும், அஜெர் பெய்ஜான் குடியரசின் தலைநகராகிய 'பாக்கு' நகருக்குச் சென்று அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, மாஸ்கோவுக்குத் திரும்ப வேண்டும். பிறகு, லெனின் கிராடு செல்ல வேண்டும். இது போடப் பட்டிருந்த திட்டம்.

இத் திட்டத்தின்படி, நாங்கள் நவம்பர் பன்னி ரண்டாம் நாள் அதிகாலையில் மாஸ்கோவிலிருந்து, 'பாக்கு'விற்குப் புறப்பட்டோம். விமானம் காலை ஐந்து மணிக்குப் புறப்பட்டது. எனவே நாங்கள் விடியற்காலை நாலரை மணிக்கு ஓட்டலை விட்டுப் புறப்பட நேர்ந்தது.

ஆயத்தமாவதற்காக, நாலு மணிக்கு விழித்த போது, எவ்வளவோ எரிச்சலாக இருந்தது.

ஐந்து மணி நேரம் பயணத்திற்குப் பின் நாங்கள் பாக்கு விமான நிலயத்தில் இறங்கினோம். பனி மூடிய மாஸ்கோவிலிருந்து பறந்து வந்த நாங்கள், ஒளிமயமான ஊரைக் கண்டோம். எங்கும் இளம் வெயிலின் ஒளி. பனியே இல்லாத நிலப் பரப்பு. நம் நாட்டிற்கு வந்து விட்டது போன்ற நினைப்பு. அந்த உவகையில் எனக்கு காய்ச்சலால் ஏற்பட்ட உடற் சோர்வு கொடியில் பறந்து விட்டது. தெம்போடு, விமானத்திலிருந்து முதலில் இறங்கினேன்.

படிக்கட்டுகளின் அருகில், ஓங்கி உயர்ந்து வளர்ந்த பெரியவர் ஒருவர், கையில் ரோஜாப் பூச்செண்டோடு நிற்பதைக் கண்டேன். அவர் பின்னால் மேலும் இருவர் அத்தகையப் பூச்செண்டோடு இருப்பதையும் கண்டேன். எங்களை வரவேற்க வந்தவர்களோ என்று எண்ணினேன்.

என் ஆசை நிறைவேறிற்று. கடைசிப் படியில் கால் எடுத்து வைத்தேன். பெரியவர் இரண்டடி முன் வந்து,

'சலாம்மாலேகும் ; இந்திய நண்பரே' என்று கூறிக் கொண்டே என் கையில் பூச்செண்டைக் கொடுத்தார்,

'ஆலேகும் சலாம்' என்று பதில் கூறிவிட்டு, என் பெயரை 'வேலு' என்று கூறி அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

அடுத்து அகமத்கானை அறிமுகப்படுத்தினேன் அவரையும் பூச்செண்டு அளித்து வரவேற்றனர்.

சோவியத் - இந்திய நட்புறவுக் கழகத்தின் பாக்கு கிளையின் தலைவராவார் அப் பெரியவர். அவர் பெயர் அகா ரெசா குலியவ் ஆகும்.

அப்பெரியவர், தன்னுடன் வந்திருந்த இரு தோழர்களையும் எங்களுக்கு அறிமுகப்படுத்தினர்.

பெரியவரும் மற்ற தோழர்களும் எங்களைக் கட்டி அணைத்துக் கொண்டார்கள்.

அப்பெரியவர், பாக்கு வானொலி நிலையத்திலிருந்தும் தொலைக் காட்சி நிலையத்திலிருந்தும் செய்தியாளர்களை அழைத்து வந்திருந்தார். விமானத்தண்டையே, தொலைக் காட்சிப் படங்களை எடுத்தனர். வானொலியில் ஒலி பரப்பும் பொருட்டு செய்தி கேட்டார்கள். முதலில் நானும் அடுத்து அகமத்கானும் சிற்றுரை நிகழ்த்தினோம்.

ஒளிமயமான அஜெர்பெய்ஜானின் தலைநகருக்கு முதன் முறையாக வந்திருப்பதைப் பற்றி எங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தோம். ரோஜாச் செண்டுகளைப் பெற்றதும் எங்கள் நாட்டில் உடன் பிறந்தார்களோடு அளவளாவது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. வரவேற்பு ஆர்வத்தோடு உள்ளது. உள்ளத்தைத் தொடுகிறது.

தொன்று தொட்டு இந்தியரோடு தொடர்புடைய இப் பகுதிக்கு வந்துள்ளது, புதிய தொடர்பினையும் நட்பையும் வளர்ப்பதாக என்ற விருப்பத்தினை வெளியிட்டோம். இந்தியாவில் எண்ணெய் ஊற்றுகளைக் கண்டு பிடித்து உதவிய வல்லுனர்களை அனுப்பிய இக் குடியரசுக்கு வந்தது எங்களுக்கு நிறைவைக் கொடுக்கிறது. நம் நாடுகளுக்கிடையே உறவு நெருக்கமாவதாக. நட்பு நீடித்து வளர்வதாக. ஒத்துழைப்பு பெருகுவதாக. அமைதி நிலவுவதாக. அதன் மூலம் வையம் அமைதியில் வாழ்வதாக என்று நாங்கள் அளித்த செய்தியை அவர்கள் பெரிதும் பாராட்டினார்கள்; வரவேற்றார்கள். வானொலியில் ஒலிபரப்பினார்கள். அடுத்த நாள் காலை, நாளிதழில், நல்ல வண்ணம் வெளியிட்டார்கள்.

எங்கள் செய்திகளை, இறங்கிய இடத்திலேயே, பதிந்து கொண்டபிறகு, பெரிய கார் ஒன்று அங்கு வந்து

நின்றது. சில அடி தூரமும் நடக்காது அப்படியே காரேறி, பாக்கு நகருக்குள் சென்ரோம். எங்கள் பெட்டிகளை, உடன்வந்த தோழர்கள் சரிபார்த்துக் கொண்டு வந்தார்கள். பெரியவர் கலகலப்பான பேர் வழி. உடற்தோற்றத்தில் எவ்வளவு பெரியவரோ அவ்வளவு பெரியவர் உள்ளத்திலும்.


வழிநெடுகப் பேசிக்கொண்டே வந்தார். பனியறியா நகரம் பாக்கு என்று பெருமைப்பட்டார். ரோஜாவும் திராட்சையும் நிறைந்த பகுதி அஜெர்பெய்ஜான் என்று பெருமைப்பட்டார். எண்ணெய் வளத்தில் ஈடு இணை யற்றதாக விளங்குவது அக் குடியரசு என்று பூரித்தார்.

''இதோ பாருங்கள்! சாலையின் இருமருங்கிலும், எத்தனை இரும்புக் கம்பங்கள்! இந்த இரும்புக் கம்பங்கள் போல் காட்சியளிப்பவற்றை, தாங்கிக் கொண்டிருக் கின்றன கட்டைகள். கம்பமாகத் தோன்றும் ஒவ்வொன்றும் எண்ணெய் எடுக்கும் 'டிரில்' ஆகும். இதுவே எங்கள் சொத்து.

''எண்ணெய் நகரமாகிய பாக்கு, முற்காலத்தில் கரி படிந்த அழுக்கு நகரமாக இருந்தது. இப்போது எவ்வளவு நன்ருக உள்ளது என்பதை நீங்களே காண்பீர்கள்! துறைமுகப் பட்டினமாகிய இந்நகரம், கல்வி நகரமாகவும், தொழில் நகரமாகவும் விளங்குகிறது.''

இப்படிச் சொல்லிக் கொண்டே, நீண்ட நல்ல நெடுஞ் சாலைகளின் வழியே நகரத்திற்குள் அழைத்து வந்தார். நகரத் தெருக்களின் சீரையும் ஒழுங்கையும் வியந்துகொண் டிருக்கையிலேயே, கார் சட்டென்று, பெரிய கட்டடத் தண்டை நின்றது.

''இந்த 'இன்டூரிஸ்ட்' ஓட்டலில் நீங்கள் தங்கு கிறீர்கள். தயவுசெய்து இறங்கி வாருங்கள்'' என்று நண்பர்கள் அழைக்க, பாக்கு நகர ஓட்டலில் நாங்கள் குடியேறினேம்.



# 14

இன்டூரிஸ்ட் ஓட்டலில், தனி அறையொன்றில், எங்களுக்கு பகல் உணவு ஏற்பாடு செய்யப்பட்டது. எங்களைச் சேர்த்து ஆறு பேர் விருந்துண்டோம். அது பலமான விருந்து; பலவகைப் பண்டங்கள்; உபசரிப்புக்கு ஈடு இணையில்லை.

முதலில் உஸ்பெக் தோழர்கள் விருந்தளித்தபோது, அந்த உபசரிப்புக்கு ஒப்பு இல்லையென்று உணர்ந்தோம். சென்றமுறை இந்தியதூதுக்குழு ஜார்ஜிய தோழர்களோடு தங்கியபோது, அவர்களது விருந்தோம்பலும் எங்களை திக்குமுக்காடச் செய்தது. உக்ரெய்ன் குடியரசுக்குச் சென்றபோது உக்ரெய்ன் அன்பர்களது கவனிப்பும் விருந்தும் இணையற்றிருந்தது. இம் முறை அஜெர்பெய்ஜான் மக்களின் விருந்தோம்பலை உணர்ந்து திகைத்தோம். விருந்தோம்பலில், குடியரசுக்குக் குடியரசு தலைதெறிக்கும் போட்டிபோல் எங்களுக்குத் தெரிந்தது. அவ்வளவு தாராளமாக உபசரித்தார்கள், எல்லோரும்.

மேனுட்டார் விருந்து, பானத்தோடு தொடங்கும் அஜெர்பெய்ஜானிலும் அப்படியே.

குடிப்பவர்களுக்கு, இந்தியாவில் எவ்வகையான மது வகைகள் கிடைக்கும் என்று கேட்டார்கள் "பாக்கு" தோழர்கள். திகைத்தேன். நண்பர் திரு. அகமத்கான் துணைபுரிந்தார்.

ஒயின், விஸ்கி, பிராந்தி, அரக் ஆகியவை கிடைக்கும் என்றார். எதை எதை இங்கே குடிக்க விரும்புகிறீர்கள் என்று கேட்டபோது, நாங்கள் மதுவகையே அருந்துவ தில்லை என்றோம்.

''எங்கள், ஓட்கா, கோனியாக் ஆகியவை கொடுக் கட்டுமா? 'அரக்' - சாராயம் - வேண்டுமானாலும் கிடைக்கும். எங்கள் நாட்டு சாராயத்தைச் சுவைத்துப் பாருங்களேன்'' என்று எவ்வளவோ உபசாரம் செய்தார் கள். நாங்கள் பழச்சாற்றோடு நின்று விட்டோம். நல்ல ஆரஞ்சுப் பழச்சாறு, பெரிய கண்ணாடிப் பாத்திரம் நிறைய இருந்தது. அதை எத்தனைமுறை, எங்கள் 'கிளாஸில்' ஊற்றிக் குடிக்க வைத்தார்கள், என்ற கணக்கு மறந்து விட்டது. நிறையக் குடித்தோம் - பழச்சாற்றையே.

நல்ல காய்கறி புலாவ்; அரிசி, தும்பைப் பூவைப் போல் வெண்மையாகவும் மென்மையாகவும் இருந்தது. மற்றவர்களுக்கு, பலவகை மாமிசக் கறிகள். எனக்கு அருமையான காய்கறிப் பதார்த்தங்கள்.

உணவின்போது, கைக்கும் வாய்க்கும் சண்டையை மட்டும் நாம் அறிவோம். அம் மக்கள், உண்டுகொண்டே எத்தனையோ பேசுகிறார்கள். அதுமட்டுமா? வாழ்த் துரைகள் பல, உணவருந்தும்போது. உணவருந்தும் போது ஒரே கலகலப்பு.

சாப்பாட்டின்போது பாக்குத் தோழர் எங்களை வரவேற்று, எங்கள் நலனுக்காக, எழுந்து நின்று, குடித்து வாழ்த்தினார். குடித்து வாழ்த்துவதற்குப் பெயர், 'டோஸ்ட்' கூறுதல்.

நாங்கள் அவர்களுடைய தோழமையை வரவேற்றுப் பாராட்டி, குடித்து வாழ்த்தினோம்.

'பழச்சாறு 'டோஸ்ட்' என்ன 'டோஸ்ட்' போங்கள்' என்று கிண்டல் செய்தார், பெரியவர்.

அடுத்து அப் பெரியவர், இந்தியாவையும் இந்திய மக்களையும் வாழ்த்தி, அவர்கள் நல்வாழ்விற்காகக் குடித்தார். எல்லோரும் சேர்ந்து கொண்டோம்.

பிறகு, அஜெர்பெய்ஜான் குடியரசிற்கும் அதன் மக்களுக்கும் நல்வாழ்த்துக் கூறிக் குடித்தார், திரு. அகமத்கான்.

நான், சோவியத் நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் இந்தியாவின் - இந்திய மக்களின் நல்வாழ்த்துக்களைக் கூறி, குடிக்க எழுந்து நின்றேன். அனைவரும் எழுந்து நின்று குடித்தோம்.

இப்படி, வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டு, உண்டு முடிக்க, இரண்டு மணிகள் ஆயின. நல்ல தயிரும் அருமையான பழவகைகளும் உண்டேனே! அதை நினைக்க நினைக்க இனிக்கிறது.

சாப்பாட்டிற்குப் பிறகு, ஒருமணி நேர ஓய்வு கொடுத்தார்கள். பிறகு நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். உள்ளூர் தோழர்கள் இருவர் உடன்வந்தார்கள்.

பாக்கு நகரம், அஜெர்பெய்ஜான் குடியரசின் தலைநகரம். இக் குடியரசு, சோவியத் ஒன்றியத்தில் அடங்கியுள்ள பதினைந்து குடியரசுகளில் ஒன்றாகும். இது பெரிதும் மலைநாடு. இக் குடியரசு பரப்பிலோ, மக்கள்

எண்ணிக்கையிலோ பெரிதல்ல. அதன் நிலப் பரப்பு கிட்டத்தட்ட எண்பத்தேழு ஆயிரம் சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். இதற்குள் எட்டுவித, தட்பவெப்ப நிலைகள் உண்டு.

மக்கள் எண்ணிக்கை, நாற்பத்தாறு இலட்சமே. இதில் அஜெர்பெய்ஜான் இனத்தவர், நூற்றுக்கு எழுபது விழுக்காடு. இந்த நாற்பத்தாறு இலட்சம் மக்களில் பன்னிரண்டு இலட்சம் மக்கள், தலைநகராகிய பாக்குவில் உள்ளனர். சோவியத் நாட்டின் நான்காவது பெரிய நகரம் பாக்கு ஆகும். பாக்கு துறைமுகப்பட்டினமும் ஆகும். இது, காஸ்பியன் கடற்கரையில் அமைந்துள்ளது. இங்கிருந்து, கப்பல் போக்குவரத்து பெருமளவு உண்டு. ஆட்கள் போவதோடு, எண்ணெய், இரசாயனப் பொருள்கள் ஆகியவை கப்பல்களில் செல்கின்றன.

பாக்கு என்ற பெயருக்குப் பொருள் உண்டா? உண்டு. பாக்கு என்றால் காற்றூர் என்று பொருள் காஸ்பியன் கடற்கரையில் அமைந்துள்ள அந் நகரத்தில் அதிகக் காற்று அடித்துக் கொண்டே இருப்பதைக் கண்டு இப் பெயரை இட்டார்கள் போலும்.

இது தொன்மையான நகரம். இந் நகரத்தின் உட்பகுதி பழைய நகரம். அது கோட்டையூர். பழைய நகரத்தைச் சுற்றி மதில் சுவர் உள்ளது. அச் சுவரின் குறுக்களவு மூன்று மீட்டர்கள். அது எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மதிலாம்.

பழைய நகரத் தெருக்கள் குறுகலானவை. இப்போது எல்லாத் தெருக்களுக்கும் தார் போட்டிருக்கிறார்கள்.

பழைய நகரத்தில் நிறைய மசூதிகள் உள்ளன. அவற்றின் எண்ணிக்கை எழுபது என்று கேள்விப் பட்டோம், நாங்கள் அவற்றில் மிகப் புகழ்பெற்ற பள்ளி

வாசலுக்குச் சென்றோம். நாங்கள் சென்றது ரம்சான் மாதத்தில்.

காலணிகளைக் கழற்றி, வெளியே வைத்து விட்டு பள்ளிவாசலுக்குள் மெல்ல அடியெடுத்து வைத்து நுழைந்தோம். பள்ளிவாசலைச் சேர்ந்த ஒருவர், எங்களை மரியாதையோடு உள்ளே அழைத்துச் சென்றார். உட் கூடம் இருநூறு முந்நூறு பேருக்குப் போதுமானது.

உள்ளே, ஆள் உயரத்திற்கும் மேலாக அமைக்கப் பட்டிருந்த இருக்கையொன்றில், ஒருவர் அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரில், விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தின் மீது, ஐம்பது அறுபது முதியவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். உயர்ந்த பீடத்தில் இருந்தவர், மூச்சு விடாமல் சொற் பொழிவு செய்து கொண்டிருந்தார். பக்தர்கள் மௌன மாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மற்றோர் பக்கம் கறுப்புத் திரைக்குப் பின்னால், சில பெண்கள் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

பழைய முறைப்படி நடப்பதாக இருந்தால், பெண்கள் பள்ளிவாசலுக்குள் வந்து அமரக் கூடாதாம். இப்போது உள்ளே வந்திருப்பது முன்னேற்றமாம். வெளியே, பெண்கள் முகமூடி அணியாவிட்டாலும், பள்ளிவாசலில் திரைக்குப் பின்னால் இருந்தாவது கேட்க உரிமை கொடுத்திருப்பது இன்றைய முற்போக்கின் அடையாளம்.

பள்ளிவாசலுக்குள் நுழைந்த எங்களுக்கு, சுவர் ஓரமாக, நாற்காலிகளைப் போட்டு அமரச் செய்தார்கள். அங்குள்ள குரான் நூல்கள் அடுக்கிலிருந்து, ஒன்றை வாங்கிப் படித்தார், திரு. கான்.

பத்து நிமிடங்கள், அங்கே, புரியாத சொற் பொழிவை, மரியாதையோடு கேட்ட பிறகு, பூனைகள் போல் ஓசைப்படாமல் வெளியே வந்து விட்டோம்.

நாங்கள் பாக்கு நகரத்தில் கண்ட மற்றொன்று, ஷிர்வான் மன்னர்களின் அரண்மனை. அது பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பாதியில் கட்டப்பட்டது. அது அந்நாட்டின் கட்டடக் கலைக்கு புகழைத் தேடித் தருகிறது. அதைக் கட்டிய மன்னனின் உடலை அங்கே ஒரு பக்கம் அடக்கம் செய்துள்ளார்கள்.

அரண்மனையின் ஓர் கோடியில் கீழ் மட்டத்தில் குளியல் அறைகள் உள்ளன.

அரண்மனைக்குள் உள்ள ஆண்கள் குளிப்பதற்கு திங்கட்கிழமையும், பெண்கள் குளிப்பதற்கு புதன் கிழமையும் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்ததாக, அங்குள்ள வழிகாட்டி, எங்களுக்கு விளக்கிய போது, நான், அந்த மன்னரையும் அவரது குடும்பத்தையும் எண்ணி பொறுமைப்படவில்லை. மாறாக, அனுதாபப்பட்டேன்.

முற்காலத்தில் மன்னர் கூட, வாரத்திற்கு ஒரு நாள் மட்டுமே குளிக்குமளவிற்கு தண்ணீர் தட்டுப்பாடு இருந்த அந் நகரத்தில், இப்போது, தண்ணீரும் வெந்நீரும் எப்போதும் தாராளமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அவை, என்னைப் போன்ற சாதாரணமானவனுக்கும் கிடைக்கிறது.

அந்த இடிந்த அரண்மனையையும் கோட்டையையும் இப்போதைய ஆட்சி, நன்றாகப் பாதுகாத்து வருகிறது. அவற்றைச் சுற்றிக்காட்டி வர, ஆட்சியின் செலவில் வழிகாட்டிகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் வெறும் கற்றுக் குட்டிகள் அல்லர். வரலாறும் தொல்பொருள் விளக்கங்களும் ஆழ்ந்து கற்றவர்கள்.

அரண்மனையிலும் பிற தொன்மையான கட்டடங்களிலும் பயன்படுத்திய பொருள்களை யெல்லாம் பாதுகாத்து, ஆங்காங்கே காட்சியில் வைத்திருக்கிறார்கள்.

ஐநூறு ஆண்டுகளாக இருந்து வந்த அரண்மனையை அப்படியே காத்து வருவதைக் கண்ட போது, நம்மவர் ஆட்சிக்கால, கோட்டையோ அரண்மனையோ - இடிந்த நிலையில் கூட - அக்காலத் தமிழரைப் பற்றிச் சாட்சி சொல்ல இல்லையே என்று ஏங்கினேன்.

தங்கள் நாட்டில் மன்னர் ஆட்சிக்கும் தனியுடைமைக்கும் பெரும் பகையான சோவியத் ஆட்சி, அவற்றின் அடையாளங்களான கோட்டைகளையும் மாளிகைகளையும் சிறிதும் பழுதுபடாமல் காத்து வருவதைப் போற்றாமல் இருக்க முடியவில்லை.

'நம் மூவேந்தர்களுக்கு மாளிகையே இல்லையா? இருந்திருந்தால், ஒன்றாவது இடிந்த நிலையிலாவது காட்சியளித்திருக்குமே' என்று என் அருமை நண்பர் ஒருவர், இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்ட நல்லவர் ஒருவர், ஆழ்ந்த தமிழறிவு உடைய ஒருவர் என்னிடம் கேட்பதுண்டு. அப்போது எனக்குப் பதில் தெரியவில்லை. இப்போதும் சரியான பதில் தெரிந்தது என்று கூற முடியாது.

பாக்கு நகரில் அந்த அரண்மனையைக் கண்டபோது, நினைவில் மின்னிய பதிலுக்கு 'பாஸ்' எண் கிடைக்குமோ என்னவோ! இதோ அம் மின்னல்.

மன்னர்களை வென்ற பாட்டாளிகளோ அவர்களது அரசோ, அம் மன்னர்களின் பெயரும் புகழும் நீடிக்குமே என்பதற்காக அவர்களது சாதனையின் சிறப்புச் சின்னங்களை சிறிதும் அழிக்கவில்லை. அவற்றைப் பார்க்கும் பிந்திய சந்ததியாருக்கு, அவை, அவற்றைப் போல, அவற்றிற்கும் மேலாகச் சாதனை புரியத் தூண்டு கோல்களாக அமைகின்றன.

நம் நிலை என்ன? ஒரு தமிழ் மன்னனை மற்றோர் தமிழ் மன்னன் வென்றதும், முந்தியவன் கட்டிய அனைத்தையும் அழிப்பதே முதல் வேலை. அவன் சிறப்பாகச் செய்து புகழ் தேடிக் கொண்ட அனைத்தையும் தடம் தெரியாமல் இருட்டடிப்பு செய்வதிலேயே முனைப்பு. 'தமிழ் மக்களின் சிறப்புக்குச் சான்றுகளாக விளங்கட்டுமே' என்று விட்டு வைத்த பெரிய மனம் உடையவர்களைக் காண்பது அருமை.

கோயில்களை மட்டும் விட்டு வைத்திருக்கிறார்களே. தன்னால் வெல்லப்பட்டவன் கட்டியது என்பதற்காக அதனை அழிக்கவில்லையே? இந்த ஐயம் எழுகிறதா? இறைவன் இல்லத்தில் கைவைத்தால் பொல்லாதது நேரிடும் என்று அஞ்சியோ, அல்லது மக்கள் கொதிப்பினை சமாளிக்க முடியாதென்று கருதி, முன்னவர் புகழ்பாட, விட்டு வைத்தார்கள் போலும்.

எது எப்படியிருப்பினும், நாம் நம் பொறுமைக் காய்ச்சலைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். வரலாற்று நாயகர்களின் சாதனைகளுக்கு உரிய சிறப்பினைத் தரவேண்டும். அதைவிட உயர்ந்த சாதனைகளின் மூலம் நமக்கும் இடம் தேடிக் கொள்ள வேண்டுமே ஒழிய, முன்னோர் சாதனைகளை அழித்தோ, மூடிமறைத்தோ, நாம் ஒளிவிட நினைப்பது, ஞாயிறுகளாக விளங்கவேண்டிய நம் இனத்தை, விண்மீன் களாகவே வைத்திருக்கும். தமிழர் சிறப்புச் சின்னமில்லாத சின்னவர்களாகவே காட்சியளிப்பர்.

அரண்மனையைச் சுற்றிப் பார்த்தபின், அங்குள்ள காட்சிக் காப்பாளரைப் பேட்டி கண்டோம். அவர் கலகலப்பாகப் பேசினார். பாக்கு நகரில் உள்ள தொன்மை அடையாளங்களை யெல்லாம் கண்டு தெரிந்துகொள்ள பல நாள் வேண்டும். எவ்வளவு வேலையிருந்தாலும்,

இந்தியாவிலிருந்து வந்த நாங்கள், அந் நகருக்கு அருகிலுள்ள, 'நெருப்பாலயத்தைக் கண்டு போகவேண்டுமென்று, பரிந்துரைத்தார். மேலும் நேரம் கிடைத்தால், அஜெர்பெய்ஜான் குடியரசின் வரலாற்றுக் கண்காட்சியைக் காண வேண்டுமென்றும் கருதினர், காட்சிக் காப்பாளர்.

அவருடைய இரு பரிந்துரைகளையும் ஏற்றுக்கொள்ள வழிவகுத்துக் கொடுத்தார்கள், உள்ளூர் தோழர்கள்.

அந் நகரில் தங்கியிருந்த இரண்டாம் நாள், நெருப்பாலயத்தைக் கண்டோம். முதலில் கண்டது வரலாற்றுக் கண்காட்சியை.

அக் கண்காட்சிக்குள் நுழைந்ததும் சில பெரிய முதுமக்கள் தாழிகளைக் கண்டோம். இறந்தவர்களை அத்தகைய தாழிகளில் இட்டுப் புதைப்பது மிகப் பழங்கால வழக்கம் என்று விளக்கினர், அங்குள்ள வழிகாட்டி. இத் தகவல் நமக்குத் தெரிந்ததே.

அந்தத் தாழிகள் அஜெர்பெய்ஜான் குடியரசில் கண்டெடுக்கப்பட்டவை என்று சுட்டிக்காட்டினர். அதிலிருந்து தெரிவது என்ன?

மக்கள் இனத்தின் மிகப் பழைய குடியிருப்புகள் அஜெர்பெய்ஜானில் இருந்தன என்பது புலனாயிற்று. பழைய கற்காலத்திலேயே, ஆதி மனிதன், அஜெர்பெய்ஜானில் குடியிருந்ததற்கு சான்றுகளை அக்கண்காட்சியில் காணமுடியும்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இப் பகுதியில், வெண்கலக் காலம் தொடங்கிற்றும்.

இப்போதைய அஜெர்பெய்ஜான் பகுதியில், கிறிஸ்துவுக்கு முன் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்

ஆண்டுக்குள், அடிமைகளை வாங்கும் அரசுகள் இரண்டு ஏற்பட்டன.

நீண்ட வரலாற்றுக் காலத்தில், இப் பகுதி பல வெளி நாட்டுப் படையெடுப்புகளில் சிக்கிச் சீரழிந்தது. துருக்கியர், பெர்சியர், ரோமர், அரேபியர், அசிரியர் ஆகிய பலருடைய போருக்கும் கொடுமைக்கும் கொள்ளைக்கும் ஆளாகி நலிந்தது. தோற்றபோதும் தோல்வி மனப் பான்மை கொள்ளாது, மீண்டும் மீண்டும் தலைதூக்கி வளர்ந்தது. சோவியத் ஒன்றியத்தில் முன்னேறிய பகுதியாக விளங்குகிறது.

பண்டைய படையெடுப்புகளையும் கொடுமைகளையும் அவர்கள் மறைக்கவில்லை.


பாக்கு நகரத்திற்கு அறுபது கிலோ மீட்டர் தூரத்தில், கோபிஸ்தான் என்ற பெரிய ஊர் உள்ளது. அதையடுத்துள்ள மலையின் கற்பாறைகளில், பண்டைய வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் சித்திரங்கள் உள்ளன. அச் சித்திரங்களின் எண்ணிக்கை கொஞ்ச நஞ்சமல்ல. இரண்டாயிரம் ஓவியங்கள் பேசாமற் பேசுகின்றன. அவற்றில் மிகப் பழையவை, நாலாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியனவாக இருக்குமென்கிறார்கள் தெரிந்தவர்கள். அதைக் கேட்டபோது நமது சித்தன்ன வாசலும், யானைமலையும் எனக்கு நினைவிற்கு வந்தன.

கோபிஸ்தான் கற்பாறை காட்டும் நடனத் தொடர் முறை, இன்றும் அஜெர்பெய்ஜானில் பின்பற்றப்படுவதாகக் கேள்விப்பட்டோம்.

முற்காலம், இடைக்காலம், இக்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் அஜெர்பெய்ஜான் மக்கள் கையாண்ட பாத்திரங்கள், அணிந்த அணிகலன்கள், உடுத்திய உடைகள், எடுத்த போர்க் கருவிகள் அனைத்தையும் அக் கண்காட்சியில் காணலாம்.

சோவியத் ஆட்சியில் ஏற்பட்ட வளர்ச்சிகள், முன்னேற்றங்கள், உயர்வுகள், கண்டுபிடிப்புகள், ஆகியவற்றையும் விளக்கும் வகையிலும் அக்காட்சி அமைந்துள்ளது. 'மியூசியம்' என்று 'தொல்பொருள் கொலு'வைக் குறிப்பிடுவது நம் மரபு. அவர்கள் நேற்று வரை நிகழ்ந்ததையும் விளக்கும் பொருள்களையும் படங்களையும், கருவிகளையும் கண்காட்சியில் வைக்கிறார்கள்.

இத்தகைய கண்காட்சிகள், எல்லாப் பெரு நகரங்களிலும் உண்டு. ஏராளமானவர்கள் அவற்றைக் காண்கிறார்கள். தங்கள் பெருமைகளை உணர்ந்து தலைநிமிர்ந்து வாழ்கிறார்கள். வரலாற்று ஓட்டத்தில் வந்து சென்ற இன்னல்களைத் தெரிந்துகொண்டு, விழிப்பாயிருந்து, இன்னற் சுழிகளிலிருந்து தப்புகிறார்கள். தாங்கள் ஒவ்வொருவரும் தன் தன் வாழ்க்கையில் சாதிக்கக் கூடியனவற்றைப் பற்றிய நினைப்புகளைக் கருவாக்கிக் கொள்ளுகிறார்கள். எல்லா நிலைக் கல்வியையும் இலவசமாக்கிவிட்ட சோவியத் நாட்டில் கண்காட்சிக்கு நுழைவுக் கட்டணம் உண்டு.



# 15

பாக்கு நகருக்கு அப்பால், பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில், சுரகாவி என்ற ஊர் உள்ளது. அவ்வூரில் தான் 'நெருப்பாலயம்' உள்ளது. நாங்கள் விரும்பியபடி, ஒரு நாள் மாலை, இருட்டும் வேளை, அங்கு போய்ச் சேர்ந்தோம்.

நுழைவாயில் பெரிதென்று சொல்லலாம். அதன் மாடியில், ஓர் அறை கட்டப்பட்டுள்ளது. அந்த அறை முற்காலத்தில், அக்கோயிலுக்கு வரும் பயணிகள் தங்குவதற்காகப் பயன்பட்டதாம்.

உள்ளே பெரிய திறந்த வெளியைக் கண்டோம். அதன் நடுவில் மண்டபமொன்று இருக்கிறது. மண்டபத்தின் நடுவில் சுடர் ஒன்று ஒளிவிடுகிறது. அது பெருஞ் சுடர். மண்டபத்திற்கு மேலே பார்த்தோம். நான்கு மூலைகளிலும், நான்கு சுடர்கள் எரிந்து கொண்டிருந்தன.

மண்டபத்தின் நடுவிலுள்ள பெருஞ் சுடரும், மேலே ஒளிவிடும் நான்கு பந்தங்களும் ஆண்டு முழுவதும் எல்லா

நாட்களும் எல்லா நேரமும் எரிந்து கொண்டே இருக்குமாம். இவ்வணையா விளக்குகள் எப்படி எரிகின்றன? எண்ணெய் ஊற்றி எரிவிக்கவில்லை. இயற்கை ஆவியின் மூலம் எரிகின்றன.

இப் பகுதியில் பல இடங்களில் பூமிக்கடியிலிருந்து இயற்கை ஆவி பொங்கி வருகிறது. அதைக் குழாய்களின் மூலம், பல இடங்களுக்குக் கொண்டு சென்று, எரி பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். அத்தகைய ஆவிக் குழாயை அந்த ஐந்து பந்தங்களுக்கும் இணைத்திருக் கிறார்கள். இடையறாது வந்து கொண்டிருக்கும் ஆவியினால் விளக்குகள் ஐந்தும் என்றும் எப்போதும் எரிகின்றன. அதற்கான செலவை, சோவியத் ஆட்சி ஏற்றுக் கொள்ளுகிறது.

சாதாரணமாக நெருப்பாலயம் பார்சிகளுக்குரியது. நெடுங்காலத்திற்கு முன்னர், இவ்வட்டாரத்தில் பார்சியர் குடியிருந்ததாகக் கேள்வி. அக்காலத்தில் பார்சியர் நெருப்பாலயம் அமைத்திருக்கக் கூடும்.

பிற்காலத்தில், அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய வணிகர்கள் சிலர், இவ்வூரில் குடியேறி வாணிபஞ் செய்தனர். சிறந்த இரத்தினக் கம்பளங்கள், வாசனைப் பொருட்கள், பொன் நகைகள் ஆகியவற்றில் அவர்கள் வாணிபஞ் செய்தார்களாம்.

இந்திய வணிகர்கள், வடபகுதியிலிருந்து வந்தவர்கள். அவர்கள் காலத்தில் இக் கோயில் இந்துக்கள் கோயிலாக மாறியதாகக் கருதலாம்.

நாற்புறமும் உயர்ந்த மதிற்சுவர்களை உடையது இக் கோயில். மதிற்சுவரை ஒட்டி, பல அறைகளைக் கட்டி யுள்ளார்கள் அவ் வணிகர்கள். அவை, பயணிகளோ, வணிகர்களோ தங்கும் உறையுட்களாக அக் காலத்தில்

பயன்பட்டன, எல்லா அறைகளையும் இன்றும் பத்திரமாகப் பாதுகாத்து வைத்துள்ளார்கள். அக் கோயிலுக்குள், பதின்மூன்று 'சாசனங்கள்' பதிக்கப்பட்டு உள்ளன. அவற்றுள் பன்னிரண்டு சமஸ்கிருதத்தில் உள்ளன; ஒன்று பெர்சிய மொழியில் உள்ளது. அநேகமாக எல்லாமே சுருக்கமானவை.

பல சாசனங்கள், ஒவ்வொரு அறையையும் கட்டியவர்களைப் பற்றி பேசுகின்றன. சில இறைவழிபாடுகளாக அமைந்துள்ளன.

ஒவ்வோர் சாசனத்திற்கு அடியிலும் ஆங்கில மொழி பெயர்ப்பையும் இரஷ்ய மொழி பெயர்ப்பையும் எழுதி வைத்துள்ளது சோவியத் ஆட்சி. பழைய சாசனங்களைப் பாதுகாப்பதோடு, அவற்றிற்கு மொழிபெயர்ப்புகளும் எழுதி வைத்து உதவும் ஆட்சியின் பெருந்தன்மை என்னே!

அறைகளில் ஒன்றில் பூசைப் பொருட்களைக் கண்டோம். திரிசூலம் உள்ளது. சிறிய மணி உள்ளது. தட்டு இருக்கிறது. தீபாராதனைக்குரியதும் பத்திரமாக இருக்கிறது. பெரிய பெரிய சிலைகளையும் கோணிப்பைக்குள் சுருட்டி கப்பலேற்றிவிடும் வல்லவர்கள் உள்ள நாட்டிலிருந்து சென்ற எனக்கு, சின்னஞ்சிறு பூசைப் பொருள்களைக்கூட பாதுகாத்து வைத்திருக்கும் பாங்கு வியப்பை ஊட்டிற்று. திகைத்து நின்றேன். என்னையறியாமலேயே நன்றியுணர்ச்சி பெருக்கெடுத்தது.

"வேலு! நேரமாகிவிட்டது. நகருக்குத் திரும்ப வேண்டுமே! வாருங்கள் போவோம்" என்று கூறி தோழர்கள் என்னை வெளியே அழைத்து வந்தார்கள்.

நந்தா விளக்குகளை உடைய இந்த ஜோதி ஆலயத்தில் பூசாரிகள் இல்லை. காவற்காரர் உண்டு. அதுபோக,

இயக்குனர் உண்டு. அவர் 'மியூசியம்' காப்பதில் பயிற்சி பெற்றவர். இக் கோயிலின் இயக்குனர் ஓர் பெண்மணி. முப்பது வயதுக்கும் குறைவாக மதிப்பிடக்கூடிய இளமையுடையவர் அந்த அம்மையார். அவர் ஒரு மணி நேரத்திற்குமேல், மிகப் பொறுமையாக, எங்களுக்குக் கோயில் முழுவதையும் காட்டி, விளக்கினார். அந்த உதவி என்றும் நினைவிலிருக்கும்.

பாக்கு நகரில் தங்கியிருந்தபோது ஓர் இரவு, நாங்கள் கால்பந்தாட்டப் பந்தயத்தைப் பார்த்தோம். மின் விளக்குகள் பொழியும் செயற்கை ஒளி மழையில் பந்தாடுவதில் சோவியத் மக்களுக்கு எத்தனை மகிழ்ச்சி! பந்தயம் நடந்த விளையாட்டு அரங்கு பெரியது. அன்று காண வந்தோர், ஏராளம் நாங்கள் ஓர் அரை மணி நேரம் அந்த வேடிக்கையைப் பார்த்துவிட்டு, வெளியேறினோம்.

சோவியத் மக்களின் கலையார்வத்தை நிறைவு செய்யும் பொருட்டு, நகரந்தோறும் பற்பல கலையரங்குகள் உள்ளன, நாடகத்திற்குத் தனியாக, நாட்டிய நாடகத்திற்கு தனியாக, இசைக் கச்சேரிகளுக்குத் தனியாக என்று அரங்குகளை அமைத்திருக்கிறார்கள்.

மாஸ்கோவில் அத்தகைய கலையரங்குகள் முப்பத்தைந்து உள்ளன. பாக்கு நகரிலும் நான்கு உண்டு. அவற்றில் ஒன்றில் நடந்து கொண்டிருந்த நாடகத்தைப் பார்க்கச் சென்றோம்.

அரங்கின் இயக்குனர் எங்களை வரவேற்று உபசரித்தார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதாம் ஆண்டு அதே அரங்கில், அடிமைப்பட்டுள்ள ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் காங்கிரஸ் நடந்ததாம். அதற்கு, காலஞ்சென்ற எம். என். ராய் வந்திருந்தார் என்று சொல்லி எங்கள் உள்ளத்தைத் தொட்டார்.

நாங்கள் பார்த்த நாடகத்தின் பெயர் ''லைலா மஜ்னூன்.'' இது ஓர் காதல் நாடகம். நாடகம் நன்றாக இருந்தது. காட்சிகள் பொருத்தமாக இருந்தன. காட்சிக்குக் காட்சி இடைநேரம் சில மணித்துளிகளே. விரைந்து விளையாற்றினர் அனைவரும்.

நாடகத்தைப் பார்த்துவிட்டு வரும்போது, 'அதை எடைபோட்டோம். ''எல்லோரும் ஏற்றுக் கொண்ட பாத்திரத்திற்குப் பொருத்தமாகவே நடித்தார்கள். ஆயினும், லைலா மிகத் தடியாக இருந்தாள். அவளுடைய தாயாராக நடித்தவரே, இளமையாகக் காட்சியளித்தார். அவர் லைலாவாக நடித்திருக்க வேண்டும்'' என்று ஒரு மனதாக முடிவு செய்தோம். எங்கள் முடிவு அவர்களுக்கு எட்டுமா?

பாக்குவின் புது நகரம் அகன்ற தெருக்களையுடையது. புது நகரத்தில் நல்லதொரு பூங்காவிற்கு அழைத்துச் சென்றார்கள். அது புனித பூமி. அங்கே யாரும் சந்தடி செய்வதில்லை, ஏன்?

விடுதலை வீரர்கள் இருபத்தாறு பேர்களுக்கு அங்கே நினைவுச்சின்னம் இருக்கிறது. அவர்கள் யார்?

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பதினேழாம் ஆண்டு நடந்த அக்டோபர் புரட்சி, பாக்குவிலும் நிகழ்ந்தது. மக்களின் பிரதிநிதிகள் கொண்ட சோவியத் ஆட்சி அமைந்தது.

அப்போதைய பாக்குவில், எண்ணெய் எடுத்து விற்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த செல்வர்களுக்கு செல்வாக்கு இருந்தது. அவர்கள் உள்ளூரில் பலரைத் தூண்டிவிட்டு, சோவியத் ஆட்சியைப் பறித்துக் கொள்ளச் செய்தார்கள்.

எனவே, மக்கள் பிரதிநிதிகளாயிருந்து, சில காலம் ஆண்டவர்கள் பாக்குவை விட்டு வெளியேற நேரிட்டது. அவர்களை ஏற்றிச் சென்று, ஏமாற்றி சுட்டுக் கொன்றார்கள். அப்படி சுட்டுக் கொல்லப்பட்ட இருபத்தாறு பிரதிநிதிகளுக்கு, நினைவுச்சின்னம் அமைத்துள்ளார்கள். அங்கே, எந்நேரமும் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. மக்கள் பயபக்தியோடு, அமைதியாகச் சென்று தலை தாழ்த்திவிட்டு வருகிறார்கள். நாள்தோறும் பலர் மலர் வளையங்களை வைக்கிறார்கள்.

நாங்களும் அந்தப் புனித பூமிக்குச் சென்று, எங்கள் வணக்கத்தைச் செலுத்திவிட்டு வந்தோம்.

பாக்குவின் ஆட்சி, மீண்டும் சோவியத் ஆட்சியின் கைக்கு வந்தது. அப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய படைத்தலைவர், கிரோவ் என்பார். அவருடைய முழு உயரச் சிலையொன்றை, நகரின் பெரிய குன்றின்மீது அமைத்திருக்கிறார்கள். அந்த இடத்தையும் அழகாக வைத்துக் காக்கிறார்கள். அதையும் கண்டோம்.

நாங்கள் பாக்குவிற்குச் சென்றது சோவியத் இந்திய நட்புறவுக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக. அக் கொண்டாட்டத்திற்காக, ஓர் பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். நல்ல கூட்டம் வந்திருந்தது. கூட்டத்தில், சோவியத் இந்திய உடன்படிக்கையை ஆதரித்து, இரு சார்பிலும் உரைகள் நிகழ்த்தப்பட்டன. உரைகளுக்கு நல்ல வரவேற்பு. கூட்டம் முடிந்ததும், கலை நிகழ்ச்சி அதே இடத்தில் நடந்தது. அஜெர்பெய்ஜான் இசை, கருவி இசை, கூத்து ஆகியவற்றைக் கேட்டும் கண்டும் மகிழ்ந்தோம். அஜெர்பெய்ஜான் கலைஞர் ஒருவர், நேருவைப்பற்றி உணர்ச்சிமிக்க பாடல் ஒன்றைப் பாடி அவையோரைப் பரவசப்படுத்தினார். அவர் இந்தியாவுக்கு வந்து போனவராம்.

அஜெர்பெய்ஜான் குடியரசு எண்ணெய் ஊற்றுகளுக்குப் பெயர் போனது. முற்காலத்தில் இவ்வூற்றுகளிலிருந்தே, பெரும்பாலான இரஷ்ய எண்ணெய் கிடைத்தது. இப்போது, வேறு சோவியத் பகுதிகளிலும் எண்ணெய் ஊற்றுகளைக் கண்டுபிடித்துவிட்டார்கள். அங்கும் எண்ணெய் எடுக்கிறார்கள். ஆயினும் அஜெர்பெய்ஜான் எண்ணெய்க் கிணறுகளும் விடாது இறைக்கப்படுகின்றன. இங்குள்ள எண்ணெய் மிக உயர்ந்த ரகம் என்று சொல்லப்படுகிறது.

இந்த எண்ணெய் ஊற்றுகளைக் காணச் சென்றோம். பாக்குவிற்கு முப்பது கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அமைப்புகளைக் காட்டினார்கள். அந்த அமைப்புக்குப் பொறுப்பாளராயிருப்பவர், முன்னர் இந்தியாவில் இருந்தவர். நம் நாட்டு எண்ணெய் ஊற்றுகளைக் கண்டு காட்டுவதற்காக, இந்தியப் பேரரசுக்கு தனி அதிகாரியாக இருந்தவர்.

நூற்று ஐம்பது கிணறுகளிலிருந்து எண்ணெய் இறைப்பதாகக் கூறினார். எவ்வளவு ஆழத்தில் எண்ணெய் கிடைக்கிறது? கரையோரத்தில், மூவாயிரத்து ஐநூறு மீட்டர் ஆழத்தில் கிடைக்கிறதாம். நிலத்தின் ஆழத்தில் மட்டுமா எண்ணெய் எடுக்கிறார்கள்? இல்லை. கடலுக்கு அடியிலிருந்தும் எண்ணெயை எடுப்பதாக விளக்கினார். அங்கே எவ்வளவு ஆழத்தில் எண்ணெய் கிடைக்கிறது? ஐயாயிரம் மீட்டர் ஆழத்தில், கடலுக்கு அடியில் எண்ணெய் ஊற்றுகள் உள்ளனவாம். நடுக்கடலில், ஆழத் தோண்டப்பட்ட எண்ணெய்க் கிணறுகளிலிருந்து குழாய்கள் மூலம் எண்ணெயை மேலே கொண்டுவந்து சுத்திகரிப்பு ஆலைக்குக் கொண்டு செல்கிறார்கள். எண்ணெய் இறைப்பது, அதன் பாய்ச்சலைக் கணக்கிடுவது, ஒழுங்குபடுத்துவது ஆகிய பல பணிகள் மின்சாரத்தின் துணையால் நிகழ்கின்றன.

இப் பகுதியில் மட்டும் பதினைந்தாயிரம் தொழிலாளிகள், இவ்வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

பொறுப்பாளர் ஏறத்தாழ இரண்டு மணிநேரம் எங்களுக்கு பொறிகளைக் காட்டினர். அருகிலிருந்த மருத்துவமனையையும் காட்டினர். அவர் மனந் திறந்து பேசியதால், உரிமையோடு சில கேள்விகளைக் கேட்டோம். அவர் கொடுத்த பதில்களிலிருந்து தெரிந்து கொண்டவை வருமாறு :

எண்ணெய் ஆலையின் தலைமை அதிகாரி அல்ல அவர். அவர், நடுத்தர அதிகாரி. அவரது சம்பளம் மாதம் மூந்நூற்று அறுபது ரூபிள்கள். அதில், நூற்றுக்குப் பத்து, வரியாகக் கொடுக்கவேண்டும். அவருக்கென்று தனியாக, வங்கியில் கணக்கு இருக்கிறது. அந்தக் கணக்குப் புத்தகத்தை எங்களிடம் கொடுத்தார். பார்க்கச் சொன்னர். ஆயிரத்து எண்ணூறு ரூபிள்கள் கணக்கில் இருந்தன. தன் மனைவிக்கு, தனிக் கணக்கு உண்டென்றார். அதில், அதிகத் தொகை நிலுவை இருப்பதாகக் கூறினர்.

ஏன் என்று விளக்கம் கேட்டேன். அவர், சிகரெட் குடிப்பதால் பணம் கரைந்து போவதாகவும், மனைவிக்கு அந்தப் பழக்கம் இல்லாமையால் அதிகம் மிச்சமாவதாகவும் கூறினர்.

பணத்தை மிச்சப்படுத்தி என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டோம். தான் வைத்துள்ள கார் பழையதாகிவிடும். அதற்குப் பதில் புதிய கார் வாங்குவதற்கு, சேமிப்பு உதவுமென்றார்.

நல்ல, பெரிய, காரின் விலை எவ்வளவு? மூவாயிரத்து ஐந்நூறு ரூபிள்கள். அதாவது, அந்த நடுத்தர அதிகாரியின் பத்து மாதச் சம்பளத்தைச் சேர்த்தால் பெரிய நல்ல கார் வாங்க முடியும் என்பதைத் தெரிந்துகொண்டோம்.

இங்கே, தலைமை அதிகாரியின் பதினான்கு மாத சம்பளத்தைச் சேர்த்தால்தான், சாதாரண காரே வாங்க முடியும்.

அஜெர்பெய்ஜான் பல்கலைக்கழகத்தைப் பார்க்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. பாக்கு சென்றடைந்த பிறகே பல்கலைக்கழகத்தைப் பார்க்கும் விருப்பத்தைத் தெரிவித்தோம். குறுகிய அறிவிப்பிலேயே, பல்கலைக்கழக துணைவேந்தரும் சில பேராசிரியர்களுமாகச் சேர்ந்து, எங்களுக்குப் பேட்டி தந்தனர். முதலில் பலமான சிற்றுண்டியைப் பரிமாறி விட்டு, பேச்சுக் கொடுத்தனர்.

அஜெர்பெய்ஜானில், ஜார் ஆட்சிக் காலத்தில் பல்கலைக்கழகமோ உயர்கல்வி நிலையமோ இல்லை. உயர் நிலைப்பள்ளிகளாவது ஏராளமாக இருந்தனவா? இல்லை. அவையும் சிலவே.

அக்டோபர் புரட்சிக்கு முன்பு, பதினைந்து உயர்நிலைப் பள்ளிகளே இருந்தன. தொடக்கப்பள்ளிகளும் ஆயிரத்தை நெருங்கின. அவ்வளவே. விளைவு. பரவலான தற்குறித் தன்மை. இருபது மருத்துவர்களும் பன்னிரண்டு பொறியியலாருமே அன்றைய சாதனை. அந்தப் பகுதியைச் சேர்ந்த பயிற்சி பெற்ற பள்ளிக்கூட ஆசிரியர்கள் இருநூற்று ஐம்பத்து இரண்டு பேர்களே ஆவர். இவ்வளவு புறக்கணிக்கப்பட்டிருந்த பகுதியில் இன்று எல்லோர்க்கும் கல்வி வசதி எட்டுகிறது. எல்லா வகையான கல்வியும் எல்லார்க்கும் எட்டுகிறது. போதுமான அளவு கல்விக் கூடங்கள் உள்ளன என்று சொல்லலாம். இன்று ஐயாயிரத்து நானூற்று தொண்ணூற்று ஒன்று பொதுக் கல்விப் பள்ளிகள் உள்ளன. பொதுக் கல்விக் கூடங்களில் நல்ல தொழிற் பயிற்சி உண்டு. அது போக, எழுபத்து எட்டு தொழிற் கல்விக் கூடங்கள் உள்ளன.

இன்று எல்லாச் சிறுவர் சிறுமியரும் பள்ளிக்கூடம் போகிறார்கள். பள்ளிக்கூடக் கல்வியோடு உயர்நிலைக் கல்வியும் எல்லோர்க்கும் இலவசம்.

எட்டாவது வகுப்பு வரை கல்வி கட்டாயம். அதை பள்ளியிறுதிவரை கட்டாயமாக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

புரட்சிக்குப் பின் தொடங்கிய கல்வி வெள்ளத்தின் விளைவு என்ன?

அஜெர்பெய்ஜான் குடியரசு மக்கள் நாற்பத்தாறு இலட்சம் பேர். அவர்களில் பதினான்கு இலட்சம் பேர், மாணவ மாணவிகள்.

அப்படியென்றால், வயதானவர்கள் கூட, வேலை செய்ய வேண்டிய பருவத்தவர்கள் கூட, வேலை செய்யாமல் சும்மா படித்துக் கொண்டே இருக்கிறார்களா? இல்லை. வயது வந்தவர்கள், தொழில் புரிந்து. பண்டங்களை விளைவித்துக் கொண்டு, பொருள்களை உற்பத்தி செய்து கொண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையேற்படுத்தாமல், தொடர் கல்வியிலும் ஈடுபட்டுள்ளார்கள். அது எப்படி முடிகிறது? கட்டாயக் கல்விக்கு மேற்பட்ட எல்லா வகை படிப்புக்களையும் மூன்று வழிகளில் பெற ஏற்பாடு செய்துள்ளார்கள். நிறைய மதிப்பெண் பெற்றவர்கள், முழு நேரம் படிக்கிறார்கள். குறைந்த எண் உடையவர்கள், வேலைகளில் அமர்ந்து விட்டு, பிறகு பகுதி நேரம் படிக்கிறார்கள். பகுதி நேரம் கல்விக் கூடத்திற்கு வந்து போக முடியாத தூரத்தில் தொழில் புரிபவர்கள், அஞ்சல் முறையில் கல்வி கற்கிறார்கள். ஆகவே அந் நாட்டில், கல்வி இளமையோடு முடிந்து விடுவதில்லை. எல்லா வயதிலும் படிக்கிறார்கள். மாணவர்களாகவே படிக்கிறார்கள். தேவையோ ஆர்வமோ

பிறக்கும் போது, கல்வி பெறுவோர் வரிசையில் சேர்ந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது,

அஜெர்பெய்ஜான் பல்கலைக்கழகம், சோவியத் ஆட்சியின் குழந்தை. பல்கலைக்கழகத்தின் வயது ஐம்பத்து ஒன்று. ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதாம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் பொன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிய போது வராமற் போய்விட்டீர்களே என்று வருந்தினார் துணைவேந்தர்.


இப் பல்கலைக்கழகத்தில் கற்போர் எண்ணிக்கை, பதினான்காயிரம். இதில் ஐயாயிரம் பேர்களே முழு நேரம் படிக்கிறார்கள். பகுதி நேரப் படிப்பு முறையும் அஞ்சல் முறையும் சேர்ந்து ஒன்பதாயிரம் பேருக்கு மேல் கல்வி அளிக்கின்றன.

இப் பல்கலைக்கழகத்தில் முப்பத்தாறு பாடப் பிரிவுகள் உள்ளன.

இதற்கு நல்ல பெரிய கட்டடம் இருக்கிறது. நல்ல நூல் நிலையம் இருக்கிறது. பயன்படுத்துகிறார்களா? ஆம். பன்னிரண்டாயிரம் மாணவ மாணவியர் நூல்களை வீட்டுக்குக் கொண்டு போய் படிக்கின்றனர்.

இப் பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு மாணவர்களும் படிக்கிறார்கள். இந்திய மாணவர்களையும் அனுப்பி வையுங்கள் என்று வேண்டிக் கொண்டார், துணைவேந்தர்.

அவருக்கும் அவரது சகாக்களுக்கும் நன்றி கூறி, விட்டு, விடை பெற்றுக்கொண்டோம்.



# 16

அஜெர்பெய்ஜான் பல்கலைக்கழகத்திலிருந்து திரும்பி வந்த போது, எங்கள் பேச்சு, சோவியத் நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பற்றியே தொடர்ந்தது.

'இன்று, கல்வியில் உயர்ந்த நிலையில் இருக்கிறீர்கள்; இருப்பதோடு நிறைவு கொள்ளாமல், மேலும், வளர்க்க, தரமானதாக்க, முயல்கிறீர்கள்; நீங்கள் ஆதியில் கல்வியில் மிகப் பின்னடைந்து இருந்தது உண்மை. அறியாமைச் சுவரைத் தகர்த்தெறிந்து எப்படி விடுபட்டீர்கள்?' என்று, பாக்கு நண்பர்களைக் கேட்டோம்.

"கல்வியில் எங்கள் முந்திய நிலை படுமோசமானது. இந்த நாட்டின் சில பகுதிகள், ஓரளவு கல்வி பெற்ற பொது மக்களைக் கொண்டிருந்தன. பல பகுதிகள், தற்குறித் தன்மையில் மூழ்கித் தத்தளித்தன. நாடு முழுவதையும் சேர்த்துக் கணக்கிடும் போது, நூற்றுக்கு இருபத்தைந்து பேர்களுக்கே எழுதப் படிக்கத் தெரியும். மற்ற எழுபத்தைந்து பேர்களோ, கண்ணிருந்தும், படிக்கத்

தெரியாத குருடர்களாக இருந்தனர். இதுவே, ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு, சோவியத் ஆட்சி ஏற்பட்ட போது இருந்த நிலை'' என்று ஒப்புக் கொண்டார்கள், பாக்கு நண்பர்கள்.

புதிய சோவியத் ஆட்சிக்கு, பல துறைகளில் மலை போன்ற பணிகள் காத்துக் கிடந்தன. அதைப் போலவே, எழுத்தறிவு கொடுப்பதிலும் தொடர் மலையெனப் பெரும் பணி காத்துக் கொண்டிருந்தது. போலும்'' என்றேன்.

'' உண்மை. அன்று சிறுவர் சிறுமியர் படிப்பதற்கும் தொடக்கப்பள்ளியில்லாத ஊர்கள் எண்ணற்றன. உயர் நிலைப்பள்ளிகளோ எங்கோ ஒன்று.

''சிறுவர்களைக் கவனித்து அவர்களது படிப்பிற்கு ஏற்பாடு செய்வதா? பள்ளிக்கூடத்தையே பார்க்காமல், எழுத்தையே கற்காமல் வளர்ந்து விட்ட முதியவர்களைச் சரி செய்ய, அவர்களுக்குப் படிப்புச் சொல்லித் தருவதா?

'' இதற்கிடையில், உள் நாட்டுக் குழப்பத்தைச் சமாளிப்பதில் முழு கவனத்தைச் செலுத்துவதா? வெளி நாடுகளின் ஏகாதிபத்தியத் தாக்குதல்களை முறியடித்து விட்டல்லவா மற்ற ஆக்கப் பணிகளில் ஈடுபடக் கூடும்?

'' உயிரை வாட்டும் பசியையும் பட்டினியையும் ஓட்டுவதல்லவா முதல் வேலை. அதைச் செய்து முடிப்பதற்கு முன், எழுத்தறிவிப்பில் கவனத்தையும் நேரத்தையும் ஆட்களையும் பணத்தையும் திருப்புவது ஏற்கக் கூடியதுதானா?

'' இப்படி, ஒரே நேரத்தில், பல்வேறு தேவைகள் நாடு முழுவதிலும் நெருக்கிக் கொண்டிருந்தன. இது முதல், அது முதல் என்று குழம்பியதும் உண்டு.

'' ஆனால் எங்கள் சோவியத் ஆட்சியின் தந்தை, மாமேதை லெனின் சிறிதும் குழம்பவில்லை. பல போராட்

டங்களுக்கிடையிலும், கல்வித் தேவையை அலட்சியப் படுத்தவில்லை அந்த மாவீரர். அறிவே எத்தகைய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஆணிவேர். அறிவை, கல்வியாலேயே பெற முடியும்.

"எழுத்தறிவில்லாதவர், அரசியல் அப்பாவி. அத்தகைய அப்பாவிகளைக் கொண்டு, மக்களாட்சியை, பாட்டாளி ஆட்சியை, பாட்டாளிகளால், பாட்டாளிகளுக்காக, நடத்த இயலாது. எனவே சோவியத் ஆட்சி, பல்வேறு பணிகளுக்கிடையிலும் முதியோர் எழுத்தறிவுப் பணிக்கு முதலிடம் தர வேண்டும். படிக்காத முதியவர்கள் அனைவருக்கும் படிக்கச் சொல்லித் தருவதிலே முனைப்பையும் விரைவையும் காட்ட வேண்டும், என்று தலைவர் லெனின் கூறினார். அப்படியே, முடிவு செய்தார்கள். நல்ல முடிவுதானே!" என்றார் பாக்கு தோழர்.

"நல்ல முடிவே! அதை நிறைவேற்ற எத்தனை பாடு பட்டிருக்க வேண்டும்!" என்று பாராட்டினோம்.

"ஆம். பெரும்பாடு. சில ஊர்களிலா? இல்லை. எல்லா ஊர்களிலும்; நாடு முழுவதிலும் பெரும்பாடு. முன்னறியாப் பெரும்பாடு, ஓராண்டு வரையிலா? ஈராண்டு வரையிலா? பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பாடுபட வேண்டியதாக இருந்தது."

பாக்கு தோழரின் பேச்சில் குறுக்கிட்டோம்.

"ஏன், அத்தனை ஆண்டுகள் பிடித்தன" என்று கேட்டோம். ஏதோ அதைவிட விரைவில் அந்த அளவு சாதனையைச் செய்து முடித்தவர்கள் போல.

"அந்த நாள், எங்கள் நாட்டில் எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்த, முதியவர்கள் பல கோடி பேர்கள். பத்துப் பன்னிரண்டு கோடி பேர்களாக இருக்கலாம்.

"அத்தனை கோடி பேருக்கும் கற்றுக் கொடுக்க எத்தனை நூறுயிரம் ஆசிரியர்கள் தேவை. அத்தனை ஆசிரியர்கள் இல்லை. இருந்த ஆசிரியர்களுக்கும், முதியோர் கல்வியில் பயிற்சி இல்லை."

"குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் சொல்லிக் கொடுத்துப் பழகியவர்களைக் கொண்டு, முதியவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது கடினமே!" என்று, என் பட்டறிவைப் பறக்க விட்டேன்.

"மெய் தான். எல்லாவற்றையும் சீராக அமைத்துக் கொண்டு, நடத்துவதல்ல, முன்னேற்றப் புரட்சி.

"துணிந்து இறங்க வேண்டும் கல்விப் புரட்சியில். நாடு .முழுவதிலும் பல நூறுயிரவர் குதிக்க வேண்டும் கல்விக் களத்தில். அதற்கேற்ற மனநிலையை உருவாக்கு வதே அடிப்படை வேலை."

"அதற்கு என்ன செய்தார்கள்?" என்று கேட்டோம்.

"ஊர் தோறும் 'முதியோர் எழுத்தறிவிப்புக் குழு'க்களை அமைத்தார்கள். சிற்றூருக்கு ஓர் குழு; நகரங்களில் பல குழுக்கள். இவற்றையெல்லாம் இணைத்து, ஊக்கி இயக்குவதற்காக, மாவட்டக் குழுக்களை ஏற்பாடு செய்தார்கள். பிரதேசக் குழுக்களும் உருவாகின. நாடு :முழுவதற்குமான ஒரு பெருங்குழுவும் அமைக்கப் பட்டது. அதன் தலைவராக யாரையோ நியமிக்கவில்லை. எங்கள் சோவியத் ஆட்சியின் தலைவராக இருந்த காலின் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

"நாட்டின் தலைவரே, எழுத்தறிவு இயக்கத்தின் தலைவராகவும் இருந்து, வழிகாட்டி நடத்தியதால், மக்கள் ஆதரவைப் பெற முடிந்தது."

"ஆசிரியர்களை எப்படிக் கண்டுபிடித்தீர்கள். அதைச் சொல்லுங்கள்" என்று வேண்டினோம்.

"வேண்டுகோள் விடப்பட்டது. எழுத்தறிவுத் தொண்டரணியில் சேருமாறு படித்தவர்கள் வேண்டிக் கொள்ளப்பட்டார்கள். தொடக்கநிலை ஆசிரியர்கள் தொண்டர்களாயினர். உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும் தொண்டரணியில் சேர்ந்தார்கள். அலுவலகங்களில் வேலை பார்த்து வந்த, படித்தவர்கள் பலர், முதியோர் எழுத்தறிவுத் தொண்டிற்கு முன் வந்தனர். பாட்டாளிகள் சும்மா இருந்தார்களா? இல்லை. எழுதப் படிக்கத் தெரிந்த தொழிலாளிகளும் முதியோர் கல்வித் தொண்டில் பங்கு கொண்டார்கள்."

"எந்தெந்த வேலையிலோ ஈடுபட்டிருந்தவர்களைக் கொண்டு, முதியோர் கல்வி கற்பிக்க, எப்படிப் பயிற்சி கொடுத்தீர்கள்?" என்றோம்.

"அவசரத்திற்கு ஆகிற காரியமா, பல்லாயிரக்கணக்கானவர்களை, தங்கள் தங்கள் வேலைகளை, விட்டு விட்டு வரச் செய்வதும், அவர்களுக்கு முதியோர் கல்விப் பயிற்சி கொடுப்பதும்?"

"கல்வித்துறை மேதைகள் சிலரைக் கொண்டு, முதியோர் எழுத்தறிவிப்பு வகுப்புகளை நடத்துவது பற்றி சில அடிப்படைக் குறிப்புகளை எழுதச் செய்தார்கள். அவற்றைச் சேர்த்து அச்சிட்டு, ஒவ்வொரு தொண்டருக்கும் வழங்கினர். அக் குறிப்புகள் காட்டும் வழியில், பாடங் கற்றுக் கொடுத்தனர். அதிலே ஏற்பட்ட சங்கடங்களைக் குறித்து அனுப்பி மாற்று கண்டனர்.

"முதியோர் கல்வி, அன்று, முன்னறியாப் புதுப் பாதை. எனவே தொண்டர்களே, ஓரளவு தடம் வகுத்துக் கொண்டு பணிபுரிய நேர்ந்தது."

"தொண்டர்களுடைய பழைய வேலைகள் என்னவாயின? அவற்றை விட்டு விட்டார்களா?" என்ற ஐயத்தைக் கிளப்பினோம்.

"பழைய வேலையை யாரும் விடவில்லை. அவற்றில் இருந்தபடியே, அவற்றையும் செய்து கொண்டு கூடுதல் நாட்டுத் தொண்டாக, ஓய்ந்த நேரம், முதியோர் கல்விப் பணியில் ஈடுபட்டார்கள், தொண்டர்கள்."

முதியவர்கள் தாமே கல்வி கற்க வந்தார்களா? எல்லோரும் தாமே வந்தவர்கள் அல்லர். அவர்களை பள்ளிக்கூடத்திற்கு இட்டுவரவும் முயற்சி செய்ய வேண்டியதாக இருந்தது. அவர்களை முதியோர் பள்ளிக் கூடத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பு, பெரிதும் 'கம்யூனிஸ்ட்' கட்சியைச் சேர்ந்தது. ஆண்களைப் பொறுத்த வரையில் எளிதாக வெற்றி பெற்றார்கள்.

உள்ளூரில் உயர்நிலைப்பள்ளியோ தொடக்கப் பள்ளியோ இருந்தால், அங்கேயே மாலை நேரம் முதியோர் பள்ளிக்கூடம் நடந்தது. பள்ளிக்கூடமே இல்லாத ஊரில், எங்கே கூடிக் கற்றார்கள்?

ஊர்ப் பொது மன்றங்களிலோ தொழிற்சங்கக் கட்டடங்களிலோ ஆலயங்களிலோ முதியோர் பள்ளி நடந்தது.

பெண்களும் முதியோர் பள்ளிக்கு வந்தார்களா? அநேக இடங்களில் இல்லை. ஏன்? அக்காலத்தில் சோவியத் நாட்டின் பல ஊர்களில் பெண்கள் முகமூடி யணியும் முறை மேற்கொள்ளப்பட்டு வந்தது. அவ்வூர் களில், பெண்கள் முதியோர் பள்ளிக்கு வர நாணினர். அதனால் அவ்வூர் பெண்களை, தற்குறிகளாகவே விட்டு விட்டார்களா? இல்லை. பெண்கள், பள்ளிக்கு வரக் கூடாத பழக்கம் வேரூன்றியிருந்த இடங்களில், பள்ளிக் கூடங்கள் பெண்களை நாடிச் சென்றன. அதாவது பெண் தொண்டர், இடங் கொடுக்கிற ஏதாவதொரு பெண் மணியின் வீட்டிலேயே அவ் வீட்டின் பெண்மணிகளுக்கும்

அக்கம் பக்கத்து அம்மைகளுக்கும் பாடஞ் சொல்லிக் கொடுப்பார், வெறும் எழுத்தறிவு தாய்மார்களைக் கவராது. எனவே, அவர்களது பாடங்கள், குழந்தை வளர்ப்பை, சமையல்கலையை, தையல்வேலையை மைய மாகக் கொண்டு அமைக்கப்பட்டன. எல்லோர்க்கும் எழுத்தறிவு கொடுக்கும் பெரும்பணியில், சோவியத் முன்னோடிகள் கையாண்ட உபாயங்கள் இவை.

முதியோர் எழுத்தறிவிப்பு இயக்கம் சோவியத் நாடு முழுவதும் முளைத்தது; வளர்ந்தது. படர்ந்தது. வீடு தோறும் கலையின் விளக்கம் கண்டனர். ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக எழுத்தறிவு பெற்றார்கள்.

பெற்ற எழுத்தறிவு, பெருமையின் சின்னம் மட்டுமா? தொடர் கல்வியின் கருவியுமா? தொடர்கல்வியின் கருவியாகவும் பயன்பட்டது; படுகிறது; இனியும் பயன் படும்.

மாணவர் என்றால், சின்னஞ்சிறு வயது முதல் காளைப் பருவம் வரையில் மட்டும் நம் மனக்கண் முன் தோன்றும். ஏன்? அதுவே நம் நாட்டுச் சூழ்நிலை.

சோவியத் நாட்டில், 'மாணவர்' என்ற சொல் பல பருவத்தினரையும் அணைத்துக் கொள்கிறது. அந்நாட்டில் ஏழு வயதுப் பையனையும் பெண்ணையும் குறிப்பது போலவே, எழுபது வயது தாத்தாவையும் அந்த வயதுப் பாட்டியையும் சுட்டிக் காட்டும். சிறுவர் சிறுமியர் படிப்பது எவ்வளவு சாதாரணமோ அவ்வளவு சாதாரணம் தாத்தா பாட்டி படிப்பதும்.

சிறுவர் சிறுமியர் முழு நேரம் படிப்பர். முதியவர் களோ, உழைப்பாளிகள். எனவே அவர்கள் முழுநேர மாணவர்களாக இருக்க முடியாது. பாட்டாளிகளாகி விட்டதால், படிப்புக்குத் தேவையற்றுப் போவதில்லை. சாந்துணையும் கற்றல் எல்லோர்க்கும் நல்லது. அவர் களுக்குத் துணையாக கல்வி வழிகள் இரண்டினை வகுத் துள்ளது, சோவியத் கல்வி முறை. அவ்வழிகள் எவை? பகுதிநேரப் படிப்புமுறை ஒன்று. அஞ்சல்வழிப் படிப்பு மற்றொன்று.

கல்விக்கூடங்களுக்கு அருகில் இருப்பவர்களுக்கு, பகுதி நேரப் படிப்பு. அப் பகுதி நேரம், மாலை நேரமாக இருக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை; காலை நேர மாகவும் இருக்கலாம். பகுதி நேரக் கல்விக்கூடங்கள் பல, இருவேளை வேலை செய்கின்றன. காலை ஷிப்டுக்கு வேலைக்குப் போவோர் மாலை கல்விக்கு வருவார்கள், மாலை ஷிப்டில் வேலை செய்வோர், காலையில் கல்விக்கூடஞ் செல்வார்கள்.

கல்விக்கூடங்களுக்குத் தொலைவில் குடியிருந்தாலோ அல்லது பணிபுரிந்தாலோ, அத்தகையோர் அஞ்சல் வழிக் கல்விக்குத் தங்களைப் பதிந்து கொள்வார்கள். கல்விக் கூடம் பாடங்களை எழுதி அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கும். மாணவ மாணவிகள், பாடநூல்களின் துணை யையுங்கொண்டு, உரிய பாடங்களைக் கற்றுக் கொள் வார்கள். பாடங்களை எழுதி அனுப்பும்போதே அவை பற்றிய கேள்விகளையும் எழுதி அனுப்புவார்கள். மாணவர்கள், கேள்விகளுக்கான பதில்களை எழுதி, அஞ்சலில், ஆசிரியருக்கு அனுப்புவார்கள். ஆசிரியர், அவற்றைத் திருத்தி அனுப்புவார். இப்படி கல்வி வளரும்.

உரிய காலத்தில், முழு நேர மாணவர்களுக்கு நடத்தும் அதே பரீட்சையை, பகுதி நேர மாணவர் களுக்கும் கொடுப்பார்கள். தேறினவர்களுக்கு, சான்றிதழ் களோ பட்டங்களோ கிடைக்கும்.

ஒரே பாட திட்டம். அதை முடிக்க மூன்று வழிகள், ஆயினும் அதில் தேற ஒரே வகையான பரீட்சை. எனவே, மூன்று வழிகளில் எவ்வழியாகப் பட்டம் பெற்றாலும் ஒரே மதிப்பே.

இந்த மூன்று கல்வி வாய்க்கால்களும் நாடு முழுவதும் உள்ளன. சில துறைகளுக்கு மட்டும் பயன்படவில்லை. பல துறைகளுக்கும் பயன்படுகின்றன.

சோவியத் நாட்டுக் கல்வி, பலவகையான பயிற்சி களுக்கு இடம் வைத்துள்ளது. பொதுக்கல்விக்கு மேல், பல நிலைகளில், பல்வேறு தனிப் பயிற்சிக்கு வகை செய் துள்ளது. அத்தகைய தனிப் பயிற்சிகளை 'ஸ்பெஷாலிடிஸ்' என்கிறார்கள். முந்நூற்று இருபது 'ஸ்பெஷாலிடிஸி'ல் பயிற்சி கொடுக்கிறார்கள். அவற்றில் இருநூற்று அறுபதை, பகுதி நேரப் படிப்பின் மூலமோ, அஞ்சல் மூலமோ தேறமுடியும்,

அஞ்சல் படிப்பு என்றால், ஆசிரியரோடு நேரடித் தொடர்பே இல்லாத படிப்பு என்று கருதிவிட வேண்டாம். அஞ்சல் படிப்பின் ஓர் கூறு, கல்விக்கூடத்தில் உறையுள் பயிற்சி. அஞ்சல் கல்வி பெறும் மாணவர் ஒவ்வொரு வரும் சம்பந்தப்பட்ட கல்விக்கூடத்திற்கு, அப்போதைக் கப்போது வந்து, தங்கி, ஆசிரியர்களிடம் நேரடிப் பயிற்சி பெறவேண்டும். எத்தனைமுறை வந்து போகவேண்டும், எவ்வளவு காலம் தங்கியிருக்கவேண்டும் என்பவை,

எடுத்துக்கொண்ட பயிற்சியின் தன்மைக்கு ஏற்ப மாறு படும். சில பயிற்சிகளுக்கு ஆண்டிற்கு இரண்டு வாரம் வந்து போனால் போதும். வேறுவகையான பயிற்சிகளுக்கு ஆண்டிற்கு இரண்டுமுறை வர நேரிடலாம். ஒவ்வொரு முறையும் இரண்டு மூன்று வாரங்கள் தங்கிக் கற்க வேண்டியதாகலாம்.

தொழிலை விட்டுவிட்டு, இப்படி வந்து போனால், பிழைப்பு என்ன ஆவது? பயணச் செலவிற்கு பணத்தை எங்கே தேடுவது?

படிப்பதற்காக, கல்விக்கூடத்திற்கு வந்து போகும் தொழிலாளியின் அல்லது அலுவலரின் வேலைக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாது. மாறாக, சம்பளத்தோடு விடுமுறை உண்டு. அதுமட்டுமா? பயணச் செலவிற்கு நிதி உதவிசெய்யும் வகையில் அவர்களது தொழில் விதிமுறைகள் அமைந்துள்ளன.

கல்விக்காக தான் செலவு செய்வதற்குப் பதில், தனி நபருக்கு இத்தனை சலுகைகள் கொடுத்தால், கல்வியை மலிவாகக் கருதி, படிப்பில் ஏனோதானோ என்று இருந்து விடமாட்டார்களா?

சோவியத் நாட்டின் அனுபவம் அப்படி இல்லை.

முழுநேரக் கல்விக்கூடங்களில் சேர்பவர்களில, பது சிலர், நீரோட்டத்தோடு மிதப்பவர்களாக இருக்கக்கூடும். பகுதிநேர மாணவர்களாயினும் சரி, அஞ்சல்வழிக் கற்ப வர்களாயினும் சரி மிதப்பவர்கள் அல்ல. ஆர்வத்தால் உந்தப்பட்டு நீந்துபவர்கள். தொழில் புரிந்த அலுப்பையும் பாராது கல்வி கற்க வருபவர்களுக்கு ஆர்வமும் அதிகம், பொறுப்பும் அதிகம்; எனவே அவர்கள் தேர்ச்சி, மற்ற வர்கள் தேர்ச்சியைவிட அதிகமாகவும் தரமாகவும் இருக்கிறது.

சோவியத் நாட்டு மக்களில் ஏராளமானவர்கள். தங்கள் கல்வியைக் காலமெல்லாம் உயர்த்திக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சென்றமுறை நான் சோவியத் நாட்டிற்கு சென்றிருந்தபோது, அந் நாட்டு மக்கள் தொகை இருபத்தி இரண்டு கோடி. அவர்களில் ஏழு கோடியே நாற்பது இலட்சம் மக்கள் மாணவ மாணவிகளாயிருந்து கற்பதை அறிந்தேன். இந்த விழுக்காடு படிப்பது அருமை.

இப்படி வெள்ளத்தின் பெருக்கைப்போல் கல்விப் பெருக்கெடுத்தோடும் நாட்டில், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்வதில் வியப்பென்ன?



# 17

சோவியத் ஆட்சியின் தந்தையாகிய மாமேதை லெனினும், சோவியத் ஆட்சியும் முதியோர் எழுத்தறிவுப் பிற்கு முதலிடம் கொடுத்ததையும் நாடு முழுவதும் அப் பணிக்காக பெரும் இயக்கமொன்றை நடத்தியதையும் கேள்விப்பட்டு மகிழ்ந்த நாங்கள், சிறுவர் சிறுமியர் வாலிபர் இவர்களுடைய கல்வி வளர்ச்சி பற்றியும் அறிய விரும்பினோம். அறிந்து கொண்டோம்.

சோவியத் நாட்டில், எந்தக் கோடியிலும் பள்ளிக் கூடம் இல்லாத குறை இல்லை. பள்ளிக்கூடத்திற்கு வரக் கூடிய குழந்தைகள் பத்து பேரே உள்ள சிற்றூரிலும்-நெடுந் தொலைவில் உள்ள சிற்றூரிலும் - தொடக்கப்பள்ளி யுண்டு. அத்தகைய பள்ளி அநேகமாக ஓராசிரியர் பள்ளி யாகவே இருக்கும். அங்கே இரண்டு வகுப்புகள் இருக்க லாம்.

பள்ளிக்கூடங்களை யார் நடத்துகிறார்கள்? பள்ளிக் கூடங்கள் பொதுத் துறையில் நடக்கின்றன. தனியார்

பள்ளிகள் இல்லையா? இல்லை. பாலர் பள்ளி, தொடக்கப் பள்ளி, தொழிற்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகிய எதையும் தனியார் நடத்துவதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை. எனவே 'நன்கொடை' சிக்கல் இல்லை. எல்லா கல்விக்கூடங்களும் நாட்டின் உடமை.

எந்த நிலை வரை கல்வி இலவசம்? எந்த நிலையி லாவது கல்விக்கு கட்டணம் உண்டா? இக் கேள்விகளைக் கேட்டோம்

எல்லா நிலைக் கல்வியும் இலவசம். எந்த நிலையிலும் யாரிடமும் - அயல்நாட்டு மாணவர்களிடமும் - கல்விக்கு சம்பளம் வாங்குவதில்லை. கல்லூரிக் கல்வி கூட எல்லோ ருக்கும் இலவசம்.

முதற் பட்டம் வரையிலா? அதற்கு மேலும் இலவசமா? மேற்பட்டப் படிப்பும் இலவசம் என்று கேள்விப்பட்டோம்.

இலவசக் கல்வி, தரத்தைப் பாதிக்கவில்லையா? இல்லை யென்று தெரிந்து கொண்டோம். காரணம்?

கல்வி இலவசமாக இருப்பதோடு கல்விக்குப் பொருத்தமான சூழ்நிலை, சோவியத் நாட்டில் உள்ளது. நாடு முழுவதிலும் அத்தகைய சூழ்நிலை உள்ளது. மாண வர்கள், மாணவர்களாகவே இருக்கிறார்கள். ஊர் வம்பு களையெல்லாம், தங்கள் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டு, கல்லூரிகளை விட்டு வெளியேறுவதன் மூலம், படிப்பைப் பாழாக்கிக் கொள்வதில்லை.

**இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண் விடல்**

என்ற குறள் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ! அக் கொள்கையையே சோவியத் மாணவர் உலகம் பின்

ப்றுகிறது. பொது விவகாரங்களை, அனுபவம் முதிர்ந்த பெரியவர்களிடம் விட்டு விட்டு, தங்கள் பணியாகிய கல்வியிலே கருத்தைச் செலுத்துகிறார்கள், சோவியத் மாணவர்கள்.

இப்படி அவர்களை நல்வழிப்படுத்தியது, நாட்டின் தந்தை மாவீரர் லெனின் ஆவார்கள் என்று சோவியத் மக்கள் பெருமையோடு கூறக் கேட்டோம். பெரியவர் லெனின் என்ன சொன்னார்?

'படியுங்கள், படியுங்கள், மேலும் மேலும் படியுங்கள்.' இதுவே மாணவர்கள் ஆற்ற வேண்டிய நாட்டுத் தொண்டு என்று லெனின் கூறி, மாணவ உலகத்தைச் சரியான பாதையில் திருப்பிவிட்டார்.

அன்று முதல் இன்று வரை சரியான பாதையிலேயே பெரு நடைபோடும் மாணவர்களைப் பாராட்டினோம். பாராட்டாமல் இருக்க முடியுமா?

ஏமாந்த காலத்தே ஏற்றங் கொண்ட பல முதலாளித்துவ நாடுகளோடு தாங்கள் போட்டியிட்டு, தாக்குப் பிடித்து முன்னேறவேண்டுமென்பதை சோவியத் இளைஞர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்று கேட்டுப் பூரித்தோம்.

நாற்பது ஐம்பது ஆண்டுகளாக மாணவர்களை மாணவர்களாகவே இருந்து படிக்கும்படி, ஒரு மனப்படுத்தி வந்ததால், இருநூறு ஆண்டுகளாக விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் வளர்ந்து விட்ட நாட்டையும் மிஞ்சும் சாதனைகளை சோவியத் அறிஞர்கள் செய்து காட்ட முடிந்தது என்று, சோவியத் முன்னேற்றத்திற்கு, தோழர்கள் விளக்கங் கூறியது எவ்வளவு உண்மை!

இந்தியாவும் இனியே முன்னேற வேண்டும். அந்த முன்னேற்றம் இளைஞர் கைகளிலே, அவர்களின் அறிவுப்

பெருக்கத்திலே இருக்கிறது. இதை இந்திய இளைஞர்கள் உணர்ந்தால், நாடு முன்னேறும். நம் இயற்கை அறிவில் குறையேதும் இல்லை. அது ஒருமனப்பட்டு ஆழப் பணி புரிய வேண்டுமே என்று மனக் குதிரை தாவிற்று.

"எல்லா நிலையிலும் இலவசமென்றீர்கள். எல்லா நிலையிலும் கல்வி கட்டாயமா?" என்று நண்பர் கேட்ட கேள்வி, என் மனக் குதிரை எங்கோ ஓடி விடாமல் இழுத்துப் பிடித்தது. பதிலைக் கேட்டேன்.

"பத்தாம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி. பத்தாம் வகுப்பே, பள்ளியிறுதி வகுப்பு. எனவே எல்லோரும் பத்தாவது வரை கட்டாயம் படிக்க வேண்டும். அதற்குக் குறைந்த கல்வி, இக்காலத்திற்குப் போதாது."

பள்ளிக்கூடங்களில் என்னென்ன மொழிகளை பாடங்களை கற்றுக் கொடுப்பார்களென்று விசாரித்தேன்.

"படிப்பைத் தொடங்கும்போது தாய் மொழியைக் கற்றுக் கொடுப்பார்கள். மூன்றாவது வகுப்பில் இரஷ்ய மொழியைத் தொடங்குவார்கள்.

"ஐந்தாம் வகுப்பிலிருந்து அயல்நாட்டு மொழியொன்றைச் சொல்லிக் கொடுப்பார்கள்."

சொல்லிக் கொடுக்கப்படும் அயல்நாட்டு மொழிகள் எவை?

ஆங்கிலம், ஜெர்மானியம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜப்பானிய, சீன மொழிகள், உருது, இந்தி ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அவை அத்தனையும் எல்லாப் பள்ளிகளிலும் சொல்லிக் கொடுப்பதில்லை. ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டொன்றோ, சிலவோ இருக்கும். ஜப்பானிய எல்லையோரப் பள்ளிகளில் ஜப்பானிய மொழியும். சீன எல்லையோரப் பள்ளிகளில்

சீன மொழி கற்றுக் கொடுப்பார்கள். ஏதாவதொன்றை படிப்பார்கள் சிறுவர் சிறுமியர்.

உருதுவும் இந்தியும் சொல்லிக் கொடுக்கிறார்களா என்று வியப்போடு கேட்டார் திரு. கான்.

ஆம் என்ற பதில் வந்தது.

நான் முதன் முறை டாஷ்கண்டிற்குப் போன போது, ஓர் பள்ளியில் உருதுவும் இந்தியும் கற்பிக்கப்பட்டதைக் கண்ணாரக் கண்டேன் என்று கூறி உறுதிப்படுத்தினேன்.

மும்மொழிப் படிப்பு எதுவரை என்ற ஐயம் எழுந்தது. பள்ளிப்படிப்பு முடியும் வரை மூன்று மொழி கற்க வேண்டுமென்று தெரிந்து கொண்டோம்.

எந்த மொழியை அதிகம் பேர் படிக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? ஆங்கிலத்தையே அதிகம் பேர் படிக்கிறார்களாம்.

பாட மொழி எது? ஒன்றல்ல; பல. அவரவர் தாய் மொழியே பாடமொழி.

பாடங்களைப் பற்றிக் கேட்டோம். கணக்கு, வரலாறு, பூகோளம், விஞ்ஞானம், கை வேலை, வேலைப் பயிற்சி ஆகியவை முதல் வகுப்பிலே இருந்து கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இவை எங்கும் கற்றுக் கொடுக்கப்படுபவை. கைவேலை, வேலைப்பயிற்சி என்றீர் களே, அவற்றைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்பினோம்.

முதல் வகுப்பில் இரசாயனக் களிமண் வேலையில் தொடங்குவார்கள். இதற்கு கைவேலை என்று பெயர். வகுப்புகள் உயர உயர கைவேலை கடினமாகும். ஆறும் ஏழாம் வகுப்புகளில் தகடுகளைக் கொண்டு பயன்படும் பொருள்களைச் செய்யப் பழகிக் கொள்வார்கள்.

எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை எல்லா மாணவ மாணவிகளும் வேலைப் பயிற்சி பெறுகிறார்கள். எல்லோரும் எல்லா வேலைகளுக்கும் பயிற்சி பெறுவதில்லை.

வேலைப் பயிற்சியானது பயிர்த்தொழில், ஆலைத் தொழில், போக்குவரத்துத் தொழில், அலுவலக வேலை எனப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். மாணவர், தனக்கு விருப்பமான எதையாவது தேர்ந்தெடுத்துக் கொள்வார். எடுத்துக் கொண்ட வேலையை, ஏனோ தானோவென்று, பள்ளிக்கூடத்தில் பழகுவதில்லை. இயல்பான சூழ்நிலையிலேயே வேலைப்பயிற்சி பெறுவார்கள்.

பயிர்த்தொழில் தெரிந்து கொள்ள விரும்புவோர் பண்ணைக்குச் சென்று அங்கேயே சில நாள் தங்கியிருந்து, வேளாண்மை வேலைகளைச் செய்து பழகிக் கற்றுக் கொள்வார்கள். சில மணிவேலை; சில மணி பாடம் என்று மாறி மாறி வரவும் மாட்டார்கள். ஒரே மூச்சாக சில நாட்களில் வேலை நுணுக்கங்களைத் தெரிந்து கொள்வார்கள், இப்படியே ஒவ்வொரு வேலைக்கும் வேலைச் சூழ்நிலையிலே பயிற்சி உண்டு.

''வேலைப் பயிற்சி இருக்கட்டும்; சமயக் கல்வி உண்டா?'' என்று குறுக்கிட்டோம்.

''சமயம் தனி நபர் விவகாரம். பள்ளிக்கூடங்களில் சமயக் கல்வி கற்பிப்பதில்லை. கற்பிக்கக் கூடாது. ஒழுக்கக் கல்வி உண்டு'' என்று சொன்னார்கள். விசாரிப்பு தொடர்ந்தது.

"எவ்வளவு பேர் தேறுவார்கள். எவ்வளவு பேர் அதே வகுப்பில் இரண்டாம் ஆண்டு தேங்கிக் கிடப்பார்கள்?''

''எல்லோரும் தேறுவார்கள். ஒவ்வொரு ஆண்டும் தேறுவார்கள். ஒரே வகுப்பில் தேங்கிக் கிடப்பது கிடையாது.''

வியப்பாக இருக்கிறதா? வியப்பில்லை. தொடர்ந்து படியுங்கள்.

ஒவ்வோர் வகுப்பிலும் மாதச் சோதனை உண்டு. மாணவர்கள் மதிப்பெண்களைப் பதிந்து கொள்வார்கள். இரண்டொரு திங்கள் இப்படி சோதனை நடத்தியதும் தேர்ச்சியில் தயங்குகிறவர்கள் யார் யார் என்று ஆசிரியருக்குத் தெரிந்துவிடும். பின்னடைவோரில், யார் எந்தெந்தப் பாடத்தில் மெல்ல வளருகிறார் என்பதும் தெரியும்.

தெரிந்து கொண்டதோடு நிறைவு கொள்ள மாட்டார் ஆசிரியர். அறிவைச் செயல்படுத்துவார். பின்னடையும் மாணவ மாணவிகளுக்கு, பள்ளிக் கூடத்திலேயே முறைப் பாடஞ் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்வார். ஒவ்வொரு நாள் ஒரு பாடத்திற்கு முறைப் பாடம் இருக்கும். அப்பாடத்தில் குறைந்த எண் பெற்றவர்கள் அன்று, முறைப் பாடங்கேட்க வருவார்கள். இப்படியாகக் கூடுதலாகச் சொல்லிக் கொடுப்பதன் மூலம், பின்னடைகிறவர்களும் போதிய மதிப்பெண் பெற்று மேல் வகுப்புக்குத் தகுதியாகும்படி செய்வார்கள்.

இவ்வளவு பாடுபட்டும் இரண்டொருவர், போதிய தேர்ச்சி அடையாமல் இருந்தால், சலித்து, கைவிட்டு விடமாட்டார்கள்.

அந்த இரண்டொருவரை கோடை விடுமுறையின் போது, பள்ளிக்கு வரச் செய்து, மேலும் கற்றுக் கொடுத்து, அவர்களையும் தேற வைத்து விடுவார்கள்.

எனவே வகுப்பில் தேக்கம் என்பது இப்போது நாங்கள் அறியாதது.

ஆசிரியர்களும் கூடுதல் பணி செய்கிறார்கள். தேவைப்பட்ட போது மாணவர்களையும் கூடுதலாக வேலை செய்ய வைக்கிறார்கள். இதற்குக் கூடுதல் சம்பளம் உண்டா?

ஆசிரியர், முறைப்பாடத்திற்காகச் செலவிடும் நேரத்தையும் அவரது மொத்த வேலை நேரத்திற்கு கணக்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே, ஆசிரியர்கள் அப் பணிக்குச் சுணங்குவதில்லை.

கடைசியாக ஓர் கேள்வி.

வகுப்புத் தேர்ச்சி, ஆண்டுப் பரீட்சையில் பெறும் மதிப்பெண்களைக் கொண்டு முடிவு செய்யப்படுமா? அரையாண்டு காலாண்டு பரீட்சைகளில் பெற்ற எண்களையும் எடுத்துக் கொள்வார்களா?

"இம் மூன்று பரீட்சைகளில் கிடைக்கும் மதிப்பெண்களையும், மாதச் சோதனையில் பெற்ற மதிப்பெண்களையும் ஒட்டு மொத்தமாகக் கவனித்தே, மேல் வகுப்பிற்கு அனுப்புவது முடிவு செய்யப்படும். மேல் வகுப்புக்குப் போவது இரண்டொரு பரீட்சைகளால் முடிவு செய்யப்படுவதில்லை."

என்ன அருமையான முறை என்று பாராட்டும் வேளை, நாங்கள் ஏறி வந்த, கார் ஓடாமல் நின்றது.

ஓட்டலுக்கு வந்து சேர்ந்து விட்டோம் என்பதை உணர்ந்து, ஆய்வு உலகிலிருந்து, இறங்கினோம். ஓட்டலுக்குள் சென்றோம்.

அடுத்த நாள் காலை, பாக்கு நகரை விட்டு, மாஸ்கோவிற்குப் புறப்பட்டோம். எங்களை வரவேற்ற

அத்தனை தோழர்களும் விமான நிலையத்திற்கு எங்களுடன் வந்து வழியனுப்பினார்கள். வரவேற்ற போது இருந்த ஆர்வமும் அன்பும் மதிப்பும் வழியனுப்பும் போதும் இருக்கக் கண்டோம். விமானம் வரை எங்களை காரில் அழைத்துச் சென்று வழியனுப்பினார்கள்.

அவர்கள் எங்களைக் கட்டித் தழுவி, 'மீண்டும் திரும்பி வாருங்கள்' என்று விடை கொடுத்த போது கண்கள் குளமாயின.

இந்தியாவிற்கு வரும்படி நாங்கள் அவர்களை அழைத்தோம்.

மூன்று மணி நேரப் பயணத்திற்குப் பிறகு, மாஸ்கோ வந்தடைந்தோம். பனி மழை பெய்து கொண்டிருந்தது. ஆயினும் நாங்கள் நனையாதபடி, பத்திரமாக எங்களை வெளியே கொண்டு வந்தார்கள்.

மாஸ்கோ திரும்பிய பிறகு எங்கள் முதல் நிகழ்ச்சி, லுமும்பா பல்கலைக்கழகத்தைப் பார்வையிடல்.

நாங்கள் பாக்கு நகரில் இருக்கையில் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி பிற்பகலில் அப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றோம்.

முதலில் துணைவேந்தரைப் பேட்டி கண்டோம். அவர் எல்லோரையும் போல, ஆர்வத்தோடும் அன்போடும் எங்களை வரவேற்றார். அப் பல்கலைக்கழக வரலாற்றினையும் தொண்டினையும் விளக்கினார்.

லுமும்பா பல்கலைக்கழகம் மாஸ்கோ நகரில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது பல்கலைக்கழகம். இதன் வயது பத்து. இதன் தனிக் குறிக்கோள் என்ன தெரியுமா?

அயல்நாட்டு மாணவர்களை ஊக்குவதற்காகவே இப் பல்கலைக்கழகம் உள்ளது.

இதில் சேர்ந்துள்ள மாணவர் மாணவியர் எண்ணிக்கை நாலாயிரத்து நானூறு. இதில் ஆண் பெண் இருபாலரும் படிக்கிறார்கள். நாலாயிரத்து நானூறு பேர்களில் அறுநூற்று அறுபது பேர் சோவியத் நாட்டவர். மற்ற மூவாயிரத்து முன்னூற்று நாற்பது பேர்கள் வெளி நாடுகளைச் சேர்ந்தவர்கள். எண்பத்து மூன்று நாடுகளைச் சேர்ந்தவர்கள் இங்கே படிக்கிறார்கள். அவர்கள், ஆப்பிரிக்கா ஆசியா, லத்தின் அமெரிக்கா ஆகிய கண்டங்களிலிருந்து வந்திருப்பவர்கள். இந்தியாவிலிருந்து இருநூற்று அறுபது பேர்கள் சேர்ந்து படிக்கிறார்கள் என்ற போது, எங்களுக்கு இவ்வளவு பேர்களா என்று ஐயம் எழுந்தது. மீண்டும் இப்புள்ளி விவரத்தைக் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டேன்.

எவ்வளவு பெரிய பங்கு என்று வியந்து, நன்றி கூறினோம். இது சோவியத் இந்திய உடன்படிக்கையால் கிடைத்த பெரும் பரிசோ என்று கேட்டோம்.

உடன்படிக்கைக்கு முன்னரே இவர்கள் சேர்ந்து விட்டார்கள். எப்போதுமே இந்திய மாணவர்கள் நிறையச் சேருகிறார்கள் என்றார்.

'எங்கள் பால் எப்போதுமே, சோவியத் மக்களுக்கு நல்லெண்ணம் உண்டே' என்றோம்.

'இவ்வளவு இந்தியர்கள் சேர்ந்திருப்பதற்குக் காரணம் எங்கள் நல்லெண்ணம் மட்டுமல்ல. உங்கள் மாணவர்களின் தகுதியும் காரணம்' என்றார்.

'அப்படியா?' என்று இழுத்தேன்.

"உங்கள் மாணவர்கள் உட்பட எல்லோருக்குமே நுழைவுப் பரீட்சை வைக்கிறோம். அதிலே மற்றவர்களோடு போட்டியிட்டு அவர்களிலும் அநேகர் தேறிய

தால் இத்தனை இந்தியர்களைச் சேர்த்திருக்கிறோம்'' என்று விளக்கங் கூறினார்.

கிடைத்தது பிச்சையல்ல; பரிசே என்று உணர்ந்து பெருமிதங் கொண்டோம். இந்தத் தகுதி, நம் நாட்டில் வளராமல் தேங்கிக் கிடப்பானேன் என்ற கேள்வி மின்னிற்று. அதைத் தள்ளிவிட்டு மற்றோர் கேள்வியை எழுப்பினேன்.

'நுழைவுத் தேர்வில் இவ்வளவு நன்றாகத் தேறியபின், பல்கலைக்கழகப் பரீட்சையிலும் அப்படியே தாராளமாகத் தேறுகிறார்களா?'

துணைவேந்தர், மேசையின் அறையைத் திறந்தார். என்ன எடுப்பாரோவென்று ஆவலோடு எதிர் பார்த்திருந்தோம்.



# 18

ஸூம்பா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், மேசை அறையிலிருந்து எடுத்தது என்ன? தேர்ச்சிப் பட்டியல். அந்த பெரிய பட்டியலை எங்களிடம் கொடுத்தார். 'இந்திய மாணவர்களின் தேர்ச்சியை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்' என்றார்.

பட்டியலில் என்ன கண்டோம்? நாடுகளின் பெயர் அதற்கு நேரே அந்நாட்டு மாணவர்கள் எத்தனைபேர் படிக்கிறார்கள்; அவர்கள் சென்ற அரையாண்டுப் பரீட்சையில் எந்த விழுக்காடு தேறினார்கள்; இந்த விவரங்களைக் கண்டோம்.

இந்தியா என்ற பெயரைக் கண்டோம். என் கண்கள் ஆவலாக நேரே பார்த்தது. இருநூற்று அறுபது. இது மாணவர்கள் எண்ணிக்கை. தேர்ச்சியல்லவா தெரிய வேண்டும்? படபடப்போடு அதைத் தேடினேன்.

பலே! நூற்றுக்கு 98.6 விழுக்காடு தோச்சி. இந்திய மாணவ மாணவிகள் எவ்வளவு அதிகமாகத் தேறியுள்ளார்கள் என்று அறிந்து பூரித்தோம். ஆயினும் ஆய்வாளர் பழக்கம் போகவில்லை.

நூற்றுக்கு 1.4 பேர் தவறி விட்டார்களே. அதற்குரிய காரணத்தைத் தெரிந்து கொள்ளலாமோ என்று கேட்டோம்.

'தெரிந்து கொள்ளலாம்; உங்கள் நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கும் மாஸ்கோ நகரின் தட்ப வெப்ப நிலைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. வெப்பப் பகுதியிலிருந்து குளிர் - கடுங்குளிர் பகுதிக்கு வந்ததும் சிலராவது, நோய்வாய்ப் பட்டு விடுகிறார்கள். அது இரண்டொருவரது தேர்வை பாதித்து விடுகிறது" என்று விளக்கத்தைப் பெற்றோம்.

நம் நாட்டில் பரீட்சை எழுதுபவர்களில் பாதி பேர் வெற்றி பெறுவதே அற்புதம். அதற்குமேல், எப்போதாவது, வெற்றி பெற்றுவிட்டால், ஐயக் கண்ணோடு, பார்ப்போம். கேள்விகள் வெளியாகிவிட்டனவோ என்று அவதூறு பறக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு பழக்கப் பட்டு விட்ட எனக்கு, நம் மாணவ மாணவிகள் மாஸ்கோவில் பெற்ற பெரும் வெற்றி, மகிழ்ச்சியூட்டினும் வியப்பையும் ஊட்டிற்று, வியப்பை வெளிப் படுத்தினேன். நல்லதாகப் போயிற்று. மேலும் விளக்கங் கிடைத்தது.

"பட்டியலைக் கவனமாகப் பாருங்கள். எந்த நாட்டவர்கள் தேர்ச்சியும் நூற்றுக்கு தொண்ணூறுக்குக் கீழே இருக்காது. தேறுமளவிற்கு எல்லோரிடமும் வேலை வாங்குகிறோம்" என்று சொல்லி முடிப்பதற்குள், நெருப்பில் வீழ்ந்த மிளகாய் வற்றல் போல் வெடித்தேன்.

"மன்னிக்க வேண்டும், உங்கள் பாட திட்டத்தை சற்று எளிதாக ஏற்பாடு செய்திருக்கிறீர்களோ" என்று கேட்டேன்.

துணைவேந்தர், பொறுமையாக, புன்முறுவலோடு பதில் கூறினார். பதில் என்ன?

மற்ற சோவியத் பல்கலைக்கழகங்களில் உள்ள பாட திட்டத்திற்கும் எங்கள் பாடத் திட்டத்திற்கும் எந்தவித வேற்றுமையும் இல்லை. அப்படியிருந்தும், வேறு பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெறுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ, அதைவிட ஆறு மாத காலச் சுருக்கத்திலே இங்கு முடித்து பட்டம் பெற்று விடுகிறார்கள்.

தங்கள் தங்கள் நாட்டின் வளர்ச்சிக்காக வேலை செய்யப் பயிற்சி பெறவந்த வெளிநாட்டு மாணவ மாணவிகளை, மெல்லப் படிக்க விட்டுக் கொண்டிருந்தால், அந்த நாடுகளின் முன்னேற்றம் தவக்கம் ஆகும். வெளிநாட்டு மாணவர்களை எவ்வளவு விரைவில் நிபுணர்களாக்கி அனுப்புகிறோமோ அவ்வளவு விரைவில் அந்நாட்டு தொழில் வளர்ச்சியோ பிற முன்னேற்றமோ கைகூடும். ஆகவே விரைந்து படிப்பை முடிக்கும் வகையில் வேலை நேரத்தை ஏற்பாடு செய்துள்ளார்கள்.

சாதாரணமாக சோவியத் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் வாரத்திற்கு ஐந்து நாள் வேலை செய்யும். நாளைக்கு வேலை நேரம் ஐந்து மணி. ஆகவே, வாரத்திற்கு இருபத்தைந்து மணிகள் வேலை செய்யும்.

லுமும்பா நட்புறவு பல்கலைக்கழகம் நாளைக்கு ஆறு மணி நேரம் வேலை செய்கிறது. வாரத்திற்கு ஆறு நாள் வேலை செய்கிறது. வாரத்திற்கு முப்பத்தாறு மணி நேரம் வகுப்பில் பாடங் கேட்கவேண்டும். அல்லது கருத்தரங்கில் பங்கு கொள்ளவேண்டும். அல்லது ஆய்வுக்கூடங்களில்

ஆய்வுகளில் ஈடுபட வேண்டும். இப்படி அதிகப்படி வேலை வாங்குவதால், இப் பல்கலைக்கழகத்தில், மற்ற கழகங்களை விட விரைவில் படிப்பை முடிக்க முடிகிறது.

'அடேயப்பா! முப்பத்தாறு மணி நேரப் படிப்பா என்று பாராட்டினோம். மேற்கொண்டு தானே படிக்க வேண்டுமா என்று விசாரித்தோம்.

சாதாரணமாக, ஒவ்வொருவரும் தனியே விடுதிகளில் வாரத்திற்கு பதினெட்டு மணி நேரமாவது படித்தால் மட்டுமே சமாளிக்க முடியுமாம். ஆகவே நம் தம்பி தங்கைகள், லுமும்பா பல்கலைக்கழகத்திற்குச் சென்றால் வாரத்திற்கு ஐம்பத்து நான்கு மணி நேரத்தை கல்விக்குச் செலவிடுகிறார்கள். அதற்குச் சுணங்கக் காணோம். வேறு வெளிநாடுகளுக்குச் சென்று படிக்கும் இந்திய மாணவர்களும் தங்கள் தாய் நாட்டில் படிப்பதைவிட அதிக நேரம் படிக்கிறார்கள். அதிக அக்கறையோடு படிக்கிறார்கள். தோன்றிய இடத்தில் மட்டும் ஏன் எப்படியோ இருக்கிறார்கள்? எந்தெந்த சாக்கையோ சொல்லி, படிப்பதை விட்டு வெளியே வந்து விடுகிறார்கள்? வெளி நாடுகளிலே ஒரு மனப்பட்டு, ஆழ்ந்து படிக்கக் கூடியவர்கள், தங்கள் நாட்டில் இருக்கும்போது அக்கறையற்று அலட்சிய புத்தியோடு அலைவானேன்? இந்த ஐயங்கள் எழுந்தன.

சூழ்நிலை மிக முக்கியம். ஆழ்ந்து படிப்பதற்கேற்ற சூழ்நிலை இருந்தால் மட்டுமே, தரமான கல்வியைப் பெறலாம். கல்விக்கு, கடுமையான படிப்புக்கு ஏற்ற சூழ்நிலை அங்கே - சோவியத் நாட்டில் - உருவாக்கப் பட்டிருக்கிறது. கற்கப் போனவர்கள், கற்பதை விட்டு விட்டு வேறு பெரியதனங்களுக்குப் போக விடுவதில்லை.

எங்கோ ஏதோ நடப்பதைக் காட்டி, கொதித்து எழுவது போல், கல்லூரி வேலை நிறுத்தம் செய்வது,

இங்கே அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சி. சோவியத்நாட்டில் மாணவர்கள், மாணவர்களாகவே இயங்குகிறார்கள். அவர்கள் கிணற்றுத் தவளைகள் அல்ல. ஊர் விவகாரங்களை அறிவார்கள். அவற்றைப் பற்றி விவாதிப்பார்கள். உலக விவகாரங்களையும் அறிவார்கள். அவற்றைப்பற்றி கலந்துரையாடவும் தயங்க மாட்டார்கள். ஆயினும், அவற்றையெல்லாம் சீர் செய்கிறோமென்று சொல்லிக் கொண்டு, கல்வியைக் கோட்டை விட்டுவிட மாட்டார்கள்.

சோவியத் கல்விக்கூடங்களில் ஒழுங்கு நிலவுகிறது. கட்டுப்பாடு நிலவுகிறது. கண்டிப்பு உண்டு. இத்தனை நாள் வகுப்புக்கு வரவேண்டுமென்றால், மறு பேச்சு கிடையாது. வராமல் ஊர் சுற்றி விட்டு பிறகு நாலு பேரைச் சேர்த்துக் கொண்டு உண்ணாவிரத மிரட்டல் நடவாது அந் நாட்டில். அத்தகைய கடமைத் தவறுதல்களை ஆதரிக்க முன்வரும் பெரிய மனிதர்களும் இல்லை. எல்லோருமே, லெனின் வழியில் நின்று மாணவர்களைப் பார்த்து 'படியுங்கள், படியுங்கள், மேலும் மேலும் படியுங்கள்' என்றே கூறுவார்கள்.

ஏற்ற சூழ்நிலை இருப்பதால் ஆசிரியர் மாணவர்களிடம் வேலை வாங்க முடிகிறது. ஊர் வம்புகளில் சிக்காதிருப்பதால், கவனச் சிதைவின்றி, மாணவ மாணவியர் படிப்பே லட்சியம் என்று இருக்கிறார்கள்.

நிழற்படமோ, நாடகமோ பார்க்கவோ இசைக் கச்சேரி கேட்கவோ சென்றால், வெறியூட்டும் பாலுணர்ச்சி நிகழ்ச்சிகள் இல்லை.

இவ்வளவு உதவியான சூழ்நிலையில் எல்லா மாணவர்களும் கல்வியில் விரைந்து தேர்ச்சி பெறுகிறார்கள்.

இந்திய மாணவர்களின் ஒழுங்கும் கட்டுப்பாடும் எப்படி?

நம் மாணவர்களும் மாணவிகளும் ஒழுங்காகவும் கட்டுப்பாட்டோடும் நடந்து கொள்ளுகிறார்கள். இவர்களால் பல்கலைக்கழகத்திற்கு எவ்வித சிக்கலும் வருவதில்லை, என்று கேட்டபோது எழுத முடியாத அளவு பூரித்துப் போனேம்.

நம் நாட்டிலும், பரிந்துரைகள் சொல்ல, கொடுக்க, ஆள் இல்லையென்ற பத்திய நிலையை உருவாக்க முடிந்தால், தங்கக் கம்பிகளாக இருப்பார்கள், நம் மாணவ மாணவிகள்.

இவற்றைத் தெரிந்து கொண்டு துணைவேந்தருக்கு நன்றி கூறி விட்டு நூல் நிலையத்தைப் பார்க்கச் சென்றோம்.

விடை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் இப் பல்கலைக்கழக பாட திட்டங்களை எங்களுக்கு வழங்கினர். அவை ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தன. ஏன் இரஷ்ய மொழியில் இல்லை என்று கேட்டோம்.

பெரிதும் வெளிநாட்டு மாணவர்களுக்காகவே இவை இருப்பதால், அந் நாடுகளுக்கு அனுப்பி வைப்பவை ஆங்கிலத்தில் இருப்பது நல்லது என்று அப்படிச் செய்கிறார்களாம்.

'அனைத்து நாடுகளின் சட்டம்' ஓர் பாட திட்டம். அதில், சொத்துரிமை பற்றி நம் நாடாளுமன்றத்தில் நிறைவேறிய அரசியல் சட்டத்திருத்தம் இடம் பெற்றிருக்கக் கண்டோம்.

எங்களுக்கு வழங்கிய நூல்களை, கப்பல் மூலம் அனுப்பி வைக்க முன் வந்தார், துணைவேந்தர். அவற்றை அவரிடம் கொடுத்து விட்டு வந்தோம். அவை சில வாரங்களில் எனக்கு வந்து சேர்ந்தன.

பல்கலைக்கழக 'கம்ப்யூட்டர்' நிலையத்தைப் பார்த்து விட்டு நூல் நிலையத்தைக் கண்டோம். ஏராளமான நூல்கள்; எண்ணற்ற சஞ்சிகைகள்; அவற்றையெல்லாம் ஆர்வத்தோடு படித்துக் கொண்டிருந்தவர்கள்; இவற்றைக் கண்டு மகிழ்ந்து விட்டு, அந்த நாளும் வந்திடாதோ எங்கள் நாட்டில் என்று கூறிக் கொண்டே அடுத்த நிகழ்ச்சிக்குச் சென்றோம்.

**இந்திய மாணவர்கள் மத்தியில்**

அடுத்த நிகழ்ச்சி, பல்கலைக்கழகத்திலேயே, இந்திய மாணவர்கள் விரும்பியபடி, நாங்கள் அவர்களைக் கண்டு உரையாட, ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். கூட்டம் நடக்க வேண்டிய பெரிய அறைக்குள் எங்களை விட்டு விட்டு, உடன் வந்த பேராசிரியர் விலகிக் கொண்டார்.

மாணவர்களும் மாணவிகளுமாக இருபத்தைந்து பேர்கள் போல் கூடியிருந்தனர். தேனீர் அளித்தனர்.

சோவியத் இந்திய உடன்படிக்கையைப் போற்றி வரவேற்றனர். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சண்டை மூளுமானால் சமாளிக்க ஆயத்தமாக இருக்கிறோமா என்பதை ஆவலோடு கேட்டார்கள். தாங்கள் சோவியத் நாட்டில் பயிற்சி பெற்றுத் திரும்பியதும், உடனுக்குடனே தக்க வேலை கிடைக்குமாவென்று கவலையோடு கேட்டார்கள். பெரும்பாலான இந்தியர்கள் பொறியியல் துறையில் பயிற்சி பெறுகிறார்கள்.

கோடை விடுமுறையின்போது, வெளிநாடுகளுக்குச் சென்று வர முன்பெல்லாம் அனுமதித்தார்களாம். இரண்டொரு ஆண்டுகளாக அனுமதி இல்லை. இதற்குப் பரிகாரம் கண்டு உதவும்படி வேண்டிக் கொண்டார்கள்.

இதைப்பற்றி, பிறகு வெளியே விசாரித்தோம். விடுமுறையின் போது வெளிநாடுகளுக்குச் செல்ல

அனுமதிக்கப்பட்ட காலத்தில் பல நாட்டு மாணவர்கள் ஐரோப்பாவில் வேலை செய்து, பணம் சம்பாதித்து அதைக் கொண்டு பலவகையான போகப் பொருள்களை வாங்கி வந்து, சோவியத் நாட்டில் மறைவாக விற்பதில் ஈடுபட்டார்களாம். இதனால் சோவியத் மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டது. வெளிநாட்டு மாணவர்கள் விடுமுறையின் போது வேலை செய்ய விரும்பினால் சோவியத் நாட்டிலேயே வேலை செய்ய ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு, வெளிநாட்டுப் பயணங்களைக் கட்டுப் படுத்தியுள்ளார்கள் என்று கேள்விப்பட்டோம்.

நான், இந்திய மாணவர் கூட்டத்தில் பேசினேன். கவனமாகப் படித்து, விரைவிலே, மிக உயர்ந்த தரத்தில் தேறும்படி வேண்டினேன்.

படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்திருப்பதைப்பற்றி பிரதமர் திருமதி இந்திரா காந்தி உணர்ந்திருப்பதாகவும் ஆகவே அதற்கு விரைவில் பரிகாரம் கிடைக்குமென்றும் கூறினேன்.

இளைஞர்கள், வேலை பெறுவதோடு, புதியதோர் இந்தியாவை உருவாக்க உரிமை பெற்றிருக்கிறார்கள். வறுமையற்ற, வளமிக்க, எல்லோர்க்கும் வாழ்வளிக்கும் புதிய நிலையை உருவாக்குவோம் என்ற உறுதியோடு திரும்பி வரும்படி வேண்டிக் கொண்டேன்.

இந்திய தூதுக்குழு, அடுத்த நாள் லெனில் கிராடில் கூடி, அங்கு இரண்டு நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முன் கூட்டியே, சில தவிர்க்க முடியாத, பல்கலைக் கழகப் பணிக்கு நாள் குறித்து விட்டு நான் சோவியத் நாட்டிற்குச் சென்றேன். எனவே, மற்றவர்களுக்கு முன்னதாகவே நான் இந்தியா திரும்ப வேண்டியதாயிற்று.

திரு. கான் அவர்களை, இரவு இரயிலில் லெனின் கிராடுக்கு அனுப்பி வைத்தேன்.

**தொல்பொருட்காட்சியில்**

மறுநாள், கிரெம்ளினுக்குள் உள்ள அரண்மனையில் அமைக்கப்பட்டிருக்கும் பொருட்காட்சியினைக் கண்டேன். அது காண வேண்டிய ஒன்றாகும்.

ஜார் மன்னர்களும் அவர்கள் குடும்பத்தினரும் பயன்படுத்திய மணி முடிகள், நகைகள், பட்டாடைகள், பொன்னுடைகள் அத்தனையும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு, கண்ணாடிப் பெட்டிகளில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மன்னர்கள், முற்காலத்தில் போர்க் களங்களுக்குச் செல்வதுண்டு. அப்போது பாதுகாப்பிற்காக இரும்புக் கவசங்கள் அணிந்து செல்வார்கள். இரும்புத்தகடுகளால் செய்யப்பட்ட கவசங்கள் பல; இரும்பு வலைகளால் பின்னப்பட்ட கவசங்கள் சில; கனமான அக் கவசங்கள், கனமான மன்னர்களுக்குச் சுமையாக இல்லை போலும். கவசங்களைக் கண்டு விட்டு நகர்ந்தோம். வகை வகையான குத்தீட்டிகள், வாட்களைக் கண்டோம். பழைய வாட்கள் போர்க் கருவிகளாகவே காட்சியளித்தன. பிற்காலத்திய வாட்கள் சிலவற்றில் கைப் பிடிகளுக்கு மணியும் முத்தும் பதித்திருப்பதைக் கண்டோம்.

மணி முடிகள் எத்தனை வகை. அவற்றில் சிலவற்றை நம் தலையில் வைத்தால், கனம் தாங்க முடியாமல் வீழ்ந்து விடுவோம். மண்டையில் கனத்தை வைத்துக் கொள்ள வேண்டியிருந்த அம் மன்னர்கள், காலில் ஒளியை வைத்திருந்தார்கள்.

மணி முடிகளில் ஒளிவிடும் நவமணிகளை நிறையப் பதித்து வைத்திருந்ததைப் போல், காலணிகளிலும் ஒளி

வீசும்படி பொன்னிழைகளையும் சில மணிகளையும் பதித்திருந்தார்கள். மணி முடியும் வேண்டாம், தங்கக் காலணியும் வேண்டாம் என்று நகர்ந்த போது, அரியாசனங்கள் பல, வரிசையாகக் காட்சியளித்தன. தந்தத்தில் மணியிழைத்த ஆசனங்கள் இருந்தன. தங்கத்தில் மணிகள் பதித்த அரியாசனங்களையும் கண்டோம். சில காலம் புதுப்புது மன்னருக்கு புதுப்புது அரியாசனம் செய்ததுபோல் தோன்றிற்று. அவற்றில் சில, பிறநேச நாட்டு அரசர்களிடமிருந்து பரிசாகக் கிடைத்தவை.

ஒவ்வொரு மணி முடியும் அரியாசனமும் கோடிக் கணக்கில் விலை மதிப்புடையவை. அத்தனையும் விற்கப் படாமலும் களவாடப்படாமலும் காக்கப்படுவது வியத்தலுக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும்.

பெரியதும் சிறியதுமாக செங்கோல்கள் உள்ளன. அவற்றிலும் முத்தும் பவழமும், வைரமும் கோமேதகமும் பிற மணிகளும் பொருந்தியுள்ளன.

நகைக் கொலுவும் பெரியது. பெரிய மணிச் சங்கலிகள் முதல் மோதிரங்கள், வரை கொலுவில் இருந்தன. நம்முடைய இக்காலப் பெண்மணிகளில் பலர், அவற்றில் சிலவற்றை அணிந்து கொள்ள ஒப்ப மாட்டார்கள்! அவ்வளவு மொத்தாகவும் கனமாகவும் உள்ளன.

தங்கத் தாம்பாளங்கள், தங்கக் கரண்டிகள், தங்கக் கோப்பைகள் இப்படி விலையுயர்ந்த வீட்டுப் பாத்திரங்கள், கைப்படாது, பாதுகாக்கப்படுகின்றன.

அவற்றையெல்லாம் பார்க்கிற சாதாரணக் குடிமகனுக்கு என்ன தோன்றும்? நாலைந்து பேர் மகிழ இத்தனை கோடிகளை முடக்கிவிட்டதால் அல்லவா பொது மக்கள் வறுமையில் வாடி வதங்க நேரிட்டது என்ற எண்ணமே எழும்.

ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் முதலீடு செய்து, பயன்படும் பொருள்களை உற்பத்தி செய்திருக்க வேண்டிய பெரும் பணம், முடியாக, அரியாசனமாக, நகைகளாக முடங்கி விட்டதே என்று அங்கலாய்ப்பார்கள், சிந்திக்கும் பொதுமக்கள்.

பொதுமக்கள் நீண்ட வரிசையில் இக் காட்சியைக் காண்பதை, நான் நேரில் கண்டேன்.

கிரெம்ளின் மாளிகையில் மன்னர்களின் பொருட்களை யெல்லாம் கொலுவில் வைத்திருப்பது போலவே, லெனின் கிராட் அரண்மனையிலும் அத்தனை பொருட்களையும் ஓவியங்களையும் சிற்பங்களையும் பாதுகாத்து பொது மக்கள் பார்த்து மகிழ அமைத்திருக்கிறார்கள்.

பிரபுக்கள் வாழ்ந்த ஊர்களிலும் அவர்களது மாளிகைகள் இடியாமல், பாதுகாக்கப்படுகின்றன. அவர்களுடைய நகைகள், ஓவியங்கள் ஆகிய இவை பொது மக்களுக்காகக் கொலுவிருக்கின்றன.

மாஸ்கோ வானொலியில், தமிழ் மொழியில், ஐந்தைந்து நிமிடங்களுக்கான என்னுடைய இரு பேச்சுகளை ஒலிப் பதிவு செய்து கொண்டார்கள். புதிய உடன்படிக்கையின் விளைவாக, இந்திய மாணவர்களும் ஆசிரியர்களும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் சோவியத் நாட்டிற்குச் சென்று கற்க, வழி ஏற்பட வேண்டுமென்ற அவாவினை அவற்றில் வெளியிட்டேன். அப் பேச்சுகள் ஒலி பரப்பப் பட்டன.

### நாடக அரங்கில்

என்னுடைய மூன்றாவது சோவியத் பயணத்தில் கடைசி நிகழ்ச்சி நாடகம். நான் நாடகமாடவில்லை. நாடகம் பார்த்தேன். இராமாயண நாடகம் பார்த்தேன்.

மாஸ்கோ, நடுவண் சிறுவர் அரங்கில் அன்று இராமாயண நாடகம் நடந்தது. அது சென்ற பதினேரு ஆண்டுகளாக நடக்கிறது. அன்று நடந்தது, நூற்று

ஐம்பதாவது நாடகம். அதைக் காண இந்திய தூதுக் குழுவினன் என்ற முறையில் என்னை அழைத்துக் கொண்டு போனார்கள். நம் கதையை, அருமையாக, இரஷ்ய மொழியில் அமைத்து, பொருத்தமான காட்சிகளோடும் பாவத்தோடும் இரஷ்ய நடிகர்கள் நடித்தார்கள். நம் ஊரில் சிறந்த நடிகர்கள் நடித்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது.

இடை வேளையில், அக் கதையை எழுதிய அம்மையாரோடு, நாங்கள் சிலர் சிற்றுண்டி அருந்தினோம்.

''இந் நாடகத்திற்கு, குழந்தைகள் நடுவில் நல்ல வரவேற்பு. ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் நாள் தோறும் வருகின்றன. அவற்றில் பல 'நாங்கள் கணவனோடு சேர்ந்து துன்பத்தைப் பகிர்ந்து கொண்ட சீதையைப் போல் இருப்போம்' என்று கூறுகின்றன. இவ்வெண்ணம் வேரூன்றினால், மேனாடுகளில் விவாக ரத்துகள் குறையலாம்'' என்று நாடகாசிரிய அம்மையார் பூரித்தார்.

இலங்கா தகனக் காட்சி முடிந்ததும், விமானத்திற்குச் செல்ல நேரமாகி விட்டது என்று நினைவுபடுத்தி என்னை விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

கல்வியிலும் அறிவிலும், மனிதாபிமானத்திலும், மக்கள் இனப்பற்றிலும் விரைந்து முன்னேறியுள்ளவர்கள் சோவியத் மக்கள். அவர்கள் இந்திய சோவியத் உடன்படிக்கையை ஆர்வத்தோடு வரவேற்பதை நேரில் கண்டு மகிழ்ந்தேன். அண்ணன் தம்பிகளோடு சில நாட்கள் தங்கியிருந்தது போன்ற உணர்ச்சியோடு சோவியத் மக்களிடம் விடை பெற்றேன். மாஸ்கோ விமான நிலையத்தை விட்டு 'ஏரோப்ளோட்' விமான மூலம் தில்லிக்குத் திரும்பினேன். ''வாழ்க சோவியத் இந்திய நட்புறவு. வாழ்க மானுடம்'' என்று மந்திரித்தது என் இதயம்.

PUBLIC LIBRARY
DEC 1973